கம்பனில் வாழ்வியல் நெறிகள்



இளம்பிறை மணிமாறன்

இராஜபாளையம் கம்பன் கழக வெளியீடு

கம்பனில் வாழ்வியல் நெறிகள்

நாவுக்கரசி

பேராசிரியை இளம்பிறை மணிமாறன்

கம்பன் கழகம்

12, தாண்டல் கந்தசாமி ராஜா தெரு,
இராஜபாளையம் - 626 117.
தொலைபேசி: (04563) 231592

கம்பனில் வாழ்வியல் நெறிகள்

பதிப்புரிமை	:	கம்பன் கழகம், இராஜபாளையம்.
முதல்பதிப்பு	:	டிசம்பர் 2002
விலை	:	ரூ. 85/-
கிடைக்குமிடம்	:	என்.எஸ். முத்துகிருஷ்ணராஜா பொதுச்செயலர், கம்பன் கழகம், 'சோலை' 12, தாண்டல் கந்தசாமி ராஜா தெரு, இராஜபாளையம் - 626 117. தொலைபேசி : (04563) 231592
அச்சு	:	நவீன் மினி ஆப்செட் பிரிண்டர்ஸ், 17, தாண்டல் கந்தசாமி ராஜா தெரு, இராஜபாளையம்.
நூலின் அளவு	:	1 x 8 டெம்மி
பயன்படுத்திய தாள்	:	பத்ராசலம் 18 - 6 கேஜ்
பக்கங்கள்	:	206 + 7

முன்னுரை

கோவைத் தொழிலதிபர், கம்பன் அறநெறிச் செம்மல் திரு.ஜி.கே. சுந்தரம் அவர்கள்தலைமையில் தியாகச்செம்மல் அமரர் கம்பனடிப்பொடி சா.கணேசன் அவர்களால் 1980 அக்டோபர் இருபத்தைந்தாம் நாள் இராஜபாளையம் நகரில் கம்பன் கழகம் தொடங்கப்பெற்றது.

இருபத்திமூன்று ஆண்டுகளாக இலக்கியச் சேவையும், கலைத் தொண்டும் ஆற்றி வருகிற பான்மையைத் தமிழ் கூறும் நல்லுலகம் நன்கு அறியும். செவிநுகர் கனிகளாகக் கவிச்சக்கரவர்த்தி கம்பனின் கவியின்பத்தையும், கருத்து இன்பத்தையும் வழங்கி வருவதோடு நுண்மான் நுழைபுலம் மிக்க சான்றோர்களைக் கொண்டு நூல்கள் படைத்தளிப்பதை கம்பன் கழகம் தனது தலையாய பணியாகக் கருதிச் செயலாற்றி வருகிறது.

'கவிச்சக்கரவர்த்தி கம்பன், இராமனைத் தரிசிப்போம், சீதையை வணங்குவோம், அனுமனைப் போற்றுவோம், தம்பியர் அறுவர், அரசியர் அறுவர்,' ஆகிய ஆறு நூல்களை வெளியிட்டுள்ளது. இப்போது 'கம்பனில் வாழ்வியல் நெறிகள்' எனும் அரிய நூலை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகிறது.

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் 'நாற்பொருள் பயக்கும் நடைநெறித்தாகிய' பெருங் காப்பியங்கள் பலவற்றைக் கற்றுத் தேர்ந்தவர் என்பதோடு மட்டுமன்றி, அவ்விலக்கியங்கள் மக்களின் வாழ்க்கைக்கான இலக்குகளை எவ்வாறு எடுத்தியம்பு கின்றன என்பதைச் செவிநுகர் கனிகளாக, கற்றது உணர விரித்து ரைக்கும் பான்மையும் பெற்றவர் பேராசிரியை இளம்பிறை மணிமாறன் அவர்கள். எனவே 'கம்பனில் வாழ்வியல் நெறிகள்' என்ற இந்நூலை ஆக்கித்தர வேண்டுமென்று அவர்களை அணுகியபோது, தமது இடையறாத பணிகளுக்கிடையிலும் நமது வேண்டுகோளை ஏற்று இந்நூலை நயமுற உருவாக்கித் தந்துள்ளார்கள்.

கம்பன் தனது காவியத்தில் சொல்லிச் சென்ற வாழ்வியல் தத்துவங்களான அறம், அன்பு, கற்பு, சகோதரத்துவம், காமம், விதி, ஆட்சிபுரிவோருக்கு அறநெறிகள், நன்றிக்கடன் போன்ற செய்திகளை மிக அருமையாக எழுதியுள்ளார்கள். ஷேக்ஸ்பியர், மில்டன் காவியங்களையும் சில இடங்களில் ஒப்பீடு செய்துள்ளார்கள். அவர்களுக்குச் சமுதாயம் மிகவும் கடமைப் பட்டுள்ளது.

இந்நூலின் அட்டைப்படம் அழகுக்கு அழகு செய்கிறது. கம்ப காவியத்தில் மிகச் சிறப்பாகப் பேசப்படும் பூரண சகோதரத்துவத்திற்கு மகுடம் சூட்டுவது போன்று அமைந்துள்ள, இவ்வழகுக் காட்சி, இந்நூலுக்கு மணிமகுடமாகத் திகழ்கிறது.

என்னதான், அறிவியலின் உச்சியை இவ்வுலகம் எட்டி நின்றாலும், அது உய்ய வேண்டுமெனில் 'உண்மை அன்பை' உள்ளத்தில் கொண்டாக வேண்டும் என்ற காலக் கட்டாயம் இன்று 'விஸ்வரூபம்' எடுத்து நிற்கிறது. இத்தகைய உண்மை அன்பை எய்திட, அதன்மூலம் இவ்வுலகம் உய்ந்திட கோசலராமன் கொண்டிருந்த பூரண சகோதரத்துவம் ஒன்றே, இன்றைய உலகின் பரிபூரணத்தேவை என்பதை எடுத்துக் காட்டுவதாக இந்நூலின் முகப்போவியம் அமைந்துள்ளதெனின் மிகையாகாது

இவ் உயிரோவியத்தை நாம் விரும்பும் வகையில் வடிவமைத்துக் கொடுத்த சிவகாசி திரு. ஆர். ராஜன் அவர்களுக்கு நன்றிக் கடப்பாடுடையோம்.

இந் நூலின் அச்சுப் படிகளை திருத்தி உதவிய இராஜபாளையம் ந.அ. அன்னப்பராஜா மேல்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் திரு. இரா. மாரியப்பன் எம்.ஏ., எம்ஃபில், பி.எட்., அவர்களுக்கும், சிறந்த ஆலோசனைகள் நல்கிய டாக்டர். வி.வெங்கட்ராமன் அவர்களுக்கும் சிறந்த முறையில் நூலை அச்சிட்டு உதவிய இராஜபாளையம் நவீன் மினி ஆப்செட் பிரிண்டர்ஸ் எம்.கார்த்திகேயன் அவர்களுக்கும் இராஜபாளையம் கம்பன் கழகம் நன்றி படைக்கின்றது.

இந்நூலை வெளியிட்டுப் பொலிவூட்டிய கம்பன் அடி சூடி பழ. பழநியப்பன் அவர்களுக்கும் முதல் நூலை பெற்றுக் கொண்ட எம்.ஏ. சுப்பிரமணிய ராஜா அவர்களுக்கும் சிறப்புப் பேருரை வழங்கிய தமிழறிஞர் முனைவர் சுப. அண்ணாமலை அவர்களுக்கும் வாழ்த்துரை வழங்கிய திரு. எம்.வி. பீமராஜா, திரு.என்.ஆர்.அழகராஜா அவர்களுக்கும் கம்பன் கழகம் பெரும் கடமைப்பட்டுள்ளது.

இனி - இந்நூலை படித்துச் சுவைத்துப் பயன்பெற உள்ள பெருமக்களை நினைந்து போற்றி நெஞ்சாரத் துதித்து வழிபடுகிறோம்.

இங்ஙனம்,

என்.எஸ். முத்துகிருஷ்ண ராஜா,

கே. மாரிமுத்து,

பொதுச்செயலாளர்கள், கம்பன் கழகம், இராஜபாளையம்.

என்னுரை

பூமியில் வாழும் மாந்தருக்கு, தேவாதி தேவர்களுக்குக் கிடைத்ததைப் போன்ற சாவாமை தரும் அமுதம் கிடைக்கவில்லையே என்ற கவலையைத் தீர்த்தவன் கம்பன். பூலோகத்தில் நாம் அருந்தி மகிழக் கிடைத்த அமுதமே கம்பன் தந்த இராம காதை. கற்றவர் நெஞ்சமெல்லாம் நிறைந்தவன் கவிச்சக்கரவர்த்தி கம்பன். எக்காலத்தவரும், எந்நாட்டவரும், எத்தரப்பினரும் விரும்பும் பாரத தேசத்தின் ஜீவ காவியத்திற்குத் தமிழ் வடிவம் தந்தவன் நம் கம்பன்.

ஈடு இணையற்ற இக்காவியத்தைக் கற்கும் போதெல்லாம், அதன் நடை அழகு, அணி அழகு, சொல்லாட்சி, படைப்புத் திறன், கற்பனை வளம், கருத்துச் செறிவு ஆகியனவற்றை எல்லாம், மீண்டும் மீண்டும் எண்ணிப் பார்த்து இதயத்தில் இறும்பூதெய்திய அனுபவம் உண்டு. எண்ணிப் பார்த்து இன்புற்றதைச் சுவைத்துச் சுவைத்து அசைபோட்டுப், பின் மேடையில் பரிமாறும் போது பரவசப்பட்டுப் போனதும் உண்டு. தனிமையில் கம்பனோடு சஞ்சாரம் பண்ணும் போதெல்லாம், கம்பனின் முத்திரை வரிகள் மனதின் நீங்காத நினைவரங்கில் நின்று நிழலாடும். அத்தகைய ஆனந்த சாகரத்தில் திளைத்துக் கொண்டிருக்கும் போதே கம்பன் அறிவினைத் தூண்டிச் சுடர்விடச் செய்யும் நெறியினை நெஞ்சத்திற்குள் புகுத்தி விடுவான். அதனை எண்ணும் போதெல்லாம் நான் நினைப்பதுண்டு. சிலர் நயனாய்ச் சொல்வர்; ஆனால் பயனாய்ச் சொல்ல அறியார். சிலர் பயனாய்ச் சொல்வர்; நயனாய்ச் சொல்ல அறியார். நயனாகவும், பயனாகவும் சொல்ல கம்பனிடம் அல்லவா கற்க வேண்டும். எடுத்துப் பரிமாறும் இனிமைச் சொற்களுக்குள் சொந்தங் கொண்டாடி வரும் இதமான ஒரு வாழ்க்கை நெறி. மானுட சமூகத்தின் செவிமலர்களில் விழுந்து, அவர்தம் இதயத்தைச் சென்று சேர வேண்டிய வாழ்வியல் நெறிகளை, சொல்ல வேண்டிய இடத்தில், சொல்லும் முறை அறிந்து நளினமாகவும் அதே நேரத்தில் அழுத்தமாகவும் சொல்லும் கம்பனின் திறத்தைக் கண்டு எல்லையில்லாத வியப்பெய்தி நின்ற

நாளில் தான், கம்பன் காட்டும் வாழ்வியல் நெறிகளை எழுத்தின் மூலம் கம்பன் அன்பர்களுடன் பரிமாறிக் கொள்ளும் வாய்ப்பை இராஜபாளையம் கம்பன் கழகம் வழங்கியது. இவ்வாய்ப்பைப் பெற்ற நான், பசித்தவனுக்குக் கிடைத்த பாலமுதமாய் அதனை ஏற்றுக் கொண்டேன். கம்பன் என்னும் மாபெருங் கடலில் கண்டெடுத்த சில முத்துக்களை கம்பன் அடிமலருக்கே மணியாரமாய்ச் சூட்டி மகிழ்கிறேன். 1980 -ஆம் ஆண்டு தொடங்கி வெள்ளி விழாவை நோக்கி நடைபோடும் இராஜபாளையம் கம்பன் கழகம் ஆற்றி வரும் அரும்பெரும் கலை, இலக்கியப் பணியை உலகறியும். எனவே கம்பன் கழகத்து அன்பர்களுக்கு எல்லாம் என் நன்றி உரியது.

கழகத்தின் புரவலர்கள், செயற்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றி பாராட்டுகிறேன்.

சிறப்பாக கழகத்தின் பொதுச் செயலாளர் திருமிகு. என்.எஸ்.முத்துகிருஷ்ண ராஜா அவர்களை, நான் நன்றியுடன் நினைத்துப் பார்க்கிறேன். அன்னாரது தொடர்ந்த முயற்சியே இந்நூலுக்குப் பின்புலமாக அமைந்துள்ளது. இந்நூலை அச்சிட்டு உதவிய இராஜபாளையம் நவீன் மினி ஆப்செட்உரிமையாளர் திருமிகு. எம்.கார்த்திகேயன் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைச் சமர்ப்பிக்கிறேன். இந்நூலை வெளியிட்டு பெருமைப்படுத்திய கம்பன் அடிசூடி திருமிகு. பழ. பழநியப்பன் அவர்களுக்கும் திறனாய்வு உரை நிகழ்த்திப் பாராட்டிய தமிழறிஞர் முனைவர். சுப.அண்ணாமலை அவர்களுக்கும் என் நன்றி என்றும் உரியது. கம்பன் புகழ்பாடி, கன்னித் தமிழ் வளர்க்கும் அனைத்துக் கம்பன் அன்பர்களுக்கும், இந்நூலை அர்ப்பணிப்பதில் பெருமகிழ்வு கொள்கிறேன்.

- பேராசிரியை இளம்பிறை மணிமாறன்

'கம்பனில் வாழ்வியல் நெறிகள்'

வடிவம் பெற உதவிய கம்பன் கழக புரவலர்கள்

கம்பன் அற நெறிச் செல்வர் திரு.ஜி.கே. சுந்தரம் அவர்கள்	கோவை
திரு. எ. ராம்மோஹன் ராஜா, பாலிஸ்பின்	இராஜபாளையம்
டாக்டர். எஸ். ஜெகத்ரட்சகன், எம்.ஏ., எம்.பி.,	சென்னை
திரு. டி.ஆர். தினகரன், ஸ்ரீராமலிங்கா மில்ஸ்	அருப்புக்கோட்டை
திரு. எம்.எஸ்.டி. சந்திரசேகர ராஜா, ஸ்ரீபாரதி காட்டன் மில்ஸ்	இராஜபாளையம்
திரு. எம்.வி. பீமராஜா, ஆனந்தாஸ்	இராஜபாளையம்
திரு. என்.ஆர். அழகராஜா,	தேனி
திரு. எம்.ஏ. சுப்பிரமணிய ராஜா, ஹோட்டல் ஜெய்சாந்தம்	இராஜபாளையம்
திரு. பி.ஆர். விஜயராகவ ராஜா, ஸ்ரீராம் புராடக்ட்ஸ்	இராஜபாளையம்
திரு. கே.எஸ். முத்துசிங்கப்ப ராஜா, கே.எஸ்.ஆர்.குருப்ஸ்	இராஜபாளையம்
திரு. பி.கே. அர்ஜுன ராஜா, ராஜுகாட்டன் மில்ஸ்	இராஜபாளையம்
திரு. பி.ஏ.பி. ராஜு, அரிமா முன்னாள் ஆளுநர்	இராஜபாளையம்
அரிமா பி.எஸ். துரைசிங்க ராஜா	கடையநல்லூர்
திரு. எஸ்.ஆர். கார்த்திக், சிவில் காண்ட்ராக்டர்	இராஜபாளையம்
மெசர்ஸ் டி.பி. டெக்ஸ்டைல்ஸ்	இராஜபாளையம்
திரு. பி.வி. இராமசுப்பிரமணிய ராஜா, ஸ்ரீ ராஜுலட்சுமி ஸ்பின்னர்,	"
திரு. பி.என்.எஸ். நாராயண ராஜா, பி.எஸ்.என். ஸ்பின்னர்ஸ்	இராஜபாளையம்
திரு. கே.எஸ். நாகராஜன் ராஜா, ஏ.வி.எம். பிலிம் டிஸ்ரிபூட்டர்ஸ்	மதுரை
திரு. கே.ஏ. ரவி ராஜா ஸ்ரீ அர்ஜுனா வில்லோ பேக்டரி	இராஜபாளையம்
திரு. கே.ஏ. சீதாராம ராஜா, (கண்ணன்) "	இராஜபாளையம்
திரு. கே.பி. அய்யப்ப ராஜா ஸ்ரீ ரேங்கபாளையம்,	இராஜபாளையம்
திரு. கே.டி. வெங்கடேச ராஜா, அடையார் ஆனந்தபவன் ஸ்வீட்ஸ்	சென்னை
திரு. கே.டி. ஸ்ரீநிவாச ராஜா, அடையார் ஆனந்தபவன் ஸ்வீட்ஸ்	சென்னை
திரு. எம். முரளி, ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ்	சென்னை

திரு. எ. ராஜேந்திரன், பாபு பிரதர்ஸ் — சிவகாசி

திரு. என்.எஸ். சுப்பராஜா, மரம் வியாபாரம் — இராஜபாளையம்

புலவர் க. கொன்றைபாண்டி, திருவள்ளுவர் பதிப்பகம் — ஸ்ரீவில்லிபுத்தூர்

திரு. என்.எஸ். செல்வராஜ், ரோட்டரி — இராஜபாளையம்

திரு. கே.சி.முத்தையா ராஜா (இன்சூரன்ஸ்) — இராஜபாளையம்

திரு. பி.எம். ராமராஜ், முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் — இராஜபாளையம்

திரு. டி.கே. அன்னமராஜா — பழையபாளையம், இராஜபாளையம்

திரு. என்.எஸ். ஜெகநாத ராஜா, — தர்மாபுரம், இராஜபாளையம்

திரு. வி.எஸ். கணேச ராஜா (நெல்) — இராஜபாளையம்

திரு. என்.எஸ். ராமகிருஷ்ணன், சுகந்தம் மில்ஸ் — இராஜபாளையம்

திரு. என்.எஸ். பலராம ராஜா, ஸ்ரீநிவாசகன் எலக்ட்ரிக்கல்ஸ் — இராஜபாளையம்

திரு. பி.எஸ்.கே. தேவராஜா, கிருஷ்ணா மில் ஸ்டோர்ஸ் — இராஜபாளையம்

திரு. எஸ். பாலகிருஷ்ணன், நகர் மன்ற உறுப்பினர், மலைநகர், இராஜபாளையம்

திரு. கே.எஸ். ராமகிருஷ்ண ராஜா, ஸ்ரீலட்சுமி ஷா மில்ஸ் — இராஜபாளையம்

திரு. என்.ஆர். சத்யநாராயண ராஜா, அஜந்தா ஸ்வீட்ஸ் — இராஜபாளையம்

திரு. எஸ்.எஸ். ராமசாமி ராஜா, — சின்னைய ராஜா தெரு, இராஜபாளையம்

திரு. பி.எஸ். வேலாயுத ராஜா, பேரிங்ஸ் & பேரிங்ஸ் — இராஜபாளையம்

திரு. எம்.கே. சுப்பிரமணிய ராஜா, ஆகாஷ் டைம்ஸ் — இராஜபாளையம்

கம்பனில் வாழ்வியல் நெறிகள்

பொருளடக்கம்

என்றும் வாழ்க

மங்கையொரு கூறுடையான்
வலமார்பில் திருவுடையான்
வாணிகேள்வன்

தங்களருள் நனி சுரக்க
தண்டமிழ்த்தாய் கடைக்கணிக்க
சான்றோர் வாழ்த்த

பங்கயத்தாய் அருளி ராச
பாளையத்தில் பைந்தமிழ்ச்சீர்
பரப்புதற்கு

இங்கின்று மலர்கின்ற
எழிற்கம்பன் கழகமிது
என்றும் வாழ்க

- கம்பன் அடிப்பொடி,
செயலாளன், கம்பன் கழகம், காரைக்குடி.
25-10-1980.

✽✽✽✽✽

வாழ்க இனிது

பண்புமிகும் ராஜபாளையம் மேவுபுகழ்
கண்போன்ற கம்பன் கழகமது - விண் பரவு
நன்றுபுரி கோதண்டராமன் திருவருளால்
என்றுமிக வாழ்க இனிது.

அன்பன்
கிருபானந்தவாரி
16-12-90

கம்பனில் வாழ்வியல் நெறிகள்

1. தோற்றுவாய்

கம்பனது இராமகாதை உலகளாவிய ஒரு தனிப் பெருங் காப்பியம். காப்பிய கர்த்தா என்ற வகையிலும், கவிஞன் என்ற முறையிலும், கம்பன் நம் உள்ளத்தை நிறைக்கிறான். கம்ப நாடன் கவிதையைப் போல் கற்றாருக்கு இதயம் களியாது என்ற வாசகம் முற்றிலும் உண்மையானது. கற்ற கருத்துக்களையும், கவிதைகளையுமே மீண்டும் மீண்டும் அசைபோட்டு மகிழ்ந்து அனுபவிக்கும் தனி சுகம், கம்பனிடம் தஞ்சம் புகுந்த அனைவருக்குமே நிரம்ப உண்டு. எத்தனை முறை கற்றாலும் இனிக்கும் தேனமுதுக் கவிதைகளைக் கம்பனைப் போல் வேறுயாரால் தர இயலும்? கம்பன் ஒரு பன்முகக் கலைஞன். அவன் தொடாத துறை என்ற ஒன்று அவன் தன் காப்பியத்தில் இல்லை. இலக்கியம் காலத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி என்றனர் திறனாய்வாளர். காப்பியத்திற்குக் கருவாய் அமைந்த கதை நடந்த காலத்தை மட்டுமல்லாமல், அக்காப்பியத்தை இயற்றிய கவிஞன் வாழ்ந்த காலத்தின் சுவடுகளையும் ஒரு காப்பியம் பிரதிபலிக்கிறது. ஆனால் அத்துடன் ஒரு காப்பியம் முழுமை அடைந்து விடுவதில்லை. கவிஞன் உலகிற்குச் சொல்ல வரும் செய்தி என்ன என்பது காப்பிய வரிகளின் அடிநாதமாக ஒலித்துக் கொண்டிருப்பதுதான் காப்பியத்தின் சிறப்பு. அத்தகைய செய்திகள் உயர்ந்த நெறிகளாக பாத்திரங்களின் வாயிலாகவும் கவிஞனின் வாய்மொழியாகவும் கற்போரின் நெஞ்சங்களை வந்து சேர்கிறது.

ஈடு இணையில்லாமல், உலக இலக்கிய அரங்கில் பீடு நடை போட்டு வரும் கம்பனின் இராம காதையில் உயர்ந்த நெறிகளெனப் பேசப்படுகின்ற வாழ்வியல் நெறிமுறைகள் ஏராளமாக எடுத்துரைக்கப்படுகின்றன. சொல்லப்படும் செய்திகள் தரமானதாக அமைதல் வேண்டும் என்பதோடு, சொல்லுகின்ற முறையினாலும், அதனைச் சொல்பவரின் திறத்தினாலும் செய்தி

அழுத்தமும், உரமும், தெளிவும் பொலிவும் பெறுகிறது. கம்பனது பேச்சில் இருக்கும் வீச்சு அவன் எடுத்துக்காட்டும் மேன்மை நெறிகளை மெருகூட்டி மிளிரச் செய்கிறது.

நல்லவண்ணம் வாழ்தல்

வீட்டிற்கும் நாட்டிற்கும் தன்னைச் சார்ந்தவர்களுக்கும் பயன்பட வாழாதவன் மனிதனே அல்லன். தன்வீடு தன் சுற்றம் தன்பெண்டு என்று வாழ்பவனை, சிறியதோர் கடுகுபோல் உள்ளம் கொண்டவன் என்று பாவேந்தர் பாரதிதாசன் பாடுகிறார். வாழ்வின் அடிப்படைத் தேவைகளை எல்லாம் பெற்று, அதற்கு மேலும் பட்டம், பதவிகள், வசதிகள் அனைத்தும் அடைந்தவுடன் மனிதர்கள் தங்களை மாண்புடையவர்களாகத் தாங்களே கருதிக் கொள்கிறார்கள். ஒரு மனிதனின் உண்மையான மதிப்பு அவன் வாழும் ஆடம்பர வாழ்க்கையிலும் வசதிகளிலும் அடங்காது. மனிதன் அவனது நற்குணங்களாலும், அவனது பண்பாட்டு நெறிகளாலும் மட்டுமே மதிப்பிடப்படுகிறான். ஒருவனது வாழ்வுமுறை, நடைமுறை ஒழுக்கம், அன்பையும் அறத்தையும் இரு கண்களாகப் பாவித்து நடக்கும் நடைமுறை, உலகம் பழிக்கும் செயல்களில் ஈடுபடாமல் இருப்பது, நலமும் ஒழுக்கமும் சான்ற பெரியோர்கள் காட்டிய வழியில் நடப்பது ஆகிய சிறப்பியல்புகளே ஒருவனை முழுமையான மனிதனாக ஆக்க வல்லன. இத்தகைய செம்மாந்த பண்புகளைப் பெறாதவனுடைய வாழ்வு, ஒரு வறண்ட பாலைவனம் போன்றது.

எனவே தான் திருஞான சம்பந்தர் 'மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்' என்று பாடினார். நல்ல வண்ணம் என்பது செம்மாந்த பண்புகளைப் பெற்று சிறப்புடன் வாழ்வது என்று பொருள் படும். பாவை பாடிய ஆண்டாள் நாச்சியாரும் வையத்து மக்களை விளித்துப் பேசும் போது 'வையத்து வாழ்வீர்காள்'! என்றழைக்கிறார். வாழ்வதற்கும் வசிப்பதற்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. புலியும் சிங்கமும் குகைகளில் வசிக்கின்றன. பறவைகள் கூடுகளில் வசிக்கின்றன என்று சொல்லுவதில் தவறில்லை. மனிதன்

வாழ்கிறான் என்று சொல்ல வேண்டும். வேளா வேளைக்கு உண்டு உறங்கிக் கிடத்தலை மட்டும் செய்து கொண்டிருப்பவன் 'வாழ்கிறவன்' ஆகான் 'வசிப்பவன்' எனப்படுவான். மனிதன் வாழ்கின்ற வாழ்க்கைக்கு ஒரு பொருளும், குறிக்கோளும் இருத்தல் அவசியம். இலக்கு இல்லாதவனின் வாழ்நாள் வீழ்நாள் ஆதல் கண்கூடு. நடந்து வந்த வாழ்வுப் பாதையை குறிப்பிட்ட வயதிற்குப் பின் திரும்பிப் பார்க்கின்ற மனிதன், நாம் சீராகவும் செம்மையாகவும் தான் வாழ்ந்திருக்கிறோம் என்று பெருமிதம் கொள்ளும் அளவில் வாழ்வு அமைதல் வேண்டும்.

வாழ்வும் இலக்கியமும் :

வாழ்வு தான் இலக்கியம்; இலக்கியம் தான் வாழ்க்கை. அந்த வாழ்க்கை நெறி சார்ந்ததாக இருக்க வேண்டும். ஒரு சமுதாயத்தில் மக்கள் ஒரு சில ஒழுக்க நெறிகளைப் பின்பற்றி வாழும் போது அந்த சமூகமானது கட்டுக்கோப்பான சமுதாயம் என்று அழைக்கப்படுகிறது. நெறியிலா நிலையில் நின்று வாழ்வைப் பாழ்படுத்தும் மாந்தருக்கும் பண்பாட்டைச் சொல்லித் தருவது இலக்கியம். ஒரு கவிஞன் என்பவன் தன் தரமான கவிதைகளால், அதனைக் கற்பவர் மனதில் பண்பாட்டைத் தோற்றுவிக்க வேண்டும். சிறந்த கவிஞன் என்பவன் பிறர் மனத்தில் அவன் தோற்றுவிக்கின்ற பண்பாட்டைக் கொண்டே முடிவு செய்யப்படுகிறான் என்று எமர்சன் குறிப்பிடுகிறார். 'The great poets are judged by the frame of mind they induce' Emerson preface to parnaasus

வாழ்க்கையின் பல பரிணாமங்களையும் நன்குணர்ந்து தொகைப்படுத்தியும் வகைப்படுத்தியும் உரைக்கும் பாங்கில் கம்பன் ஒரு தத்துவ ஞானியாகவே காட்சியளிக்கிறான். நல்ல கவிதை ஒரு சிறந்த தத்துவம். நல்ல கவிஞன் ஒரு தத்துவ ஞானி. தத்துவ சிந்தனையில்லாதவன் கவிஞனாவது சாத்தியப்படாது என்கிறான் அறிஞன் கோல்ரிட்ஜ். 'No, man was ever yet a great poet without being at the same time a profound philosopher Coleridge - Biographia Literaria

பண்பாடு, சமயம், ஆழ்ந்த கருத்துக்களைத் தருதல், வேகமான புலன்களையும் கட்டுப்படுத்துதல், வாழ்வின் நல்ல தன்மைகளை மேம்படுத்துதல் ஆகியவை எல்லாம் கவிதையின் பயன்பாடாக அமைதல் வேண்டும். அவ்வாறு அமையாத கவிதை வெறும் ஒலிகளின் சேர்க்கையாக இருக்குமே தவிர கவிதையாகாது என்றுரைக்கும் திறனாய்வாளர் ஐ.ஏ. ரிச்சட்ஸின் கூற்று இங்கு கவனிக்கத்தக்கது. உன்னதப் பண்பாட்டு நெறிகளை எடுத்துரைத்து வாழ்வை மேம்படுத்தி, வளப்படுத்தும் கவிதைகளே கம்பனுக்கு வானளாவிய புகழைத் தந்தது.

'வையத்து வாழ்வாங்கு வாழ்தல்' என்பது வான்புகழ் வள்ளுவர் பயன்படுத்தும்சொற்றொடர். பூமியில் தோன்றிய ஒவ்வொரு மனிதனும் சில நெறிமுறைகளைக் கடைப்பிடித்து வாழக் கடமைப்பட்டவன். கண்டதே காட்சி கொண்டதே கோலம் என வாழ்வது விலங்கு வாழ்வு. உலகில் நமக்கு மேல் வரிச்சட்டமாக வாழ்ந்த சான்றோர் எவ்வாறு வாழ்ந்தனர் என்பதனைப் பார்த்து அதன்படி வாழ்க்கையை அமைத்துக் கொள்வதும், அற நூல்களின் மூலமாக நம் வாழ்வில் கொள்ளத் தக்கவை எவை, தள்ளத் தக்கவை எவை என்று அறிந்து தீயனவற்றை விடுத்து நல்லன நாடி நிற்பதும், சான்றாண்மை உடைய வாழ்வு வாழ நமக்குத் துணைபுரியும். அறநூல்கள் நாம் கடைப்பிடிக்க வேண்டிய அறங்களை மட்டும் திட்ட வட்டமாக எடுத்துரைக்கின்றன. மாறாக காப்பியங்கள், கதையினைக் கவிதைச் செழுமையுடன் சொல்லிக்கொண்டு வருகின்ற போதே பல வாழ்வியல் நெறிகளை நம்மை உணர வைத்து விடும் ரசவாதத்தைப் புரிந்து விடுகின்றன. இந்த வகையில் கம்பனுக்கு இணை கம்பன் மட்டும் தான்.

சிரிப்பும் சிந்தனையும் :

நல்ல இலக்கியங்கள் கற்போருக்கு மகிழ்வு சேர்ப்பதோடு மட்டுமல்லாமல், நல்ல பல உண்மைகளை உலகுக்கு எடுத்துரைப்பதிலும் முன்னணியில் இருக்க வேண்டும். கம்பனது இராமகாதை மகிழ்வூட்ட வேண்டிய இடத்தில் நம்மை மகிழ

வைத்து, சிந்திக்க வேண்டிய இடத்தில் நம்மைச் சிந்திக்க வைத்து, வழிகாட்ட வேண்டிய இடத்தில் வழிகாட்டி, அறிவுறுத்த வேண்டிய இடத்தில் அறிவுறுத்தும் அழகுத் தமிழ்க் காவியம். கற்பார் உள்ளத்தைக் கவர்ந்திழுக்கும் கம்பனது கலைத்திறனையும், பாத்திரப் படைப்பையும், கவிதா நயத்தையும் போலவே, கம்பன் பேசும் வாழ்வியல் நெறிகளும் உள்ளத்தில் தங்கி நமக்குப் பாடம் புகட்டுகின்றன. அணிஅழகு, சொல்லாட்சித் திறன், புலமைநலம், புதுமைச் சிந்தனைகள், கருத்துவளம், நாடக உத்திகள் என மிளிரும் கம்பனின் கவினுறு திறம் நம்மை வியக்க வைத்து இன்பம் பயப்பவை. இத்தகைய சீர்மிகுந்த சிறப்பம்சங்களில் ஒன்றாகத் திகழ்வது தான் கம்பன்காட்டும் வாழ்வியல் நெறி.

உயர்நெறி உரைக்கும் திறம் :

கதையினைச் சொல்லிக் கொண்டு செல்கிற போதே, பல உயர் நெறிகள் ஒவ்வொன்றாக நம்மை வந்து சேருமாறு வகை செய்துள்ளான் கம்பன். கதாபாத்திரங்களின் வாயிலாகவும், உவமான உவமேயங்களின் மூலமாகவும், தன் கூற்றாகவும் பல நெறிகளை நம்முன் படைக்கிறான்.

உதாரணமாக வீடணன் அடைக்கலம் குறித்து இராமபிரான் நண்பர்களுடன் ஆலோசனை செய்யும் போது சுக்ரீவன், ஜாம்பவான் நீலன் முதலியோர் தங்கள் கருத்தைத் தெரிவித்த பின்னர் இராமன் அனுமனைக் குறிப்பினால் வினவ, அனுமன் தன் கருத்தைத் தெரிவிக்கலானான். வீடணனைப் பார்த்தவுடன் அவன் ஒரு வஞ்சகனாக இருக்க முடியாது என்பதனைத் துல்லியமாக அனுமன் தெரிந்து கொண்டான். அனுமனைத் தவிர, ஏனையோர் வீடணனை இராமன் ஏற்றுச் சரணம் வழங்குவது பற்றி பல்வேறுபட்ட ஐயப்பாடுகளை வெளிப்படுத்தினர். ஆனால், அனுமனோ உள்ளத்தின் தூய்மையை முகம் கண்டிப்பாகப் பிரதிபலித்தே தீரும் என்பதனை நன்கு அறிந்தவன். உள்ளத்தில் வஞ்சனை குடியிருந்தால், அந்த வஞ்சனை வாய்ச்சொல்லில் வெளிப்படும் என்று சொல்வதற்கில்லை. ஏனெனில் மனதிற்குள் குரோதமும்

வாய்ச்சொல்லில் தேனுமாக வாழ்பவர் பலர். ஆனால் முகமோ உண்மையான உணர்வுகளைத் தவறாமல் பிரதிபலித்து விடும். மனத்தில் இருக்கும் வஞ்சனையை எவ்வளவு முயற்சி செய்தாலும், ஒளித்து வைத்தாலும் கண்கள் தெளிவாகத் தெரிவித்துவிடும்.

'வண்டு உளர் அலங்கலாய் ! வஞ்சர் வாள் முகம்,
கண்டது ஓர் பொழுதினில், தெரியும்; கைதவம்
உண்டு எனின், அஃது அவர்க்கு ஒளிக்க ஒண்ணுமோ?
விண்டவர் நம்புகல் மருவி வீழ்வரோ'?

'உள்ளத்தின் உள்ளதை, உரையின் முந்துற,
மெள்ளத் தம் முகங்களே விளம்பும்; ஆதலால்
கள்ளத்தின் விளைவு எலாம் கருத்து இலாஇருள்
பள்ளத்தின் அன்றியே வெளியில் பல்குமோ'?

(வீடணன் அடைக்கலப் படலம், யுத்த காண்டம்)

என்று சொல்லி, வீடணன் எந்தத் தவறினையும் செய்யாதவன்; அடைக்கலம் என வந்தவனை ஏற்றுக் கொள்வது தான் தகுதியானது என்று அனுமன் எடுத்துரைக்கிறான். இவ்வாறு அனுமன் எடுத்துச் சொல்லும் விடையிலேயே உன்னத நெறிகள் பேசப்படுகின்றன. வஞ்சகனை முகத்தைப் பார்த்தே தெரிந்து கொள்ளலாம். ஏனெனில் உள்ளத்தில் உள்ளதை முகங்களே விளம்பும்.

எப்பொழுதும் மனிதர்கள் நேர்மையும் நற்குணங்களும் உடைய சான்றோர் சொற்கேட்டு நடத்தல் வேண்டும். பெரியவர்களின் சொற்கேட்டு நடந்தால், அறவழியை விட்டு நழுவிச் செல்கிற நிலை உருவாகாது. நல்லோர் துணையைப் பெற்ற ஒருவன் ஒருநாளும் தவறான பாதையில் செல்லமாட்டான். வாழ்க்கையில் எத்தனை வெற்றிகளைக் குவித்தவனாக இருந்தாலும், எவ்வளவு வீரமும் பராக்கிரமும் உடையவனாக இருந்தாலும் கீழ்மைக்குணம் உடையோரின் சொல்லைக் கேட்டு

நடக்க ஆரம்பித்தால், அத்தகையவன் அழிந்து போவான். இராவணனுக்கு அறிவுரை சொல்லும் போது மேற்கண்ட அறநெறியை வீடணன் எடுத்துரைக்கிறான். அறம் பிழைத்தவர்கள் இந்தப் பூமியில் சிறப்புடன் வாழ்ந்ததாக வரலாறு இல்லை என்கிறான்.

'வாழியாய் ! கேட்டியால் ; வாழ்வு கைம்மிக
ஊழி காண்குறு நினது உயிரை யோர்கிலாய்,
கீழ்மையோர் சொற்கொடு கெடுதல் நேர்தியோ?
வாழ்மைதான் அறம் பிழைத்தவர்க்கு வாய்க்குமோ'?

(வீடணன் அடைக்கலப் படலம், யுத்த காண்டம்)

தீர்க்க முடியாத பெருந்துன்பத்தைத் தமக்கு மற்றவர் இழைத்தாலும், செம்மை மனம் உடைய அருளாளர்கள் தங்களது இயல்பான பண்பிலிருந்து கொஞ்சமும் மாறாமல், தங்களுக்குத் தீங்கு இழைத்தவர்களுக்கும் மனம் கோணாது உதவி நிற்பர். இவ்வுலகில் தங்களுக்கு நன்மை செய்கிறவர்களுக்குக் கூட கேடுசெய்கிற கயவர்களும்உள்ளனர்.

தங்களுக்கு நன்மை செய்வாருக்கு மட்டும் நன்மை செய்கின்ற சாமான்யர்களும் உள்ளனர். தங்களுக்குக் கேடு செய்வாருக்கும் நன்மை செய்கின்ற உத்தமர்கள் மிகவும் அபூர்வமானவர்கள். சீதையைத் தன்னிடமிருந்து பிரித்த இராவணனின் சகோதரன் என்று தெரிந்தும், விரும்பி வந்த தனக்கு சரணார விந்தங்களைத் தந்த ஸ்ரீராமனின் கருணையை எண்ணிக் கண்ணீர் சொரிந்தான் வீடணன். 'அறிவு இல்லா அரக்கன் என்னும் பிறவியைத் துறந்து தூய்மையானவனாக மீண்டும் பிறப்பெடுத்தேன்' என்கிறான் வீடணன். செம்மை மனம் படைத்தோர் தம் நிலையினின்றும் ஒருநாளும் திரிவதில்லை என்ற நெறி வீடணன் வாய்ச்சொல்லாய் வெளிப்படுகிறது.

'தீர்வு அரும் இன்னல் தம்மைச் செய்யினும் செய்ய சிந்தைப்
பேர் அருளாளர் தம் தம் செய்கையின் பிழைப்பது உண்டோ ?
கார் வரை நிறுவி, தன்னைக் கனல் எழக் கலக்கக் கண்டும்,
ஆர்கலி அமரர் உய்ய அமுது பண்டு அளித்த தன்றே'

(வீடணன் அடைக்கலப் படலம் , யுத்தகாண்டம்)

கொடைக்குணம் என்பது பிறவிக் குணம். கொடைக்குணம் உடைய சான்றோர்கள், தங்கள் செல்வங்களை அடியோடு இழக்கும் நிலைக்கு வந்தாலும் தங்கள் தன்மையிலிருந்து நீங்க மாட்டார்கள். தம்மையே அழித்துக் கொண்டாவது, மற்றவருக்கு உதவும் மனம் படைத்தவர்களாக இருப்பர் கொடைஞர். எவ்வளவு கொடுத்தாலும், நிரம்பக் கொடுத்து விட்டோம் என்று எண்ணிப் பார்க்காத சான்றாண்மை அவர்களுக்கே உரிய பண்பு. பிறருக்கு உதவி புரிவதனால் தனக்குக் கேடுவரும் என்றால், அக்கேடு ஒருவன் தன்னை விற்றாவது வாங்கிக் கொள்ளும் தகுதி உடையதாகும்.

ஒப்புரவி னால்வரும் கேடுஎனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்கது உடைத்து

என்கிறார் திருவள்ளுவர்.

சீதையை மீட்பதற்கு இராமன் அணைகட்டப் பணித்ததனால் அணைகட்ட நளன் தயாரானான். வானரங்கள் மலைகளைப் பெயர்த்து எடுத்தும், வாலினால் கட்டி இழுத்தும் நளனிடம் கொண்டு வந்து சேர்த்தன. பெரிய மலைகள் கடலில் சேர்க்கப்பட்டதால் மலையிலிருந்து ஊற்றெடுத்துப் பாயும் தேனும், தேன் நிரம்பிய மலர்களும், சந்தன மரங்களும், அகில் கட்டைகளும், மற்றுமுள்ள அனைத்து மணப்பொருட்களும் கடலில் கலந்தன. அக்கலவையால் புலால் நாற்றம் வீசும் கடல், குடத்தில் வாசனைத் திரவியங்களுடன் கலந்து வைக்கப்பட்ட நன்னீரைப் போல பரிமள சுகந்த மணம் வீசிற்று. மாமரம் முதலிய மரங்களுடன் ஓங்கி உயர்ந்து நின்ற மலை கடலிலே வீழ்ந்தபோது, தன்னிடமுள்ள பழங்கள், காய்கள், பூக்கள், தேன் ஆகிய அனைத்தையும் மீன்கள் உண்ணுமாறு

தந்து உதவியது. இக்காட்சியினை வர்ணிக்கும் போது, தான் கடலில் வீழ்கின்ற நிலை வரும்போது கூட, தன் நலத்தை மீன்கள் உண்ணத்தரும் மலைபோல, சான்றோர்கள் தங்கள் செல்வம் அடியோடு அழிந்து போகும் நிலை வந்தாலும் தமது உத்தமப் பண்பினையும், கொடைக் குணத்தையும் விட்டு விலக மாட்டார்கள் எனத் தண்ணளியின் சிறப்பைக் கம்பன் பேசுந்திறம் நம்மைச் சிந்திக்க வைக்கிறது.

'தேம் முதல் கனியும் காயும், தேனினோடு ஊனும், தெய்வப்
பூ முதலாய எல்லாம், மீன் கொளப் பொலிந்த அன்றே,
மாமுதல் தருவோடு ஓங்கும் வானுயர் மானக் குன்றம்
தாம் முதலோடும் கெட்டால் ஒழிவரோ, வண்மை தக்கோர்'?

(சேது பந்தனப் படலம், யுத்த காண்டம்)

உயர்ந்த சிந்தனையும் ஒழுக்கமும் உடைய மரபில் வந்த ஆன்றோர்கள், எத்தகைய துன்பங்கள் வாழ்வில் எதிர்ப்பட்டாலும், மனம் தளர்ச்சி அடையாமல் பார்த்துக் கொண்டு, தங்களது குடும்பத்தைக் காப்பாற்றும் பணியினைக் கைவிடமாட்டார்கள். எத்தனையோ மலைகளைப் பெயர்த்தெடுத்து வீசியும், கடலானது கலக்கம் அடையாமல் இருப்பதை வர்ணிக்க வந்த கம்பன், துன்பம் வந்து அலை அலையாயச் சூழ்ந்த போதும், கடமையில் நிலைத்து இருக்கும் அற்புதமான மனிதர்களை எண்ணிப் பார்க்கிறான். 'இடும்பை எத்தனையும் படுத்து எய்தினும் குடும்பம் தாங்கும் குடிப்பிறந்தார்' என்கிறான். வாழ்க்கை என்ற தொடர் ஓட்டமானது, அங்கங்கே எதிர்ப்படும் தடைக்கற்களால் நின்றுபோகாமல் ஒரே சீராகச் சென்று கொண்டிருக்க வேண்டும். 'கவலைகள் என்ற பெயரால் கடமையை மறத்தல்' என்ற தவறு நிகழ்ந்து விடாமல் பார்த்துக் கொள்ளுதல் வேண்டும். எத்தனை துன்பங்கள் வந்தாலும் தான் புரந்து காக்க வேண்டிய குடும்பத்தின் கடமைகளை மறக்கலாகாது என்று உயர்நெறி உரைக்கிறான் கம்பன்.

எனவே கம்பனின் காப்பியம் நமக்கு மகிழ்வூட்டுவதோடு நின்றுவிடாமல், நம் இன்பத்தை இரட்டிப்பாக்கி நம்மைப் பற்றியும் நம்மைச் சுற்றி உள்ள உலகத்தைப் பற்றியும் நாம் அறிந்து கொள்ள பெருந்துணைபுரிகின்றது. ஒரு சீரிய காப்பியம் எப்படி அமைதல் வேண்டும் என்பதற்குக் கம்ப இராமாயணம் ஒரு எடுத்துக்காட்டு. கலை நம் இன்பத்தைப் பெருக்க வேண்டும். நசுக்கப்பட்டவர்களைச் சுதந்திரமானவர்களாக்க வேண்டும்; நம் வாழ்விற்குப் பயன் சேர்க்க வேண்டும். நாம் நம்மைப் பற்றி அறிந்து கொள்ள உதவ வேண்டும். உலகை நமக்கு அறிமுகப்படுத்துதல் வேண்டும் என்கிறார் வால்டர் பேட்டர் என்ற அறிஞர். "Given the Conditions I have tried to explain as constituting good art, then if it be devoted further to the increase of mens happiness, to the redemption of the oppressed, or to the enlargement of our sympathies with each other, or to such present of new and old truth about ourselves and our relation to the world,

கம்பன் நமக்கு உலகை அறிமுகப்படுத்துவதோடு நின்று விடாமல் 'உயர்ந்தோர் மாட்டு' எனப்படும் உலகில் மக்கள் பின்பற்றத் தகுந்த உன்னத வாழ்வியல் நெறிகளையும் எடுத்துரைக்கிறான். கம்பனது காப்பியத்தைக் கற்று முடித்த பின்னரும் இத்தகைய நெறிகள் நம் மனதில் நின்று கொண்டேதான் இருக்கின்றன. உலகப்புகழ்பெற்ற கவிஞர்களின் பெயர்களைச் சொன்ன மாத்திரத்தில் அவர்கள் எழுதிய கவிதைகளையும், காவியங்களையும், கற்றோர் அவர்களது மறக்க முடியாத புகழ் மிகுந்த கூற்றுக்களை எண்ணிப்பார்த்து, மகிழும் நிலை இன்று வரை இருந்து வருகிறது.

உதாரணமாக, காதல் கண்களில் தொடங்குகிறது என்று பொதுவாகச் சொல்வர். ஆங்கில நாடக ஆசிரியர் சேக்ஸ்பியர் காதலைச் சொல்லும் போது உண்மைக் காதல் கண்களால் காண்பதில்லை மனதால் காண்கிறது என்கிறார் 'Love looks not with the eyes but with the mind' என்கிறார். கடுமையான உழைப்பிற்குப் பின் ஓய்வு கொண்டால், அந்த ஓய்வு மகிழ்வு தரும். மாறாக,

எப்பொழுதும் சோம்பி இருந்து கொண்டு எப்பொழுதும் ஓய்வு என்றிருந்தால் ஓய்வு ஒரு துன்பமாக மாறிவிடும் என்கிறார் கிரேக்க நாடக ஆசிரியர் ஹோமர். 'Too much Rest becomes a pain' இது போன்ற வாசகங்கள் இலக்கிய ரசிகர்கள் மத்தியில் சிரஞ்சீவித்துவம் பெற்று நடமாடி வருபவை. கம்பனில் இங்ஙனம் ரசிக்கத் தக்க இடங்கள் ஆயிரமாயிரம் உண்டு.

2. சமயமும் மக்களும்

ஒரு சமயமானது எந்த நிலத்தில் தோன்றுகிறதோ அந்த நிலத்தில் வாழும் மக்கள் வாழ்வோடு தொடர்புடைய சம்பிரதாயங்கள், சமயத்தில் இடம்பிடிக்கத்தான் செய்யும். நிலத்திற்கு நிலம் மக்களின் கலாச்சாரம் வேறுபடுவதைப் போல, சமயத்திற்குச் சமயம் நடைமுறைகள் மாறுபடத்தான் செய்யும். எனவே என் சமயம் உன் சமயம் எனத் தரம்பிரித்து, உயர்வென்றும் தாழ்வென்றும் விமர்சிக்கும் செயல்தான் விபரீத விளைவுகளை உருவாக்குகிறது. இறைவன் பார்க்கின்ற இடமெங்கும் பரிபூரண ஆனந்தமாக நிறைபவன். எல்லையற்ற அன்பும் நிகரற்ற அருளும் உடையவன். அவரவர் அவனை உணர்ந்து கொண்டவாறு வணங்கி மகிழலாம். இன்னமொழியில் தான், இந்த வகையில் தான் என்ற வரையறை எல்லாம் கடந்தவன் இறைவன். யார் எங்கிருந்து எங்ஙனம் வழிபட்டாலும் அவ்வழிபாடு, பரம்பொருளாகிய இறைவனேயே சென்றடைகிறது என்ற உணர்வு நமக்கு இருக்குமானால் சமயக் காழ்ப்புணர்வுகள் தோன்றாது.

தான் சார்ந்திருக்கிற சமயத்தை வேண்டுமானாலும் உயர்த்திப் பேசிக் கொள்ளலாம், ஆனால் பிற மதங்களை குறைத்துப் பேசுதல் கூடாது என்று இன்றும் சில வெளிநாடுகளில் சட்டம் உள்ளது. ஒரு சமயத்தைச் சார்ந்தவன், மற்ற மதத்தைக் குறைத்துப் பேசும் பேச்சுத்தான், தான் சார்ந்த சமயத்தின் மேல் அழுத்தமான நம்பிக்கை உடையவன் என்று மற்றவர்களுக்குப் பறைசாற்றும் என்று மனிதன் தவறாக எண்ணங்கொண்டுள்ளான்.

சமயப்பூசல்கள் நிறைந்த பழங்காலத்தில் சமயவாதிகள் தாங்கள் சார்ந்த சமயம் தவிர, ஏனை சமயங்களை எள்ளி நகையாடினர். சமய இலக்கியக் கர்த்தாக்களும் தங்கள் கடவுளர்களை, பிற தெய்வங்களைவிட உயர்த்திச் சொன்னதோடு நில்லாமல், பல வேளைகளில், பிற சமயத் தெய்வங்களை ஒரு படி குறைத்துச் சொல்வதில் சுகம் கண்டனர். அருணகிரிநாதர் திருமுருகன் தாள் பற்றிய பின், ஒரு தவயோகியைப் போல வாழ்ந்தவர். தன் வழிபடு தெய்வமான தன்னை ஆட்கொண்ட நாயகன் முருகனைப் பாடும் போதெல்லாம் 'மால் மருகா என்றும் பச்சைப் புயல் மெச்சத்தகு பொருள் என்றும் பாடி மகிழ்கின்றார். அதே அருணகிரிநாதர் கந்தர் அலங்காரத்தில் முருகனது சிறப்பைச் சொல்ல வரும்போது, திருமாலின் வலம்புரிச் சங்கிலிருந்து எழும் நாதம் விண்கமழ் சோலையிலும் வாவியிலும் கேட்டது. ஆனால், முருகனின் திருவரைச் சங்கிலியின் கிண்கிணியோசை பதினான்கு உலகமும் கேட்டது என்று பாடுகிறார். சிவனடியார்களும் அருளாளர்களும் சிவபெருமானின் திருவருளை வியக்கும் போது அரியும் அயனும் அடிமுடி காண முடியாதபடி எல்லை கடந்து நிற்பவன் என்கின்றனர். வைணவம் சார்ந்த அருள் நூல்கள் திருமாலை உயர்த்திப் பேசும் போது அரனும் காணுதற்கரிய விராட்சொரூபன், ஓங்கி உலகளந்த உத்தமன் என்கின்றன. சமயத்தின் பெயரால் எழும் பூசல்கள் கணக்கில் அடங்கா. தான் வணங்கும் தெய்வமே உலகில் உயர்ந்தது என்று கூறி, பிறர் வணங்கும் தெய்வங்களைக் குறை கூறி, சமயக் காழ்ப்பினை மக்கள் வளரவிட்டுக் கொண்டிருக்கும் காலம் இது. ஒரு சமயம் சார்ந்தோர் மற்றொரு சமயத்தாரின் சம்பிரதாயங்களை நையாண்டி செய்வதும், அவர்கள் மனம் புண்படும் படி வெளிப்படையாகப் பேசிவருவதும் இன்றைய காலகட்டத்தில் வாடிக்கையாகி விட்டது. சமயங்களுக்கிடையே உருவாகும் போட்டிகள், பழிவாங்கும் நடைமுறைகள் இவைகளை விவாதிக்கவே மக்களவையில் அதிக நேரம் செலவழிக்கப்படுகிறதே அல்லாமல் நாட்டு வளர்ச்சியும் , மக்கள் நலனும் பற்றிய கருத்துப் பரிமாற்றங்களைப் பற்றிக் கவலைப்படுவார் இல்லையே' என மக்கள்நலனில் அக்கறை

உடையோர் வருந்திய கால கட்டமும் நம் தேசத்தில் இருக்கத்தான் செய்தது. இதே தேசத்தில் தான் மதங்களைக் கடந்து மனிதாபிமானம் பேணிய மகத்தான பல தலைவர்கள் வாழ்ந்து வரலாறு படைத்தார்கள். ஈஸ்வர அல்லா தேரே நாம்' என மகாத்மா காந்தியின் வழியில் மத நல்லிணக்கம் பேணிய பெரியோர்களும் நம் தேசத்தில் தான் வாழ்ந்தார்கள். இத்தகைய ஒருமை உணர்வுகள், நம் மக்களிடையே சரியான முறையில் வளர்க்கப்படாததால் ஏற்பட்ட விபரீதம் தான் இன்று சமயத்தின் பேரால் பல போராட்டங்களையும், சச்சரவுகளையும் நாடு சந்தித்துக் கொண்டிருக்கும் அவல நிலை உருவாகியுள்ளது. பிற தெய்வங்களைச் சற்றேனும் குறைவுபடச் சொல்லி தங்கள் தெய்வங்களைப் புகழ்ந்துரைக்கும் மனோபாவமே பரவலாகச் சமயச் சார்புடைய நூல்களில் காணப்படுகிறது.

காழ்ப்புணர்வின்மை :

இத்தகைய நிலையிலிருந்து முற்றிலும் மாறுபட்ட தன்மையினைக் கவிச்சக்கரவர்த்தி கம்பனிடம் காண்கிறோம். மஹாவிஷ்ணுவின் மறுவடிவமான ஸ்ரீராமனை கதைத் தலைவானகக் கொண்ட காவியமாயினும் எந்த ஒரு இடத்திலும் சமயக் காழ்ப்புணர்வுக்கு இடமளிக்காமல், பிற தெய்வங்களின் சிறப்பையும் எடுத்துச் சொல்லும் கம்பனின் பான்மை தனிச் சிறப்புடையது.

உதிக்கின்ற கதிரவனின் பேரழகைச் சொல்ல வந்த கம்பன், கின்னரர்கள், எண்ணற்ற வேதங்களைப் பாட, உலகத்தில் உள்ள உயர்ந்தோர்கள் போற்ற, தேவர்களும் முனிவர்களும் அந்தணர்களும் கைகுவித்து வணங்க, கடல் எனப்படும் மத்தளம் ஒலி எழுப்ப, வானம் என்னும் ஆடல் அரங்கில் நடனம் புரிகின்ற ஒளிமிகுந்த சூரியன் என்னும் நெற்றிக் கண்ணை உடைய சிவபெருமானின் நெற்றியிலிருந்து வெளிப்பட்ட நெருப்பு விழியைப் போல ஆதவன் உதித்தான் என்கிறான்.

எண்ண அரிய மறையினொடு கின்னரர்கள்
இசைபாட, உலகம் ஏத்த
விண்ணவரும், முனிவர்களும், வேதியரும்
கரம் குவிப்ப வேலை என்னும்
மண்ணும் மணி முழவு அதிர, வான் அரங்கில்
நடம் புரிவாள் இரவி ஆன
கண்ணுதல் வானவன், கனகச் சடை விரிந்தா
லென விரிந்த கதிர்கள் எல்லாம்.

(மிதிலைக் காட்சிப் படலம்; பாலகாண்டம்)

என்னும் பாடல் எண்ணுந்தொறும் இனிக்கும் தன்மையுடையது.

இறைவன் ஒருவனே :

சரயு நதியின் சிறப்பைச் சொல்ல வருகிறான் கம்பன். நதி மலையில் தோன்றி கடலில் சங்கமமாகின்றது. கல்லிடைத் தோன்றி கீழிறங்கி வந்து ஆறாகப் பெருக்கெடுத்து, பின் ஏரி குளம் முதலிய பல நீர்த் துறைகளிலும் பரவி, இறுதியாகக் கடலில் சங்கமமாகிறது. எல்லையற்ற பரம்பொருள் என்பது என்றும் ஒன்றுதான் பல சமயத்தவரும் அந்த ஏகப் பரம்பொருளைத் தான் பல வடிவத்தில் பலபெயர் சொல்லி வணங்கித் துதிக்கின்றனர். பல்வேறு சமயத்தார் அப்பரம் பொருளைப் பற்றிச் சொல்லும் பொருள் பலவகையாக இருந்தாலும் அவை அனைத்தும் ஏகபரம் பொருளைத்தான் சென்றடைகிறது. மலையின் நின்று வீழும் தண்ணீர் அருவியாகலாம் ஆறாகலாம் ஏரி குளமாகலாம் ஆனால் இறுதியில் சென்று சேரவேண்டியது கடலில் தான். அதுபோலவே எல்லாச் சமயத்தவரின் இறை வணக்கமும், அவரவர் சமயம் சொல்லும் தத்துவக் கருத்துக்களும் வேறு வேறாகக் காட்சி அளிக்கலாம். ஆனால் அனைத்து சமயத்தாரின் வழிபாடும் சென்று சேருவது வேதமும் விளக்கிச் சொல்லமுடியாத பரம்பொருளிடம் தான்.

கல்லிடைப் பிறந்து, போந்து, கடலிடைக் கலந்த நீத்தம்
எல்லை இல் மறைகளாலும் இயம்ப அரும் பொருள் ஈது என்னத்
தொல்லையில் ஒன்றே ஆகி, துறைதொறும், பரந்த சூழ்ச்சிப்
பல் பெருஞ் சமயம் சொல்லும் பொருளும் போல், பரந்தது அன்றே

(ஆற்றுப் படலம், பாலகாண்டம்)

வழிபடு தெய்வங்களுக்கிடையே உயர்வு, தாழ்வு எனப்பேசி, சமயப்பூசல்களை வளர்த்துக் கொண்டு ஒன்றுபட்டு வாழவேண்டிய சமூகத்தைத் துண்டாடிக் கொண்டிருப்போரும், 'இறைவன் ஒருவனே அவனது வடிவங்களைத்தான் நம் விருப்பம் போல் சித்தரித்து வணங்கிக் கொண்டிருக்கிறோம். நம் வழிபாடுகள் அனைத்தும் அந்த மூலப் பரம் பொருளைத் தான் சென்றடைகிறது' என்று உணர்ந்து கொ்ண்டால் சண்டை எது? கம்பனிடம் மிகுந்த ஈடுபாடு உடைய பாரதி பிற்காலத்தில் இந்த பேருண்மையைத் தான் இளம்பிறை அணிந்து மோனத்திருக்கும் முழுவெண் மேனியானும், கருநிறங்கொண்டு பாற்கடல் துயில்வோனும், மகமது நபிக்கு மறை அருள் புரிந்தோனும், ஏசுவின் தந்தையும் அனைவரும் மக்கள் உணர்ந்தும் உணராதும் பலவகையாகப் பரவிடும் பரம் பொருளின் பல வடிவங்கள் என்றான்.

3. ஆட்சி புரிவோருக்கு அறநெறி

அரசனும் அறமும் :

ஆண்டு அனுபவிப்பதற்குத் தான் நாம் பிறந்திருக்கிறோம்; அன்றாடங் காட்சிகளைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை என்று ஆடம்பரத்தில் திளைத்து அகம்பாவத்தில் வாழ்ந்த பதினாறாம் லூயியைப் போன்ற மன்னனையும் வரலாறு சந்திக்கத் தான் செய்திருக்கிறது. கன்றை இழந்த பசுவின் கண்ணீருக்கு பதில் சொல்லியாக வேண்டும் என்ற தார்மீக உணர்வுக்குக் கட்டுப்பட்டு தன் மகனையே தேர்க்காலில் இட்டுக் கொன்ற திருவாரூர் சோழனையும் வரலாறு சந்தித்துள்ளது. வெறும் வீர

சாகசங்களை மட்டும் புரிந்து, வெற்றி மேல் வெற்றியைக் குவித்து, அண்டை நாடுகளையெல்லாமல் கட்டி அரசாண்டு, தன் நாட்டு குடிமக்களைப் பற்றிக் கவலைப்படாமல் காலந்தள்ளிய மன்னர்களையும் வரலாறு சந்தித்திருக்கிறது. சூழ்ந்த பகையைச் சுட்டுப் பொசுக்கும் போது பகைவனிடம் காட்டும் கோபக் கனல் தெறிக்கும் வீர முகத்தையும், தன் அடியொற்றி வாழும் குடிமக்களைப் பராமரித்துப் புரக்குங்கால் அவர்களுக்குத் தாய் போன்ற அன்பு முகத்தையும் காட்டக் கூடியவனே சிறந்த மன்னன்.

அறிவுத் திறமும், ஆற்றலோடு வீரமும், நாளை வருவதை எண்ணிச் செயல்படும் தொலைநோக்குப் பார்வையும், தேவையறிந்து வறியாருக்கு வழங்கும் வள்ளன்மையும், கலை ஞானமும் ஒருசேர நிரம்பப் பெற்றவனாக மன்னன் இருத்தல் வேண்டும். கோசல நாட்டின் வளப்பத்தை எடுத்துரைக்கும் போதே ஒரு சிறந்த மன்னன் எப்படிப்பட்ட தன்மைகள் உடையவனாய் இருத்தல் வேண்டும் எனக் கம்பன் எடுத்துரைக்கிறான். கோசல நாட்டில் கடல் வாணிகம் சிறப்பாக நடைபெற்றது. பொன் போன்ற பல பொருட்களைச் சுமந்து சென்று, உரிய இடத்தில் அவற்றைக் கொண்டு சேர்த்து, பாரத்தை இறக்கி வைத்த பிறகு பொன் சுமந்த தன் வருத்தம் தீர, கப்பல்கள் நெய்தல் நிலத்தில் தங்கள் முதுகை ஆற்றிக் கொள்ளும் எனச் சொல்ல வந்த கம்பன் சிறந்த அரசன் அரசாட்சி புரிவதால் தன் பாரத்தை நீக்கி இளைப்பாறுகின்ற பூமியைப் போல், பாரம் சுமந்த கலங்கள் இளைப்பாறின என்கிறான். அங்ஙனம் குறிப்பிடும் போது ஒரு சிறந்த மன்னன் எத்தகைய குணபாவங்கள் உடையவனாக இருப்பான் என்பதனைக் குறிப்பிடுகிறான் கம்பன்.

அறம் என்பதென்ன, அதன் தன்மையும் முறையும் என்ன என்பதனை நன்கறிந்தவனாக மன்னன் இருத்தல் வேண்டும். அறத்தை உணர்தலும், அதனைப் பேணுதலுமே ஒரு மன்னனின் தலையாய கடமையாகும். அரசியலில் பிழை செய்யாமல் இருக்க அறம் துணை நிற்கும். 'அரசியல் பிழைத்தோருக்கு அறங்கூற்றாகும் என்கிறார் இளங்கோவடிகள். உலகத்தை எல்லாம் அரசன்

காப்பாற்றுகிறான். அந்த அரசன் நீதி நெறிமுறை கெடாதவாறு ஆட்சி செய்பவனாக இருந்தால் அந்த அரசனை அவன் போற்றும் நீதியே காப்பாற்றும் என்கிறார் திருவள்ளுவர்.

'இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்

அருங்குணங்கள் :

அரசர்கள் கடவுளின் பிரதிநிதிகளாகக் கருதப்பட்டார்கள். தன் குடிமக்களின் நலமான வாழ்விற்குத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்களாக மன்னர்கள் விளங்கினார்கள். மக்களோ தாங்கள் வாழ்ந்த மண்ணை ஒரு வெறும் நிலப்பரப்பாகக் கருதாமல், தங்களை ஆண்ட மன்னனை ஒரு மனிதனாக மட்டும்எண்ணாமல் நிலத்தை உயிராகவும் மன்னனை இறைவனாகவும் எண்ணி வாழ்ந்தனர். மன்னனுக்கும் மக்களுக்கும் இடையில் அன்பும், பரஸ்பரமும் நல்லெண்ணமும் இணைப்புப் பாலங்களாக அமைந்திருந்தன.

ஒரு மன்னன் சினங்கொள்ள வேண்டிய நேரத்தில் சினங்கொள்ள வேண்டும். தன் குடிமக்களை வாழவைக்க வேண்டிய கடப்பாடு உடைய மன்னன், அவர்களுக்கு எவ்விதத்திலும் தீமை செய்பவர்களை அழித்து ஒழிக்கும் போது சினங்கொள்ள வேண்டிய நிலை உருவாகத்தான் செய்யும். பயிர் ஒருபுறமும் களை ஒருபுறமுமாக வளரட்டும் என வாளா இருக்க முடியாது பயிர் நன்கு வளர களை நீக்கப்படுதல் வேண்டும். எனவே அறங்காக்கும் மன்னன், மறத்தை வீழ்த்த வேண்டிய நிலை வரும்பொழுது சினங்கொள்ளத்தான் செய்வான். தன் குடிமக்களைத் தான் காத்துக் கொள்ளுதல் வேண்டும் அதேநேரத்தில் குற்றம் செய்வோரைத் தண்டிக்கும் சினமும் செங்கோன்மையின் ஒரு அடையாளமே.

'குடிபுறங் காத்துஓம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்'

என்கிறார் திருவள்ளுவர்

ஒரு அரசு நடைபெறுவதற்கு வரிப்பணம் அத்தியாவசிய மானதாக இருந்தாலும், அந்த வரிப்பணம் இவ்வளவுதான் இருக்க வேண்டும் என மன்னன் அறிந்து பெறுதல் வேண்டும். வரிப்பணத்தைக் கொடுக்கும் மக்களுக்கு வரி செலுத்துதல் பெரிய சுமையாகத் தெரிதல் கூடாது. நிரம்பக் கொடுக்கிறோம் என்ற உணர்வு வருதல் கூடாது. மன்னன் மக்களைச் சிரமப்படுத்தி வரி வசூலிக்கிறான் என்ற எண்ணமே யாருக்கும் தோன்றுதல் கூடாது. மகாபாரதக் கதையில் மக்களிடம் மன்னன் வரிவசூல் செய்யும் பாங்கு எப்படி அமைதல் வேண்டும் என்று குறிப்பிடும் போது பீஷ்மர் தருமனுக்கு அறிவுரை சொல்கிறார். மக்களிடம் அதிக வரி வசூலிக்கக் கூடாது. பசுவினிடம் பாலை விரும்புபவன் புல்லும் நீரும் தந்து தான் பாலைப் பெற வேண்டும். அதிகமானப் பாலை விரும்பி பசுவின் மடியை அறுத்தால் பாலைப் பெற முடியாது. அதுபோல் மக்களுக்கு நலம் புரிந்து வரிவசூல் செய்தல் வேண்டும். அதிக வரிச்சுமை மக்களின் நலனைக் கெடுக்கும். மாலை கட்டுபவனைப் போல் மன்னன் வரிவசூலிக்க வேண்டுமே தவிர, கரி வியாபாரி போல் இருக்கக் கூடாது. மாலை கட்டும் வியாபாரி செடி கொடிகளை வளர்த்து மலர்களை மட்டும் எடுப்பான். கரி வியாபாரியோ மரத்தையே வெட்டி கரியாக்கி விற்பனை செய்வான்.

வரிச்சுமையால் பகைமுற்றி அரசர்கள் அழிந்த கதையும் உலக வரலாற்றில் உண்டு. ரஷ்யாவில் ஜார் அரசன் பிரான்சு நாட்டில் லூயி மன்னன் ஆகியோரின் அராஜகப் போக்கு அழிவில் முடிவுற்றது. குடிகளின் நலன் கருதி, பெரியோர்களையும் நல்லோர்களையும் மந்திரிகளையும் நாடி அவர்கள் சொல்லும் நன்முறை தழுவி மக்களுக்கு நலன் சேர்க்க வேண்டும். வானமழையைப் பார்த்து உலகம் வாழ்கிறது. அதுபோல மன்னனின் கோல் நோக்கி குடிமக்கள் வாழ்வர்.

குறைவில்லா நிறைவு :

அறவழிப்பட்ட தன ஆட்சித் திறத்தால் தன் தேசத்தை மாசுபடாமல் காப்பாற்றி, 'எல்லா உயிர்களுக்கும் நன்மையே புரிந்து

வந்தேன்' எனச் சொல்லும் அளவிற்கு தசரதன் ஆட்சி நடத்தினான் என்றால் அத்தகைமை பாராட்டுக்குரியது. தன் மாசற்ற பூமியின் மகிமையைக் கட்டிக் காத்து, தருமத்தை அப்பூமியின் கண் நிலை நிறுத்தி, நீர் வளத்தாலும், நில வளத்தாலும், பால் வளத்தாலும், பயிர் வளத்தாலும் எந்தக் குறைவும் ஏற்படாமல் கண்ணிமை போல் தன் நாட்டினைக் காப்பாற்றிய மன்னவன் தன் பெருமிதத்தை வார்த்தைகளில் வடிக்கும் போது 'பெண்கள் தன் கற்பினைக் கட்டிக் காப்பது போல், தன் தேசத்தைக் கட்டிக் காத்ததாகக் குறிப்பிடும் சிறப்பு எண்ணி எண்ணி இன்புறத்தக்கது.

'கன்னியர்க்கு அமைவரும் கற்பின் மா நிலம்
தன்னை இத் தகைதரத் தருமம் கைதர,
மன்னுயிர்க்கு உறுவதே செய்து வைகினேன்
என் உயிர்க்கு உறுவதும் செய்ய எண்ணினேன்'

(மந்திரப் படலம், அயோத்யா காண்டம்)

எத்தனை ஆட்சியாளர்கள் தங்களது கடந்த கால, அரசியல் பணியை எண்ணி உண்மையான மனநிறைவு எய்த இயலும். எத்தனைப் பேர் தசரதனைப் போல் 'கடமையினைச் செவ்வனே செய்தேன்' என்று வாக்குமூலம் தர இயலும். ஒரு மாபெரும் மன்னன் இத்தகைய நிறைவான ஆட்சியைப் புரிந்தான் என்றால் அந்தப் பெருமை அவனை மட்டுமல்ல, அவனுக்கு அருகிருந்து வழிநடத்திச் சென்ற அறம் உணர்ந்த அமைச்சர்களையும் சாரும்.

மன்னனும் தாயே :

ஒரு தாய் தன் குழந்தையிடம் அன்பு பாராட்டுவது போல தன்னலமற்ற அன்பினைத் தன் குடிமக்களிடம் பொழிய வேண்டியவன் மன்னன். எனவே தான் தசரதனைச் சொல்லும் போது கம்பன் 'தாயொக்கும் அன்பில்' என்கின்றான். மன்னன் எங்கோ மணிமாடத்தில் உலவிக் கொண்டு, மக்களைப் பற்றி மற்றவர் சொல்லத் தெரிந்துகொண்டு, அதன் பின்னரும் அவர்களைப் பற்றிக்

கவலை கொள்ளாமல் காலங்கழித்த கொடுங்கோலர்கள் பலரை வரலாறு நமக்கு இனங்காட்டியுள்ளது. அப்படிப்பட்ட கொடுங்கோன்மைக்கு அவர்களின் அன்பற்ற தன்மையே காரணமாகும். 'மன்னுயிர் எல்லாம் தன் உயிர்' என மன்னன் எண்ணுதல் வேண்டும். தன் நாட்டில் வாழுகின்ற மக்களாகிய உயிர்களையும், ஏன் செடி கொடி மரங்கள் தாவரங்கள் ஆகிய ஏனைய உயிர்களையும், ஒரு சேரத் தாங்கி நிற்கும், ஒரு உடல்போல் இருந்தான் தசரதச் சக்கரவர்த்தி. அந்த அன்பின் பெருக்கத்தால் தான், தன் நாட்டில் இல்லையெனச் சொல்வார் இல்லை என்ற நிலையை உருவாக்கினான். 'ஈந்தே கடந்தான் இரப்போர்க் கடல்' என்கிறான் கம்பன்.

'வயிர வான் பூண் அணி மடங்கல் மொய்ம்பினான்,
உயிர் எலாம் தன் உயிர் ஒக்க ஓம்பலால்,
செயிர் இலா உலகினில் சென்று, நின்று, வாழ்
உயிர் எலாம் உறைவது ஓர் உடம்பும் ஆயினான்.'

(அரசியற் படலம், பாலகாண்டம்)

வழிவழி வந்த தன் மரபுப் பெருமையைக் காத்து, மானம் பேணி, தானத்திலும் தவத்திலும் சிறந்து நின்று, வீரமும் ஈரமும் உடையவனாக பிறர்பழிக்க இடந்தராது வாழ்பவன் புகழ் மிக்க மன்னன் ஆவான். வாய்மையும் அறமும் காத்து நிற்கும் மன்னன், மாசற்ற புகழைத் தன் உயிரினும் மேலானதாகக் கருதி வாழ்வான். அத்தகைய மாண்புமிக்க மன்னர்கள் வரிசையில் தோன்றியவன் தசரதன். புகழொடு தோன்றியவன். 'தள்ள அரும் பெரும் புகழ்த் தசரதப் பெயர் வள்ளல்' என்கிறான் கம்பன். அரசர்க்கு இருக்க வேண்டிய அருங்குணங்கள் அத்தனையும் அமைந்தவன். 'நிறை குணத்துத் தசரதன்' என்றும் தருமத்தையே கவசமாகக் கொண்டவன் என்ற பெரும் புகழ் உடையவன் என்றும் கம்பன் குறிப்பிடுகிறான்.

இத்தகைய குணபாவங்கள் ஒரு மன்னனுக்கு இன்றியமையாதனவாகும். அறங்காத்தல், மறத்தை வீழ்த்தும் போது

தார்மீகச் சினங் கொள்ளுதல், மக்களைச் சிரமப்படுத்தாமல் வரி வசூலித்தல், தன் ஆட்சிக்கு உட்பட்ட மனிதர், பிராணிகள், தாவரங்கள் ஆகிய அனைத்து உயிர்களிடமும் அன்பு பாராட்டல், புகழ் பொருந்தி வாழ்தல் ஆகிய அனைத்துச் சிறப்பம்சங்களும் உடையவனாக இருந்தால் பூமி தன் பாரத்தை நீக்கி மகிழ்வுடன் இளைப்பாறும். தசரதனின் இத்தகைய சிறப்பான தன்மைகளால் பூமி பாரம் நீங்கி மகிழ்வுற்றது என்று குறிப்பிடும் போது, தீய குணங்களின் தொகுப்பாக இருக்கும் கீழ்மைக் குணத்தவன் அரசாட்சி புரிந்தால், அவனால் பூமியின் பாரம் அதிகமாகும் என்பதனை மறைமுகமாக உணர்த்துகிறான். யாதொரு நல்ல செயலையும் புரியாமல் உண்பதும் உறங்குவதும் கலகம் விளைவிப்பதுமாக இருப்பவனை ‘பூமிக்குப் பாரமாய் இருக்கிறான்’ என்று சொல்லும் பழக்கம் தொன்று தொட்டு நிலவி வருவது எண்ணிப் பார்க்கத் தகுந்தது. பூமிக்குப் பாரத்தை ஏற்றும் மன்னர்கள் மாண்பிழந்து மடிந்து போவர். மாறாகத் தசர்தச் சக்ரவர்த்தியோ தன் நேர்மைப் பண்பினாலும், மேன்மைக் குணத்தினாலும் பூமியின் பாரத்தையே குறைத்தவன் எனச் சொல்லி நம்மைச் சிந்திக்க வைக்கிறான் கம்பன்.

முறை அறிந்து, அவாவை நீக்கி, முனிவுழி முனிந்து, வெஃகும்
இறை அறிந்து, உயிர்க்கு நல்கும், இசைகெழு வேந்தன் காக்கப்
பொறை தவிர்ந்து உயிர்க்கும் தெய்வப் பூதலம் தன்னில், பொன்னின்
நிறை பரம் சொரிந்து, வங்கம், நெடுமுதுகு ஆற்றும், நெய்தல்’

(நாட்டுப்படலம் , பாலகாண்டம்)

எத்தகைய பொறுப்பும், கடமை உணர்வும் உடையவனாக மன்னன் இருத்தல் வேண்டும் என்பதனைச் சொல்ல வரும் பொழுது, ஒரு சிறந்த நெறியினை நமக்கு முன் வைக்கிறான் கம்பன். தான் அரசு செய்யும் நிலப்பரப்பை, அங்குலம் அங்குலமாகத் தெரிந்து வைத்துக் கொள்ளுதல் மன்னனின் அத்தியாவசியக் கடமையாகும். இந்த இடத்தில் நீருண்டு; இங்குக் குளம் உண்டு; மலையுண்டு; இங்கு மண்வளமுண்டு இங்கு இத்தகைய மக்கள் வாழ்கின்றனர். அவர்தம் வாழ்வு வளமுற நிலம் எத்தகைய பின்னணியை நல்கியுள்ளது

என்றெல்லாம் தன் ஆட்சிக்குட்பட்ட நிலப்பரப்பைப் பற்றி பூகோள ரீதியாகவும், கலாச்சாரம் பண்பாட்டு ரீதியாகவும் ஒரு மன்னன் அறிந்து வைத்திருத்தல் அவசியம்.

கண்ணெனக் காத்தல் :

தான் சொன்ன சொல்லைக் கேட்டு நடக்கவும், ஏவலை நிறைவேற்றவும் ஏராளமானபேர் இருக்கலாம். ஆயினும் அவர்கள் அனைத்தையும் பார்த்துக் கொள்வர் என்று வாளாவிருப்பது ஆண்மைக்கு அழகாகாது. 'உடையவன் இல்லாவிட்டால் ஒரு முழம் கட்டை' என நாட்டு வழக்கில் குறிப்பிடுவர். உரியவன் கவனத்துடன் செயல்படுகிறான் எனத் தெரிந்தாலே, அனைத்துச் செயல்களும் செம்மையாக நடைபெறும். தான் ஆட்சி செய்யும் நிலப்பரப்பை நேசிப்பவன் தான், தன் நிலத்தை நல்ல வண்ணம் அறிந்து வைத்திருப்பான். ஏழை விவசாயி ஒருவன் தனக்குச் சொந்தமான சிறிய நிலத்தை எங்ஙனம் தன் கவனத்தை எல்லாம் ஒன்றுகூட்டிப் பராமரிப்புச் செய்வானோ, அதுபோல் தசரதன் தன் நாட்டை பராமரித்தான் எனக் கம்பன் சொல்லும் திறம் போற்றுதலுக்குரியது. சிறிய பூமியின் சொந்தக்காரனாக இருந்தாலும், நிலம் வானம் பார்த்த பூமியாக இருந்தாலும், எதிர்பார்த்த விளைவைத் தராத பூமியாக இருப்பினும், காலைக் கதிரவன் உதிக்கு முன் கண் துயில் நீங்கி, கலப்பையுடன் தன் நிலத்திற்குச் சென்று, நிலமகளைத் தொட்டு வணங்கி மழை வராதா என ஏங்கி, விளையாத நிலமாகிலும் அதனுடனேயே, நாள் முழுதும் உறவாடி, அங்குள்ள முள்ளையும் புற்பூண்டுகளையும் அகற்றுவதில் கூட ஆனந்தம் காணும் ஏழை விவசாயி தன் நிலத்தை எவ்வாறு அறிந்து வைத்திருப்பானோ அதுபோல தன் வளநாட்டை தசரதன் அறிந்து வைத்திருந்தான்.

'எய்' என எழுபகை எங்கும் இன்மையால்,
மொய் பெறாத் தினவு உறு முழவுத் தோளினான்,
வையகம் முழுவதும் வறிஞன் ஓம்பும் ஓர்
செய் எனக் காத்து, இனிது அரசு செய்கின்றான்.

(அரசியல் படலம் , பால காண்டம்)

மன்னராட்சி பற்றிக் கம்பன் குறிப்பிடும் இக்கருத்து மக்களாட்சிக்கும் பொருந்தும். ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் மக்கள்பிரதிநிதிகளும், இவ்வாறு தங்கள் பொறுப்பின் கீழ் இருக்கும் நாட்டினையும் நிலப்பரப்பினையும் பற்றிய பௌதீக, பூகோள, வரலாற்று விஞ்ஞான உண்மைகளைத் தெள்ளத் தெளிவாகத் தெரிந்து வைத்திருத்தல் மிகவும் அவசியம்.

தான் வாழும் வீட்டைப் பற்றிக் கூட சரியாகத் தெரிந்து வைத்துக் கொள்ளாத மனிதர்களும் நாட்டில் இருக்கத்தான் செய்கின்றனர். மிகச்சிறிய பரப்புக் கொண்ட தன் வீட்டையே சரியாக நிர்வகிக்கத் தெரியாமல், அதன் தூய்மையைப் பேணிக்காக்காமல், எந்தப் பொருள் எங்கே இருக்கிறது என்று கூடத் தெரிந்து கொள்ள முடியாத குழப்பத்தில் உடனடித் தேவைக்கான பொருட்களைக் கூடத் தேடுதல் வேட்டை நடத்தித்தான் கண்டெடுக்கும் அவலம் இன்னும் பல வீடுகளில் இருந்து கொண்டு தான் இருக்கிறது. இத்தகைய ஒழுங்கற்ற தன்மை உடைய வீடுகளில் ஒருநாளும் மகிழ்ச்சியின் சாயல் கூடத் தென்படாது. ஒழுங்கில் தான் மகிழ்வு இருக்கிறது. எனவே வீட்டின் ஒவ்வொரு இடத்தினையும் துலக்கமாக வைத்திருத்தல் அவசியம். கம்பன் தசரதனின் ஆட்சித் திறத்தை எடுத்துச் சொல்லும் பாங்கில் மறைமுகமாக நமக்குச் சொல்கிறான். நம்மைச் சார்ந்த இடங்களை நாம் முதலில் அறிந்து வைத்துக் கொள்வோம். அந்த அறிவு நம் செயல்திறன் மேம்பட உறுதுணைபுரியும்.

ஆட்சியாளர்களும் 'மாதம் மும்மாரி மழை பொழிகிறதா' என மந்திரிமாரைக் கேட்ட பழைய பல்லவியை முடித்துக் கொண்டு' என் நாட்டை உலக அரங்கில் உயர்த்துவேன்' என்று சூளுரைக் கட்டும். ஆண்டுக்கு ஆறுமுறை வெளிநாடு செல்கின்ற பல பேர் தாங்கள் வாழும் பூமியைப் பற்றி சரிவரத் தெரிந்து வைத்துள்ளனரா? இங்குள்ள வரலாற்றுப் பெட்டகங்கள் கலாச்சாரக் கேந்திரங்கள், சிற்ப சித்திர வினோதங்கள் மெய்யறிவுப் பாடங்கள் இன்னும் எத்தனைபேருக்குத் திறவாத புத்தகங்களாய் உள்ளன.

இந்தியாவையே நாம் அதன் முழுப் பரிணாமத்தோடு பார்க்கவில்லை என்பதனால் தான் பண்டிட் ஜவஹர்லால் நேரு நாம் அத்தகைய ஒரு முயற்சியை மேற்கொள்ளத் தூண்டுதலாக அமையட்டும் என்று ஒரு வரலாறு படைத்த Discovery of India என்ற ஈடு இணையற்ற ஒரு நூலைப் படைத்தார். ஒரு முறை பெருந்தலைவர் காமராஜர் தமிழகத்தின் முதலமைச்சராக இருந்தபோது, நகர நிர்மாணம் பற்றித் தெரிந்து கொண்டு வர அயல்நாட்டுக்குச் செல்வதாக இருந்த நிபுணர் குழு முதலமைச்சரைச் சந்தித்து அனுமதி பெறச் சென்றது. அவ்வமயம் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் நிபுணர்களிடம் 'மதுரை மாநகரைப் பார்த்திருக்கிறீர்களா?' என்று ஒரு கேள்வி எழுப்பினார்கள். 'இல்லை' எனப் பதில் வந்ததும் பெருந்தலைவர் அவர்கள் அப்படி யானால் முதலில் மதுரையைச் சென்று பாருங்கள். அதைவிட சிறந்த நகர நிர்மாணத்தை எங்கும் காண இயலாது. நடுநாயகமாக அன்னை மீனாட்சி உடனுறை சொக்கநாதர் திருக்கோவில். கோவிலைச் சுற்றி சதுர சதுரமாக வீதி அடுக்குகள். மாசிவீதியென்றும், சித்திரை வீதியென்றும், ஆடிவீதி என்றும் ஆவணி வீதி என்றும் அழகு சேர்க்கும் வீதி வரிசைகள். தாமரை மலரின் கர்ணிகைப் பகுதியைப் போல திருக்கோவில். தாமரை மலரின் இதழ் அடுக்குகளைப் போல வீதிகளின் அமைப்பு' என நிபுணர்களிடம் குறிப்பிட்டு அவர்களை வியப்பில் ஆழ்த்தினார்கள். ஒரு சிறந்த ஆட்சியாளன் இத்தகைய அறிவுத் திறம் பெற்றிருப்பது மிகவும் அவசியமான ஒன்றாகும் எனக் கவிச்சக்கரவர்த்தி ஆட்சியாளர்களுக்கு அறிவுறுத்துகிறான்.

4. அமைச்சனின் கடமை

அமைச்சனாய் இருந்து அரசனுக்குத் தகுந்த ஆலோசனைகள் வழங்கி, அதன் வழி மக்கள் நலத்திற்கு வித்திடுகின்ற அமைச்சனுக் கும் கம்பன் உயர்நெறியினை உணர்த்துகின்றான். ஒரு அமைச்சன் எப்படி இருத்தல் வேண்டும், அவனுக்குரிய செம்மாந்த பண்புகள் என்னென்ன என்பதனை அயோத்தியா காண்டத்தில் தக்க இடத்தில் எடுத்துரைக்கிறான்.

தனக்கு மூப்பு வந்தெய்தியதால் தன் அரசுரிமையை இராமனுக்கு உரியதாக்கித் தான் காடேக வேண்டும் என விரும்புவதனைத் தசரதன் தன் அமைச்சர்களிடம் தெரிவித்தான். நல்லியல்புகள் பலவும் வாய்க்கப்பெற்ற அமைச்சர்களைச் சந்தித்துத் தன் மனக்கருத்தை வெளியிட்டான் எனச் சொல்ல வரும்போது, ஒரு அரசைத் தகுதியான வழியில் நடத்திச் செல்ல வேண்டிய அமைச்சனின் அம்சங்கள் எவ்வாறு அமைதல் வேண்டும் எனச் சொல்லி கம்பன் நம்மைச் சிந்திக்க வைக்கிறான்.

அமைச்சனின் சிறப்பியல்பு

நல்ல குடிப்பிறப்பை உடையவனாக அமைச்சன் இருத்தல் வேண்டும் என்கிறான். நற்குடி என்பது செம்மாந்த பண்புகளை, ஒழுக்கத்தை உயிரினும் மேலாகக் காலங் காலமாகப் பேணிவருகின்ற பாரம்பரியத்தில் வந்தவனாக ஒரு அமைச்சன் இருத்தல் வேண்டும். தான் ஒரு தவறினைப் புரிகின்ற சூழ்நிலை உருவாகும் போது, தன் குலத்து மூத்தோர் இதுபோன்ற இடர்ப்பாடான சூழ்நிலைகள் எதிர்ப்பட்டபோதும், அறம் பிறழாது வாழ்ந்து காட்டி வரலாறு படைத்தார்களே என்பதனை அசைபோட்டுப் பார்த்து, தவறான சூழ்நிலையையும் மேற்கொண்டு புறந்தள்ளி, செம்மை வழி நடத்தல் வேண்டும். 'வாழ்வு சிறிது; மானம் பெரிது' என்று கருதிப் பார்க்கத் தகுந்த வகையில் அவனது குல முதல்வோரின் சிறப்பியல்புகள் அமைந்திருத்தல் அவசியம். ஒரு தகுதி வாய்ந்த அமைச்சனுக்கு அத்தியாவசியமானது இந்த அறப் பின்னணி தான். மாண்புடைய மூத்தோர் வாழ்ந்த மரபில் உதித்தவன் நெஞ்சறிந்த தவற்றுக்குத் துணைபோக அஞ்சுவான்.

மேன்மக்கள் :

நல்லறிவு உடையவனாக அமைச்சன் இருத்தல் வேண்டும். கலைகள் பலவற்றையும் கற்று கல்வி அறிவும் கேள்வி ஞானமும் உடையவனாக இருத்தல் வேண்டும். நல்லறிவு என்பது தீமையை இனம் கண்டு ஒதுக்கி யாருக்கும் எப்பொழுதும் நல்லன நாடுதல்.

புலன் போன போக்கில் மனதைச் செலுத்தாமல், நன்றின் பால் அறிவைச் செலுத்துவது.

'சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு'

என்கிறார் திருவள்ளுவர். கலைகள் பலவும் தெரிந்து, கேள்வி ஞானமும் பெற்றிருப்பின் அவன் அறிவுச் சுடர் விட்டுப் பிரகாசிக்கும். அத்தகைய திறமான அறிவு, அவன் ஆற்றலுடன் செயல்பட வழிவகுக்கும்.

ஒரு அமைச்சன் நடுநிலையுடன் இருத்தல் மிகவும் இன்றியமையாதது. தம்முடைய செல்வம் பதவி முதலிய நலன்கள் அழிவதாக இருப்பினும் நடுநிலை தவறாதவனாக அமைச்சன் இருத்தல் வேண்டும். சுட்டாலும் வெண்மை தரும் சங்கைப் போல, கெட்டாலும் வாழ்வின் மேன்மைக் குணத்தைக் கைவிடாமல் செம்மாந்து நிற்கும் சீர்மைக் குணம் அரசியலாளர்கள் மத்தியில் நிலை பெற வேண்டும். எல்லையற்ற செல்வத்தை எட்டிப்பிடிக்கும் போட்டியில் நடுவுநிலைமையைக் கூட நசுக்கத் துணியும் நயவஞ்சகத் தன்மை ஒரு அமைச்சனிடம் இருக்கவே கூடாது என்று அழுத்தம் திருத்தமாய் உரைக்கிறான் கம்பன். நாட்டு நலன் மக்கள் நலன் என்ற பூசணிக்காயை சுயநலச் சோற்றுக்குள் மறைக்கும் மந்திரவாதிகளாய் மக்கள் பிரதிநிதிகள் மாறிவரும் காலங்களில், கம்பனின் உன்னத நெறிதரும் பாடத்தை எண்ணிப்பார்த்தால் அதன் ஆழ் பொருள் இன்னும் தெளிவாய்ப் புலப்படும்.

குலம் முதல் தொன்மையும், கலையின் குப்பையும்,
பல முதல் கேள்வியும், பயனும் எய்தினார்;
நலம் முதல் நலியினும் நடுவு நோக்குவார்;
சலம் முதல் அறுத்து; அருந்தருமம் தாங்கினார்

(மந்திரப் படலம், அயோத்யா காண்டம்)

நடந்த நிகழ்ச்சிகளைக் கணக்கில் கொண்டு சிந்தித்து இனி நாளை நடப்பது என்ன என்பதனை முன்னரே ஊகித்து உணரும் ஆற்றல் கைவரப் பெற்றவனாக அமைச்சன் இருத்தல் வேண்டும். நடந்து முடிந்த வரலாற்றுச் சம்பவங்களும், அவை மக்கள் மத்தியில் ஏற்படுத்திய தாக்கமும், சம்பவத்தின் பின்னணியையும் எண்ணிப் பார்த்து, ஒரு அரசு தன் எதிர்கால நடவடிக்கைகள் குறித்துத் திட்டமிடுதல் வேண்டும். முன் உதாரணங்களையும் பின் விளைவுகளையும் சீர் தூக்கிச் செயலாற்றுதல் வேண்டும். ஊழ் வசத்தினால் தீய நிகழ்வுகள் நடைபெறுவதாக இருப்பினும், அந்தத் தீமையின் உக்கிரத்தைத் தங்கள் ஆற்றலால் குறைக்கும் தகைமையைப் பெற்றிருத்தல் வேண்டும். சீரிய சிந்தனைகளை உள்ளடக்கிய அரிய நூல்களைக் கற்றுத் தேர்ந்த ஞானமும், மயிர் நீப்பின் வாழாக் கவரிமானைப் போன்ற மானமுடையவராயும் இருத்தல் வேண்டும். நூற்களைக் கற்றுத் தேறும் போது, அறிவு துலங்கும். அந்த அறிவாற்றலினால் எதனையும் நிதானமாகச் சிந்தித்துச் சரியான முறையில் செயல்படுத்தும் திறனைப் பெறலாம். நூலறிவு, பலபேருடைய அனுபவத்தை நமக்குப் புகட்டி நம் சிந்தனையைத் தெளிவுபடுத்தும். ஆழ்ந்த நூலறிவு உடையவன் ‘எடுத்தேன், கவிழ்த்தேன்’ என்று அறிவிழந்து ஆத்திரத்தில் ஒரு நாளும் செயல்படமாட்டான். வாழ்வு எனும் ஓடம் ஒரே சீராக ஓடிக் கொண்டிருக்கும் போது மனிதர்கள் மனோதிடம், உறுதிப்பாடு உடையவர்களாக விளங்குவது பெரிதல்ல. வாழ்வில் துன்பங்கள் எழுந்து, சுற்றிச் சூழ்ந்து வாட்டும் காலத்திலும் மனத்திட்பம் என்னும் ஆற்றலைப் பயன்படுத்தி, மன உறுதியுடன் செயலாற்றுதல் வேண்டும். இந்த அரிய பண்பு சாதாரணமாக எல்லோரிடமும் அமைவதில்லை. தீயவை நிகழும் போதுதான், அறிவுடையோர் கூட அறிவழிந்து அலமந்து நிற்பர். செய்வதறியாது திகைத்து அழுகையிலும், அரற்றலிலும் தஞ்சம் புகுவர். மாறாக அறிவினைத் தொழிற்படுத்தி அடுத்து ஆக வேண்டியதை, ஆற்றலுடன் நெறிப்படுத்தி செயல்படுத்தும் விவேகம் விலை மதிப்பற்றது. அத்தகைய விவேகம் ஒரு அமைச்சனிடம் அமைதல் வேண்டும்.

சிறந்த வழிகாட்டி :

உயிரைவிடவும் மானத்தைப் பெரிதாக மதிக்கும் மாண்புடையவன் அமைச்சனாக இருந்தால், அவன் தனக்கோ தன்னைச் சார்ந்தவருக்கோ, பழியினை ஏற்படுத்தும் இழிதொழிலைப் புரியவும், வாய்மையினின்று விலகவும் ஒருநாளும் ஒருப்படமாட்டான்.

ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தால் செயின்

என்கிறார் திருவள்ளுவர். ஒரு செயலை வெற்றிகரமாகச் செய்ய விரும்புவர், அச்செயலைச் செய்வதற்கான தகுதியான காலத்தையும் இடத்தையும் தெரிவு செய்து, கருவிகளையும் தேர்ந்து தெளிந்து, பின்னர், தான் கற்ற நூல்கள் சொல்லும் உயர்ந்த கருத்துக்களோடு அதனைப் பொருத்திப் பார்த்துச் செயல்படுத்த வேண்டும். தெய்வத்தின் அருள் துணைநிற்க, அறவழிநின்ற ஆன்றோரின் ஆசியுடன், உண்மையான புகழைப் பெறுவதற்குரிய செயல்களை ஆய்ந்து அறிந்து ஒரு மன்னன் செயல்படுத்தும் படி அவனுக்கு வழிகாட்டுவதே ஒரு சிறந்த அமைச்சனின் கடமையாகும். காலத்தையும் இடத்தையும் உத்தேசிக்காமல், செயல்படும்போது, அறிவாற்றல் மிக்கவர்கள் கூட தோல்வியைத் தழுவ வேண்டிய சூழ்நிலை உருவாகி விடுகிறது. எத்தனை ஆற்றல்கள் உடையவர்களாக இருப்பினும் எடுத்த செயலைத் தொடுத்து முடிப்பதற்கு இறையருள் துணையும் ஆன்றோரின் ஆசியும் முன்னிற்க வேண்டும்.

இறுக்கத்திலும் நேர்மை :

சில வேளைகளில் மன்னனுக்கு ஏற்றம் தரும் வழியினை அமைச்சன் எடுத்துச் சொல்லும் போது, அதனைப் பொருட்படுத்தாமல், எடுத்துச் சொன்ன அமைச்சனை மன்னன் கடிந்து கொள்வதும் நிகழ்வதுண்டு. அத்தகைய சூழ்நிலையிலும் நேர்மையினின்றும் விலகாமல் தொடர்ந்து நீதியை எடுத்துச்

சொல்லும் கடப்பாடு அமைச்சனுக்கு அமைதல் வேண்டும். மன்னனது சினம் தனக்கு உயிர் ஆபத்தை உண்டாக்குவதாக இருந்தாலும் அதனைப் பற்றிக் கவலை கொள்ளாமல் நீதியைப் பெரிதாகக் கருதி உண்மையை உள்ளவாறு எடுத்துரைக்கும் உரம் பெற்றவனே உண்மை அமைச்சன். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாமல், உள்ளும் புறமும் ஒத்திருப்பவன். அரசனுக்குத் தற்காலிகமாக இதம் தரும் சொற்களையே பேசாமல், அவனுக்குப் பயன் தரும் நயனுடைய சொற்களைச் சொல்லும் உயர்வு பெற்றவன். நோயுற்ற மனிதனுக்கு, கசப்பான மருந்து நலம் சேர்க்குமானால் அதைத் தருவதற்கு மருத்துவன் தயங்குவதில்லை. அதனைப் போலவே அரசன் மனம் மகிழும் படிப் பேசி, அவனுக்குக் கேட்டினை விளைவிப்பதை விட, அவன் செவிகைப்பச் சொல்லி நன்மை செய்தல் சிறப்பு எனக் கருதி, எப்பொழுதும் மன்னனின் நலத்தையே மனதிற் கொண்டு செயல்படும் திறம் பெற்றவன்.

ஒரு சிறு துன்பம் மன்னனுக்கு நேர்வதாக இருந்தாலும் அதைத் தாங்கிக் கொள்ள இயலாது என்பதனால் எப்பொழுதும் மன்னனது நலத்தையே சிந்தித்துக் கொண்டிருக்கும் சீர்மையாளனாய் ஒரு அமைச்சன் இருத்தல் வேண்டும் என அமைச்சனுக்கு இருக்க வேண்டிய அம்சங்கள், அவன் கடை பிடித்தொழுக வேண்டிய நெறிகள் ஆகியவற்றைக் கம்பன் நேர்பட உரைக்கிறான்.

'காலமும் இடனும் ஏற்ற கருவியும் தெரிந்து கற்ற
நூல் உற நோக்கி, தெய்வம் நுனித்து அறம் குணித்த மேலோர்;
சீலமும், புகழ்க்கு வேண்டும் செய்கையும், தெரிந்து கொண்டு
பால்வரும் உறுதியாவும் தலைவற்குப் பயக்கும் நீரார்'

(மந்திரப் படலம், அயோத்தியா காண்டம்)

இத்தகைய சிறந்த அமைச்சர்களைத் தனக்குத் துணையாகத் தசரதன் பெற்றிருந்த காரணத்தினால் தான், அறுபதினாயிரம் ஆண்டுகள் அரசாட்சி செய்தவன், தான் கடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்த்து, சூரிய குலத்தில் தோன்றிய தன் முன்னவர்களான

மன்னர்களைப் போலவே, தானும் நெறிபிறழாது அறுபதினாயிரம் ஆண்டுகள், மாட்சிமையுடன் அரசு தாங்கியதாகக் குறிப்பிடுகின்றான்.

'வெய்யவன் குல முதல் வேந்தர், மேலவர்,
செய்கையின் ஒருமுறை திறம்பல் இன்றியே,
வையம் என் புயத்திடை, நுங்கள் மாட்சியால்,
ஐ இரண்டு ஆயிரத்து ஆறு தாங்கினேன்'

(மந்திரப் படலம், அயோத்தியா காண்டம்)

இரகசிய காப்புப் பிரமாணம் செய்து கொள்வதும், உறுதிமொழி எடுத்துக் கொள்வதும் அமைச்சர்களின் பணி என்றில்லாமல், நாட்டு மக்களுக்கு நலம் சேர்க்கும் சிறந்த ஒரு ஆட்சி நடைபெற, உண்மையான தங்கள் பங்களிப்பை அமைச்சர்கள் நல்க வேண்டும் எனக் கவிச் சக்கரவர்த்தி வலியுறுத்தும் பான்மை, நம் தேசத்திற்கு மட்டுமல்ல உலகனைத்தும் உள்ள அனைத்து அரசியல் அமைப்புகளுக்கும் பொருந்தும். எனவே கம்பன், தசரதச் சக்கரவர்த்தியின் அரசவையில் இடம் பெற்றிருந்த அமைச்சர்களின் பான்மையைச் சொல்லும் பாங்கில், அமைச்சர்கள் போற்றிப் பேண வேண்டிய உன்னத நெறிகளை வரிசைப் படுத்துகிறான்.

எல்லையற்ற கலை ஞானம், இணையற்ற கேள்விச் செல்வம், ஆழமான கல்வித் திறம், எப்பொழுதும் விட்டுப் பிரியா நடுநிலைமை, தொலைநோக்குச் சிந்தனை, ஊழையும் உப்பக்கம் காணும் ஆற்றல், பெற்ற அனுபவங்கள் புகட்டிய ஞானம், நூலறிபுலமைத் திறம், கவரிமா அன்ன மானம், பொன்னான காலத்தைக் கண்ணாகக் கருதும் கடமை உணர்வு, தெய்வ சிந்தனை, பெரியாரைப் பேணும் மாண்பு, புகழ்புரிதல், நீதிக்கு நெஞ்சம் வைத்தல், நேர்மைத் திறம், 'பாலுண் குருகு' போல் தீமையை இனங்கண்டு ஒதுக்கி நன்மையை நாடும் பகுத்துணர்வு, நன்றின்பால் உய்க்கும் அறிவு, உள்ளும் புறமும் ஒத்திருக்கும் சீர்மை, உயிர்களின் நலம் நாடும் நேயம் ஆகிய அத்தனை நற்குணங்களும் ஒரு

அமைச்சனின் அணிகலன்களாக அமைதல் வேண்டும் என்கிறான் கம்பன்.

5. உத்தம புத்திரன்

'தாயிற் சிறந்ததொரு கோவிலும் இல்லை தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்பது நம் வாழ்வில் இரண்டறக் கலந்துவிட்ட தத்துவம். எனினும் இத்தத்துவத்தை நடைமுறை வாழ்வில் கொண்டு செலுத்துவோரின் எண்ணிக்கை மிகவும் குறைவு. பெற்ற தாயையும் தந்தையையும் முதல் தெய்வங்களாக வழிபட வேண்டும் என்று வழிகாட்டியது நம் உபநிடதம். அன்னையையும் தந்தையையும் தன் இரு கண்களாக பாவித்து அவர் தம் சொற்கடவாமல் வாழ்ந்து காட்டிய இராமன், உலகில் வாழும் அத்தனை பேருக்கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாவான்.

காதோரத்தில் கண்ட நரை, தசரதனுக்கு வயதாகி விட்டது என்பதனைச் சொல்லாமல் சொல்ல, அவன் அரசுரிமையை இராமனிடம் ஒப்படைத்து விட்டு காடேகித் தவம் செய்ய முடிவு செய்தான். தன் முடிவு சரியானதா, இல்லை மாற்றிக் கொள்ளத் தகுந்ததா? எனத் தன் குலகுருவான வசிஷ்டரையும், ஏனைய அமைச்சர்களையும் கலந்தாலோசித்தான். அவர்கள் எல்லாம் முழுமனதோடு இசைவு அளித்த பின்னர் இராமனை அழைத்து வரச் சொல்லி அவனுக்கு முடிசூட்ட இருக்கும் செய்தியைத் தெரிவிக்கிறான் தசரதன்.

உலக நிலையாமையையும், வான்வீடு சென்று வாழத் தான் விரும்புவதாகவும், தவத்தை மேற்கொண்டு அரசுரிமை என்ற தோளை அழுத்தும் பாரத்தை இறக்கி வைக்கப் போவதாகவும் ஆட்சிப்பொறுப்பு என்ற சுமையை விட்டு நீங்கி வீடுபேறு பெற்று மகிழப் போவதாகவும், தசரதன் இராமனிடம் கூறினான். மெல்ல மெல்ல தன் மூப்பைச் சொல்லி, தன் முன்னோர் வீடுபெற அக்குலத்தின் கொழுந்துகள் முயற்சி மேற்கொள்ள வேண்டும்

என்பதனைச் சொல்லி, சகரபுத்திரர்களைக் கங்கையைப் பூமிக்கு அழைத்துவந்த பகிரதன் எங்ஙனம் பிறவிக் கடலைக் கடக்க வைத்தான் என்பதனையும் எடுத்துச் சொல்கிறான். இவ்வாறெல்லாம் குறிப்பிட்ட பின்னர் தான் இராமனிடம் தசதரன் உலகத்தில் உயர்ந்தவர்கள் யார் என்று பேசத்தொடங்குகிறான், உலகாளும் அதிகாரம் பெற்ற மன்னர்கள் உலகில் உயர்ந்தவர்களா? தேவலோகத்தில் வாழ்கின்ற தேவாதி தேவர்கள் உயர்ந்தவர்களா? வான் வாழும் தேவாதி தேவர்களின் தலைவனான தேவேந்திரன் உயர்ந்தவனா? சிலமக்கள் வானலோக நாயகன் தான் உயர்ந்தவன் என எண்ணுகின்றனர், சிலர் மிகப் பெரிய தவத்தினைத் தொடங்கி நோன்பு நோற்றவர்களான தபசிகள் தான் உயர்ந்தவர்கள் என்று எண்ணுகின்றனர். ஆனால், உலகாளும் சக்கரவர்த்திகளை விட, புலனடக்கிய தபசிகளை விட, தேவலோக நாயகனான இந்திரனை விட உயர்ந்தவன் 'தான் சொன்ன சொல்லைக் கேட்டு நடக்கும் புதல்வனைப் பெற்றுக் கொண்ட தந்தை தான்' என்கிறான் தசரதன்.

அருந்துயர் துறந்தார் :

என் சொல்லை என் பிள்ளை அப்படியே கேட்டு நடக்கும் தகைமை கொண்டவன் என்று சொல்லும் நிலையில் தகப்பன் இருப்பானாகில், அதனை விடவும், அவனுக்கு மகிழ்ச்சி தரத்தக்க அம்சம் எதுவும் இருக்க முடியாது. எனவே இராமனிடம் தசரதன்.

'மன்னர் ஆனவர் அல்லர்; மேல் வானவருக்கு அரசு ஆம்
பொன்னின் வார்கழல் புரந்தரன் போலியர் அல்லர்;
பின்னும், மாதவம் தொடங்கி நோன்பு இழைத்தவர் அல்லர்
சொல் மறாமகப் பெற்றவர் அருந்துயர் துறந்தார்'

என்கின்றான்.

(மந்திரப் படலம், அயோத்யா காண்டம்)

தசரதன் இவ்வாறு சொல்லக் கேட்ட இராமன், தந்தை சொன்னால் அதனை மறுக்காமல் ஏற்றுக் கொள்ள வேண்டியது

மகனது கடமையாகும் என்று உணர்ந்து, மிகப்பெரிய அரசுரிமை என்கின்ற பாரம் தன் தோளில் இறங்கப் போகிறதே என்ற கவலையும் இன்றி, இனிதானே அரசுக்கு உடைமையும் உரிமையும் உடையவன் என்கின்ற மகிழ்வும் இன்றி, அரசாட்சியை மேற்கொள்வது தனது கடமை என்பதனை உணர்ந்து செயல்படத் தொடங்கினான். ' கடன் இது என்று உணர்ந்தும்' எனக் கம்பன் குறிப்பிடும் வாசகம் கவனத்தில் கொள்ளத் தகுந்தது.

அரசன் ஆராய்ந்து சொன்ன வாசகம் எத்தனை முக்கியத்துவம் வாய்ந்தது என்று எண்ணிப் பார்த்து, கொற்றவன் ஏவிய செயலைச் செய்வது தான் நீதி என்று எண்ணிச் செயல்படும் இராமன், தந்தை சொல் கேட்கும் மைந்தனாக உயர்ந்து நிற்கிறான்.

'தாதை, அப்பரிசு உரை செய தாமரைக் கண்ணன்
காதல் உற்றிலன்; இகழ்ந்திலன்; கடன் இது' என்று உணர்ந்தும்,
'யாது கொற்றவன் ஏவியது அது செயல் அன்றோ,
நீதி எற்கு' என நினைந்தும், அப்பணிதலை நின்றான்'

(மந்திரப்படலம் , அயோத்யா காண்டம்)

சொன்ன சொல்லைக் கேட்டு நடக்கும் நன் மக்கள் வாய்ப்பது வாழ்வில், மனிதன் அனுபவிக்கும் பேறுகளில் ஒன்றாகும். எனவே இராமன் தகப்பனது சொல்லை மதித்து, உடன்பட்ட அந்த வேளையில் தசரதன் மகிழ்வுற்று இராமனைத் தன் உயிரோடு பொருந்தும் படித் தழுவினான். தன் மனக் கருத்தை இராமனிடம் வெளியிடும் போது ' நான் உன்னிடத்தில் பெற விழைவது, நீ அரசுரிமையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதே' என்பதனை இதமாகத் தெரிவிக்கிறான்.

'அனையது ஆதலின், 'அருந்துயர்ப் பெரும்பரம், அரசன்
வினையின் என்வயின் வைத்தனன் எனக் கொள வேண்டா;
புனையும் மாமுடி புனைந்து, இந்த நல் அறம் புரக்க
நினையல் வேண்டும்; யான் நின் வயின் பெறுவது ஈது' என்றான்'

(மந்திரப்படலம், அயோத்யா காண்டம்)

நான் சொன்னால் நீ கேட்டுத் தான் தீர வேண்டும் என்ற அதிகாரப் போக்கு தசரதனின் வாசகத்தில் கிஞ்சித்தும் காணப்படவில்லை. மாறாக அன்பும் பரிவும் உடைய தந்தை தன் மகனிடம் விரும்பி விண்ணப்பிப்பது போல் அமைந்துள்ளது தசரதனின் பேச்சு. தந்தை ஒரு செயலைச் செய்யுமாறு எடுத்துக் கூறினால் அது நன்மை பயக்கக் கூடியதாகவே இருக்கும். எனவே ஏற்றுச் செயல்படுதல் வேண்டும் என்ற இராமனின் மனோபாவம் 'யாது கொற்றவன் ஏவியது அது செயல் அன்றோ' என்ற வரியில் தொனிக்கிறது, வழி காட்டுகின்ற தந்தையும் வழி நடக்கும் புத்திரனும் எவ்வாறு நடந்து கொள்ளுதல் வேண்டும் என்பதனையும் கம்பன் நமக்கு தசரதன் வாயிலாகவும், இராமன் வாயிலாகவும் தெரிவிக்கிறான்.

தாய் என்னும் தகைமை

தந்தையினிடத்தில் மட்டுமன்றி தாயிடமும் இராமன் நடந்து கொண்ட விதம் உலகோருக்கெல்லாம் சிறந்த எடுத்துக் காட்டு. முடிசூட்டி சாம்ராஜ்யத்தை அரசாட்சி செய்ய வேண்டியவனை, கானகம் செல்லச் சொல்லி கட்டளையிடுவதற்காக கைகேயி அழைக்கிறாள். அப்பொழுது கைகேயிடம் வந்த இராமன், தாய்ப்பசுவைத் தேடி வந்த கன்றினைப் போல் வந்தான் எனச் சொல்கிறான் கம்பன். எதிர்பாராத விதமாக 'பரதனுக்குத் தான் ராஜ்யம், இராமன் காடேகுதல் வேண்டும்' என்ற கட்டளையைக் கைகேயி பிறப்பித்தாள். என்றாலும் அதனைக் கேட்டுச் சற்றும் வருத்தம் அடையாத இராமன் அரச கட்டளை என்று கைகேயி சொன்னதைக் கேட்டு, 'அரசகட்டளையாக இருந்தால் மட்டும் தான், நான் ஏற்றுக் கொள்வேனா? தாயாகிய தங்கள் கட்டளையாக இருந்தாலும் ஏற்றுச் செயல்படுவேன்' எனச் சொல்கிறான். தந்தை சொல்லையும், தாயின் சொல்லையும் மதித்துப் போற்றிய இராமனின் குணபாவத்தை இன்னும் பல இடங்களில் கம்பன் நமக்கு எடுத்துரைக்கிறான்.

கைகேயியின் கட்டளையை ஏற்றுக் கொண்ட இராமன், தன் தாயான கோசலையிடம் சென்று செய்தியினை அறிவிக்கச் செல்கின்றான். பரதன் நாடாளப் போகிறான் என்ற சேதி கேட்டு மகிழ்ச்சி தெரிவித்த கோசலை, இராமன் காடேகப் போகிறான் எனக் கேட்டுக் கலங்கி அழுதாள். 'சக்கரவர்த்தியைக் கண்டு காடேகுவதைத் தடுத்து நிறுத்துவேன்' எனப் புலம்பினாள். அவளது நிலையைக் கண்ட இராமன் ஆகாயமும், பூமியும், இந்தக் கடலும் இன்னும் நெருப்பு, காற்று என்னும் பஞ்சபூதங்களும் அழிந்து போவதாக இருந்தாலும் தந்தையின் கட்டளையைத் தன்னால் மீற இயலாது என்கிறான்.

'விண்ணும் மண்ணும், இவ்வேலையும், மற்றும் வேறு
எண்ணும் பூதம் எல்லாம் அழிந்து ஏகினும்,
அண்ணல் ஏவல் மறுக்க அடியேனற்கு
ஒண்ணுமோ? இதற்கு உள் அழியேல்' என்றான்!

(நகர் நீங்கு படலம், அயோத்யா காண்டம்)

'தன் தந்தை ஜமதக்கினி முனிவனின் கட்டளையை ஏற்று உடனடியாக மறுப்பேதும் பேசாமல், பரசுராமன் நடந்து கொண்டானே! அங்ஙனம் இருக்க என் தந்தையின் சொல்லை மீறி நடப்பதை என்னால் கனவிலும் கருதிப் பார்க்க இயலாது' என்கிறான் இராமன்.

' மான் மறிக் கரத்தான' மழு ஏந்துவான்,
தான் மறுத்திலன் தாதை சொல்; தாயையே,
ஊன் அறக் குறைத்தான்; உரவோன் அருள்
யான் மறுப்பது என்று எண்ணுவதோ?' என்றான்.

(நகர் நீங்கு படலம், அயோத்யா காண்டம்)

தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்ற வாசகத்தின் பொருளனைத்தும் இராமனது உன்னதமான பேச்சாக வெளிப்படுகிறது.

சந்தர்ப்ப சூழ்நிலைகளின் காரணத்தால் ஏற்றுக் கொள்ள முடியாத சில செயல்களைத் தாய்தந்தையர் செய்ய நேரிட்டாலும், அவர்களைக் குறை கூறுவதும், கோபித்துக் கொள்வதும் ஒரு நல்ல மகனுக்கு அழகல்ல என்பதனையும் இராமன் உன்னத நெறியாக நமக்குத் தெரிவிக்கிறான். கைகேயி இராமனைக் காடேகச் சொன்ன செய்தியைக் கேட்டு இலக்குவன் கொதித்தெழுகிறான். பிரளய காலப் பெருந்தீப் போல எழுந்தான். அவனது கடைக் கண்களில் நெருப்புப் பொறி பறந்தது; உடம்பினின்றும் வியர்வை வழிந்தது; புருவங்களை நெறித்தான்; சிங்கத்தின் உணவை நாய்க்குத் தந்தது போல் இராமனுக்குச் சேரவேண்டிய அரசுரிமையைக் கைகேயி தட்டிப் பறித்தாளே என்று கனன்று எழுந்தான். 'இத்தகைய கொடுஞ் செயலைச் செய்தவர்களை மாய்ப்பேன்; எனது கை அம்புகளுக்கு அவர்களை இரையாக்குவேன்' என்று வெகுண்டு எழுந்தான். இவ்வாறு தன் மனதில் பொங்கிய கோபத்தைக் கடுஞ் சொற்களால் வெளிப்படுத்திய இலக்குவனைப் பார்த்து இராமன் மனது பொறாமல் வேதங்களை ஓதும் நாவினால் வாய்க்கு வந்த சொற்களை வழங்கலாகுமோ எனக்கேட்டு நன்னெறியை மேற்கொண்டவர்கள் இங்ஙனம் சினப்பட்டுக் கடுமையான சொற்களைப் பிரயோகிக்கக் கூடாது என்று எடுத்துச் சொல்கிறான். நாம் விரும்பாத ஒரு செயலை நம்மைப் பெற்ற தாயார் தகப்பனார் செய்தால் அப்பொழுது கூடஅவர்கள் மீது கோபித்துக் கொள்ளவும், சினமடையவும் நமக்கு எந்த வித உரிமையும் இல்லை என இராமன் குறிப்பிடுகிறான்.

'ஆய்தந்து, அவன் அவ் உரை கூறலும், 'ஐய! நின் தன்
வாய் தந்தன கூறுதியோ மறை தந்த நாவால்?
நீ தந்தது, அன்றே, நெறியோர் கண் நிலாதது! ஈன்ற
தாய் தந்தை என்றால், அவர் மேல் சலிக்கின்றது என்னோ?'

(நகர் நீங்கு படலம், அயோத்யா காண்டம்)

இரு பெருஞ் செய்திகளை மேற்கண்ட பாடல் நமக்குத் தெரிவிக்கிறது. ஒன்று நல்லனவற்றைப் பேச வேண்டிய நாவினால்

கோபத்தின் வெளிப்பாடான கடுஞ்சொற்களைப் பேசுதல் கூடாது. மற்றொன்று எந்தச் சூழ்நிலையிலும் தாய் தந்தையரைக் கோபித்துக் கொள்ளுதல் தகாது. இராமனின் வாய் மொழியாக இத்தகைய நல்லறங்கள் வெளிப்படுகின்றன.

கைகேயி கேட்ட வரத்தை அவளுக்கு அளித்து விட்டு, அரற்றிக் கொண்டு இருந்த தசரதனைக் காணவந்த கோசலா தேவியிடம், தன் சாப வரலாற்றை எடுத்துரைக்கும் தசரதன் சலபோசனன் என்ற முனிவனைப் பற்றியும் அவனது புத்திரன் சுரோசனனைப் பற்றியும் பேசுகிறான். இந்த வரலாறும் ஒரு சிறந்த மகன் எத்தகைய தன்மை உடையவனாக இருப்பான் என்பதனை நமக்குத் தெரிவிக்கிறது. இராமனது பிரிவாற்றாமையால் மூர்ச்சித்துக் கிடந்த, தசரதனைக் காண வந்த கோசலை அரற்றுகிறாள். மூர்ச்சை தெளிந்த தசரதனைத் தேற்றும் பொருட்டாகத், தசரதனைப் பார்த்து, 'முனிவனாகிய வசிட்டனோடு இராமன் திரும்பி வந்தாலும் வருவான், வருந்த வேண்டாம்' என்று கோசலை சொல்ல, அதனைக் கேட்ட தசரதன் இராமன் காட்டுக்குப் போவதை நிறுத்த இயலாது அதுபோல் தன் உடலைவிட்டு உயிர் நீங்குவதையும் தடுத்து நிறுத்த இயலாது. ஏனெனில், தனக்கு முன்னொரு காலத்தில் சலபோசனன் என்ற முனிவன் கொடுத்த சாபம் உளது எனச் சொல்லத் தொடங்கினான்.

சலபோசனனும் தசரதனும் :

வேட்டையாடுவதில் தசரதன் விருப்பம் கொண்டிருந்த இளமைக் காலம். கையில் வில்லோடும் அம்போடும் ஆற்றங்கரையில் மிருகங்களைத் தேடி, தசரதன் அலைந்து கொண்டிருந்தான். கண்ணில்லாத சலபோசனன் என்ற முனிவனும் அவனது மனைவியும் தங்கள் தாகத்தைத் தீர்க்க விழைந்த போது, க்ண்ணற்ற தன் பெற்றோருக்குத் தண்ணீர் கொண்டு வருவதற்காக சுரோசனன் கரைக்குச் சென்றான். கமண்டலத்தில் அவன் தண்ணீர் எடுத்த போது உண்டான ஒலியானது, யானை நீர் அருந்தும் ஒலியை ஒத்திருந்ததால், ஒலிவந்த திசை நோக்கி அம்பினைச் செலுத்தினான்.

சப்தவேதி என்ற பாணத்தினால் தாக்கப்பட்டு அலறி சுரோசனன் கீழே விழுந்து, இரத்த வெள்ளத்தில் புரண்ட போதுதான் தன்னால் வீழ்த்தப்பட்டவன் மனிதன் என்பதனைத் தசரதன் உணர்ந்தான்.

அருகில் சென்று கண்டபோது சுரோசனன் தன் நிலையையும், தன் தாய் தகப்பனார் கண்ணற்றவர் என்பதனையும் கூறி, தன் தாயார் தகப்பனாரிடம் தண்ணீரைக் கொண்டு சென்று கொடுத்து, அவர்கள் அருந்தி தாகம் தீர்ந்த பின்னர் தான் மாண்டு போன நிலையைச் சொல்லி ' விண் உலகம் புகுவதற்கு முன்னால் உங்கள் புதல்வன் உங்களுக்கு வணக்கம் தெரிவித்தான்' என்று கூறுமாறு சொல்லி விட்டு உயிர் நீத்தான். அப்பெற்றோரிடம் சென்று தசரதன் நடந்த அனைத்தையும் கூறினான். பிழை பொறுத்தருள வேண்டினான். அந்த பெற்றோர் விழுந்து புரண்டு இன்றுதான் எங்கள் விழிகளை நாங்கள் இழந்தோம்' என்றனர். கண்ணற்றவராய் இருவரும் இருந்தும், தங்களது கண்ணில்லாக் குறையினால் பெரிதும் துன்பமடையாமல், கண்போன்ற தங்கள் புதல்வனின் துணையினால் வாழ்ந்தனர். ஆனால் எப்பொழுது தங்கள் புதல்வனை இழந்தார்களோ அப்பொழுது தான் உண்மையாகவே கண்ணற்றவர்கள் ஆனார்கள். எனவே சுரோசனன் என்ற புதல்வன் ஏவிய பணியைச் செய்து தன் பெற்றோர்களைக் கண்போலக் காத்து வந்துள்ளான்.

'வீழ்ந்தார்; அயர்ந்தார்; புரண்டார்; 'விழி போயிற்று, இன்று' என்றார்
ஆழ்ந்தார் துன்பக் கடலுள் 'ஐயா! ஐயா! என்றார்;
'போழ்ந்தாய் நெஞ்சை' என்றார்; பொன்நாடு அதனில் போய், நீ
வாழ்ந்தே இருப்பத் தரியேம்; வந்தேம்! வந்தேம்! இனியே.'

(நகர் நீங்கு படலம், அயோத்யா காண்டம்)

கண்ணின் கருமணியைப் போன்ற புதல்வனை இழந்த பிறகு இவ்வுலகில் உயிர் வாழ்வதைத் தங்களால் கற்பனை கூட செய்து பார்க்க முடியவில்லை என அந்தப் பெற்றோர், இனியும் உண்டு உயிர் வாழ்வதா எனத் தங்கள் உயிரை விடச் சித்தமாயினர்.

கண்ணுள் மணிபோல் மகவை இழந்தும் உயிர் காதலியா,
உண்ண எண்ணி இருந்தால், உலகோர் என் என்று உரையார்?

(நகர் நீங்கு படலம் அயோத்யா காண்டம்)

தங்கள் உயிரைத் துறப்பதற்கு முன், தசரதனுக்குச் சாபம் அளித்தனர். 'உன்னால் எங்கள் புத்திரனைப் பிரிந்தோம் அதனால் உயிர் விடத் துணிகிறோம், இதுபோல நீயும் மகனைப் பிரிந்த சோகத்தில் உயிர் துறப்பாய்' எனச் சாபமிட்டனர். அப்படிச் சாபம் இடும் போதும்,தங்கள் மகன் ஏவாமலேயே குறிப்பறிந்து பணி செய்கிறவன் என்று குறிப்பிடுகின்றனர், 'ஏவா மகவைப் பிரிந்து இன்று எம்போல் இடர் உற்றனை நீ போவாய் அகல்வான்' என்ற வரியினால் கம்பன் இச் செய்தியை விளக்குகிறான். 'ஏவா மக்கள் மூவாமருந்து' என்ற வாசகத்தினை சுரோசனன் வரலாறு நமக்கு நினைவூட்டுகிறது.

'செப்பருங் குணத்து இராமன்' தன் பெற்றோரிடம் வைத்திருந்த அன்பையும் மரியாதையையும் போலவே, சுரோசனன் தன் பெற்றோரிடம் வைத்திருந்த அன்பும் தொண்டுள்ளமும் நம் நெஞ்சத்தை நிறைக்கிறது. எனவே தான், சொன்ன சொல்லை மதித்து நடக்கும் புதல்வனை உடைய தகப்பன் மிகச் சிறந்தவனாகக் கருதப்படுவான் என்று கம்பன் குறிப்பிடுவது, பொருள் பொதிந்த அனுபவ வாசகமாகும்.

பெற்றோரே தெய்வம் :

சமயம் வாய்க்கும் போதெல்லாம் பெற்றோரின் சிறப்பைப் பேசி மகிழ்கிறான் இராமன். ' காடேகிய இராமனைச் சந்தித்து சமாதானம் செய்து மீண்டும் அயோத்திக்கு அழைத்துச் சென்று அரசனாக்குவேன்' எனப் பரதன் கானகம் வந்தான். இராமபிரானைச் சந்தித்து தன் தாய் கைகேயி இழைத்த கொடுமையால் நடந்த அனைத்துத் தீமைகளுக்கும் வருந்தி அழுது, வரங்கொடுத்த மன்னனையும், வரம் பெற்ற தாயாரையும் பழித்துப் பேசினான்.

பரதன் சொன்ன சொற்களைக் கேட்ட இராமன் நல்ல நூலறிவும், பழுதில்லாத ஞானமும் குற்றமற்ற நல்லறிவும், மேம்பாடுடைய நல்லொழுக்கமும், செயற்றிறமும், தொழுதற்கு உரிய கடவுளரும் 'குரவரே' ஆவர் என்று சொல்லி, அந்தக் குரவர் என்பவர் யார் என்று நன்றாக ஆராய்ந்து பார்த்தால் அவர்களே நம் தந்தை தாயர் என்பது புலனாகும் என்கிறான் இராமன்.

'அந்த நல் பெருங் குரவர் ஆர் எனச்
சிந்தை தேர்வுறத் தெரிய நோக்கினால்,
'தந்தை தாயர்' என்று இவர்கள் தாம் அலால்,
எந்தை! கூற வேறு யாரும் இல்லையால்'

(திருவடி சூட்டு படலம், அயோத்யா காண்டம்)

எனவே தந்தையையும், தாயாரையும் எந்த ஒரு கால கட்டத்திலும் பழித்துப் பேசுதல் கூடாது என்பதனை இராமகாதை விளக்குகிறது.

6. சூழலும் சுகமும்

மேடுபள்ளங்களை உள்ளடக்கியது தான் வாழ்க்கை. எந்த ஒரு மனித வாழ்வும் முழுக்க முழுக்க மகிழ்ச்சிகரமானதாக இருப்பதில்லை. முழுவதும் சோக மயமானதாகவும், யார் வாழ்வும் முடிந்து விடுவதில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக மகிழ்வும் சோர்வும், மனிதவாழ்வில் மாறி மாறித் தான் வந்து கொண்டிருக்கும், இந்த வாழ்வியல் உண்மைகளைப் புரிந்து கொள்ளாதவர்கள், வாழ்நாள் முழுதும் இன்பமயமாக இருக்கும் என்ற கற்பனையில் திளைத்து, அது நடைபெறாதபோது கவலைக்குள் ஆழ்ந்து போகின்றனர். புறச் சூழ்நிலைகளில் மாற்றம் ஏற்படும் போது கூட, மனநிலை பாதிப்படையாமல், வாழும் சூழ்நிலைக்கு ஏற்றவாறு நம்மை மாற்றிக் கொள்ளுகிற பக்குவம் கைவரப் பெற்றால் நம் கவலைகளைக் கணிசமாகக் குறைக்கலாம்.

'ஆனந்தம் எங்கே எங்கே' என்று அலைமோதிக் கொண்டு, மன விகாரங்களினால் தாங்கள் வாழும் சூழ்நிலையையும் நரகமாக்கிக் கொள்வோர் பலர். மாறாக ஆனந்தம் என்பது ஒரு கடைச் சரக்கல்ல; அது புறப் பொருட்களில் இருந்து பெறத் தகுந்ததும் அல்ல; ஆனந்தம் என்பது மனதின் நிலை. வாழ்வின் அனைத்து வசதிகளையும் தங்களைச் சுற்றிச் சூழ வைத்துக் கொண்டு, துன்பங்களில் உழல்பவர் எத்தனை பேர். இருப்பதையே இறைவன் தந்த வரமாகக் கொண்டு இன்பமாக வாழ்வோரும் உண்டு. இந்த நிலைகளைப் பலரது வாழ்க்கையில் பல விதங்களில் நாம் காணலாம்.

இராம காதையில் இராமனும் சீதையும் மகிழ்வாக அயோத்தி அரண்மனையில் வாழ்ந்திருந்தனர். உற்றார் வாழ்த்துரைக்க, ஏவலர் பணி செய்ய, பெற்றோரும் பெரியோரும் ஆசி நல்க, வாழ்வின் வளமையை எல்லாம் இன்பமாய் அனுபவித்துக் களித்தனர். இராமன் பட்டஞ்சூட்டிக் கொண்டு, சாம்ராஜ்யத்தை அரசாட்சி செய்வான் எனச் சீதை மகிழ்வுடன் எதிர்பார்த்திருக்கும் போது, சூழ்நிலை மாற்றமடைந்து, கைகேயி கேட்ட வரத்தினால், காடேக வேண்டிய நிலை உருவாயிற்று. பதினான்கு ஆண்டு கால கானக வாழ்விற்குள் இராமனும் சீதையும் அடியெடுத்து வைத்தனர். அரண்மனை வாழ்வு ஆரண்ய வாழ்வாக மாறிற்றே தவிர, அவர்கள் ஆனந்தமான மனோநிலையில் எந்த ஒரு மாற்றமும் ஏற்படவில்லை. 'மகுடம் சூடிக்கொள்ள இயலாமற் போயிற்றே' என்ற மனவருத்தம் இராமன் சீதை இருவருக்குமே இல்லை.

ஆரண்யத்திலும் ஆனந்தம் :

ஆரண்யத்திலேயும், அழகிய பல காட்சிகளைக் கண்டு மகிழ்ந்து அவர்கள் இயற்கைத் தாயின் இனிய குழந்தைகளாய் வாழ்ந்தனர். கானகத்தில் புகுந்து, வழிநடைக் காட்சிகளைக் கண்ட வண்ணம் மூவரும் நடைபோட்ட கதையைச் சொல்லும் போது, மூவரின் மகிழ்வையும், தன் கவிதா வரிகளில் கம்பன் நமக்குப் பங்கு வைக்கிறான். மன்மதனுடைய ஐந்து அம்புகளையும் இராமனின்

கூர்மையான அம்புகளையும் தன் ஆற்றலால் அளந்து வெல்லும், நஞ்சினை வெல்லும் தகைமை உடையன சீதாதேவியின் கண்கள். அந்தக் கண்களால் சீதாதேவி ஸ்ரீ இராமனின் திருவடிகளைப் பார்த்தாள். அவை என்ன, சாதாரணத் திருவடிகளா? வேய்ங்குழல் போல் ரீங்காரம் செய்து கொண்டு, வண்டுகள் சுற்றிச் சுற்றி வரும் அழகிய தாமரை மலர்களையும் எள்ளி நகையாட வல்ல, எழிலான உவமை கூற இயலாத அழகுத் திருவடிகள். அந்தப் பேரழகில் ஈடுபட்ட வண்ணமாகத் தன் கண்களால் இராமனின் திருவடி அழகைப் பருகியவாறு சீதை நடந்து சென்றாள்.

'அஞ்சு அம்பையும் ஐயன் தனது அலகு அம்பையும் அளவா
நஞ்சங்களை வெல ஆகிய நயனங்களை உடையாள்
துஞ்சும் களி வரி வண்டுகள் குழலின் படி சுழலும்
நஞ்சங்களை மஞ்சன் கழல் நகுகின்றது கண்டாள்'

(கங்கைப் படலம், அயோத்யா காண்டம்)

சீதாபிராட்டியோ, இராமபிரானின் திருவடிகளில் கண்பதிக்க, இராமபிரானோ சீதாதேவியின் கண்களை எண்ணி மகிழ்ந்தான். வேய்ங்குழல் நாதத்தை விட, யாழில் இருந்து புறப்படும் இனிய இசையை விடவும், பசுந்தேன், கருப்பஞ்சாறு, கற்கண்டு ஆகிய அனைத்தையும் விட இனிமையானது, கிளிமொழி போன்ற சீதாதேவியின் இனிய சொற்கள். அத்தகைய சீதா தேவியின் கண்கள் இராமனுக்கு எல்லையில்லாத மகிழ்வு தரவல்லவை, களை பறிப்பவர் தன் பணியைச் செவ்வனே செய்யும் போது, வயலிலிருந்து வெளியே குவளைப் பூக்களை எறிவது பழக்கம். அத்தகைய குவளை மலர்த் தொகுதியைக் காணும் போது, இராமபிரானுக்கு சீதாதேவியின் கண்கள் நினைவுக்கு வருகின்றதாம்.

'தொளை கட்டிய கிளைமுட்டிய சுருதிச் சுவை அமுதின்,
கிளை கட்டிய கருவிக் கிளர் இசையின், பசை நறவின்,
விளை கட்டியின், மதுரித்து எழு கிளவிக் கிளி விழிபோல்,
களை கட்டவர் தளைவிட்டு எறி குவளைத் தொகை கண்டான்'

(கங்கைப் படலம், அயோத்யா காண்டம்)

தாமரை மலர்கள் நிறைந்து விளங்குகின்ற அழகிய தடாகங்களையும், அன்னங்கள் தூங்கும் அழகிய சோலைகளையும், முத்துக்களை ஈனும் சங்குகள் தங்குகின்ற மணல் மேடுகளையும், மலர்களைச் சிந்துகின்ற அழகிய நந்தவனங்களையும், பொன் கொழிக்கும் ஆறுகளையும் கண்டு, கண்டு மனம் மகிழ்ந்தார்கள்.

'பல் நந்து உகு தரளம் தொகுபடர் பந்திகள் படு நீர்
அன்னம் துயில் வதி தண்டலை, அயல் நந்து உறை புளினம்,
கின்னம் தரும் மலர் சிந்திய செறி நந்தவனம், நன்
பொன் உந்திய நதி, கண்டு உளம் மகிழ்ந்தனர், போனார்'

(கங்கைப் படலம், அயோத்யா காண்டம்)

இராமனும் சீதையும் இலக்குவனும் காடேகுகிறோம் என்ற கவலை இல்லாமல் ஆனந்தமாய் நடை போட்டனர் என்கிறான் கம்பன். இராமனைக் கானகத்தில் கண்ட முனிவர்களும் மகிழ்வெய்தினர். மனத்தினால் ஆராய்ந்து 'இன்னது' எனக் கண்டு வாயினால் சொல்ல முடியாத இன்பமே ஓர் உருவான இராமனை கண்டவர் ஆனந்தம் மேலிட மன மகிழ்வெய்தினர்.

இன்பமும் துன்பமும் நிறைந்த மனித வாழ்க்கையில், இன்பத்தின் தன்மையை அனுபவிப்பதற்கே துன்பம் தான் நமக்குத் துணை செய்கிறது. முழுவதும் இன்பத்தினையே அனுபவித்துக் கொண்டிருந்தால், அதுவே வாடிக்கையாகி, வாழ்வு சாரமற்றதாய்ப் போய்விடும். பிரிவு எவ்வாறு உறவைப் பலப்படுத்துகிறதோ, அது போலத் தான், நம்மை வாட்டும் துன்பங்கள்தான், நம் வாழ்வில் நாம் அனுபவிக்கும் இன்பங்களின் தன்மையை நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

குகனும் இராமனும் :

இராமனைக் கண்டு தரிசித்து தன் மனம் முழுவதையும் இராமனுக்கு அர்ப்பணம் செய்து விட்ட குகனுக்கு, இராமனைப்

பிரிய மனமில்லை. இராமனிடம் கொண்ட பக்தியினால் தன் உயிரையும் கொடுக்கும் உள்ளன்பு உடையவனாகிய குகன், இராமபிரானின் திருவடிகளை வணங்கி, 'நாய் போன்றவனாகிய நான் உங்களை ஒரு நொடிப் பொழுதும் பிரிய மாட்டேன் என்கின்றான். 'ஒரு நொடி வரை உம்மைப் பிறிகிலென் உடன் ஏகப் பெறுகுவன்,' ஒரு போதும் மல்லினும் உயர் தோளாய் மலர் அடி பிரியேனால்' என்கின்றான். இதனைக் கேட்ட இராமன், குகனுக்கு விடை இறுக்கும் போது 'துன்பம் உள்ளதால் அல்லவா சுகம் என்று ஒன்று உள்ளது என்பதனையே நாம் உணர்கிறோம். அதுபோல பிரிவு என்ற ஒன்று தான் உறவின் மகத்துவத்தை நமக்கு அறிவிக்கிறது. எனவே இடைப்பட்ட பிரிவினால் உண்டாகும் துன்பத்தைப் பற்றிக் கவலையில்லாமல், பின்னால் நாம் இணைந்திருக்கப் போகும் நன்னிலையை எண்ணி மகிழ்வு கொள்வாயாக' என எடுத்துக் கூறும் தத்துவம் நமக்கும் பொருந்தும்.

'துன்பு உளது எனின் அன்றோ சுகம் உளது? அது அன்றிப்
பின்பு உளது; 'இடை மன்னும் பிரிவு உளது' என உன்னேல்
முன்பு உளெம், ஒரு நால்வேம்; முடிவு உளது என உன்னா
அன்பு உள, இனி, நாம் ஓர் ஐவர்கள் உளர் ஆனோம்'

(குகப்படலம், அயோத்தியா காண்டம்)

நாம் எங்கு இருக்கிறோம்; கணந்தோறும் நம்மைச் சுற்றி என்ன நடந்து கொண்டிருக்கிறது; சூழ்நிலைகள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதனை எல்லாம் விட, நம் மனம் எத்தகைய சூழ்நிலையிலும் தளர்ச்சியையும், சோர்வையும் சந்திக்காமல், வாழ்வின் மேடுபள்ளங்களைச் சந்திக்கும் போது கூட, உறுதிப்பாட்டோடு விளங்கும் திறம் படைத்ததாகப் பக்குவம் பெறுமானால் அதுவே வேண்டத்தகுந்ததாகும்.

7. பதவி என்னும் பொன்விலங்கு

பதவிகளை அடைவதற்கும், பெற்ற பதவிகளைத் தக்க வைத்துக் கொள்ளுவதற்கும் இந்தக் கால கட்டத்தில் மனிதர்கள் போட்டியும் பொறாமையும் வளர்த்துக் கொண்டு தங்களுக்குள் வாயடியும் கையடியும் வளரச் செய்து கொண்டிருக்கும் இந்தக் கால கட்டத்தில் பதவி என்பது ஒரு பொறுப்பே தவிர, தன் வாழ்வின் வசதிகளைப் பெருக்கிக் கொள்ளக் கிடைத்த ஒரு வாய்ப்பு அல்ல என்பதனை நம்மை உணர வைக்கும் கம்பனின் சிந்தனை, போற்றுதலுக்கும் எண்ணிப் பார்ப்பதற்கும் உகந்தது.

பதவி நிலையானதா?

அறுபதினாயிரம் ஆண்டுகாலம் அரசாட்சி செய்த தசரதன் இராமனுக்கு முடிசூட வேண்டும் என்று எண்ணமிடும் போது வசிட்டனிடமும் இராமனிடம் சொன்ன வாசகங்கள் அரசபதவியைத், தன் தோள் மேல் சுமத்தப்பட்ட ஒரு பாரமாகத் தசரதன் கருதினான் என்பதனை நமக்குத் தெரிவிக்கிறது. 'குற்ற மற்றவர்களாகிய தன் குல முதல்வர்கள், ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர் அரசாட்சியைத் தங்கள் புதல்வர்களிடம் ஒப்படைத்து விட்டுத் தங்களின் ஐம்புலன்களையும் அடக்கி, கானகம் சென்று தவம் மேற்கொண்டனர். மண்ணையும் விண்ணையும் ஒருவன் வெல்வதாக இருந்தாலும், தன் ஐம்புலன்களை வெல்லும் ஆற்றலை ஒருவன் பெறாதொழிந்தால் அதனால் யாதொரு பயனும் இல்லை. அவுணர்களின் பத்துத் தேர்களையும் வெற்றி பெற்றவன் ஐம்பொறிகளான தேவர்களைச் சரியான பாதையில் செலுத்தாமல் இருக்கலாமோ? உலகில் பிறந்தோர் எல்லாம் இறப்பர் என்பது உறுதி. பிறவி என்ற பெருங்கடலைக் கடப்பதற்குத் துறவு என்ற தெப்பம் அல்லவா துணை செய்ய வேண்டும். மாறாக பதவி என்பது நிலையானது என்று எண்ணிக் கொண்டிருப்பது எத்தகைய அறியாமை' என்கிறான் தசரதன்.

'கச்சை அம் கடக் கரிக் கழுத்தின் கண் உறப்
பிச்சமும் கவிகையும் பெய்யும் இந்நிழல்
நிச்சயம் அன்று'

(மந்திரப்படலம், அயோத்யா காண்டம்)

கழுத்திலே இடுகிற கயிற்றையும், மதத்தையும் உடைய யானையின் பிடரியில் அமர்ந்து, பீலிக் குஞ்சங்களும் வெண் கொற்றக் குடையும் கொடுக்கும் இனிய நிழலை அனுபவிக்க வாழ்வது நிலையானது அல்ல என்கிறான்.

விடுபட்ட எருது :

வண்டியில் பூட்டப்பட்ட எருது பாரத்தைத் தாங்கும் பொழுது வருந்தி, பின்னர் விடுபடும் போது எப்படி நிம்மதிப் பெருமூச்சு விடுகிறதோ அது போலவே பாரமான அரசவாழ்வை விட்டு விட்டு, சொர்க்கம் என்னும் நிம்மதியை அடைய, தான் விரும்புவதர்கத் தசரதன் தெரிவிக்கிறான். அதுபோலவே ' பரதன் நாட்டை ஆள நீ பதினான்கு ஆண்டுகள் வனத்தில் வாசம் செய்து திரும்பி வா' என இராமனுக்குக் கைகேயி கட்டளையிட அன்றலர்ந்த செந்தாமரையைப் போல் விகசித்த முகத்தை உடையவனான இராமன், பாரத்திலிருந்து விடுபட்டவனைப் போல விளங்கினான். 'தந்தை சொற்படி நடத்தல் அறம்' என்ற உணர்வின் அடிப்படையில் பட்டஞ்சூடிக் கொள்ள சம்மதித்தான் இராமன். எனவேதான் 'காதல் உற்றிலன் இகழ்ந்திலன் கடன் இது என உணர்ந்தான்' என்று கம்பன் குறிப்பிட்டான். தாயார் அழைத்து இராச்சியம் பரதனுக்கே உரியது என்றும் இராமன் காடேக வேண்டும் என்றும் குறிப்பிட்ட போது, பாரம் ஏற்றப்பட்ட வண்டியில் பூட்டப்பட்ட காளையை ஒருவன் செலுத்த, அந்த பாரச்சுமையினால் வருந்திய காளையை அருள் உள்ளம் கொண்ட ஒருவன் அவ்வண்டியின் பிணைப்பில் இருந்து அவிழ்த்து விட, விடுபட்ட காளை எங்ஙனம் மகிழுமோ அதே நிலையை இராமன் அடைந்தான்.

தெருளுடை மனத்து மன்னன் ஏவலின் திறம்ப அஞ்சி,
இருளுடை உலகம் தாங்கும் இன்னலுக்கு இயைந்து நின்றான்,
உருளுடைச் சகடம் பூண்ட, உடையவன் உய்த்த கார் ஏறு
அருளுடை ஒருவன் நீக்க, அப்பிணி அவிழ்ந்தது ஒத்தான்.

(கைகேயி சூழ்வினைப் படலம், அயோத்யா காண்டம்)

பரதனைப் போல் உண்டோ?

தசரதச் சக்கரவர்த்தி மாண்ட பின், தைலத்தில் இடப்பட்ட அவனது உடலை சரயு நதிக் கரையில் தகனம் செய்யும் கடமை நிறைவேறிய பிறகு குல குருவான வசிட்டன் பரதனை நோக்கி 'மைந்தனே உன் தந்தையோ இறந்தனன்; இராமனோ நாடு நீங்கி கானகம் சென்று விட்டான்; உன் அன்னை கைகேயி கேட்ட வரத்தினால் இந்த நாடு உன்னை அடைந்தது; எனவே அரசினைப் பொறுப்பேற்று நீ ஆண்டு வருவாயாக, என்று வசிட்டன் கூறினான். 'இவ்வுலகை நீ ஆண்டு வருவாயாக என்று வசிட்டன் சொன்ன வாசகம் பரதனின் செவிமலர்களில் விழுந்த உடன் பரதன் நடுங்கினான், நாத்தடுமாறினான், பதை பதைத்தான் கண்ணீர் உகுத்தான். வசிட்டன் சொன்ன சொல் 'விஷத்தை உண்பாயாக' என்று சொன்னதைப் போல் இருந்தது. அண்ணனுக்குச் சேரவேண்டிய அரசாட்சியைப் பெற்று அரசாள்வது, விஷத்தை உண்பதற்குச் சமமானது என்று எண்ணுகிற பவித்திரம் பரதனிடம் காணப்பட்டது.

'தஞ்சம் இவ்உலகம், 'நீ தாங்குவாய்' என,
செஞ்சவே முனிவரன் செப்பக் கேட்டலும்
'நஞ்சினை நுகர் என, நடுங்குவாரினும்
அஞ்சினன் அயர்ந்தனன் அருவிக் கண்ணினான்'

(ஆறுசெல் படலம், அயோத்யா காண்டம்)

'இராமனை அழைத்துக் கொண்டு வந்து முடிசூடச் செய்வேன்' எனப் பரதன் மொழிந்ததும், அதனைக் கேட்ட அவையோர், தசரதன் உயிருடன் இருக்கும் போதே, தந்தையின் கட்டளை எனக் கருதி முடி சூடிக் கொள்ள இராமன் உடன்பட்டான். ஆனால் பரதனோ தன் தந்தை மாண்டு போன பின்னரும் அரச செல்வத்தை வேண்டாம் என்று துறந்தவன். எனவே அரச குலத்தில் தோன்றிய இளவரசர்களுக்குள் பரதனைப் போல் புகழுடன் தோன்றியோர் வேறு யாருமிலர் என்றனர்.

இராமன் கானகம் சென்ற செய்தியைக் கைகேயி சொல்லக் கேட்டு கொதிக்கிறான் பரதன். தன் தந்தையும் இராமனது பிரிவினால் மாண்டு போன செய்தி கேட்டுத் துடிக்கிறான். 'இராமனிடம் தான் கொண்டுள்ள பேரன்பைப் பற்றி, எண்ணிப் பார்க்காமல் இராமனுக்கு இத்தகைய தீமைகளைப் புரிந்தானே பரதன் என உலகம் தன்னைப் பழிக்குமே அறம் முழுவதும் அழிந்து போகும்படியான ஒரு செயலைத் தன் தாய் செய்து விட்டாளே என்றெல்லாம் மனம் மருகுகிறான் பரதன்.

கைகேயியைப் பார்த்துப் பரதன் பேசும் போது 'உன்னுடைய தீய எண்ணத்தால், கொடுஞ்செயலால் இறப்பதற்கு ஓர் அரசன் இருந்தான். நாட்டை ஆள்வதை விட்டு விட்டு, காட்டுக்குச் செல்ல ஒரு வீரன் இராமன் இருந்தான் என்பதனால், பழிநேருமாறு, அரசியல் மரபையும் மாற்றி வஞ்சனையால் நீ பெற்ற இராஜ்ஜியத்தை ஆளப் பரதன் ஒருவன் இருக்கிறான் என்று எண்ணி விட்டாய் போலும் என்றான்.

'மாளவும் உளன், ஒரு மன்னன் வன் சொலால்;
மீளவும் உளன் ஒருவீரன்; மேயபார்
ஆளவும் உளன் ஒரு பரதன்; ஆயினால்
கோள் இல அறநெறி! குறை உண்டாகுமோ?'

(பள்ளி படைப்படலம், அயோத்யா காண்டம்)

வஞ்சனை மிகுந்த தன் தாயின் சூழ்ச்சியால், சூரிய குலத்தில் காலங்காலமாகப் பேணப்பட்டு வரும் மரபைக் கெடுத்து அக்குலத்தைப் பழி, இனி வரும் காலத்திலும் உடையதாக ஆக்கி விட்டான் பரதன் என்ற பழி மாறுமா? என்றெல்லாம் பரதன் அழுது புலம்பினான். 'இத்தகைய கொடுமை நிகழ்ந்த பிறகும் தன் உயிரை விட்டு விடாமல் உயிர் மேல் உள்ள ஆசையினால் பரதன் உயிருடன் வாழ்ந்து கொண்டல்லவா இருக்கிறான், என்று மக்கள் தன்னைத் தூற்றுவார்கள் என்று கவலை கொள்கிறான். இருப்பினும் செய்யாத தவற்றுக்காக ஒருவன் பழி ஏற்க நேரும் சூழ்நிலை ஏற்படும் போது வேறு வழியில்லாமல் 'நாம் தவறு செய்யவில்லை ஆகவே அறியாமல் ஊரார் பழிக்கும் பழிச்சொல்லைப் பற்றிக் கவலை கொள்ள வேண்டியதில்லை' என்று இருப்பதைத் தவிர வேறொன்றும் செய்ய இயலாது. நெஞ்சறிந்த தவற்றினைப் புரிவதற்கு அஞ்ச வேண்டும். தான் செய்யாத தவறு தன் மேல் ஏற்றிச் சொல்லப்படும் போது அமைதி காப்பதைத் தவிர வேறு வழியில்லை என எண்ணும் பரதனின் நிலை எண்ணிப் பார்க்கத் தகுந்தது. நஞ்சு உண்டால் தானே உயிரைக் கொல்லும் உண்ணாத நஞ்சு ஒருவரைக் கொல்வதில்லை அதுபோல செய்யாத தவறு ஒருவரை எந்த விதத்திலும் பாதிப்பதில்லை.

'கண்ணாலே, என் செய்வினை, இன்னும் சில காண்பார்;
மண்ணோர் பாராது எள்ளுவர்; வாளாபழி பூண்டாய்;
'உண்ணா நஞ்சம் கொல்கிலது என்னும் உரை உண்டு என்று
எண்ணா நின்றேன்; அன்றி இரேன், என் உயிரோடே.'

(பள்ளி படைப்படலம் , அயோத்யா காண்டம்)

பதவி ஆசையினால் பழி சூடிக் கொள்வதற்கு ஒருவன் அஞ்சுதல் வேண்டும் என்பதனைப் பரதனின் செயலும் சொல்லும் தெளிவாகத் தெரிவிக்கிறது.

சத்ருக்கனனின் பேச்சு :

இராமகாதையில் செம்மாந்த பல கதா பாத்திரங்கள் இந்த உண்மையைத் தெளிவு படுத்துகின்றன. பதினான்கு ஆண்டுகால எல்லை தாண்டிய பின்னரும் இராமன் முடி சூடிக் கொள்ள வந்து சேரவில்லை என்ற வருத்தத்தினால் பரதன் நாட்டை சத்ருக்கனனிடம் ஒப்படைத்து விட்டு எரிபுக எண்ணுகிறான். அவ்வமயம் சத்ருக்கனைப் பார்த்து 'நீ நாடாள்வாயாக' என்று சொல்ல அதனைக் கேட்ட, சத்ருக்கனன் சொன்ன பதில், கற்றோர் மனதிற்கு களிப்பூட்டும் ஒரு செய்தியாகும். பரதன் சத்ருக்கனனைப் பார்த்து 'நான் உன்னிடம் வேண்டும் விண்ணப்பம் ஒன்றுளது அது யாதெனில் சொன்ன படி உரிய காலத்தில் இராமன் திரும்பி வந்து சேரவில்லை. எனவே நான் எரி மூழ்குவதாக முடிவு செய்திருப்பதால், என்றன் சொல்லை மறுக்காமல் அயோத்தி அரசாட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்வாயாக' என்கிறான். அதனைக் கேட்ட சத்ருக்கனன் நஞ்சை உண்டவனைப் போல் நடுங்கித் தன்னை அரசாளச் சொன்ன பரதனைப் பார்த்து 'தசரதச் சக்கரவர்த்தியின் மூத்த மகனாக இராமன் பிறந்ததால், அரசாள்வதற்க்கு உரிய முழு உரிமையைப் பெற்றிருந்தும் தந்தை தாய் சொற்கடவாது நடத்தல் ஒரு புத்திரனுக்குக் கடமை என்று கானகம் சென்றுவிட்டான். ஒரு மன்னனாய் இருந்து அரசாட்சி செய்ய வேண்டிய சகோதரன் காடேகிய போது, நான் ஏன் அரண்மனையில் வாசம் செய்தல் வேண்டும்? காடேகிய சகோதரனுக்கு உடனேகுவதே செய்யத் தக்கது என்று இலக்குவன் இராமனுடன் கானகம் சென்று விட்டான். அவ்வாறு கானகம் சென்ற இராமன் திரும்பி வர வேண்டிய காலம் எல்லை மீறிவிட்டது என்று தன் உயிரையே விட்டு விடத் தயாராகி விட்டான் பரதன் என்ற சகோதரன். இத்தகைய அறச் சிந்தனையும், தியாக மனோபாவமும் கொண்ட சகோதரர்களுடன் பிறந்தும், மற்றொரு தம்பியான நான் நாணமின்றி அரசினை ஏற்றுக் கொள்வேன், என்று எப்படி எண்ணமிட முடிகிறது' என்று சொன்ன சொற்களில் தான் எத்தனை தெளிவு, நேர்மைத் திறம்.

'அவ்வவர் துறை தொறும் அறம் திறம்பலர்' என இராம சோதரர்களைப் பற்றி கைகேயி சொன்ன வாசகம் இங்கு நினைவு கூரத் தகுந்தது. தசரதனின் மைந்தர்கள் நால்வரும் செம்மாந்தவர்கள். எனவே தான் பதவி வேண்டும் வேண்டும் என்று மக்கள் போட்டியிட்டுக் கொண்டிருக்கின்ற இந்தக் காலத்தில், கிடைத்த பதவியினை வேண்டாம் வேண்டாம் என உதறித் தள்ளுகின்ற இராம சோதரர்களின் மாண்பு மலையளவு உயர்ந்து நிற்பதை நம்மால் உணர முடிகிறது.

'கான் ஆன நிலமகளைக் கைவிட்டுப்
போனானைக் காத்துப், பின்பு
போனானும் ஒரு தம்பி; போனவன்
தான் வரும் அவதி போயிற்று, என்னா
ஆளாத உயிர்விட என்று அமைவானும்
ஒரு தம்பி; அயலே நாணாது,
யானாம் இவ்வரசு ஆள்வென்! என்னே,
இவ்வரசாட்சி இனிதே அம்மா'!

(மீட்சிப் படலம், யுத்தகாண்டம்)

அறம் உயிரினும் மேலானது :

இராமபிரான் கானகம் சென்றபின், அவன் முடிசூட்டி இருந்து அரசுபுரிய வேண்டிய தலைநகர் அயோத்தியில் தான் தங்கி இருப்பதும் தவறு என்று கருதி இலக்குவன் வனம் புகுந்தான். பரதனான நீயோ 'நகரத்தில் இருந்து வாழ்ந்து கொண்டிருக்கிறான்' என்று ஊரார் பழிப்பர் என்பதை எல்லாம் எண்ணிப் பார்த்து, நந்திக் கிராமத்தில் தங்கியிருந்து அரிய பெரிய தவத்தைச் செய்தாய். தன் மூத்த சகோதரன் அனுபவிக்காத சுகங்களை, தானும் நிராகரிக்க வேண்டும் என்ற நிலையில் மிகுந்த உறுதிப்பாட்டுடன் விளங்கினாய். அங்ஙனமிருக்க உனக்கு பின்னால் இந்த அரசை ஆண்டு கொண்டு நான் உயிருடன் வாழ்தல் வேண்டும் என்று நீ குறிப்பிடுவது எவ்வாறு நியாயமாகும். என்னைப் பொறுத்த

வரையில் நீ எரி புகுந்த பின் நான் உலகில் உயிர் பிழைத்திருப்பதும் பாவம் நீ இருக்கும் போதே உனக்குப் பதிலாக அரசாட்சியை ஏற்பதும் பாவம். இந்த இரண்டு பாவச் செயல்களையும், ஒருநாளும் நான் புரிய மாட்டேன்', என்று சத்ருக்கனன் தெள்ளத் தெளிவாக எடுத்துரைத்தான். அபூர்வமாய் பேசுகின்ற சத்ருக்கனன் மிக அழகாகவும் அழுத்தமாகவும் பேசிய இடம் இராம காதையில் இந்த இடம் தான். அறத்தின் மேல் அழுத்தமான நம்பிக்கை உடையவர்களைத் தவிர, 'அறம் உயிரினும் மேலானது' என்று எண்ணுபவர்களைத் தவிர வேறு யாராலும் இத்தனைத் தெளிவாகத் தன் நியாயங்களை எடுத்து வைக்க முடியாது.

'மன்னின் பின், வளநகரம் புக்கு
இருந்து வாழ்ந்தானே, பரதன் என்னும்
சொல் நிற்கும் என்று அஞ்சிப், புறத்து
இருந்தும் அருந்தவமே தொடங்கினாயே!
'என்னின் பின் இவன் உளனாம் என்றே
உன் அடிமை உனக்கு இருந்ததேனும்,
உன்னின்' பின் இருந்ததுவும், ஒரு
குடைக் கீழ் இருப்பதுவும் ஒக்கும்' என்றான்'

(மீட்சிப் படலம், யுத்தகாண்டம்)

பதவி ஆசையற்ற வீடணன் :

இராம சோதரர்களைப் போலவே, இராவண சோதரனான வீடணனும் பதவி என்கிற வேட்கை கொஞ்சமும் இல்லாதவனாக இருந்தான். அண்ணன் இராவணனுக்கு ஆயிரம் அறிவுரை கூறிப் பார்த்தான். அவன் கொஞ்சமும் அதனைப் பற்றி கவலைப் பட்டதாகத் தெரியவில்லை. அறம் பிறழ்ந்து நடப்பவனுக்கு அறம் உணர்ந்தவன் சொற்கள் எல்லாம் வேப்பங்காய்களைப் போலக் கசந்தன. இராவணனைத் திருத்த வழியில்லை என்று தெரிந்து கொண்ட பிறகு, வீடணன் அறத்தின் மூர்த்தியின் திருவடிகளை வந்து சேர்ந்தான். இராமனிடம் தன்னை அடைக்கலப்படுத்திக்

கொண்டான். தன் பிறவியான துன்பம் ஒழிந்தது என்று இராமனுடைய திருவடியைச் சேர்ந்தான். தன் தாமரை போன்ற கைகளால் வீடணனைத் தழுவி இராம பிரான் 'எழுந்து இனிது இருத்தி' என்றான். பின் வீடணனை நோக்கி 'பதினான்கு உலகங்களும் என் பெயரும் எவ்வளவு காலம் நிலைபெறுமோ, அந்தக் காலம் வரை அரக்கர்கள் வாழ்கின்ற ஆழ்ந்த கடலின் நடுவே இருக்கின்ற இலங்கை அரசுச் செல்வம் உன்னுடையதே ஆகும் என்று கூறி, கருணை கூர் தன் கண்களால் வீடணனைப் பார்த்தான். பின் தன் அருமைத் தம்பி இலக்குவனை நோக்கிச் சற்றே திரும்பி 'தூங்கா விழியோனே! நம்மை அடைக்கலமாய் வந்து சேர்ந்த வீடணனுக்கு, இலங்கை அரசன் என்பதற்கான அடையாளமாக முடிசூட்டுவாயாக என்றான்.

'உய்ஞ்சனென் அடியனேன் என்று ஊழ் முறை வணங்கி நின்ற
அஞ்சன மேனியானை அழகனும் அருளின் நோக்கி
தஞ்சநல் துணைவன் ஆன தவறு இலாப் புகழான் தன்னை
துஞ்சல் இல் நயனத்து ஐய! சூட்டுதி மகுடம் என்றான்'

(வீடணன் அடைக்கலப் படலம், யுத்த காண்டம்)

அதனைக் கேட்ட வீடணன், இராவணனுடன் பிறந்த பிறவித் தொடர்பை நீக்கும் பொருட்டாக, இளையவனான பரதனுக்குச் சூட்டிய பாதுகைகளையே தன் தலையில் சூட, தான் விரும்புவதாகக் கூறினான். எனவே இலங்கைக்கு அரசன் என்று பதவி பெற்றுப் பட்டஞ்சூடிக் கொள்வதை விட, இராமனுக்குத் தம்பி என்கிற அங்கீகாரம் தனக்குக் கிடைத்தால் போதும் என்று வீடணன் எண்ணினான். மன்னனென முடிசூடிக் கொள்வதில் இல்லாத மகிமை, இராமபிரானின் திருவடியைச் சூடிக்கொள்வதில் இருக்கிறது என்பதனை உணர்வுப் பூர்வமாக உணர்ந்திருந்தான் வீடணன். இலங்கை அரசு என்ற பதவி சாசுவதமானதல்ல. இராமனின் திருவடியே சாசுவதமானது என உணர்ந்து

'களவு இயல் அரக்கன் பின்னே தோன்றிய கடமை தீர,
இளையவற் கவித்த மோலி என்னையும் கவித்தி என்றான்'

(வீடணன் அடைக்கலப் படலம் யுத்தகாண்டம்)

எனவே தசரதன், இராமன், இராம சோதரர்கள் வீடணன் ஆகிய அனைவரின் சிந்தனைகளையும் கணக்கில் கொண்டு கருதிப் பார்த்தால், பதவியை அனைவரும் கடமையாக எண்ணினரே அன்றி, அதை ஒரு கூடுதல் தகுதியாக எண்ணி இறுமாந்திருக்கவில்லை. பதவியை அதிகமான பணியைச் செய்வதற்குத் தனக்குக் கிடைத்த வாய்ப்பாக மட்டும் கருதி மக்கள் நலனுக்காக உழைப்போர், ஒரு போதும் அறவழியின் நின்று பிறழார். அடுத்தவர்க்குத் தீங்கும் செய்யார் என்பதனைக் கம்பன் நம்மைச் சிந்திக்க வைக்கின்றான். பதவி என்கிற அணியை அணிந்து கொள்ளாமலேயே பணி செய்யலாம். சொல்லப் போனால் பதவி என்பது ஒருவகை விலங்குதான். வேண்டுமானால் பொன் விலங்கு என்று வைத்துக் கொள்ளலாம்.

8. ஆவதும் அவளாலே

பெண்மையைத் தெய்வீகமாகப் போற்றும் பான்மை பண்டு தொட்டுப் பாரத தேசத்தில் இருந்து வருகிறது. கம்பன் தன் காவியத்தில் பாத்திரப் படைப்புகளின் மூலமாகவும், தன் கருத்தாகவும், காவிய மாந்தர் மூலமாகவும் பெண்மையைப் பற்றி பல செய்திகளை நமக்கு வழங்குகிறான். பெண்மையின் திண்மை, உறுதிப்பாடு, நளினம், மென்மை, ஆற்றல், தியாகம் ஆகிய அனைத்துப் பண்புகளும் கம்பனால் பேசப்படுகிறது. சீரிய பெண் பாத்திரங்களைச் சித்தரித்து, அத்தகைய பாத்திரங்கள் சந்தித்த வேறுபட்ட வாழ்க்கைச் சூழல்களையும், தங்களுக்குச் சாதகமில்லாத சூழ்நிலையிலும் அத்தகைய பெண் பாத்திரங்கள் மனோதிடத்துடன் நடந்து கொண்ட வகையினையும் பேசுகிறான் கம்பன். அதே நேரத்தில் பெண்மை என்ற புனிதத்துவத்தோடு வந்து கலந்து விடுகிற கீழ்மைக் குணங்கள், எந்த அளவுக்கு பெண்ணை அசுரக்

குணமுடையவளாக ஆக்கி விடுகிறது என்பதனையும் கம்பன் தெளிவுபட எடுத்துரைக்கிறான்.

தாடகையும் பெண்ணா?

நாட்டுப் படலத்தில் கோசல நாட்டின் வளமையைச் சொல்லிக் கொண்டு வரும் போது, அந்நாட்டுப் பெண்களிடம் நிலைபெற்றிருந்த செல்வமும், நீங்காத கல்வியும் நிரம்ப இருந்தன. ஆகவே அவர்கள் வருந்தி வந்தோரின் வறுமையைப் போக்கப் பொருள் வழங்கி, நாள்தோறும் விருந்தினரையும் உபசரித்து மகிழ்ந்தார்கள் என்கிறான் கம்பன். அவர்கள் அழகில் மட்டுமல்ல குயில்களைப் போல இனிமையாகப் பேசுவதிலும் வல்லவர்கள். அவர்களது விழியும், நுதலும் செம்பஞ்சு ஊட்டப்பெற்ற பாதமும் அழகின் ஆதாரங்கள். இத்தகைய மென்மை மகளிரை நமக்கு அறிமுகப்படுத்திவிட்டு, நம்மை நேர்முகமாக ' பெண் என்ற சொல்லுக்கே தகுதியற்றவளான' தாடகையிடம் அழைத்துச் செல்கிறான். ஏழுலகமும் அஞ்ச, இடியொலியைப் போல் ஆரவாரிப்பாள். கோபத்தால் துடிக்கின்ற புருவத்தை உடையவள். காட்டில் வாழ்ந்து கொண்டு நல்லவர்களுக்குத் தொல்லை தரும் அரக்கி. உயிர்களைக் கொன்று உண்ணும் கொடியவள்.

'இத்தகைய தாடகையை இராமனிடம் காண்பித்து அவள் பெண் அல்லள் கொடிய அரக்கி இவளைக் கொல்வாயாக' என்று விசுவாமித்திரன் சொல்லும் போது, இராமபிரான் பெண் எனக்கருதி அவளைக் கொல்லத் தயக்கம் காட்டிய போது, முனிவன் 'நாணம் உடையவள் தான் பெண்' ஆடவர்களின் தோள் வலிமையையே அழிக்கின்ற நாணமற்றவள் பெண் என அழைக்கப்படலாகுமா?

'தீது என்றுள்ளவை யாவையும் செய்து, எமைக்
கோது என்று உண்டிலள்; இத்தனையே குறை;
யாது என்று எண்ணுவது? இக் கொடியாளையும்
மாது என்று எண்ணுவதோ? மணிப்பூணினாய்?!'

(தாடகை வதைப் படலம்; பால காண்டம்)

எனவே கொஞ்சம் கூட பெண்மைக்குரிய நாணம் இல்லாதவளைப் பெண் என்றே கொள்ள முடியாது என்கிறான் விசுவாமித்திர முனிவன்.

தசரதனின் சீற்றம் :

அன்பும், கருணையும் அணிகலன்களாக உடைய பெண்கள் தெய்வம் எனப் போற்றப்படுகின்றனர். மாறாக, பெண்மையின் நல்லியல்புகளைக் கொன்று வாழ்பவர்களைப் பெண்கள் என்று அழைப்பதே தவறானது. கைகேயி, பரதன் நாடாள வேண்டும் என்றும் இராமன் காடேக வேண்டும் என்றும் இருவரம் வேண்டிய போது அவளது கடுஞ்சொற்களைக் கேட்டு தசரதன் பெருந் துயருற்றான். ஒரு பெண்ணால் தீய விளைவுகளை ஏற்படுத்தும் இத்தகைய வரங்களை அறத்திற்கு மாறாகப் பெறுதல் சாத்தியமாகுமா? எத்தனையோ மன்னர்களின் தோளாண்மைக்குத் துவளாத தசரதன், எண்ணிப் பார்க்கவே கூசுகின்ற கைகேயியின் செயலுக்காக நாணுகின்றான்.

தன் நலத்தைக் காட்டிலும், தன் குழந்தைகள் நலம், கணவனின் நலம், குடும்பத்தின் நலம் என்று எண்ணி வாழ வேண்டிய ஒரு பெண், கணவன் உயிர் போனாலும் கவலைப்படுவதாக இல்லை என்ற நிலைக்கு வந்து விட்ட அரக்கத் தனத்தைக் காண நேர்ந்த தசரதனால் தாங்கிக் கொள்ள இயலவில்லை. பெண் இனமே வஞ்சனை உடையது தானோ என்று எண்ணமிட்டுப் பொங்கி வந்த சினத்தில் ' இவ்வுலகம் முழுவதும் பெண்களே இல்லை என்று சொல்லும் படியாக, கூரிய வாளினால் எல்லாப் பெண்களையும் கொன்று விட்டு நானும் இழிந்தவரோடு சேர்வேன்' என்று கொதிக்கிறான். சினம் எல்லை மீறும் போது, தான் பேசுவது என்ன என்பதனைச் சீர்தூக்கிப் பார்க்கும் நிலையில் தசரதன் இல்லை.

'நாரியர் இல்லை இஞ்ஞாலம் எங்கும்' என்ன
கூரிய வாள்கொடு கொன்று நீக்கி, யானும்
பூரியர் எண்ணிடை வீழ்வென் என்று, பொங்கும் -
வீரியர் வீரம் விழுங்கி நின்ற வேலான்'

(கைகேயி சூழ்வினைப் படலம், அயோத்யா காண்டம்)

வேறு வழியின்றி கைகேயியின் கால்களில் விழுந்து கெஞ்சினாலாவது அவள் மனம் மாறுமா? எனக்கருதி பொங்கி வந்த சீற்றத்திற்குத் திரையிட்டு விட்டு, கைகேயியின் கால்களில் விழுகிறான். ' உலகாளும் மன்னர்கள் ஒருவருக்கொருவர் நான் நான் என முந்திவந்து வணங்குகின்ற தகுதிபடைத்த திருவடியினை உடையவன், இன்று மனைவியின் கால்களில் விழுந்து கெஞ்சுகின்ற நிலைமைக்குத் தள்ளப்பட்டு விட்டானே' என்று எண்ணும்போது இடர்ப்பாடான சில சூழ்நிலைகள் வாழ்க்கையில் வழியை அடைத்து நிற்கும் போது, அத்தடைகளை நீக்குவதற்குச் சான்றோர்களும் தங்கள் தகுதிப் பாட்டை மறந்து, தங்கள் தரப்பு நியாயங்களை எடுத்துச் சொல்வதற்கும் வழியில்லாமல், தங்கள் மனம் நினைக்கின்ற நல்ல முடிவுகளைச் செயல்படுத்துதற்குச் சூழ்நிலையின் ஒத்துழைப்பு இல்லாததால், கொடுமைகளைக் கட்டவிழ்த்து விடும் கயவர்களிடமும் பொறுமையுடன் நடந்து கொள்ள வேண்டிய அவசியம் உருவாகி விடுகிறது. அதற்குக் காரணம், தீய செயல்கள் நடைபெறாமல் தடுத்துவிட வேண்டும் என்ற ஆதங்கமும், அதன் பின் விளைவுகள் பாதிப்பை ஏற்படுத்தி விடக் கூடாதே என்று எண்ணுகின்ற நல்லோரின் எண்ணமும் தான். தசரதனும் தன் நிலையினின்றும் இறங்கிக் கைகேயின் கால்களில் விழும் போது, மேலே வரும் நன்மை இருக்கும் என்றால், பொறுமையுடன் நடந்து கொள்வதில் தவறில்லை என்று எண்ணினான்.

கோல் மேற்கொண்டும் குற்றம் அகற்றக் குறி கொண்டார்
போல், மேல் உற்றது உண்டு எனின் நன்று ஆம் பொறை' என்னா
கால்மேல் வீழ்ந்தான் –கந்துகொல் யானைக் கழல் மன்னர்
மேல் மேல் வந்து முந்தி வணங்கி மிடை தாளான்'

(கைகேயி சூழ்வினைப் படலம்; அயோத்யா காண்டம்))

தவிர்க்க இயலாத சூழ்நிலையின் இறுக்கத்தில் தத்தளித்துக் கொண்டிருக்கிற தசரதனைக் கண்டு, வருந்தாமல் இருக்க இயலாது. கணவனின் உயிர் இராமனைப் பிரிந்தால் நீங்கி விடும் எனத் தெரிந்தும் மனம் மாறாதவள், ஒருவேளை தன்னை ஊரார் பழிப்பர் என்று தெரிந்தாலாவது மனம் மாறுவாளா என்றெண்ணித் தான், தசரதன் பின்வருமாறு பேசினான்.

' கொள்ளான் நின் சேய் இவ்வரசு; அன்னான் கொண்டாலும்,
நள்ளாது இந்த நானிலம்; ஞாலம் தனில் என்றும்
உள்ளார் எல்லாம் ஒத உவக்கும் புகழ் கொள்ளாய்;
எள்ளா நிற்கும் வன்பழி கொண்டு என்பயன்? என்றான்'

(கைகேயி சூழ்வினைப் படலம், அயோத்யா காண்டம்)

கண்களையே வேண்டுமானாலும், தன் உயிரையே பெற விரும்பினாலும் தரச் சம்மதிப்பதாகவும், நாட்டையும் வேண்டுமானாலும் பெற்றுக் கொண்டு, இராமனைக் காட்டுக்கு அனுப்பும் கருத்தை மட்டும் கைவிடுமாறும் தசரதன் கெஞ்சும் போதும், கொஞ்சமும் நெஞ்சம் மாறாதவளாக இருந்தாள் கைகேயி. தன் கடுஞ்சொற்களால் தசரதனின் உள்ளத்தைப் பிளந்தாள். அவளது அற்பத் தன்மையினைப் பார்த்து தசரதன் நிலை கொள்ளாமல் தவித்தான். ' மரம் தான் என்றும் நெஞ்சினள்' என்கிறான் கம்பன்.

பெண் வடிவில் ஆண் :

பெண்மையின் அணிகலன்களாகப் போற்றப்படும் குணங்களைப் பெற்றிருப்பதே தங்களுக்குச் சிறப்பு என்று மகளிர்

கருத வேண்டும். பெண் போல் உடை அணிந்து பெண் போல் நடை நடந்தால் மட்டும் ஒருத்தி பெண்ணாகி விட முடியுமா என்றால் பெண்மைக்குரிய பண்பான குணங்களைப் பூண்டவளே பெண் என்கிறான் கம்பன்.

சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் கதைத் தலைவியான கண்ணகியை அறிமுகம் செய்யும் போது 'மாதரார் தொழுது ஏத்த வயங்கிய பெருங்குணத்துக் காதலாள்' என்கிறார். பெண்கள் பண்பு நலமுடையவர்களாகத் தான் இருப்பார்கள். சூழ்நிலைகளின் காரணமாக, காலம் செல்லச் செல்ல அப்பண்பு நலன்கள் வலிவும் பொலிவும் இழந்து போகின்ற நிலைக்கு வந்துவிடுவார்கள். எனவே பெண்மைக்குரிய பண்புநலன்கள், தாங்கள் நிலையாகத் தங்கி இருந்து மிளிர்வதற்கான தகைமை எந்தப் பெண்ணிடம் இருக்கிறது என்று தேடிச் சென்று கண்ணகியை அடைந்தன. என்றைக்கும் எந்தச் சூழ்நிலையிலும் பண்பு நலன்களைக் கண்ணகி கைநெகிழ விடாதவள் என்பதனால், நற்குணங்கள் அவளைத் தேடிச் சென்றடைந்ததாக இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார்.

சோர்வுற்று, அதிர்ச்சியுற்று, கைகேயியிடம் உயிர்ப்பிச்சை கேட்டு நின்ற தசரதன் வாயிலாகப் பெண்மைக்குரிய நெறி முறையைத் தெரிவிக்கிறான் கம்பன். பெருமையிலிருந்து விலகாத நாணம், மடம், அச்சம் என்னும் குணங்களை அணிகலன்களாக நினைத்துப் பேணி நிற்பவரே பெண்கள் ஆவர். நாணத்தின் சிறப்பை உணராமல், பெண்மை நலத்தைக் கைநெகிழ்ந்தவர் பெண்கள் அல்லர். அவர்கள் பெண் வடிவத்தில் இருக்கும் ஆண்களே ஆவர்.

'ஏண்பால் ஓவா நாண், மடம், அச்சம், இவையே தம்
பூண்பால் ஆகக் காண்பவர் நல்லார்; புகழ் பேணி
நாண்பால் ஓரா நங்கையர் தம்பால் நணுகாரே
ஆண்பாலாரே, பெண்பால் ஆரோடு அடைவு அம்மா'?

(கைகேயி சூழ்வினைப் படலம், அயோத்யா காண்டம்)

ஆணவம் என்ற பெயராலும், புகழ் என்ற போதையிலும் பெண்மையின் நளினம் சிதைக்கப்படுமானால், மென்மைக் குணத்தினால் மகளிர் பெற்றுள்ள மேன்மைப் பண்புகள் நாளடைவில் அழிந்து போகும், என்ற கவலையும் கம்பனின் வாசகத்தில் தொனிக்கிறது.

கைகேயி 'கானகம் செல்' என இராமபிரானுக்குக் கட்டளையிட்ட பின்னர், தாய் உரையை சிரமேற்கொண்டு, சுற்றிய மரவுரியுடன், கான் ஏகத் தயாராக இருந்த இராமனைக் கண்டு அயோத்தி மகளிர் அரற்றினர். அழுது அழுது அவர்களின் கண்களில் கண்ணீரேவற்றிப் போய்விட்டது. மூத்த மகனாய்ப் பிறந்தும், உலகம் முழுவதையும் ஆள்வதற்குத் தகுதி இருந்தும் அவ்வுரிமையைத் துறந்து புலிகள் வாழுகின்ற கானகத்திற்குச் செல்வதா? சுமத்திரை புதல்வனான இலக்குவனும் காடேகும் நிலை வந்ததே. இத்தகைய கொடுமையினை இராமனுக்குச் செய்வதற்குக் கொஞ்சமும் கூசாத கல்லைக் காட்டிலும் வலிமை உடைய நெஞ்சங்களைக் கோடரியால் பிளந்தாலும் தகும்' என்று மக்கள் புலம்பித் தவித்தனர். அங்ஙனம் அழுது அரற்றும் போது இத்தகைய கொடுமைகளைக் காண்பதற்காகவா நாம் கண்ணோடு பிறந்தோம் என்று துக்கித்தனர்.

பெண்ணே கொடுமை புரிவதா?

நன்மையினையே நாடுகின்ற பெண்மை கொடுமை செய்கின்ற நிலைக்கு வரக் கூடாது. கூற்றுவன் என்ற பெயர் மட்டும் தான் கைகேயிக்கு இல்லை. ஆனால் கூற்றுவனை விடவும் கொடிய மனம் படைத்தவள். உயிர்களை வாங்கும் கூற்றுவன் தன் செயலுக்கு வருந்துவதில்லை. அதுபோல கணவன் உயிர் போனாலும் கவலைப்படாதவளான கைகேயியைக் கம்பன் ' இரும்பினால் இயன்ற நெஞ்சின் கொன்று உழல கூற்றம் என்னும் பெயர் இன்றிக் கொடுமை பூண்டாள்' என்கிறான். மென்மையான, மலர்போன்ற மனம் படைத்தவளாக இருக்க வேண்டிய பெண், இரும்பு போன்ற மனமுடையவளாக மாறினால் என் செய்ய இயலும். உயிரிழப்பைப் பற்றிக் கூடக் கவலைப்படாத, கூற்றுவனைக் காட்டினாலும்

கொடுமையானவளாக ஒரு பெண் நடந்து கொள்ள இயலுமா? என்று எண்ணிப் பார்க்கக் கூடத் தயங்கினர் அயோத்தி மக்கள்.

நல்ல செயல்கள் நடைபெறும் போது, அவற்றைக் காணக் கண்கள் என்ன தவம் செய்தனவோ என்கிறோம். இறைவனின் எழிலார் திருக்கோலத்தைக் காண நாலாயிரம் கண் இருந்தாலும் போதாது என்கின்றனர் அடியவர்கள். இராமனது பேரழகைக் காண சீதைக்கு ஆயிரம் கண் வேண்டும் என்றும் சீதையின் அழகைக் காண இராமபிரானுக்கு ஒவ்வொரு முறையும் ஆயிரம் ஆயிரம் கண் வேண்டும் என்றும் கம்பன், குறிப்பிடும் அழகை எத்தனை முறை கற்றாலும் தெவிட்டாது.

'நம்பியைக் காண நங்கைக்கு ஆயிரம் நயனம் வேண்டும்;
கொம்பினைக் காணுந் தோறும், குரிசிற்கும் அன்னதே ஆல்;
தம்பியைக் காண்மின்! என்பார் தவமுடைத்து உலகம்' என்பார்
'இம்பர் இந்நகரில் தந்த முனிவனை இறைஞ்சும்' என்பார்

(கார் முகப்படலம், பாலகாண்டம்)

கண்ணுக்கு விருந்தான காட்சிகளைப் பார்க்கும் போது கண் செய்த தவம் என்று மகிழும் மக்கள். காண விரும்பாத கொடுமைகளைக் கண்களால் காண நேரும் போது தங்கள் கண்கள் இத்தகைய காட்சிகளைப் பார்க்க என்ன பாவம் புரிந்ததோ என்று ஏங்கி நிற்கின்றனர். நல்லன ஆற்ற வேண்டிய பெண்மை கொடிய செயல்களைக் கட்டவிழ்த்து விடுகின்ற சூழ்நிலை உருவாகுமானால், அப்பேர்ப்பட்ட நாட்டில் கண்களோடு பிறத்தலும் இழிவானதே ஆகும். ஒரு பெண் கொடுவினை புரிவதைப் பார்த்துக் கொண்டிருக்கும் கண்கள் எதற்கு? அத்தகைய நாட்டில் மக்கள் கண்கள் இல்லாதவர்களாக இருப்பதே நல்லது என்கிறான் கம்பன்.

'மண்கொடு வரும்' என, வழி இருந்தது, யாம்,
எண்கொடு சுடர் வனத்து எய்தல் காணவோ?
'பெண் கொடுவினை செயப்பெற்ற நாட்டினில்
கண்கொடு பிறத்தலும் கடை' என்றார் சிலர்

(நகர் நீங்கு படலம், அயோத்யா காண்டம்)

பெண் எந்த விதத்திலும் கொடுமதி உடையவளாக மாறிவிடக்கூடாது. அவ்வாறு மாறிவிட நேர்ந்தால் இந்த உலகமே அதனை ஏற்றுக் கொள்ளாது என உலகிற்கு உரைக்கிறான் கம்பன்.

பெற்ற மகனான பரதனின் பழிப்பிற்கும், இலக்குவனின் கோபத்திற்கும், வசிட்டனின் பழிப்பிற்கும், தசரதச் சக்கரவர்த்தியின் வெறுப்பிற்கும் ஆளான கைகேயி, அயோத்தி மக்களின் கோபத்திற்கும் வெறுப்பிற்கும் ஆளாகின்ற அளவிற்கு நடந்து கொண்ட நிலை இவள் ஒரு பெண்ணா அல்லது பிசாசோ என்று மக்கள் எண்ணமிடுகின்ற நிலைக்கு அவளைத் தள்ளியது. மனத்தால் நினைந்து செய்த கொடுமையால், ஆழ்ந்த பேர் அன்புடையவள் 'மாகயத்தி' என்ற நிலைக்குத் தள்ளப்பட்டாள். அன்பின் ஊற்றுக்களாய் இருக்க வேண்டிய பெண்கள் அராஜகம் புரிந்தால் அவனி தாங்காது என்கிறான் கம்பன்.

9. அறம் என்னும் அரண்

அறம் என்ற அழகு தமிழ்ச் சொல்லை அதன் பொருள் கொஞ்சமும் மாறாமல், உலகின் வேறு எந்த மொழியிலும் மொழி பெயர்க்க இயலாது. "Virtue' என்றும் Noble Qualities என்றும் ஆங்கிலத்தில் பயன்படுத்தப்படும் மொழிபெயர்ப்புச் சொற்களும், 'தர்மம்' எனச் சொல்லப்படும் வடமொழிச் சொல்லும் கூட அறம் என்ற சொல்லின் முழுமையான பொருளை உள்ளடக்கி உள்ளதா? என்பது கேள்விக்குறி. அறம் என்பது மனத்துக்கண் மாசிலனாதல் என்றும், அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் இவற்றை விட்டொழித்தல் அறம் என்றும் திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்.

அறத்தைப் போற்றி வாழும் மனிதனுக்கு அறம் அவ்வாழ்நாள் முழுதும் துணை நிற்கும். உத்தமப் பெரியோர்கள் அறவழி நின்று சிறந்ததனால் தான், அவர்கள் மறைவிற்குப் பின்னரும் அவர் தம் உன்னத வாழ்க்கை நமக்குப் பாடம் புகட்டிக் கொண்டிருக்கிறது. எனவே தான் உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு என்றனர்.

தீயோருடன் சேர்ந்தவனும் தீயனே :

அறத்தின் பல்வேறு அங்கங்களைக் காப்பியத்தின் பல பகுதிகளில் கம்பன் நமக்குத் தெளிவு படுத்துகிறான். அரசியல் அறம், சமுதாய அறம், தனி மனித அறம் என வகை வகையாகவும், தொகை தொகையாகவும் கம்பன் பேசும் திறத்தில் ஆழமும் அழுத்தமும் நிறைந்திருப்பதைக் காணலாம். வசிட்ட முனிவன் அரசியல் அறத்தினை இராமனுக்கு எடுத்துரைத்தான். சந்தர்ப்பம் நேர்ந்த போது, அரசியல் அறத்தை சுக்ரீவனுக்கு எடுத்துரைத்தான் இராமன். வீடணனும், கும்ப கர்ணனும் சொல்ல வேண்டிய நேரத்தில் இராவணனுக்கு அறம் உரைத்தனர். ஆண்களெல்லாம் தெரிந்து வைத்திருந்த அறத்தின் கூறுகளை, பெண்களும் உணர்ந்தும் தெரிந்தும் வைத்திருந்தனர் என்பது தான் சிறப்பு. அறத்தின் மேன்மை மிக்க அம்சங்களை சீதாபிராட்டி, வஞ்சகத்தின் வடிவமாய் நின்ற இராவணனிடம் அச்சமின்றி எடுத்துரைக்கும் பான்மையினைப் பார்க்கும் போது, சீதாபிராட்டிக்கு அறத்தின் மேல் இருந்த அழுத்தமான நம்பிக்கை வெளிப்படுகிறது.

சீதை கேட்ட மானைப் பற்றித் தர, இராமன் சென்ற பின்னால், சீதை இலக்குவனையும் இருந்த இடம் விட்டு நீங்கிச் செல்லப் பணித்த பின்னர், சமயம் பார்த்து தவக்கோலத்தில் இருந்த இராவணன் தன் வஞ்சகத்திட்டத்தை நிறைவேற்ற வெளிப்பட்டான். முனிவன் எனக்கருதி சீதை முறைப்படி ஆசனம் அளித்தாள். தான் ஜனகன் மாமகள் என்பதனையும், காகுத்தன் மனைவி என்பதனையும் அமைதியாகத் தெரிவித்தாள், முதிர்ந்த முதுமைப் பருவத்தில் காட்டு வழியில் நடந்து வந்து, வருந்தியமைக்கு வருத்தம் தெரிவித்து தவக்கோலத்தில் இருந்த இராவணனை 'எங்கிருந்து

வருகிறீர்' எனக் கேட்டாள். அதற்கு விடை இறுத்தவன் 'இராவணன் என்ற மன்னன் இலங்காபுரியில் இருக்கிறான். அவன் தேவாதி தேவர்களின் தலைவன்; இந்திரனுக்கும் இந்திரன்; எழுதல் ஆகாச் சுந்தரன்; பிரம்மாவின் குலத்தில் வந்தவன்; வேதம் உறைகின்ற நாவன்; 'அனைத்துலகையும் ஆள்பவன்; அந்த சிவபெருமான் உறையும் மலையையே பெயர்த்தெடுக்கும் ஆற்றல் உடையவன்; அத்தகைய இராவணனின் இலங்காபுரியில் நீண்ட நாள் தங்கி இருந்தேன்' எனக் குறிப்பிட்டான். அதனைக் கேட்ட சீதை 'அத்தகைய தீவினை மிகுந்த அரக்கன் நகரில் எவ்வாறு தங்க இயலும்! காட்டிலே வாழுகின்ற தவமுடைய முனிவர்களின் அருகே வாழவில்லை. நீர் வளம் நிறைந்த சிறந்த நாடுகளில் வாழ்கின்ற, சான்றோருக்கு அருகாமையில் வசிக்க வேண்டும் என்று எண்ணமிடவுமில்லை. மாறாக தரும நெறியை கொஞ்சமும் எண்ணிப் பார்க்காத அரக்கருடன் தங்குதல் ஆகுமா?' என வினவ, அதற்கு மாறுவேடத்தில் இருந்த இராவணன் 'அரக்கர்கள் தேவர்களைப் போல தீயவர்கள் அல்லர்' என்று பதிலுரைத்தான். அதனைச் செவிமடுத்த சீதை தெள்ளத் தெளிவாக ஒரு உன்னத நெறியை எடுத்துரைத்தாள். தீயவர்களைச் சேர்ந்து வாழும் எவரும் தூயவராய் இருக்கவே இயலாது. தீயவரைச் சார்ந்து இருந்தாலும், நான் தூய்மையாகவே இருப்பேன் என்று சொல்வது கழிவுநீர் குட்டையில் விழுந்த தண்ணீர், 'நான் சுத்தமாகவே இருக்கிறேன்' என்று சொல்வதற்கு ஒப்பாகும். எனவே, தான் தீயவர்களிடமிருந்து விலகியே இருத்தல் வேண்டும் என்று பெரியவர்கள் அறுவுறுத்தினார்கள். 'தீயாரைக் காண்பதும் தீதே' என்றனர். தீயவனைச்சேர்ந்தவனும் தீயவனே, நல்ல நெறிகளைக் கடைபிடித்து வாழும் அறவோர், ஒரு நாளும் தீயவர்களுடன் இணக்கம் வைத்துக் கொள்ளமாட்டார்கள்.

'சேயிழை அன்ன சொல்லத்' தீயவர்ச் சேர்தல் செய்தார்
தூயவர் அல்லர், சொல்லின், தொல் நெறி தொடர்ந்தோர் என்றாள்'

(இராவணன் சூழ்ச்சிப் படலம், ஆரண்ய காண்டம்)

எனவே அரக்கர் கூட்டத்தை விரைந்து இராமபிரான் அழிக்க இருக்கிறார் என்றாள் சீதை. அதனைக் கேட்ட இராவணன் 'எளியரான மனிதர் வலியரான அரக்கரைக் கொல்வர் என்று நீ சொல்வதைக் கேட்டால், யானைக் கூட்டம் முழுவதையும் ஒரு சிறு முயல் கொன்றுவிடும் என்று சொல்வதைப் போல் உள்ளது; வளைந்த நகங்களை உடைய சிங்கத்தை ஒரு மான் குட்டி கொன்றுவிடும் என்று சொல்வதைப் போல் உள்ளது' என்றான். அதற்கு சீதை 'நீங்கள் சொன்ன ஆண் சிங்கம் தான் இராமன்; மான் கூட்டம் தான் அரக்கர் கூட்டம்; அந்த அரக்கர் கூட்டம் அழிந்து படுவதையும், தேவாதி தேவர்கள் உய்வு பெறுவதையும் விரைவில் காண்பீர்கள்' என்று சொல்லி 'அழியாத தருமத்தை பாவம் வென்றதாக உலகில் வரலாறு இல்லை' என்று அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிட்டாள். எவ்வளவு துணை வலியைச் சேர்த்துக் கொண்டு களமிறங்கினாலும், பாவம் தோற்றுத்தான் போகும். அறத்தின் வலிமைக்கு முன்னால் பாவம் நிற்க இயலாது என்ற உலகிற்கே பொருந்தும் உயர் அறத்தை சீதை பேசினாள்.

'வாள் அரி வள்ளல்; சொன்ன மான் கணம் நிருதர் ஆனார்;
கேளொடு மடியுமாறும், வானவர் கிளருமாறும்,
நாளையே காண்டிர் அன்றே; நவை இலிர், உணர்கிலீரோ?
மீள அருந்தருமம் தன்னை வெல்லுமோ பாவம்? என்றாள்

(இராவணன் சூழ்ச்சிப் படலம், ஆரண்ய காண்டம்)

ஒழுக்கமா? உயிரா?

இராவணன் சீதையை நோக்கி ' என்னையா இராமன் வெல்வான் என்றாய்? ' என்னை நீ ஏற்றுக் கொள்வதாக இருந்தால் தேவமகளிர் எல்லாம் உன் ஏவல் கேட்க, பதினான்கு உலகங்களையும் ஆட்சிசெய்கின்ற எனது செல்வச் செழிப்பில் நீ மகிழ்ந்திருக்கலாம்' என்றான். 'முனிவர்கள் இறைவனுக்காக வழங்கும் அவி உணவை, ஒரு நாய் விரும்பியது போலல்லவா இருக்கிறது உன் பேச்சு. உத்தமப் பெண் ஒருத்திக்கு உயிரா! ஒழுக்கமா

என்ற போராட்டம் வருமானால் அந்தப் பெண் உயிரை விட்டாகிலும், ஒழுக்கத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்று தான் முடிவு செய்வாள், எப்படியும் ஒழுக்கம் தவறி வாழலாம் என்பவனுக்கு வேண்டுமானால் உயிர் பெரிதாக இருக்கலாம். உயிரைவிட ஒழுக்கம் உன்னதமானது என எண்ணுவோர் தங்கள் ஒழுக்கம் பாழ்பட்டுப் போவதால், அகில உலக செல்வமே வந்து சேர்வதாக இருந்தாலும் அதனை நஞ்செனு விலக்கித் தள்ளுவார். ஒரு புல்லின் நுனியில் படர்ந்துள்ள நீர்த்துளி எவ்வளவு நேரம் நிற்கும். அதைப் போல நிலையற்றது தான் வாழ்வும் உயிரும். அத்தகைய உயிரைக் காத்துக் கொள்வதற்காக ஒருவர் ஒழுக்கத்தைக் கைவிட முடியுமா? என்கிறாள் சீதாப்பிராட்டி.

'புல் நுனை நீரின் நொய்தாப் போதலே புரிந்து நின்ற
என் உயிர் இழத்தல் அஞ்சி இற்பிறப்பு அழிதல் உண்டோ?
மின் உயிர்த்து உருமின் சீறும் வெங்கணை விரவா முன்னம்
உன் உயிர்க்கு உறுதி நோக்கி ஒளித்தியால் ஓடி என்றாள்'

(இராவணன் சூழ்ச்சிப் படலம், ஆரண்ய காண்டம்)

கயமைக்குப் பெயர் வீரமா?

'மாயையினால் பொய் மானை உருவாக்கினாய்; அதனால் என் கணவனை இடம் பெயரச் செய்தாய்; யாரும் இல்லாமல் தனிமையில் நான் இருக்கும் போது என்னைக் கவர்ந்தாய்; உனக்குப் போர் செய்யும் திறம் இருந்தால், நீ ஒரு சுத்த வீரனாக நடந்து கொண்டிருப்பாய். மாறாக வஞ்சனையைக் கட்டவிழ்த்து விட்டிருக்க மாட்டாய்' எனச் சீதை சொல்ல ' நானா? மனிதர்களுடன் போரிடுவதா? நெற்றிக் கண் கொண்ட சிவபெருமானுடன் போரிட்ட நான், கயிலையைப் பெயர்த்த தோளுடைய நான், மானுடரோடு போரிடுவதா! அது என் தகுதிக்கு ஏற்றதா? பழியல்லவா' என்று இராவணன் தற்பெருமைத் தம்பட்டம் அடித்தான். அவனது பதிலில் தொனித்த அலட்சியத்தைக் கேட்ட சீதை 'வாளெடுத்து போர் செய்வது பழி என்கிறாயே! கற்புள்ள பெண்களை வஞ்சிப்பது

உனக்குப் பழியாகத் தோன்றவில்லையா?'என்கிறாள். எத்தனை வீர தீர சாகசங்களைப் புரியக் கூடியவனாக இருந்தாலும், பழிக்கும் பாவத்திற்கும், பெருமைக்கும் வேறுபாடு தெரியாமல், நெஞ்சின் ஈரத்தை வற்றச் செய்து விட்டு, குற்றத்திற்கு மேல் குற்றம் செய்து கொண்டிருந்தால் நிச்சயம் உலகறிய ஒருநாள் வீழ்ந்தே தீருவான். அன்று மறம் அழிந்ததென நாடும், நல்லோரும் மகிழ் வெய்துவர். பெண்ணை வஞ்சிக்கும் கயமைத்தனம் உடையவனின் வீரம் ஒரு வீரமா? என்கிறாள் பிராட்டி.

'பாவையும் அதனைக் கேளா; தம் குலப் பகைஞர் தம்பால்
போவது குற்றம்! வாளின் பொருவது நாணம் போலாம்!
ஆவது, கற்பினாரை வஞ்சிக்கும் ஆற்றலே ஆம்!
ஏவம் என், பழிதான் என்னே, இரக்கம் இல் அரக்கர்க்கு? என்றாள்'

(இராவணன் சூழ்ச்சிப் படலம், ஆரண்ய காண்டம்)

அறநெறி தவறியவன் இறந்தவனே:

அசோக வனத்தில் சீதையைச் சிறை வைத்த பின், இராவணன் அவளைச் சந்தித்து, அவளிடம் இரந்தும், கெஞ்சியும், சினந்தும் தன் எண்ணம் நிறைவேறி விடாதா என முயற்சிக்கிறான். மூன்று உலகங்களையும் அடிமையாக்கி வெற்றி கண்டவன், சீதையின் அடியில் விழுந்து, தன்னை அருளோடு ஏற்றுக் கொள்க எனக் கெஞ்சும் போது, கொஞ்சமும் அஞ்சாமல் எரி உமிழும் கண்களோடும், கொதிக்கும் மனத்தோடும் இராவணனைக் கடுஞ்சொற்களால் சாடலானாள். 'கயிலை மலையைப் பெயர்த்தெடுத்தேன் திசையானைகளை எல்லாம் வென்றேன் என வீரம் பேசும் நீ, வில்லேந்திய இலக்குவன் என்னைக் காத்து நின்றபோதல்லவா தலை நிமிர்ந்து வந்திருக்க வேண்டும். அங்ஙனமின்றி ஒளிந்தும் மறைந்தும் கபட நாடகமாடி, பெண்ணைக் கவர்ந்து சென்ற அவமானம் போதாதென்று, பெண்ணின் காலில் விழவும் தயக்கம் காட்டாமலிருக்கிறாயே. என்னைக் கவர்ந்து வந்த அன்றே சடாயு என்ற பறவையிடம் தோற்றாய். சிவபெருமான்

அளித்த சந்திரகாசம் என்ற வாள் மட்டும் உன்னிடம் இல்லாதிருந்தால் அன்றே சடாயுவை நீ வென்றிருக்க இயலாது. நீ தவமிருந்து வரமாய்ப் பெற்றுள்ள ஆயுள், செல்வம், வீரம், அனைத்தும் இராமனது அம்பினால் விரைவில் சிதைந்து அழியும். உன் உயிரைப் போக்கிய பிறகும், இராமனின் சீற்றம் தணியாது. உன் இலங்கையும், அந்நாட்டைச் சூழ்ந்த கடலும், உன் இனத்தவரான அரக்கர் கூட்டமும் இராமனின் சீற்றத்திற்கு இரையாகும். எல்லா உலகத்தாரும் உன் ஆணைக்கு அஞ்சி நடக்கின்றனர் எனப் பெருமை கொள்கிறாயே. இந்த நிலை உன் முந்தைய தவத்தால் விளைந்ததா? இல்லை நீ கட்டவிழ்த்து விடும் பாவத்தால் விளைந்ததா? எத்தனையோ அசுரர்களும், அரக்கர்களும், நன்னெறியை விட்டு விலகி பாவம் புரிந்த வரலாறு பூமியில் உண்டு. ஆனால் அவர்கள் பிறன்மனையோடு சேர்ந்து மகிழ்ந்து வாழ்ந்ததாகச் சான்று இல்லை. அறத்தைத் துணிந்து கொல்லும் அழிவுப்பாதையினை நீ நாடுவதனால், உன் ஒப்பற்ற செல்வத்தையும் உன் உற்றாரையும் இழக்கப்போகிறாய். யார் நல்லறம் உரைத்தாலும் அவ்வறம் உன் செவிகளில் விழ மறுக்கிறது. 'தக்கது இது தகாதது இது' என இடித்தும், எடுத்தும் சொல்வார் யாருமில்லாமல் செருக்குற்று நீ தருக்கித் திரிகிறாய். மக்களைக் கடித்துக் கொல்லும் நாகம் கூட மந்திரத்திற்குக் கட்டுப்பட்டு விடும். ஆனால் நீயோ எதற்கும் கட்டுப்படாதவன்' என்றாள்.

'கடிக்கும் வல் அரவும் கேட்கும், மந்திரம்; களிக்கின்றோயை,
அடுக்கும், ஈது அடாது, என்று ஆன்ற ஏதுவோடு அறிவு காட்டி,
இடிக்குநர் இல்லை; உள்ளார், எண்ணியது எண்ணி, உன்னை
முடிக்குநர், என்றபோது, முடிவு அன்றி முடிவது உண்டோ?

(காட்சிப் படலம், சுந்தர காண்டம்)

ஒருவன் வீரத்திலிருந்தும் மாறாதவனாக இருந்தாலும், மற்றவர்களிடம் தோற்றுப் போகாமல், எப்பொழுதும் வெற்றி மேல் வெற்றியைக் குவிக்கும் வீரனாக இருந்தாலும், அவன் மக்கட் பண்பில்லாதவனாக இருந்தால் அவன் மனிதனே அல்லன்.

இதனைத் தான் திருவள்ளுவர் குறிப்பிடும் போது அரம் போல் கூர்மையான அறிவுத் திறம் படைத்தவர்களும், மக்கட் பண்பில்லாதவர்களாக இருந்தால் அவர்கள் மனிதர்கள் அல்லர் மரங்களே ஆவர் என்கிறார். எத்தனை ஆற்றல் உடையவனாக இருந்தாலும், அறநெறி தவறி வாழ்பவனாக அவன் இருந்தால் அவன் வாழ்ந்தவனாகவே கருதப்பட மாட்டான். வாழ்பவர்கள் வரிசையிலும் வைக்கப்படமாட்டான். எனவே சீதா பிராட்டி இராவணனிடம் சொன்னாள் 'நீ பெற்ற வெற்றிகளும் வீர பராக்கிரமமும் உன்னை உயர்த்தி விடாது; அறநெறி சார்ந்து மக்கட் பண்புடன் வாழ்பவனே வாழ்பவன் ஆவான். அங்ஙனமின்றி அறத்தைச் சிதைத்து மக்கட்பண்பைக் கொன்று வாழ்பவன் இறந்தவனே அல்லாது வாழ்ந்தவன் ஆகான்'

'மறம் திறம்பாத தோலா வலியினர் எனினும், மாண்டார்,
அறம் திறம்பினரும், மக்கட்கு அருள் திறம்பினரும் அன்றே?
பிறந்து இறந்து உழலும் பாசப் பிணக்குடைப் பிணியின் தீர்ந்தார்
துறந்து அரும் பகைகள் மூன்றும் துடைத்தவர், பிறர்யார்? சொல்லாய்!

(காட்சிப் படலம், சுந்தர காண்டம்)

தீயவன் உரைத்த அறம் :

அறம் உணர்ந்த சான்றோர், அறவழியில் நிற்கும் பெரியோர், அறம் உணர்ந்த மகளிர் உரிய காலத்தில் அறம் உரைத்து, நிகழப் போகும் தீமையையும் அதன் விளைவுகளையும் தடுத்து நிறுத்த முயற்சி செய்வர். மாறாக அறநெறி பிறழ்ந்து, நல்லனவற்றை நாடும் பழக்கத்தைத் துறந்து, பொய்மையுடன் உறவு பூண்டுள்ள ஒருவன் அறத்தைச் சொல்வது எங்ஙனம்? 'பிசாசு வேதம் ஓதியது போல்' என்பர் ஆங்கிலத்தில். அறஉணர்வற்றுப் போய், முனிவன் விசுவாமித்திரன் இயற்றிய யாகத்தைத், தன் தாய் தாடகையின் தூண்டுதலால், தன் சகோதரன் சுபாகுவின் உதவியோடு, கெடுத்து அழிக்க முற்பட்டவன் மாரீசன். இராம பாணத்தினால் துரத்தப்பட்டு கடலில் அமிழ்த்தப்பட்டவன். தாடகையும் சுபாகுவும் மாண்டு

போன பின்னர், இராம பாணத்தினால் ஒரு நாள் தனக்கும் அழிவு வந்து சேரும் என எண்ணி அதனின்றும் தப்பிக்க, தவக் கோலத்தில் தஞ்சம் புகுந்தவன், எனவே எங்கே தனக்கு மீண்டும் இராமபிரானால் ஆபத்து வந்து விடுமோ என்ற அச்சத்தில், இராமபிரானின் பத்தினியான சீதையைக் கவர நினைத்த இராவணனுக்கு, மாரீசன் அறநெறி உரைத்தானேயல்லாமல், அறநெறியின் மேல் உள்ள நாட்டத்தினால் அல்ல. எனவே உரைக்கப்பட்டது அறம் என்றாலும், சொன்னவன் மாரீசன் என்னும் போது அதன் பின்புலத்தில் மாரீசனின் சுயநலம் இழையோடுகிறது.

சூர்ப்பநகை வர்ணித்த சீதையின் அழகை எல்லாம் கேட்டு, எப்படியாகிலும் வஞ்சனை புரிந்தாகிலும் சீதையைக் கவர்வது என்று முடிவு செய்த இராவணன், மாரீசனைத் தேடிச் சென்றான். ' 'மனிதர்கள் வலிமை உடையவர்களாகி விட்டார்கள். சூர்ப்பநகையை மானபங்கம் செய்து, அதற்காகப் போரிடச் சென்ற கரதூடணர்களையும் அழித்தார்கள். இத்தகைய துன்பங்கள் எல்லாம் நேர்ந்த பிறகும் அவர்களோடு போரிட நான் உடன்படவில்லை. ஏனெனில், அவர்கள் என் வலிமைக்குச் சமானமானவர்கள் அல்லர். எனவே அவர்களுடன் வாழ்கின்ற பவளம் போன்ற வாயினை உடைய வஞ்சிக்கொடிபோன்ற பெண்ணை உன் துணையுடன் கவர்ந்து கொண்டு வந்து உன் மூலம் இப்பழியைத் தீர்த்துக் கொள்ள விரும்புகிறேன்' என்றான். அதனைக் கேட்ட மாரீசன் இராவணனுக்கு அறிவுரை சொல்லத் தொடங்கினான்.

'தவம் செய்து பெற்ற செல்வங்களை எல்லாம் அவத்தினால் அழிக்க வேண்டுமா? என்றான். தம்மிடம் அன்பு கொண்டோரின் நாட்டைக் கவர்ந்து கொள்ளுதல், அறநெறிக்கு முற்றிலும் முரணாக வரி வசூலித்தல், மற்றவருக்கு உரிமை உடைய மனைவியை வலிமையால் கவர்ந்து கொள்ளுதல் ஆகிய தவறுகளைச் செய்பவர்களை அறமே அழித்து விடும். இத்தகைய தீமைகளைக் கட்டவிழ்த்து விடுவோரில் அழிந்து போகாமல் தப்பிப் பிழைத்தவர்யாரும் இல்லை.

'நாரம் கொண்டார் நாடு கவர்ந்தார், நடை அல்லா
வாரம் கொண்டார், மற்று ஒருவற்காய் மனை வாழும்
தாரம் கொண்டார், என்ற இவர் தம்மைத் தருமம் தான்
ஈரும் கண்டாய்; கண்டகர் உய்ந்தார் எவர்? ஐயா'!

(மாரீசன் வதைப் படலம், ஆரண்ய காண்டம்)

'பிறர் மனையை விரும்பியவர்கள் அழிவைத் தான் சந்திப்பர். விண்ணுலக நாயகன் தேவேந்திரன் அகல்யையின் அழகிலே ஆசைகொண்டு, அதனால் கொடுமையான சாபத்தைப் பெறவில்லையா? அந்த இந்திரன் மட்டுமல்ல, அவனைப் போலவே பிறன் மனைவியை விரும்பிய பலர் அழிந்து பட்டனர். அத்தகைய தவறினை இராவணனாகிய நீ செய்ய முற்பட்டாய்! அதனால் பாவமும் பழியும் தான் உண்டாகுமே அல்லாமல் இன்பமும் நன்மையும் உண்டாகாது. தாங்கள் செய்த தவற்றினால் அழிந்தவர்கள் அழிந்துபட்டுப் போனார்கள். ஆனால் நீயாகிலும் அழிவைத்தரும் கொடுந்தொழிலை இனிச் செய்தல் வேண்டாம். இந்த உலகத்தை வரிசை வரிசையாய் எத்தனையோ மன்னர்கள் ஆண்டார்கள். அவர்களில் அறவழி நில்லாத மன்னர்கள் அழிந்து போனார்கள். ஏனெனில் அறம்பிறழ வாழ்பவன் பூமியில் நிலைத்து வாழ்வதுமில்லை. அவன் சந்ததி தழைப்பதுமில்லை' என்று மாரீசன் இராவணனிடம் பேசுகிறான்.

மாண்டார், மாண்டார்; நீ இனி மாள்வார் தொழில் செய்ய
வேண்டா, வேண்டா செய்திடின் உய்வான் விதி உண்டோ?
ஆண்டார் ஆண்டார் எத்தனை என்கேன்? அறம் நோனார்!
ஈண்டார்; ஈண்டு ஆர் நின்றவர்? எல்லாம் இலர் அன்றோ'?

(மாரீசன் வதைப்படலம், ஆரண்ய காண்டம்)

மாரீசனது அறிவுரையைக் கேட்ட இராவணன் வெகுண்டெழுந்தான். 'கயிலையங்கிரியைத் தன் கையினால் அள்ளி எடுத்த ஆண்மை ஒரு அற்ப மனிதனிடம் தோற்றுப் போகும்

என்கிறாயா'? எனக் கேட்டுக் கொதித்தான். அதனைக் கேட்ட மாரீசன் 'கயிலை மலையைப் பெயர்த்தவன் என்று பெருமை பேசி நிற்கிறாயே, அந்த இராமன் சிவதனுசையே ஒடித்தவன் என்பதனை மறந்து விட்டாயா'? என்றான். ' எனவே சீதையைக் கவர்ந்தால் குலத்தோடு அழிவாய் என்று எண்ணும் போதே என் நெஞ்சம் பதைக்கிறது' என்றான். நீ விஷத்தை அருந்துவேன் என்று பிடிவாதம் செய்கிறாய். விஷத்தை அருந்துபவனுக்கு அருகில் நின்று யாராகிலும் நீ செய்வது சரியானதுதான் என்று சொல்ல முடியுமா' என்றான்.

'உஞ்சு பிழையாய் உறவினோடும்' என உன்னா,
நெஞ்சு பறைபோதும்; அது நீ நினையகில்லாய்;
அஞ்சும் எனது; ஆர் உயிர் அறிந்து அருகு நின்றார்
நஞ்சு நுகர்வாரை, இது நன்று எனலும் நன்றோ'?

(மாரீசன் வதைப்படலம், ஆரண்ய காண்டம்)

அழிவுவரும் என்று தெரிந்தும், தான் பயணிக்கும் பாதை ஆபத்தானது என்று தெரிந்தும், அறத்தைச் சிதைக்கும் முயற்சியில் வீண் பிடிவாதம் செய்பவனைத் திருத்துதல் முடியாது. 'எனவே தன் குலம் சிதைந்தொழிதல் கூடாது' என்பதனைக் கருத்தில் கொண்டாகிலும், ஒருவன் அறத்தைப் பேணுதல் வேண்டும். அறிவுரைக்கும் மாரீசனுக்கு, இராவணன் அழிந்து போதல் கூடாது என்ற எண்ணத்தை விட, தான் அழிந்து போய் விடக் கூடாது என்ற எண்ணமே மேலோங்கி நிற்கிறது. சீதை எடுத்துரைத்த அறநெறியில் அழுத்தமும் உண்மையும், மாரீசன் உரைத்த பான்மையில் அச்சங்கலந்த ஒரு செயற்கைத் தன்மையும் வெளிப்படுகிறது.

10. அன்பிற் சிறந்த தவமில்லை

அன்பை விடச் சிறந்தது யாதென நமக்கு நாமே வினா எழுப்பிக் கொண்டால் அதற்கு விடை 'அன்பை விடச் சிறந்தது

அன்பு தான்' என்பதே ஆகும். 'அன்பிற்கு அடைக்குந் தாழ்' இல்லை என்றும் அன்பின் வழியது உயிர் நிலை என்றும் திருவள்ளுவர் குறிப்பிடுகிறார். அன்புடையவர்கள் தங்கள் என்பையும் பிறருக்குத் தானமாய்த் தரத் தயங்க மாட்டார்கள். அன்பின் தன்மை எப்படிப்பட்டது என்பதனை விவிலியம் குறிப்பிடும்போது ' எத்தனை மொழிகளைப் பேசினாலும், அன்பு இல்லாதவன், வெற்று ஓசை எழுப்புகிற கைத்தாளம் போல இருப்பான். சகல இரகசியங்களையும் அறிந்து, சகல. அறிவையும் பெற்றவனாக இருந்தாலும் அன்பு இல்லாவிட்டால் ஒருவன் ஒன்றுமில்லாதவனே. அன்பு, நீடிய சாந்தமும் தயவுமுள்ளது. அன்புக்குப் பொறாமையில்லை. அன்பு தன்னைப் புகழாது. இறுமாப்பாயிராது. அயோக்கியமானதைச் செய்யாது. தற்பொழிவை நாடாது, சினமடையாது. தீங்கு செய்யாது. அநியாயத்தில் சந்தோஷப்படாமல் சத்தியத்தில் சந்தோஷப்படும். சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும் சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும், அன்பு ஒருக்காலும் ஒழியாது' என்கிறது.

தாயொக்கும் அன்பில் :

அன்பை, அதன் திறத்தை இராமகாதையில் பல இடங்களில் கம்பன் எடுத்துக் காட்டுகிறான். 'ஆழ்ந்த பேரன்பு' என்ற சொற்றொடரைப் பயன்படுத்துகிறான். வீடணனுக்குச் சரணாகதி வழங்கி, சகோதரத்துவத்தின் மகிமையைச் சொல்லும் போது 'எம்முழை அன்பின் வந்த அகனமர் காதல் ஐய' என்று வீடணனை இராமன் விளிக்கிறான். அன்பின் வடிவமாகப் போற்றப்படுபவள் தாய். எனவேதான் அன்பின் வடிவமான இறைவனை நம் அடியவர்கள் தாய் எனப் போற்றினர். 'அப்பன் நீ அம்மை நீ' என்று பாடினார் அப்பர் பெருமான். 'நாயிற் கடையாய் கிடந்த அடியேற்குத் தாயிற் சிறந்த தயாவான தத்துவனே' என்று பாடுகிறார் மாணிக்கவாசகர். தசரதச் சக்கரவர்த்தியின் அருமை பெருமைகளைச் சொல்லிக் கொண்டு வரும்பொழுது தசரதன் தன் குடிமக்களைத், தன் சொந்தக் குழந்தைகளைப் பராமரித்துக் காக்கும் தாய்போல், அன்புடன் காப்பவன் என்று குறிப்பிடுகிறான். அனைவருக்கும்

நல்லனவற்றையே புரிதலால், தசரதன் நன்மை புரிவதில் தவத்தை ஒத்திருப்பான். யாவருக்கும் முற்பட்டு நின்று உயர்ந்த நல்வழியில் உலகைச்செலுத்துவதால், ஒரு நல்ல மகனை ஒத்திருப்பான். துன்பம் தன் குடிகளுக்கு நேருமானால் அதனை மாற்றி இன்பம் விளைவிப்பான். நோய் வந்த இடத்தில் அதனை மாற்றும் தன்மையை உடைய மருந்தினை ஒத்திருப்பான். நுண்ணிய நூற்பொருளை ஆராயும் இடத்தில், அறிவை ஒத்திருப்பான். மண்ணையும் விண்ணையும் தன் கவித் திறத்தால் அளக்கவல்ல பேராற்றல் பெற்ற கம்பனுக்கே, அன்பு என்று சொன்ன மாத்திரத்தில் தாய் தான் நினைவுக்கு வருகிறாள். எனவேதான் அன்பில் தசரதன் தாய் போன்றவன் என்கிறான்.

'தாய் ஒக்கும் அன்பின், தவம் ஒக்கும் நலம் பயப்பின்;
சேய் ஒக்கும் முன் நின்று ஒரு செல்கதி உய்க்கும் நீரால்;
நோய் ஒக்கும் என்னின் மருந்து ஒக்கும்; நுணங்கு கேள்வி
ஆயப் புகுங்கால் அறிவு ஒக்கும் எவர்க்கும் அன்னான்'

(அரசியல் படலம், பால காண்டம்)

அன்பும் தாய்மையும் வேறு வேறல்ல. எனவே தான் அன்பின் வடிவமான குகனைச் சொல்லும்போது 'தாயினும் நல்லான்' என்கிறான்.

அன்பே ஆக்கம் தரும் :

இராமனுக்குப் பட்டஞ் சூடுதல் வேண்டும் என்று முடிவான பின்னர், முடி சூட வேண்டிய இராமனுக்கு வசிட்ட முனிவன் உறுதிப் பொருளை எடுத்துரைக்கிறான். நாடாள வேண்டிய மன்னன் அரியாசனத்தில் அமர்வதற்கு முன்னால், ஞானமும் கல்வியும் அனுபவமும் வாய்க்கப் பெற்ற பெரியோர்களிடம், தான் நடந்து செல்ல வேண்டிய சரியான வழித்தடத்தைப் பற்றிய விபரங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டியது மிகமிக அவசியமான ஒன்றாகும்.

அந்த வகையில் வசிட்ட முனிவன், இராமன் கவனத்தில் கொள்ள வேண்டிய நெறிமுறைகளை எடுத்துரைக்கிறான். எவ்வளவு சிறப்பு மிக்கவனாக மன்னன் இருந்தாலும், அவன் ஒரு நாளும் அருளையும் தெளிந்த நல்லறத்தையும், மனத்தின் செம்மையையும் கைவிடுதல் கூடாது. ஒரு நாட்டிற்குத் தேவையான பொருட்களை ஒரு மன்னன் அறவழியில் தேடுதல் வேண்டும். நன்னெறியில் நின்று, நடுவுநிலையுடன் பொருந்திய, மன உறுதியின் துணையோடு, நடைபெறுகின்ற ஆட்சியே சிறந்த ஆட்சியாகும். அவ்வாறு அரசு செய்தால் அந்த அரசாட்சியும் ஒரு தவமாகும், அதுவும் சாமான்ய தவமல்ல. ஒரு வாளின் முனையில் நின்று செய்கின்ற தவம் எப்படிப்பட்டதோ, அது போன்றது தான் ஐம்பொறிகளால் தோன்றும் தேவையற்ற ஆசைகளை அடக்கி வென்று, நடுநிலை தவறாமல், நன்னெறியை விட்டுக் கொஞ்சமும் விலகாமல், ஒரு மன்னன் நடத்தும் ஆட்சி. அறத்தின் எல்லையைத் தாண்டாமல் அரசாட்சி புரிகின்ற மன்னன், வேள்வி செய்யவும் வேண்டுமோ! இனிய சொல்லும், ஈகைக் குணமும், எதையும் ஆராய்ந்து செயல்படுத்தும் திறமும், அகத்தூய்மையுடன் புறத்தூய்மையும், அரச நீதியை விட்டு விலகாத வைராக்கியமும் உடைய மன்னனுக்குக், கனவிலும் கேடுவராது என்கிற உண்மையினைக் கம்பன் 'ஐயம் இன்றி அறம் கடவாது அருள் மெய்யில் நின்ற பின் வேள்வியும் வேண்டுமோ,' என்ற வரிகளிலும் 'அனைய மன்னற்கு அழிவும் உண்டாம் கொலோ' என்ற வாசகத்திலும் தெளிவுபடுத்துகிறான். இவ்வாறெல்லாம் வசிட்டன் உரைத்த உறுதிப் பொருட்களுக்கெல்லாம், முத்தாய்ப்பாய் அமைந்த உறுதிப் பொருள் தான் அன்பை விடச் சிறந்த தோர் ஆக்கம் இல்லை' என்பது.

கானிடை நின்றும், கனலில் நின்றும், கந்த மூலங்களை உண்டும், ஐம்புலனடக்கி வாழும் முனிவர்களுக்கும், வானில் வாழும் தேவாதி தேவர்களுக்கும் இன்றியமையாதது அன்பு. அன்பினால் அருளும், அருளால் அறமும், அவ்வறத்தால் நற்கதியும் விளைவதால் அன்பே அனைத்திற்கும் மூலமாகும். அன்பைப் போன்றதோர் செல்வம் மூன்று உலகங்களிலும் இல்லை.

'புலனடக்கிய முனிவருக்கும் தேவருக்குமே அன்பு இன்றியமையாதது என்னும் போது மனிதர்களைப் பற்றிச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. மூன்று உலகங்களிலும் உள்ள அனைத்துச் செல்வங்களிலும் அன்பே பிரதானமாகும் என்று வசிட்டன் கூறும் உறுதிப்பொருள் உலகில் வாழும் அனைவருக்கும் உகந்தது. பொன்னும், வைரமும், நவமணிகளும், பூமியும், வீடும், வாகனமும் தான் செல்வம் என எண்ணிக் கொண்டிருப்போருக்கு அன்பை விடச் சிறந்த ஆக்கம் இல்லை என்ற நெறியினைத் தெரிவிக்கிறான் கம்பன்.

என்புதோல் உடையார்க்கும் இலார்க்கும் தம்
வன்பகைப் புலன் மாசு அற மாய்ப்பது என்?
முன்பு பின்பு இன்றி இம்மூஉலகத் தினும்
அன்பின் நல்லது ஓர் ஆக்கம் உண்டாகுமோ.?

(மந்தரை சூழ்ச்சிப்படலம், அயோத்யா காண்டம்)

அன்பிற்கு ஏது எல்லை :

இராமபிரான் காடேகிய செய்தியினைக் கேள்வியுற்ற பரதன் வருந்தித் துடித்துப், படையுடன் கானகம் ஏகி, இராமனைக் கண்டு உண்மையினை எடுத்துரைத்து, இராமபிரானை நாட்டிற்கு அழைத்துச் சென்று விடலாம் என்ற எண்ணத்துடன் கானகம் வந்தான். கூட்டமாகக் கங்கையாற்றின் கரையில் நின்று கொண்டிருந்தவர்களைக் கண்ட குகன், பரதன் தான் படையைத் திரட்டிக் கொண்டு வந்து இராமபிரானுக்குத் தொல்லை விளைக்கப் போகிறான் எனக் கருதி, கோபக் கனல் தெறிக்க வெஞ்சின மொழி பகர்கின்றான். பின்னர் ஓடத்தில் கங்கையின் கரை வந்து சேர்ந்து, அங்கு மரவுரி தரித்த கோலத்தில் கண்களில் நீர் பெருக நின்ற பரதனின் நிலை கண்டு உண்மையினை உணர்ந்து கொள்கிறான். பரதனைக் குகன் தந்தையினும் களிகூரத் தழுவினான். பின்னர் இராமபிரான் தங்கியிருந்த இடத்தைப் பரதனுக்குக் காட்டுகிறான், இராமனையும் சீதாபிராட்டியையும் இரவு பகல் பாராமல் வில்லை

ஊன்றிய கையோடு, விழிமூடாமல் காக்கும் இலக்குவனின் கடமை உணர்வையும் பரதனுக்கு எடுத்துரைக்கிறான். அதனைக் கேட்ட பரதன் உள்ளம் உருகுகிறது. இராமனுக்கு இலக்குவன் பணி செய்வதைப் போல், தனக்கு இராமனுக்குப் பணி செய்யும் ஒரு வாய்ப்பு அமையாது போனதே என்ற ஏக்க உணர்வு தொனிக்கப் பரதன் பேசலுற்றான். நீண்ட வில்லினை ஏந்திய பெரிய கரத்தினை உடைய இராமபிரான், கானகத்தின் கற்களுக்கு இடையே புற்களைப் பரப்பி, அதனையே படுக்கையாகக் கொண்டுள்ளான் என்பதனைக் கேட்டு பரதனது கண்களில் புனல் போல் கண்ணீர் பெருகிற்று. அவன் பார்மிசைப் பதைத்து வீழ்ந்தான். ஆற்றொண்ணாத் துன்பம் மேலோங்க, தன் பொருட்டாக அல்லவா இத்தகைய துன்பமெல்லாம் இராமபிரானுக்கு உண்டாயிற்று என்று அழுது, ‘இத்தகைய துன்பங்களை இராமபிரான் அனுபவிக்க நேர்ந்ததே என்று அறிந்த போதே உலகினை வெறுத்து உயிரை விட்டிருக்க வேண்டும். அங்ஙனமின்றி இன்னும் உயிர் வாழ்ந்து கொண்டுள்ளேனே’எனப் பரதன் புலம்பினான். உண்ண வேண்டிய உணவுகளை எல்லாம் நீத்து, காய்கனி கிழங்குகளை உண்டு, இராமபிரான் கானகத்தில் வசிக்கிறான் என்று தெரிந்த பிறகு உயிரைத் துறந்திருக்க வேண்டும். அப்பொழுதும் உயிர் துறக்கவில்லை. ஆனால் அந்த இலக்குவனோ இராமனிடத்தில் பேரன்பு கொண்டு கானகத்திலும், நிழல் போல் இராமனைத் தொடர்ந்து வந்து, இராமனைக் காத்து, எப்படியும் இராமனுக்கு வரும் இடையூறுகளைப் போக்குவேன் என்று உறுதி பூண்டுள்ளான். ‘நான் துன்பத்திற்கு ஏதுவானேன். ஆனால் இலக்குவனோ துன்பத்தைத் துடைக்க நின்றான்’ எனச் சொல்லி இவ்வாறு இலக்குவன் நடந்து கொள்வதற்குக் காரணமாய் இருப்பது இலக்குவன், இராமன் மேல் கொண்ட அன்பல்லவா? அந்த அன்பிற்கு ஏது எல்லை என்கிறான் பரதன். அன்புடையார் எத்தகைய துன்பம் ஆனாலும், அதனைப் பொருட்படுத்தாமல், தாங்கள் அன்பு பாராட்டுபவர்களின் நிமித்தம் ஏற்றுக் கொள்வர். அந்த அன்பின் ஆழத்தை அளந்து பார்க்க இயலாது. அந்த அன்பு நீளம் அகலம் என்ற அளவுகளுக்குள் அடங்குமா? எல்லையற்றது அன்பு.

'என்பத்தைக் கேட்ட மைந்தன், இராமனுக்கு இளையார் என்று
முன்பு ஒத்த தோற்றத் தேமில், யான் என்றும் முடிவு இலாத
துன்பத்துக்கு ஏது ஆனேன்; அவன், அது துடைக்க நின்றான்;
அன்பத்துக்கு எல்லை உண்டோ? அழகிது என் அடிமை என்றான்'

(கங்கை காண் படலம், அயோத்யா காண்டம்)

எனவே, தன் அன்பு முழுவதையும் இராமபிரானுக்கே சமர்ப்பணம் செய்து விட்டு, தன் சொந்த சுக துக்கங்களைப் பற்றிய சிந்தனையே இல்லாமல் இருந்தான் இலக்குவன். இராமபிரானைச் சுற்றிச் சுற்றி இலக்குவனின் எண்ணம் வட்டமிட்டுக் கொண்டு இருந்ததால் தன்னைப் பற்றியும் எண்ணிப் பார்க்காதவனானான் இலக்குவன். அவன் மழைநீர் கடலில் கலப்பது போல், இராமன் என்ற கருணா சமுத்திரத்தில் கரைந்து ஐக்கியமாகிப் போனவன்.

அன்பே பூசனை :

அனுமன் சீதாபிராட்டி இருக்குமிடத்தைக் கண்டு வருவதற்காக வான்வழி பறந்து செல்கிறான். அவ்வாறு கடல் மீது அவன் செல்லும் போது, கடலுக்குள் இருந்து மைந்நாக மலை வெளிப்படுகிறது. 'அனுமன் விசையோடு தன்னை உந்தித் தள்ளி விடுவான்' எனக் கருதிய மைந்நாக மலை தன்னை உந்துவதற்கு முன் ஒரு சிறு மானுட வேடம் தாங்கி 'எந்தாய் இது கேள்' என அனுமனிடம் சொல்லத் தொடங்கியது. 'என்னை உன் பகைவன் என்று எண்ணி விடாதே; முன் பொருகாலத்தில் வானத்தில் பறந்து திரிந்த மலைகளின் சிறகுகளை வெட்டி வீழ்த்தும் பொருட்டு, தேவேந்திரன் வச்சுராயுதத்தை வீசி எறிந்தான். அப்பொழுது உன் தந்தையான வாயுதேவன் எனக்குக் குறை நேர்ந்து விடாமல் என்னைக் கடலில் வைத்துக் காப்பாற்றினான். நீயோ அந்த வாயு தேவனின் இனியமைந்தன். உன் தந்தை எனக்காற்றிய உதவிக்குக் கைம்மாறு ஒன்றறியேன். எனவே அவன் புத்திரனாகிய உன்னை உபசரிக்க எண்ணங்கொண்டுள்ளேன். என் சிகரத்தில் சற்று இளைப்பாறி, என்னால் உனக்கு வழங்கப்படும் விருந்தை ஏற்றுக்

கொண்டு நீ செல்வதாக இருந்தால், நான் பெரிதும் மகிழ்வேன்' என்று மைந்நாக மலை அனுமனை வேண்டிக் கொண்டது. அவ்வாறு கூறும் போது 'நம் இல்லத்திற்கு ஒருவர் வந்தால் அவரை உண்பிப்பது நம் கடமையல்லவா என்று விருந்தோம்பும் நன்னெறியை மலை எடுத்துரைக்கிறது.

'நல்தாயினும் நல்லன் எனக்கு இவன்' என்று நாடி,
இற்றே, இறை எய்தினை, ஏய்ந்தது கோடி, என்னால்;
பொன்தார் அகல் மார்ப! தம் இல்லுழை வந்தபோதே,
உற்றார் செயல் மற்றும் உண்டோ! என உற்று உரைத்தான்

(கடல் தாவு படலம், சுந்தர காண்டம்)

இவ்வாறு உபசரித்த மைந்நாக மலையின் விருந்தினை ஏற்றுக் கொண்டு, அருந்த இயலாத நிலையில் இருந்தான் அனுமன். பசி நோக்காமல், கண் துஞ்சாமல் கருமமே கண்ணாய், இராமபிரானுக்காக, தான் ஆற்ற வேண்டிய பணியை விரைந்து நிறைவு செய்ய எண்ணங்கொண்டிருந்த அனுமன், தன் இலட்சியம் நிறைவேறினால் அல்லாமல் எதையும் உண்பதில்லை என்று முடிவு செய்து கொண்டு மைந்நாக மலையைப் பார்த்து ' உன் தூய்மையான அன்பை என்மீது பொழிந்த போதே நான் விருந்துண்ட மகிழ்வைப் பெற்று விட்டேன்' என்கிறான். அன்பு மிகுதியும் உடையவர்கள், அந்த அன்பு மிகுதியால் மீண்டும் மீண்டும் அன்பு செய்து, அந்த அன்பு மயமாகவே ஆகி, அத்தகைய அன்பினாலேயே பெருமை பெற்று விடுகிறார்கள். அந்த அன்பு நெகிழ்வானது மட்டுமல்ல. உறுதியானதும் கூட. நெகிழ்வான ஒரு பொருள் உறுதியாக இருக்க இயலுமா என்று ஒரு கேள்விக்கணை எழுப்பினால் அன்பு நெகிழ்வானது. உள்ளத்தில் ஊற்றெடுக்கும் போது அன்புடையோர், உள்ளங்குழைந்து உருகித்தான் போகின்றனர். நெகிழ்வின் வெளிப்பாடாகக் கண்களில் நீர் பனிக்கத் தான் செய்கிறது. ஆர்வலர் புன் கணீர் பூசல் தரும்' என்று இருந்தாலும், அன்பு ஒன்று தான் ஒரே சமயத்தில் நெகிழ்வானதாகவும், உறுதியானதாகவும் இருக்கிறது. நெகிழ்வும் உறுதியும் அன்பின் அம்சங்கள். வாழ்க்கைச் சூழலில்

எத்தனை மாற்றங்கள் ஏற்பட்டாலும் உண்மை அன்பு மாறாது. மாறிக் கொண்டிருப்பதற்குப் பெயர் அன்பல்ல. அன்புடையார் தாம் பாராட்டும் அன்பில் மலையை விட உறுதியாயிருப்பர். இதனை உலக நாடக ஆசிரியர் ஷேக்ஸ்ப்பியர் தன் கவிதையில் குறிப்பிடும் போது

"Love is not Love
Which alters when it alternation finds
Or bends with the remover to remove;
O, no! it is an ever fixed mark
That looks on tempests and is never' Shaken"

என்கிறார்

அன்பு நிலையானது; உறுதியானது; ஆழமானது; அழுத்தமானது; பரிபூரணமானது. அன்பைக் காட்டிலும் சிறந்த ஒன்று உலகில் இல்லை.

நம் உடம்பை வலிமை உடையதாய், உறுதிஉடையதாய்ப் பேணி வருவது எலும்பே ஆகும். அந்த எலும்பு தான் உடம்பில் வலிமையானது. அதுபோலவே உயிரின் குணங்களில் அன்பைக் காட்டிலும் சிறந்தது வேறொன்றுமில்லை. அன்பை விடச் சிறந்த பூசனையும் இல்லை; அன்பை விடச் சிறந்த வழிபாடும் இல்லை.

'முன்பில் சிறந்தார், இடை உள்ளவர், காதல் முற்றப்
பின்பில் சிறந்தார், குணம் நன்று; இது பெற்ற யாக்கைக்கு
என்பின் சிறந்தாயது ஓர் ஊற்றம் உண்டு என்னல் ஆமே?
அன்பில் சிறந்தாயது ஓர் பூசனை யார் கண் உண்டே?'

(கடல் தாவு படலம், சுந்தர காண்டம்)

'எனவே நீ அளித்த விருந்தினை உண்ணவில்லை என்று எண்ண வேண்டாம். என்மேல் நீ காட்டிய அன்பே போதுமானது' என்று உரைக்கிறான் அனுமன்.

இத்தகைய சிறந்த அன்பைத் தான் இராமன் குகனிடம் அனுபவித்தான். தன்னைக் காண வந்த குகனை 'அழைத்து வா' என்று இராமன் பணிக்க, இலக்குவன் குகனை அழைத்து வந்தான். இராமபிரானிடம் அளவு கடந்த அன்புடைய குகன் இராமனை நோக்கி 'தங்களுக்கு உணவாக அமையும் படித் தேனையும் மீனையும், பக்குவப்படுத்திக் கொண்டு வந்துள்ளேன் தங்கள் எண்ணம் யாதோ எனக் கேட்கிறான். அதனைக் கேட்ட இராமன் அன்போடு தரப்படும் எந்த ஒரு பொருளும் தூய்மையானது தான் என்று அறுதியிட்டு உரைக்கிறான். குகனது உள்ளத்தில் இராமன்–பால் அன்பு பிரவகித்தது. அதன் விளைவாகப் பக்தி மேலிட்டது. உள்ளத்து அன்பும், ஊற்றெடுத்த பக்தியும் தான் குகனை இராமபிரானிடத்தில் அழைத்துக் கொண்டு வந்தது. கார் குலாம் நிறத்தானைக் காதலால் காணவந்தவன் வெறுங்கையனாய் வருவதெங்ஙனம்? எனக் கையுறைப் பொருளுடன் வந்தான், கொண்டு வந்த காணிக்கைப் பொருள் இராமபிரான் உண்பதற்குகந்ததா என்று எண்ணிப்பார்க்கும் அளவிற்கு குகனுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. எனினும் இராம பிரான் அதனை உண்டு தான் தீர வேண்டும், என்ற வறட்டுப் பிடிவாதமும் குகனின் தொனியில் இல்லை. எனவே தான் காணிக்கைப் பொருளைக் கொடுத்து விட்டு ' என்கொல் திருஉளம்'? என இங்கிதமாய்க் கேட்டான். கற்றவர்களிடம் கூட அரிதாகவே காணப்படுகிற இங்கிதத்தை குகனிடம் பார்க்கிறோம். அதனைக் கேட்ட இராமன் தன்னைச் சுற்றியிருந்த மூத்தோரை, முனிவரைப் பார்த்து புன்னகை செய்கிறான். அந்த புன்னகைக்குத் தான் எத்தனை பொருள். தபோவனர்கள் கூடியிருக்கும் இடத்திற்குள் நுழையத் தகுதி உடைய காணிக்கைப் பொருளா இது? என இராமன் எண்ணியிருந்தால், அவன் முகத்தில் புன்னகையா தவழ்ந்திருக்கும்? மாறாக புன்னகைத்தான் என்று கம்பன் குறிப்பிடுகிறானே? அதன் பொருள்

என்ன என்றால் கொண்டு வந்த காணிக்கைப் பொருளை வைத்து, குகனின் அன்பை இராமன் தீர்மானிக்கவில்லை. அவன் அன்பை முன்னிறுத்தி, தேனையும் மீனையும் பார்க்கும் போது, அவை இராமபிரானின் கண்களில் அமுதம் போல் காட்சியளிக்கிறது. அப்பொழுது இராமன் குகனிடம் 'அன்போடு பொருந்திய பொருள் எதுவானாலும் அது தூய்மையானது தான்; என்கிறான் அன்பளிப்புகளின் விலையை வைத்து அன்பை எடைபோடும் வணிகத்தனமான வாழ்க்கையில் புரண்டு கிடப்போருக்கு இராமனின் பதில் வியப்பைத் தரலாம். ஆனால் அந்த பதில் தான் குகனது பரிவுக்கும் பவித்திரத்திற்கும் கிடைத்த ஒப்புயர்வற்ற அங்கிகாரம்.

அரிய, தாம் உவப்ப, உள்ளத்து அன்பினால் அமைந்தகாதல்
தெரிதரக் கொணர்ந்த என்றால் அமிழ்தினும் சீர்த்த அன்றே
பரிவினின் தழீஇய என்னின் பவித்திரம்; எம்மனோர்க்கும்
உரியன இனிதின் நாமும் உண்டனெம் அன்றோ? என்றான்.

(குகப் படலம், அயோத்யா காண்டம்)

11. கற்பென்னும் திண்மை

கற்புடைய பெண்டிர் வாழும் நிலத்தில் வானம் பொய்யாது. வளம் பிழைப்பறியாது. தன்னைக் காத்துக் கொண்டு, தன்னைக் கொண்டவனையும் பேணி, தகைசான்ற சொல்லையும் காத்து சோர்வற்று இருப்பவளே நல்ல பெண்மணி. கற்பும், நீங்காத அன்பும்–தான் பெண்மையின் அணிகள். அத்தகைய பண்பு நலம் சான்ற பெண்மையை நம் தேசத்தில் இறையம்சமாகவே வழிபட்டு வந்துள்ளனர். கம்பன் இராமகாதையில் கற்பின் கனலியான சீதாப்பிராட்டியார் மூலமாகவும், வேறு பல பெண் பாத்திரங்களின் வாயிலாகவும் உன்னதமான கற்பு நெறியின் சிறப்பைப் பேசுகிறான்.

உண்மை அழகு எது?

உருவத் தோற்றத்தில் மட்டும் அழகாக இருந்து விட்டால், அழகு முழுமை பெற்று விடாது. ஒரு பெண்ணின் புற அழகே அக அழகின் வெளிப்பாடாகத் தான் இருத்தல் வேண்டும். கோசல நாட்டுப் பெண்களின் அழகைச் சொல்ல வந்த கம்பன் அப்பெண்கள் குயில் மொழியும், மயில் நடமும், முத்துப் போன்ற பற்களும் உடையவர்கள் மட்டுமல்லர். அவர்களது புற அழகு அக அழகைப் பிரதிபலித்தது. அவர்களது பொய்யற்ற தன்மையால் நீதிகள் நிலைத்து நின்றன. மகளிரது அன்பினால் அறங்கள் நிலைபெற்றன. அவர்களது கற்பினால் பருவமழை நிலை மாறாமல் பொழிந்தது என்கிறான்.

பொற்பின் நின்றன, பொலிவு; பொய் இலா
நிற்பின், நின்றன, நீதி; மாதரார்
அற்பின் நின்றன, அறங்கள் அன்னவர்;
கற்பின் நின்றன, கால மாரியே

(நாட்டுப்படலம், பால காண்டம்)

கற்புடைய மகளிர் வாழும் நாட்டில் அவர்களது கற்பின் திண்மையைக் கருதி ஒரு மழை பொழியும் என்பதற்கிணங்க 'கற்பின் நின்றன கால மாரியே' என்கிறான் கம்பன்.

கம்பன் கற்பின் திண்மையைச் சொல்லி வைத்த அழகு எண்ணிப் பார்க்கும் போதெல்லாம் நம் சிந்தைக்கு மகிழ்வூட்டுகிறது. தாடகையை வதம் செய்த பின், தான் வேள்வி இயற்றும் இடத்திற்கு இராம இலக்குவர்களை விசுவாமித்திர முனிவன் அழைத்துச் சென்றான். வழியில் எதிர்ப்பட்ட நதியின் தன்மைகளைப் பற்றி இராமன் கேள்வி எழுப்ப விசுவாமித்திரன் தனக்கு முன்னே பிறந்தவளான கௌசிகி தன் கணவன் அறிவுரையின் படி இப்பெரிய நதியின் வடிவமாகி விட்டாள் என்று பதில் உரைத்தான். அதன்பின் எதிர்ப்பட்ட சோலையைப் பற்றி இராம இலக்குவர் கேள்வி எழுப்ப, அதற்குப் பதில் உரைத்த விசுவாமித்திரன் 'தங்கள் கணவரைத் தவிர

தெய்வம் வேறொன்றுமில்லை என்று எண்ணி வாழும் கற்புடைய பெண்ணின் மனம் எவ்வளவு தூய்மையாக இருக்குமோ, அவ்விதம் தூய்மையானது அந்த சோலை' என்கிறான். தூய்மைக்கு உவமை சொல்லும் போது பால்போல் தூய்மை, பனிபோல் தூய்மை என்கிறோம். கம்பன் தூய்மைக்குச் சொன்ன உவமை நம் உள்ளத்தைத் தொடுவதாய் அமைந்துள்ளது. கணவனைத் தவிர வேறுயாரையும் கருதிப் பார்க்காத ஒரு பெண்ணின் மனத்தூய்மை மிகவும் விலைமதிப்பற்றது. ஒரு பெண் தன் நாயகனையே தெய்வமாகப் பாவித்து வணங்குதல் வேண்டும் என்ற அற நெறியினைக் கம்பன் அழகுபட எடுத்துரைக்கிறான்.

தங்கள் நாயகரில் தெய்வம் தான் பிறிதில்லை என்று எண்ணும்
மங்கைமார் சிந்தை போல தூயது'...

(வேள்விப் படலம், பால காண்டம்)

மண்ணிலும் நல்லள் :

ஒரு மன்னன் தன் குடி மக்களைக் குறைவின்றி அரசு செய்து, நீதியை நிலைநாட்டிப் புகழுடன் வாழ்வதற்கு, அவனது அறம் சான்ற வாழ்வினை வளப்படுத்த, வகையறிந்த சிறந்த ஒரு வாழ்க்கைத் துணை அமைதல் வேண்டும். நாடாண்ட மன்னர்கள் சிறந்த அமைச்சர்களைப் பெற்றிருந்தும், நற்குணம் வாய்க்கப் பெற்ற நங்கையை வாழ்க்கைத் துணையாகப் பெறாததனால் நல்லாட்சி நடத்த இயலாமல் பழி தேடிக் கொண்ட செய்திகள் வரலாற்றில் உண்டு. எனவே சிறந்த ஓர் மன்னனுக்குக் கற்பும் சீலமும் நற்பண்புகளும் வாய்க்கப்பெற்ற மனையாள் அமைதல் வேண்டும். அத்தகைய பெண்ணின் நல்லாளைத் துணையாகப் பெற்ற மன்னனின் ஆட்சி தான் சிறப்பு பெறும். இராமபிரானை நாடாளச் செய்து விட்டு, தான் கானகம் செல்ல முடிவு செய்த செய்தியினை, தசரதன் தன் குல குருவான வசிட்டனுக்குத் தெரிவிக்க, அதனைக் கேட்ட வசிட்டன் இராமன் மன்னுயிர்க்கு எல்லாம் இனியன்; அவன் பெயரைச் சொல்வதாலேயே துன்பங்கள் எல்லாம் விலகிப் போய் விடுகின்றன. இராம பிரானை அனைவரும் 'தாம் செய்த நல்லறத்தின் பயனாய் வாய்த்தவன்' என்றுதான் எண்ணிக் கொண்டுள்ளனர். குடிமக்கள் இராமபிரானிடம் கொண்டுள்ள அன்பு

எல்லையற்றது. 'அனையான் பேரினால் வரும் இடர் எலாம் பெயர்கின்றது' என்கிறான். 'இராமன்' என்ற பெயரை நாம் உச்சரித்த மாத்திரத்திலேயே துன்பங்கள் விலகும் என்கிறான் கம்பன். 'நாராயணா' என்று சொன்ன மாத்திரத்தில் நம் துன்பங்கள் எல்லாம் மறைந்து, சுகமும் நலமும் கிடைக்கும் என விஷ்ணு சகஸ்ர நாமம் குறிப்பிடுவது இங்கு ஒப்பு நோக்கத் தகுந்தது.

அறத்தின் மூர்த்தியான இராமன், இந்த நாட்டை, சிறப்புற ஆட்சி செய்வான் என்று சொல்லிக் கொண்டு வந்த வசிட்டன், பெரிய புகழை உடைய சீதை, பொறையின் இலக்கணமாய் விளங்கும் பூமிதேவியை விட சிறந்தவள். மலைமகளான பார்வதி தேவி, கலை மகளான சரஸ்வதி, மலர்மகளான இலக்குமி ஆகியோரை விடவும் சிறந்தவள் என்கிறான். இராமனுக்குப் பட்டம் சூடுவதைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் போது, சீதையின் பெருமைகளை வசிட்ட மாமுனி எடுத்துரைக்கிறான் என்றால், அதில் பொருள் இல்லாமற் போகாது. இத்தகைய நனி சிறந்த பண்புகளின் கொள்கலமாக விளங்கும் பெண்ணை தன் மனைவியாகக் கொண்டுள்ள மன்னன், எப்போதும், எவ்விடத்திலும் அறத்தை உயிராகக் கருதி ஆட்சி செய்வான் என்பதனை முனிவன் குறிப்பால் உணர்த்துகிறான். சீதையின் பெருமைகளைச் சொல்லி முடித்த பின், இராமன் கண்ணிலும் நல்லவன், கற்றவர், கற்றிலாதவர் யாராகினும் இராமபிரானையே விரும்புவர். அதிலும் தாங்கள் உண்ணும் உணவை விடவும், பருகும் நீரை விடவும் ஏன் உன்னதமான தங்கள் உயிரை விடவும் இராமபிரானையே விரும்புவர் என்கிறான் வசிட்டன்.

'மண்ணிலும் நல்லள்; மலர்மகள், கலைமகள், கலைஊர்
பெண்ணினும் நல்லள்; பெரும் புகழ்ச் சனகியோ நல்லள்
கண்ணினும் நல்லன்; கற்றவர், கற்றிலாதவரும்,
உண்ணும் நீரினும், உயிரினும், அவனையே உவப்பார்'

(மந்திரப்படலம், அயோத்யா காண்டம்)

எனவே வீடு சிறக்கவும், அன்பும் கற்பும் மிக்க பெண்ணின் நல்லாளின் துணை வேண்டும். நாடு சிறக்கவும், நல்லாட்சி நடக்கவும், காலமாரி கருணையுடன் பூமியில் பொழியவும், கற்புடைய, பொற்புடைய பெண்களின் துணை வேண்டும்.

கற்பின் கனலி :

பஞ்சவடியில், இராமபிரானின் அழகைக் கண்டு மயங்கிய சூர்ப்பநகை, தன் வடிவத்தை மாற்றிக் கொண்டு இராமன் முன்னால் வந்து தன் விருப்பத்தைத் தெரிவிக்கும் பொருட்டாக, இராமபிரானுடன் உரையாடிக் கொண்டிருந்தாள். அவ்வமயம், அங்கு வந்த சீதா தேவி சூர்ப்பநகையைப் பார்த்தாள். சூர்ப்பநகையும் சீதையைப் பார்த்தாள். பெண்களுக்கெல்லாம் அரசி; தேவாதி தேவர்கள் பெற்ற வரத்தினால், மண்ணிலிருந்து மாணிக்க மயமாய்த் தோன்றிய வஞ்சிக் கொடி; விண்ணோர்க்கும், மண்ணோர்க்கும், நாகர்க்கும் அனைவருக்கும் கண்ணின் மணி எனத் தகும் சீதை இராமபிரானுக்கு, அருகில் வந்து நின்றாள்.

'பெண்ணிடை அரசி தேவர் பெற்ற நல் வரத்தால் பின்னர்
மண்ணிடை மணியின் வந்த வஞ்சியே போல்வாள் வந்தாள்'

(சூர்ப்பநகைப் படலம், ஆரண்ய காண்டம்)

இலக்குமி தாமரை மலரைவிட்டு நீங்கி, திருவடிகள் இரண்டும் நிலத்திலே தோயுமாறு நடந்து வந்தது போல் சீதை வந்தாள். அவள் அமுதத்தைப் போல் வந்தாள், அருந்ததிக் கற்பினாள்; இனிய சொற்பேசும் கிளி; வேய்போலும் தோளினாள்; மின்னல் போன்ற இடையினாள்; பஞ்சினைப் போன்ற பாதத்தாள். பவளக் கொடி என்றெல்லாம் சொல்லி, அத்தகைய சீதையைச் சூர்ப்பநகை பார்த்தாள் என்று சொல்லும்போது தீவினையைக் கட்டவிழ்த்து விட்டுக் கொண்டிருக்கும் அரக்கர் கூட்டமாகிய காட்டினை, அழிப்பதற்குத் தோன்றிய கற்புத் தழலான சீதையைச் சூர்ப்பநகை கண்டாள் என்கிறான் கம்பன்.

*'ஊன் சுட உணங்கு பேழ்வாய் உணர்வு இலி உருவில் நாறும்
வான்சுடர்ச் சோதி வெள்ளம் வந்து இடைவயங்க நோக்கி
மீன்சுடர் விண்ணும் மண்ணும் விரிந்த போர் அரக்கர் என்னும்
கான்சுட முளைத்த கற்பின் கனலியைக் கண்ணின் கண்டாள்'*

(சூர்ப்பநகைப் படலம், ஆரண்ய காண்டம்)

நோன்பிற் சிறந்த கற்பு :

சீதாபிராட்டி இருக்குமிடத்தைக் கண்டு திரும்புதற்காக இலங்கை வந்த அனுமன், பல்வேறு தடைகளையும் இடர்ப்பாடுகளையும் தாண்டி, அசோகவனத்தில் அரக்கியர் கூட்டத்திற்கு நடுவே சீதையைக் கண்டான். அவள் சீதை தான் என்பதனைத் தேர்ந்து தெளிந்தான். சீதை மாசுபடிந்த மணியைப்போல் காட்சியளித்தாள். ஒளி மங்கிய சந்திரனைப் போன்ற முகத்தையும், சீர் செய்யப்படாத சிக்கடைந்த கூந்தலுடனும் காணப்பட்டாள்.

ஆனால் தன்னைத் தான் காத்துக் கொண்டு, 'அறம் அழியாது' என்ற பேருண்மைக்குச் சான்று பகர்வது போல் கற்புத் திண்மையுடன் விளங்குகிறாள் என்பதனைக் கண்டான் அனுமன்.

*'மாசுண்ட மணி அனாள் வயங்கு வெங்கதிர்த்
தேசுண்ட திங்களும் என்னத் தேய்ந்துளாள்
காசுண்ட கூந்தலாள் கற்பும் காவலும்
ஏசுண்டது இல்லையால் அறத்துக்கு ஈறு உண்டோ'*

(காட்சிப் படலம், சுந்தர காண்டம்)

தவம் செய்த தவமாம் தையலாக 'நிறை காக்கும் காப்பே தலை' என்றிருந்த சீதையின் திண்மை அவளது சோகத்திற்குள்ளும் சுடர்விட்டது. சுற்றியிருந்த சூழ்நிலையின் இறுக்கத்திலும், சோதனையின் துயரத்திலும் முகம் வாடி இருந்தாலும், தன் கற்புத் திறம் வாடாமல் இருந்த தெய்வப் பெண்ணை தன் கண்களால்

கண்டவனான அனுமன் சீதையின் இத்தகைய மாண்பிற்கான பெருமை சென்று சேர வேண்டியது யாரை? என்று எண்ணமிடுகிறான் வீரக்கழல் அணிந்த இராமனின் தோள்களையா? மங்கையர் திலகமான சீதையின் மனத்தின் மாண்பையா? இல்லை அவள் பிறந்த சனக மா மன்னின் குலத்தையா? என்றெல்லாம் சிந்திக்கிறான். கற்பெனும் திண்மை உடைய பெண்ணை விட பெருமைக்குரியவர் யார்? கனலிடை நின்றும் புனலிடை மூழ்கியும் தவம் செய்து, உண்பதையும், பருகுவதையும் கூட நீக்கி நோன்பு நோற்கும் தவசிகள் தான் சிறந்தவர்கள் என்று உலகம் எண்ணிக்கொண்டுள்ளது. ஆனால் சிறந்த குலத்தில் பிறந்து, இல்லறத்தின் மாண்பினைக் கட்டிக்காத்து, கற்பிற் சிறந்து, மனஉறுதியுடன் வாழும் மங்கையரின் வாழ்வே தவமாகும். அவ்வாறு கற்பெனும் மாண்புடன் வாழும் மங்கையரைக் கம்பன் 'மனத்தவம்' புரிவோர் என்றழைக்கிறான். சொல்லின் செல்வனான அனுமனின் வாசகம் நம்மைச் சிந்திக்க வைக்கிறது. மணம் செய்து கொண்ட கணவனுக்கும், தான் பிறந்த குடிக்கும் பெருமை சேர்க்கக் கூடியவளாக, ஒரு பெண் தன்னைக் காத்துக் கொண்டு கற்பெனும் நெறியில் வாழ்வதே உண்மைத் தவமாகும்.

'வெங்கனல் முழுகியும் புலன்கள் வீக்கியும்
நுங்குவ, அருந்துவ, நீக்கி, நோற்பவர்
எங்கு உளர்? குலத்தில் வந்து இல்லின் மாண்புடை
நங்கையர் மனத்தவம் நவிலற் பாலதோ'

(காட்சிப் படலம், சுந்தர காண்டம்)

கற்பின் மேல் கண்டது உண்டோ :

அசோக வனத்தில் அரக்கியர் சூழ அமர்ந்திருந்த சீதையைக் காண இராவணன் வந்தான். தன் தவத்தையும் ஆற்றலையும் மறந்து காம வயப்பட்டு சீதை தன்னை அங்கீகரித்துக் கொள்ள வேண்டும் என்று கெஞ்சினான். செல்வங்களையெல்லாம் அவள் காலடியில் குவிப்பதாகச் சொன்னான். சீதாப் பிராட்டியை மீட்கும் திறம் இராம

இலக்குவருக்கு இல்லை என்றான். சீதையின் மனம் வாடினால் தன் உயிர் போகும் எனப் பிதற்றினான். இதனையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த சீதை இராவணனைப் பார்த்துத் துரும்பு போன்றவனே! என்று அழைத்து 'நீ பேசிக் கொண்டிருக்கும் இந்த தகாத சொற்களையெல்லாம் இல்லறத்தைச் செம்மையாகப் பேணும் எந்த ஒரு பெண்ணும் கேட்டுக் கொண்டிருக்க மாட்டாள். நான் சொல்வதைத் தெளிவாகக் கேட்டுக்கொள். என் மனமானது கல்லை விட உறுதியானது. ஏனெனில் நான் கற்புடைய பெண். இந்த உலகில் கற்பை விட திண்மையானது ஒன்று கிடையாது என்பதனைத் தெளிவாகப் புரிந்து கொள்' என இராவணன் நெஞ்சில் போய்த் தைக்கும் படியாக சீதை எடுத்துரைத்தாள்.

மல் அடு திரள் தோள் வஞ்சன் மனம் பிறிது ஆகும் வண்ணம்
கல்லொடும் தொடர்ந்த நெஞ்சம் கற்பின் மேல் கண்டது உண்டோ?
இல்லொடும் தொடர்ந்த மாதர்க்கு ஏய்வன அல்ல, வெய்ய
சொல்; இது தெரியக் கேட்டி துரும்பு! எனக் கனன்று சொன்னாள்'

(காட்சிப் படலம், சுந்தர காண்டம்)

சீதா பிராட்டியார் இது நாள் வரை கட்டிக் காத்த கற்பு கனன்று எழுந்த போது, அந்த வெப்பத்தில் வெளிவந்த சூடான சொற்கள், இராவணனின் காமத்தைச் சுட்டெரித்திருக்க வேண்டும். மாறாகக் 'காமம் வெட்கமறியாது' என்பதற்கிணங்க இராவணன் மீண்டும் மீண்டும் சீதையை அச்சுறுத்திக் கொண்டும், கெஞ்சிக் கொண்டும் இருந்தான். உடலலவில் அன்னம் போல் நளினமும் மென்மையும் வாய்க்கப்பெற்ற பெண், உடலுரத்தில் சிங்கம் போன்றவனான இராவணனிடம் கொஞ்சமும் அச்சமில்லாமல் அவனைத் 'துரும்பு போன்றவனே' என விளிக்கின்றாள் என்றால் அவளது கற்புத் திண்மை தந்த திறம் மகோன்னதமானது. அந்தக் கற்பு கல்லை விடவும் திண்மையானது.

அனலும் குளிரும் :

சீதையை அசோக வனத்தில் கண்டு, அவள் தன் சோகத்தில் பங்கெடுத்துக் கொண்டு, ஆறுதல் மொழிகளால் அவனைத் தேற்றிய அனுமன், சினத்தினாலும் இராவணனுக்கு அச்ச மூட்ட வேண்டும் என்று எண்ணியும் அசோக வனத்தை அழித்தான். செய்தி இராவணனுக்குத் தெரிந்ததும் இந்திரஜித்தனை அனுப்பி அனுமனைக் கட்டிக் கொண்டு வரப் பணிக்கிறான். பிரம்மனது அஸ்திரத்தால் இந்திரஜித்தன் அனுமனைக் கட்டிக் கொண்டு போய் இராவணன் முன் நிறுத்தினான். அனுமன் தன்னை யார் என்று சொன்னதும், இராவணன் அவனது தீய நடவடிக்கையினால் அழிந்துபடப் போகிறான் என்று எடுத்துரைத்ததும் இராவணன் செவியில் ஏறவில்லை. அனுமனைக் கொல்வது என்று முடிவு செய்தான். தூதாய் வந்தவனைக் கொல்லுவது குலத்திற்கே பழியைத் தேடித்தரும் என்று வீடணன் சொல்ல அனுமனது வாலில் நெருப்பிட்டுக் கொளுத்துமாறு ஆணையிட்டான் இராவணன். அனுமனது நீண்ட வாலின் எல்லாப் பகுதிகளிலும் துணிகளைச் சுற்றி, வால் முழுவதையும் நெய்யிலும் எண்ணையிலும் தோய்த் தெடுத்தனர். பின்னர் அதனைத் தீயிட்டுக் கொளுத்தி, அரக்கர் அண்டம் கலங்க ஆரவாரம் செய்தனர். இடிமுழக்கம் போல் குரல் எழுப்பி, முரசு அறைந்து ஆர்ப்பரித்தனர். சீதையிடம் செய்தியைத் தெரிவிக்க, சீதை உடல் வியர்த்துத் துடித்து, நிலத்தில் வீழ்ந்தாள். பின்னர் சீதை அக்னி தேவனைப் பார்த்து 'உலகிற்கே அழியாத சான்றாக இருப்பவனே. நீ அனைத்தும் அறிந்தவன்; நான் கற்பெனும் திண்மை உடையவளாக இருப்பது உண்மையானால் அனுமனைச் சுடாதே' என வேண்டி நின்றாள்.

***'தாயே அனைய கருணையான் துணையை ஏதும் தகைவு இல்லா
நாயே அனையவல் அரக்கர் நலியக் கண்டால் நல்காயோ
நீயே உலகிற்கு ஒரு சான்று நிற்கே தெரியும் கற்பு அதனில்
தூயேன் என்னின் தொழுகின்றேன் எரியே அவனைச் சுடல் என்றாள்'***

(பிணி வீட்டு படலம், சுந்தர காண்டம்)

அக்னிதேவன், அனுமனின் வால், உடல் எலும்பு வரை வெப்பம் தணிந்து குளிரும் படிச் செய்தான். அனுமனின் உடல் மட்டுமல்ல, கடலில் உள்ள வடவா முகாக்கினி, பூமியில் உள்ள அக்னி, ஆகாசத்தில் உள்ள அக்னி, முனிவர்கள் காத்துவரும் காருக பத்தியம், ஆகவனீயம், தட்சிணாக்கினி ஆகிய மூன்று வகை அக்னி, திரிபுரத்தை சம்ஹாரம் செய்த சிவபெருமானின் நெற்றிக் கண்ணில் உள்ள அக்னி ஆகிய அனைத்தும் குளிர்ச்சி அடைந்தன. அண்டங்களை எல்லாம் கடந்து, பிரம்ம தேவன் வேள்வி செய்யும் அக்னி குண்டங்கள் எல்லாம் குளிர்ந்தது. மேகங்களில் உள்ள இடிகளும் குளிர்ந்தன. வெப்பம் நிறைந்த சூரிய மண்டலமும் குளிர்ந்தது. பாவம் செய்பவர்கள் சென்று சேர்கிற நரகமும் குளிர்ந்தது. இவ்வாறு வாலில் வைக்கப்பட்ட நெருப்பு சுடாமல் குளிர்ந்ததென்ன என்று அனுமன் எண்ணிப் பார்த்தான். பின் இந்த அதிசயம், சனகன் மாமகள் சீதையின் கற்பினால் இயன்றது என்ற முடிவிற்கு வந்தான்.

'வெற்பினால் இயன்றது அன்ன மேனியை விழுங்கி வெந்தீ
நிற்பினும் சுடாது நின்ற நீர்மையை நினைவின் நோக்கி
அற்பின் நார் அறாத சிந்தை அனுமனும் சனகன் பாவை
கற்பினால் இயன்றது என்பான் பெரியது ஓர் களிப்பன் ஆனான்'

(இலங்கை எரியூட்டுப் படலம், சுந்தர காண்டம்)

கற்புடைய பெண்ணுக்கு பஞ்சபூதங்களும் செவிசாய்க்கும். அக்னியை சாட்சியாக வைத்துத் தான் ஒரு பெண் தன் கணவனின் கரம் பற்றுகிறாள். அன்பில் திளைத்து, அறத்தில் நிலைத்து கற்பிற் சிறந்து கணவனுக்கே ஆளாகி வாழ்வேன்' என்று அக்னியை முன்னிறுத்தித் தான் உறுதி பூணுகிறாள். அத்தகைய உறுதி உடைய கற்புக்கரசியாருக்கு உறுதுணை புரிய பஞ்சபூதங்களும் இசைகின்றன. அத்தகைய பெண்களின் கற்புத் தழலுக்கு அக்னி தேவனும் அடங்கித் தான் போவான். கொழுநனைத் தொழும் பெண் 'பெய் எனப் பெய்யும் மழை' என்றார் திருவள்ளுவர். அனலையும் குளிர்விக்கும் அபூர்வ ஆற்றல் கற்புக்கு உண்டு. குளிர்விப்பதோடு மட்டுமல்ல,

தேவைப்படும் போது, கற்புத் தழலால் தீமையைச் சுட்டெரிக்கவும் முடியும். எனவே தான் இலங்கை மாநகரை அனுமன் நெருப்பிட்டுக் கொளுத்தி விட்டான் என்பதனைப் பார்த்த பின், இராவணன் மந்திராலோசனை சபையைக் கூட்டி குரங்கு வந்து சுட்டெரித்து விட்டதே எனக் கொக்கரிக்கும் போது, அறிவிற் சிறந்த வீடணன் சொன்னான் 'இலங்கையை ஒரு வானரம் சுட்டது என்றா எண்ணுகிறாய்? சீதையின் கற்புத் தழல் அல்லவா இலங்கையைச் சுட்டெரித்தது என்றான்.

'கோநகர் முழுவதும் நினது கொற்றமும்
சானகி எனும் பெயர் உலகின் தம்மனை
ஆனவள் கற்பினால் வெந்தது அல்லது ஓர்
வானரம் சுட்டது என்று உணர்தல் மாட்சியோ'

(இராவணன் மந்திரப் படலம், யுத்த காண்டம்)

ஒரு கற்புடைய பெண் நினைத்தால் அனலும் புனலாகும், புனலும் அனலாகும். தெய்வங்கள் கூட அவளுக்குக் கைகட்டி சேவகம் செய்வதென்றால் கற்பின் சிறப்பு சொல்லும் தரத்ததோ?

சீதையால் பெற்ற சிறப்பு :

இலங்கையின் அசோக வனத்தில் சீதாபிராட்டியைக் கண்டு திரும்பிய அனுமன், இராமனிடம் வந்து சேதி சொன்ன திறம் எத்தனை முறை கற்றாலும் கற்குந்தோறும் நம்மை மகிழ்வில் ஆழ்த்தும். ' கண்டனன் கற்பினுக்கு அணியைக் கண்களால்' என்று அனுமன் சொன்ன வாசகம் உலகப் பிரசித்தி பெற்ற வாசகமாகும்.

அசோக வனத்தில் உயர்ந்த குடிப்பிறப்பு என்ற ஒன்றும், பெரிய பொறுமை என்ற ஒன்றும், கற்பு என்ற பெயரைப் பெற்ற ஒன்றும், ஒன்று சேர்ந்து களி நடனம் புரிகின்ற காட்சியினைத், தான் கண்டதாக அனுமன் குறிப்பிடுகிறான்.

**'விற்பெருந்த டங்தோள் வீர! வீங்கு நீர் இலங்கை வெற்பில்,
நற்பெருந்த தவத்தள் ஆய நங்கையைக் கண்டேன் அல்லேன்
இற்பிறப்பு என்பது ஒன்றும், இரும்பொறை என்பது ஒன்றும்,
கற்புஎனும் பெயரது ஒன்றும், களிநடம் புரியக் கண்டேன்'**

(திருவடி தொழுத படலம், சுந்தர காண்டம்)

இத்தகைய கற்புச் சிறப்பினை உடைய சீதாபிராட்டியால் தசரதனின் குலமும், சனகனின் குலமும் சிறப்புப் பெற்றதோடல்லாமல், வான் வாழும் தேவ மாதர்களும் சிறப்புப் பெற்றார்கள். சீதை என்னும் பொற்புடைய மாதரசியின் மகத்துவத்தால் மண்ணுலக மாதர் மட்டுமல்ல, சிவபெருமான் திருமால் ஆகிய தெய்வங்களின் தேவிமாரும் சிறப்புற்றனர் என்கிறான் கம்பன். சிவபெருமானின் இடப் பாகத்தில் இருக்க வேண்டிய உமையவள், ஈசனின் தலையில் அமர்ந்து கொண்டாள். திருமாலின் மார்பில் வீற்றிருக்க வேண்டிய மகாலட்சுமியோ, அவரது ஆயிரம் திருமுடியின் மேலிருக்கிறாள் என்கிறான் கம்பன். சீதையின் எல்லையற்ற தூய்மை மனம், மிக உயர்ந்த கற்பெனும் தவம் இவற்றினால் உண்டான அழியாத புகழால் வானிலும், மண்ணிலும் வாழும் அனைத்துப் பெண்ணினமும் பெருமை பெற்றது.

**'சோகத்தாள் ஆய நங்கை கற்பினால் தொழுதற்கு ஒத்த
மாகத்தார் தேவிமாரும் வான்சிறப்பு உற்றார் மற்றைப்
பாகத்தாள் இப்போது ஈசன் மகுடத்தாள் பதுமத்தாளும்
ஆகத்தாள் அல்லள் மாயன் ஆயிரம் மௌலி மேலாள்'**

(திருவடி தொழுத படலம், சுந்தர காண்டம்)

12. சொல்லெல்லாம் சொல்லாகுமா?

மனிதர்களின் மனப்பண்பு பெரும்பாலும் சொல்லில் வெளிப்படுகிறது. இரும்பு நேர் மனத்தை இங்கிதமான வார்த்தைகளால் எவ்வளவு தான் திறமையாகத் திரையிட்டு மறைத்தாலும், உள்ளத்தின் உண்மை நிறத்தை வார்த்தைகள் வெளிச்சம் போட்டுக் காட்டி விடும். மனிதர்கள் பயன்படுத்தும்

சொற்கள் நயமானதாகவும், பயனுடையதாகவும் இருத்தல் வேண்டும். விளக்க வேண்டிய நேரத்தில் விளக்கி, மகிழ்வூட்ட வேண்டிய நேரத்தில் மகிழ்வித்து, ஆறுதல் படுத்த வேண்டிய காலத்தில் ஆதரவாய் வெளிப்பட்டு, புத்தி புகட்ட வேண்டிய நேரத்தில் புகட்டி, தீமையைச் சாடும் பொழுது திறமையாய் எடுத்துரைக்கும் சொற்றிறம் ஒருவருக்கு அமைந்திருக்குமானால், அத்தகைய சொலல்வல்லன் சோர்விலனை யாரும் வெல்லுதல் இயலாது. வார்த்தைகள் நமக்கு வசப்பட்டால் தான், சுவையாகச் சொல்ல வேண்டிய நேரத்தில் சுவைபடச் சொல்லி, சூடாய்ச் சொல்ல வேண்டிய இடத்தில் சூடாய்ச் சொல்லி, இதமாய்ச் சொல்ல வேண்டிய இடத்தில் இதமாய்ச் சொல்லி, குறிப்பாய்ச் சொல்ல வேண்டிய இடத்தில் சுருக்கமாய்ச் சொல்லி, இடித்துச் சொல்ல வேண்டிய இடத்தில் இடித்துச் சொல்லி சரியாகச் சொன்னோம்' என்று மனநிறைவு பெறலாம். வார்த்தைகள் நம் கட்டுக்குள் வர மறுக்கும்போது நாவு தன் கட்டுப்பாட்டை இழக்க நேரிடுகிறது. மனமானது 'நான் சொல்ல நினைத்தது வேறு; நாவானது நவின்றது வேறு' என்று புலம்பத் தொடங்குகிறது. எனவே தான் சொல்லத் தொடங்கு முன் சிந்திக்க வேண்டும் என்றனர்.

அமுதில் அள்ளிய சொற்கள் :

இனிமையாகப் பேசுவதை அமுதம் போன்ற சொற்கள் என்கிறோம். கம்பன் தன் இராமகாதையில் பல இடங்களில் யாழ் ஒத்த, பாகு ஒத்த, அமுது நிகர் சொற்களைப் பேசியவர்களை எல்லாம் நமக்கு அறிமுகப்படுத்துகிறான். 'யாழ் ஒக்கும் சொல்' என்றும் 'பாகு ஒக்கும் சொல்' என்றும் 'பண் எனும் சொல்லினார்' என்றும் பல இடங்களில் மகளிர் பேசிய சொற்களைப் பற்றிக் குறிப்பிடும் போது கம்பன் குறிப்பிடுகிறான். சீதையின் இனிமையான பேச்சு எப்படிப்பட்டது என்பதனை இராவணனிடம் சூர்ப்பநகை எடுத்துரைக்கிறாள். சீதையைத் தூக்கிச் செல்ல சூர்ப்பநகை முயன்று, பின் மானபங்கம் செய்யப்பட்டு இலங்கையை நோக்கி அறுபட்ட மூக்குடன் ஓடிச்சென்று, இராவணனிடம் நடந்தனவற்றை, சுயநலம் கருதி சற்று ஏற்றியும்

மாற்றியும் எடுத்துரைக்கிறாள். ஏழுலகிலும், இராவணனுக்கு ஏற்ற அழகான ஒரு பெண்ணைத் தான் வனத்தில் கண்டதாகவும், அவளைத் தன் சகோதரனான இராவணனுக்காகத் தூக்கச் சென்ற போது, தனக்கு இத்தகைய அவமானம் ஏற்பட்டதாகவும் சூர்ப்பநகை குறிப்பிட்டாள். 'அவள் யார்'? என இராவணன் வினவ சீதையின் அழகு முழுவதையும் வர்ணிக்கலானாள். சீதையின் தோள் அழகைச் சொல்வதா? அவ்ளது ஒளிமுகத்தில் விளையாடும் வாள் போன்ற கண்களின் அழகைச் சொல்வதா என்று திகைத்து, சீதையின் நெற்றி வில்லைப் போன்றது என்று சொன்னாலும், விழிகள் வேலைப் போன்றது என்றாலும், பற்கள் முத்து போன்றவை என்று சொன்னாலும், உதடுகள் பவளம் போன்றவை என்றாலும், ஒரு மரபுக்காக வேண்டுமானால் சொல்லலாமே தவிர, சீதையின் அழகுக்கு ஒரு பொருளும் உவமையாகாது என்றாள். மஞ்சுபோன்ற மழைக் கூந்தல், பஞ்சு போன்ற திருவடி, பவளம் போன்ற விரல்கள் கஞ்சமலர் போன்ற திருமுகம் என்றெல்லாம் சொல்லி, அவள் தன் அழகும் இனிமையும் நிரம்பிய சொற்களை அமுதத்திலிருந்து அள்ளி எடுத்துக் கொண்டவள். காமரம் என்ற பண்ணில் இசைக்கப்படும் பாடலையும், தேனையும் போன்ற இனிமையான சொல்லை உடையவள் என்கிறாள் சூர்ப்பநகை. 'காமரம் முரலும் பாடல்கள் எனக் கனிந்த இன்சொல்' என்றும், 'அஞ்சொற்கள் அமுதில் அள்ளிக் கொண்டவள்' என்றும் சூர்ப்பநகை சொல்லும் சொற்கள் அவளது ரசனையை நமக்குச் சொல்லி வைக்கின்றன.

***'மஞ்சு ஒக்கும் அளக ஓதி; மழை ஒக்கும் வடித்த கூந்தல்;
பஞ்சு ஒக்கும் அடிகள்; செய்ய பவளத்தின் விரல்கள் ஐய!
அஞ்சொற்கள் அமுதில் அள்ளிக் கொண்டவள் வதனம் மைதீர்
கஞ்சத்தின் அளவிற்றேனும் கடலினும் பெரிய கண்கள்'***

(சூர்ப்பநகை சூழ்ச்சிப் படலம், ஆரண்ய காண்டம்)

சொல்லில் வெளிப்படும் கல்வி :

சுக்ரீவனது துணையையும், வானர சைனியங்களின் உதவியையும் நாடி, இராமனும், இலக்குவனும் ருசியமுகம்' என்ற மலை நோக்கி வந்தனர். சுக்ரீவன் இருவரையும் கண்டு அஞ்சி குகைக்குள் ஒளிந்து கொள்ள, அனுமன் அவர்களுக்கு எதிரில் சென்று

நின்று 'உங்கள் வரவு துன்ப மில்லாத நல்ல வரவாக அமையட்டும்' என்கிறான். 'மேகம் போன்ற அழகிய கருநீலத் திருமேனியையும், பனிக்கு வாடாத தாமரையைப் போன்ற மலர்ந்த கண்களையும், உடைய எம்பெருமானே! நான் வாயுதேவனுக்கும், அஞ்சனா தேவிக்கும் பிறந்த புதல்வன். என்னை ஆஞ்சனேயன் என்று அழைப்பார்கள். ருசியமுக பர்வதத்தில் சூரியன் மகனான சுக்ரீவனுக்குப் பணிசெய்து கொண்டிருக்கிறேன்' என்று எடுத்துரைத்ததும் அனுமனின் சொல்லில் இருந்த கனிவு, அமைதி, நிதானம், தெளிவு இவை அனைத்தும் இராமபிரானைக் கவர்ந்தன.

'மஞ்சு எனத் திரண்ட கோல மேனிய! மகளிர்க்கு எல்லாம்
நஞ்சு எனத் தகையதாகி நளிர் இரும் பனிக்குத் தேம்பா
கஞ்சம் ஒத்து அலர்ந்த செய்ய கண்ண! யான் காற்றின் வேந்தற்கு
அஞ்சனை வயிற்றில் வந்தேன், நாமமும் அனுமன்' என்றான்

(அனுமப்படலம். கிட்கிந்தா காண்டம்)

இவ்வாசகத்தைக் கேட்ட இராமன், தன் அருகில் இருந்த இலக்குவனிடத்தில், 'ஆற்றல், நிறை குணம், உண்மைக் கல்வியால் உண்டாகும் தன்னடக்கம், ஞானம் இவை அனைத்தும் இவனிடத்தில் ஒருசேர இணைந்துள்ளன. இந்த அனுமன் கல்லாத கலை என்றோ, கற்காத வேதம் என்றோ ஒன்று உலகில் இல்லவே இல்லை. அத்தகைய அறிவாற்றலும் கல்வியும் அனுமனுடைய சொல்லில் இருந்து வெளிப்படுகிறது. இனிய சொற்களை இதமாய்ச் சொல்லும் இவனல்லவா சொல்லின் செல்வன்' என்கிறான்.

'இல்லாத உலகத்து எங்கும் இங்கு இவன் இசைகள் கூரக்
கல்லாத கலையும் வேதக் கடலுமே என்னும் காட்சி
சொல்லாலே தோன்றிற்று அன்றே! யார்கொல் இச்சொல்லின்
செல்வன்?
வில் ஆர் தோள் இளையவீர? விரிஞ்சனோ விடைவல்லானோ?

(அனுமப்படலம், கிட்கிந்தா காண்டம்)

உண்மையான கல்வித் திறம் ஒரு மனிதனுக்கு அடக்கத்தைக் கற்பிக்க வேண்டும். அத்துணை ஞானமும் அறிவுத் திறமும் உடைய அனுமன் தன்னடக்கமாய் இருக்கிறான் எனக் காட்டி அதுதான் உண்மையான கல்வியின் பயன் என்று கம்பன் எடுத்துரைக்கிறான். கல்வி கற்ற ஒருவன், செயலாற்றும் திறனும், நிறைகுணமும் இல்லாதிருப்பானாகில் அவன் கற்ற கல்வி அவனுக்கும் பயன்படாது; மற்றவர்களுக்கும் உதவாது; எனவே ஆற்றலும், நிறைகுணமும், தன்னடக்கமும் தான் உண்மையான கல்வியின் வெளிப்பாடுகள் என்பதனைக் கம்பன் தெளிவாக எடுத்துரைக்கிறான். கொஞ்சமாய்த் தெரிந்தவன் கூட குவலயமே தெரியும் தனக்கெனத் தருக்கித் திரியும் ஆணவ உலகிற்கு அனுமனின் எளிமை ஒரு எடுத்துக்காட்டு. அழகாக, இதமாகச் சொன்னதனால் மட்டும் அனுமன் சொல்லின் செல்வன் என்று ஆகிவிடவில்லை. ஆற்றல், ஞானம், தன்னடக்கம், நிறைகுணம் ஆகிய நற்பண்புகள் அவனது ஆழ்ந்த கல்வி ஞானத்தோடு கலந்து நின்றன. அத்தனை சிறப்புக்கள் இருந்தும் அவைகளை வெளிகாட்டிக் கொள்ள விரும்பாத அனுமனின் தன்னடக்கம், என்ற நனி நாகரீகப் பண்பு கல்வியாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய பண்பாகும். பேசும் சொற்களில், மெல்லச் சுடர் விட்ட அவன் கல்வி இராமபிரானின் நெஞ்சும் கவர்ந்தது என்றால் அவனைச் 'சொல்லின் செல்வன்' என்றழைக்காமல் வேறுயாரை அழைப்பது?

சொல்லக் கூடாத சொல்:

உணர்ச்சி வேகம் உந்தித் தள்ளும் போது, சற்றும் சிந்தித்துப் பார்க்க வழியில்லாமல் பயன்படுத்தும் சில சொற்கள், காலம் முழுவதும் சொன்னவரையும், கேட்டவரையும் வருத்திக் கொண்டே இருக்கும் நிரந்தரத்துவத்தைப் பெற்று விடுகின்றன. எப்பொழுதும் முறை தவறிப் பேசிப் பழக்கப்பட்டவர்களின் வார்த்தைகள், அழுக்கை விட மலிவானவை என்று ஒதுக்கித் தள்ளி விடலாம். சொல், செயல், சிந்தனை ஆகிய மூன்றுடன் எப்பொழுதும், கனிவும் கண்ணியமும் தூய்மையும் இணைந்திருக்க வேண்டும் எனக்கருதி, இலட்சியமே உயிர் எனக் கொண்டு வாழும் தூயவர்கள்,

சூழ்நிலையின் இறுக்கத்தால் தீயனவற்றைப் பேசும் நிலை வருமானால், அந்நிலை வருத்தத்திற்கும் பரிதாபத்திற்கும் உரியது. 'நெருப்பு என்று சொன்னால் வாய் என்ன வெந்தா போகப் போகிறது'? என்று மேலோட்டமான கேள்விகளை வெற்று சமாதானமாகவும், சாக்குப் போக்காகவும் மனிதன் எத்தனை நாள் சொல்லிக் கொண்டிருக்கப் போகிறான். நெருப்பான சொற்களைச் சொல்லும் போது உள்ளம் குளிரவா செய்யும்? அக்கினிச் சொற்கள் சொன்னவனை முதலில் சுட்டெரிக்கிறது. பின்னர் கேட்டவனைத் தகிக்கச் செய்கிறது. அன்புடையார் பேசுகின்ற ஆயிரம் இதமான வார்த்தைகளையும், அவர்கள் நெஞ்சினின்று கனன்றெழுந்து, வாய்வழி தெரித்து விழுந்த ஒரு அக்கினிச் சொல் பஸ்பமாக்கி விடும். எனவே தான் தீயினாற் சுட்ட புண்ணை விட நாவினாற் சுட்ட வடு கொடுமையானது என்கிறார் திருவள்ளுவர்.

'மாரீசமானாக, வேடந்தாங்கி வந்தவனைப் பிடித்துத் தருவேன்' என்று மானைத் துரத்திக் கொண்டு இராமன் ஓட, மாரீசன் போக்குக் காட்டி பின் இராம பாணத்திற்கு இரையாகும் நிலை ஏற்படுகிறது. 'செத்தும் கெடுப்பேன்' என்று மாயமாரீசன் இராமன் குரலில் சீதா இலக்குவா என்றவுடன், அஞ்சினாள் சீதை. தன்னைக் காத்துக் கொண்டிருந்த இலக்குவனை 'உடனே சென்று இராமனுக்குத் துணை செய்' எனச் சொல்லி சீதை துடித்தாள். அது கேட்ட இலக்குவன் 'பதினான்கு உலகங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் அற்பர்களின் சொற்ப வலிமைக்கு முன்னால், இராமனது நிகரற்ற வலிமை ஒருநாளும் தோற்காது என்றும், இராமபிரான் சிவதனுசையே ஒடித்தவன், பரசுராமனின் கர்வத்தை அடக்கியவன்; இராமனுக்கு யார் துணையும் தேவையில்லை; துணை ஏதும் இன்றியே தன் வீரத்தால், அரக்கரையும் விரட்டியடிக்கும் ஆற்றல் உடையவன். இவ்விடத்தை விட்டு நான் நீங்கிச் சென்றால் அரக்கர்களால் தங்களுக்குத் துன்பம் நேரலாம். எனவே என்னை இவ்விடம் விட்டு ஏகச் சொல்லுதல் வேண்டாம்' என்றுரைக்க சீதை கோபத்தினால் பொங்கி எழுந்தாள்.

'ஒரு நாள், ஒருபகல் பழகியவர்கள் கூட, தன் அன்புக்குரியவர்களுக்கு ஆபத்து எனத் தெரிந்தால், தங்கள் உயிரையும் தரத் தயாராகி விடுவார்களே! அங்ஙனமிருக்க, உடன் பிறந்த நீ, ஆபத்து எனத் தெரிந்தும் அசையாமல் அஞ்சாமல் நின்று கொண்டிருக்கிறாயே! இங்கேயே நின்று கொண்டிருக்கும் உன் நிலைமை கொஞ்சமும் அறநெறிக்குப் பொருந்தாது. நீ இங்கே நிற்பதாக இருந்தால் நான் நெருப்பில் விழுந்து உயிரை மாய்த்துக் கொள்வேன்' என்று இலக்குவனிடம் கடுமை தோன்றச் சொன்னாள் சீதை. அத்தகைய இடிச் சொற்களையும் தாங்கிக் கொண்டு விதியை எண்ணி நொந்தவனாக, அந்த இடம் விட்டு ஏகினான் இலக்குவன். தூங்காமல், துவளாமல், தூய தொண்டிற்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட இலக்குவனின் மனம் என்ன பாடுபட்டிருக்கும். சொன்ன சொல்லை எண்ணிச் சொல்லாமல், எடுத்தெறிந்து சொல்லி முடித்து விட்டாள் பிராட்டி. மறந்திருப்பானா இலக்குவன்? அவள் புனித வாயிலிருந்து புறப்பட்டு வந்த புண்படுத்தும் சொற்களை! எண்ணி எண்ணி அவன் உள்ளம் வெந்து நீறாகாமலா இருந்திருக்கும்? அவன் மட்டும் தான் துன்புற்றானா? அச்சொற்களைப் பேசியவளின் நிலை என்ன? கம்பன் படம் பிடிக்கிறான் தன் வார்த்தைகளால்.

கவர்ந்து கொண்டு போன இராவணன் அசோகவனச் சிறையில் சீதையை அரக்கியர் காவலில் வைத்தான். அவளோ எந்தத் திசையில் இருந்தாவது காகுத்தன் வந்து காத்துவிட மாட்டானா எனத் திசைகளை அளந்த வண்ணம், அழுது கொண்டிருந்தாள். அப்பொழுது அவள் நெஞ்சத்தை நினைவலைகள் சூழ்ந்தன. மானைத் தொடர்ந்து சென்ற இராமனை, இலக்குவன் காணவில்லை போலும்; அவ்வாறு இருவரும் சந்தித்திருந்தாலும் இராவணன் தன்னைத் தூக்கிச் சென்றது அவர்களுக்குத் தெரியுமோ! தெரியாதோ? கழுகரசனான சடாயு மாண்டிருப்பானாகில், இராம இலக்குவருக்குத் தன்னைப் பற்றிய செய்திகளைச் சொல்லுவார் யார்? என்றெல்லாம் அழுது புலம்பினாள். அப்பொழுது இலக்குவனிடம், தான் உதிர்த்த கடுஞ்சொற்கள் சீதைக்கு நினைவிற்கு வந்தன. சொல்லக் கூடாத சொற்களைச் சொல்ல நேர்ந்ததே எனப் பலமுறை எண்ணி எண்ணி

வருந்தியதால் தான், அசோக வனத்தில் தன்னை 'எண்ணிப் பார்க்க முடியாத அளவு தீவினையை உடையவள் நான்' என்கிறாள். ஒருவேளை இலக்குவனைப் பார்த்து தான் சொன்ன சொல், இராமபிரானிடம் சொல்லப்பட்டிருக்குமோ? அது கேட்ட இராமன், இவள் அறிவில்லாதவள் என்று தன்னைத் துறந்துவிட்டானோ? இது முற்பிறப்பில் செய்த தீவினையால் நிகழ்ந்ததோ என்றெல்லாம், ஒவ்வொன்றாகச் சொல்லிப் பார்க்கிறாள். அவளது நா வறண்டு, உணர்வு தேய்ந்து உயிர் பதைப்புற்றது.

'என்னை நாயகன், இளவலை எண்ணலா வினையேன்
சொன்ன வார்த்தை கேட்டு அறிவு இலள் எனத் துறந்தானோ?
முன்னை ஊழ்வினை முடிந்ததோ? என்று என்று முறையால்
பன்னி வாய் புலர்ந்து உணர்வு தேய்ந்து ஆர் உயிர் பதைப்பாள்'

(காட்சிப் படலம், சுந்தர காண்டம்)

பிராட்டியே சுடு சொற்களை வேகமாகக் கொட்டி விட்டு, நிதானமாகத் துக்கித்தாள் என்றால், எந்தச் சூழ்நிலையிலும் சொற்களைக் கவனத்துடன் கையாளுதல் வேண்டும் என்ற உணர்வு நமக்குள் எழுகிறது.

பத்து மாத காலமாக மாற்றான் சிறையில் இருந்தும், தன்னை மீட்கத் தன் கணவன் வந்து சேரவில்லை, என்ற ஏக்கத்தையும், துக்கத்தையும் அனுமனிடம் அசோக வனத்தில் எடுத்துச் சொன்ன சீதை இலக்குவனை நினைத்துப் பார்த்துப் பேசினாள். 'என்னைக் கானகத்தில் நல்ல வண்ணம் காத்துக் கொண்டிருந்தவன் இலக்குவன். என்னைக் கானகத்தில் காவல் புரிந்ததோடு அவன் கடமை முடிந்துவிட்டது என்று எண்ணி விட்டானோ? என்னை மாற்றான் சிறையிலிருந்தும் மீட்க வேண்டிய கடமை அவனுக்கு உண்டு என்பதனை அனுமனே நீ சென்று நினைவு படுத்து' என்கிறாள்.

'ஏத்தும் வென்றி இளையவற்கு, ஈது ஒரு
வார்த்தை கூறுதி; 'மன் அருளால் எனைக்
காத்து இருந்த தனக்கே கடன், இடை
கோத்த வெஞ்சிறை வீடு' என்று கூறுவாய்'

(சூடாமணிப் படலம், சுந்தரகாண்டம்)

சொல்லக் கூடாத சொல்லைச் சொன்னதனால், பிராட்டி அனுபவித்த வேதனை சொல்லும் தரத்ததோ?

எது கல்வி?

ஒருவன் பேசும் வார்த்தைகள், அவனது கல்வித் தரத்தைப் பறைசாற்றி விடும் என்கிறான் கம்பன். சிறந்த கல்வியானது தவம், அன்பு, தருமம் ஆகியனவற்றை கற்றாருக்குத் தருதல் வேண்டும். அறிவை மட்டும் வளர்த்துக் கொள்ளும் முயற்சி கல்வியாகாது. அயோத்தி மாநகர் கல்வியில் சிறந்து விளங்கிற்று என்ற கருத்தைச் சொல்ல வரும்போது, அந்நகரில் கல்வி எத்தன்மைத்தாய் இருந்தது என்பதனை எடுத்துரைக்கிறான். கல்வி என்கிற விதையானது கேள்வி என்ற அழகிய கிளைகள் விட்டு வளர வேண்டும். அதில் செயற்கரிய தவம் என்னும் இலைகள் தழைக்க வேண்டும். அன்பு என்ற 'அரும்பு தோன்ற வேண்டும்; தருமம் என்னும் மலர் மலர்தல் வேண்டும்;' அதன் விளைவாகப் பேரின்பம் என்ற கனி கனிய வேண்டும். எனவே அறிவைப் பெருக்குவது கல்வியின் அடிப்படையாகுமே அல்லாமல், கல்வியின் இலக்காகாது. கற்பதனால் பெற்ற அறிவைக் கொண்டு, கேள்வி ஞானத்தால் அவ்வறிவை விளக்கம் செய்து, அவ்வறிவின் துணைகொண்டு அன்பைப் பெருக்கி, அறம் வளர்த்து, தவத்தில் நின்றால், பேரானந்தம் விளையும். அதுவே கல்வியின் உண்மையான பயனாகும். அத்தகைய கல்விதான் அயோத்தியில் சிறந்திலங்கிற்று என்கிறான் கம்பன். எனவே நம்மைச் சுற்றியிருக்கும் உலகத்தின் பல்வேறு கூறுகளையும், அவற்றின் தன்மைகளையும் அறிந்து வைத்திருக்கும் ஆற்றலைத்தான் கல்வி என்று பலரும் எண்ணிக் கொண்டிருக்கும் போது, கவிச்சக்கரவர்த்தி கம்பனோ, வெளிமுகப்

பார்வையும், படிப்பும் மட்டும் கல்வியல்ல. பெற்ற அறிவு ஒருவன் தன்னை உணரத் துணை செய்ய வேண்டும். பின் அவனது நல்லியல்புகளால் உலகம் பயன் அடைதல் வேண்டும். அதுவே கல்வி என்கிறான். இதனைத்தான் பாரதிப் புலவன் 'என்னைச் சுடர் மிகும் அறிவுடன் படைத்து விட்டாய் வல்லமை தாராயோ! இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே' என்று பராசக்தியிடம் வேண்டி நின்றான்.

கல்வித்தாம் வார்த்தை

கல்விக்கும் சொல்லுக்கும் மிக நெருக்கமான தொடர்பு உண்டு என்பதனை நாம் அறிவோம். ஒரு சம்பவத்தைக் கேள்விப்படுகிற போதோ, கண்ணால் காண நேரும் போதோ, உணர்ச்சி வசப்பட்டு ஒரு தலைப்பட்சமான விமர்சனத்தை, உண்மையை உணராமலும், உணர விரும்பாமலும் உதிர்ப்பவர் பலர். அதிலும் நாம் முற்றிலும் அறிந்து வைத்திருப்பவர்களின் செயற்பாடுகள், எத்தன்மைத்தாய் இருக்கும் என்ற தீர்மானமான கருத்து நமக்கு இருக்க வேண்டியது மிகவும் அவசியம். ஒருவரை நம்முடன் நட்பு வட்டத்தில் இணைத்துக் கொள்ளும் போது, தீர ஆலோசனை செய்து, அன்னாரின் குணபாவங்களை நன்கு ஆராய்ந்து பார்த்து, உறவு கொள்ளுதல் வேண்டும். அங்ஙனம் உறவு கொண்ட பின்னர், அன்னாரின் செயல்களைச் சந்தேகக் கண்கொண்டு பார்த்தல் சரியானதல்ல.

இராமகாதையில் வீடணன் இராமபிரானைச் சரண்புகு முன்னர் ஒரு பெரிய ஆலோசனைக் கூட்டமே நடைபெற்றது. பலரும் தங்கள் கருத்தினைத் தெரிவிக்க, அனுமனும் தன் கருத்துக்களை வீடணனுக்குத் சாதகமாகத் தெரிவித்த பின், சரணாகதியின் மகத்துவத்தைப் பற்றி இராமபிரான் ஒரு பெரிய விளக்கமே தருகிறார். இலங்கை அரசினை ஆளலாம் என்ற நோக்கத்தில் அல்ல, இராமனைச் சரண்புகுந்து பிறவி நோயைப் போக்கலாம்' எனக்கருதி தான் இராமனைச் சரணடைந்தான் வீடணன். தன் அன்பையும், தொண்டையும் இராமனுக்கு அர்ப்பணித்தான். அந்த

அர்ப்பணிப்பிற்குப் பின் எது இராமனுக்கு இன்பமோ, அதுவே தனக்கு இன்பமாக, எது இராமபிரானுக்குத் துன்பமோ அதுவே தனக்குத் துன்பமாக எண்ணி வாழ்ந்தான். இலங்கையின் அனைத்து ரகசியங்களையும், படைகள் பற்றிய செய்திகளையும், சேனா வீரர்களின் பலத்தைப் பற்றிய விபரங்களையும், இராவண புத்திரன் மேகநாதனின் வீரத்தையும், அவனது அபரிமிதமான மந்திர சாகசங்களைப் பற்றிய செய்திகளையும் இராமனுக்கு எடுத்துரைத்தான்.

போர் தொடங்கிய பின், இராமனுக்கு வெற்றி தேடித் தர பலவகையிலும் முயன்றவன் வீடணன். வீடணனின் துணை கிட்ட வில்லை எனில், இலக்குவன், இந்திரஜித்தனை இவ்வளவு தீரமாக எதிர்த்துப் போராடியிருக்க முடியுமா என்பதனையும் எண்ணிப் பார்க்க வேண்டும். போர்க்களத்தில் ஒரு கட்டத்தில் இந்திரஜித்தன் நாகபாசத்தை ஏவ, அந்த நாகபாசம் இலக்குவனின் தோள்களை வளைத்துக் கட்டியது. இந்திரஜித்தனின் நாகபாசத்தினால் வானர வீரர்கள் சாய்ந்தார்கள். இலக்குவனுக்கு ஏற்பட்ட துன்பத்தைப் பார்த்து அனுமனே கலங்கி நின்றான். போர்க்களத்தில் அனைவரையும் தன் அம்புகளால் அசையவிடாமல் மூடிவிட்டு, 'இலக்குவன் என்பவனது வாழ்வு இன்றோடு அழிந்தது அவனது வானர சேனையும் அழிந்தது. சொன்னதைச் செய்து முடித்தேன். இனி சோர்வை நீக்கிக் கொண்டு எஞ்சியதை நாளை முடிப்பேன்' என்று சொல்லி விட்டு அரண்மனைக்குச் சென்றான், இந்திரஜித்தன்.

களத்தில் இலக்குவன் அடைந்த இன்னலைக் கண்டு, வீடணன் யாதொன்றும் செய்ய அறியாமல் மத்துறு தயிர் போல மனம் கலங்கினான். எல்லோரையும் கொல்லத் துணிந்த இந்திர ஜித்தன் தன்னைக் கொல்ல வில்லையே! இராமனின் தம்பியான இலக்குவன் நாகபாசத்தால் கட்டுண்ட தன்மையைக் கண்டு, அவனிடம் அன்பு கொண்ட அனைவரும் விழுந்து விட்டார்கள். ஆனால் வீழ்ந்து படாமல் தனியாக நின்று கொண்டிருக்கும் தன்னைப் பற்றி உலகோர் என்ன எண்ணுவார்கள்? எப்படியெல்லாம் பேசுவார்கள், என்று

எண்ணி வீடணன் வருந்தினான். போர்க்களத்தில் இந்திரஜித்தனால் இலக்குவன் வீழ்த்தப்பட்டதை அடுத்து, 'இந்த வீடணன்தான் இந்திரஜித்தைக் கொண்டு இலக்குவனை வீழ்த்தியிருப்பான் என்று கூறுவார்களோ? நமது படைகளைக் கொண்டு போய் போர்க்களத்தில் நிறுத்தி, இந்திரஜித் நம் படைகளை வெல்லுமாறு செய்தான் என்று கூறுவார்களோ, இப்படியெல்லாம் அடுத்தடுத்து நிகழும் என்று கணக்குப் போட்டுத் தான், முன்னதாகவே இராமபிரானைச் சரண் அடைந்தான், என்பார்களோ? என்னவெல்லாம் பேசுவார்களோ' என்று எண்ணிக் கலங்கிய வீடணன் அறியாமல் ஒவ்வொருவரும் பேசக்கூடிய சொற்களை நாம் தடுத்தா நிறுத்த முடியும்? இல்லை பேசுகிறவர்கள் ஒவ்வொருவரிடமும், உண்மை நிலையை எடுத்துச் சொல்லி விளங்க வைப்பது தான் சாத்தியமாகுமா? எனவே உண்மைக்குப் புறம்பானதைப் பேசுபவர்களைத் தடுக்க முடியாது. அவரவர் பேசும் வார்த்தை அவர்கள் கல்வியைப் பொறுத்து அமையும் என்கிறான்.

' கொல்வித்தான், உடனே நின்று அங்கு என்பரோ 'கொண்டு போனான்
வெல்வித்தான், மகனை' என்று பகர்வரோ? விளைவிற்கு எல்லாம்
நல்வித்தாய் நடந்தான்.முன்னே என்பரோ? நயந்தோர் தம் தம்
கல்வித்து ஆம் வார்த்தை என்று கரைவித்தான் உயிரைக் கண்போல்'

(நாகபாசப் படலம், யுத்த காண்டம்)

13. நன்றிக்கு வித்தான நல்லொழுக்கம்

ஒருவர் செய்த உதவியை நினைந்து, அவர் தமக்கு நாம் என்றும் கடப்பாடு உடையோம் என்ற உணர்வுடன் வாழ்ந்து, உதவி செய்தவருக்குத் தேவைப்படும் போது ஓடிச் சென்று உதவிக்கரம் நீட்டி நன்றி உணர்வுடன் நடந்து கொள்பவர்கள் உலகில் மிகச் சிலரே. செய்ந்நன்றி பாராட்டும் பண்பு, ஏனைய நல்ல பண்புகளில் எல்லாம் தலையாயது; தாய் போன்றது என்ற கருத்தினை அறிஞர் பேட் குறிப்பிடும் போது "Cicero Calls gratitude the mother of virtues,

the most capital of all duties' என்று எடுத்துக் காட்டுகிறார். 'இறைவா! எனக்கு இப்பூமியில் ஒரு வாழ்வைத் தந்தாய். என் இதயத்தை நன்றி உணர்வால் நிரப்பு' என்கிறார் உலக நாடகாசிரியர் ஷேக்ஸ்பியர் " O Lord who lends me life, lend me a heart replete with thankfulness;. உதவியைப் பெறுபவர்கள் நன்றி உணர்வுடன் என்றென்றும் தங்களுக்கு உதவினாரை நினைவிற் கொள்ள வேண்டும், என்பதும் உதவி செய்தவர்கள் தாங்கள் செய்த உதவியை மறந்து விட வேண்டும் என்பதும், நமக்குச் சொல்லிவைக்கப்பட்டுள்ள பண்புகள்.

நன்றி எனும் நன்னெறி :

நன்றி உணர்வு என்னும் இந்த நலமிகு பண்பை, கம்பன் சீரிய வாழ்வியல் நெறியாக நமக்கு எடுத்துரைக்கிறான். வாலியையும் அவனது வலிமையையும் எண்ணிப் பார்க்கும் பொழுதெல்லாம், அஞ்சி அஞ்சி ஒளிந்து, ருசியமுக பர்வதத்தில் வாழ்ந்து கொண்டிருந்த சுக்ரீவனைத் தேடிச்சென்று, இராமன் நட்பு செய்து கொண்டான். அனுமன் சொல்ல, சுக்ரீவனுக்கும் வாலிக்கும் இடையில் உள்ள பகையினையும், சுக்ரீவன் தன் மனைவியை வாலியிடத்தில் பறி கொடுத்து நிற்கும் நிலையையும் இராமன் தெரிந்து கொள்கிறான். சீதாப்பிராட்டியை மீட்க வானர சைனியத்தின் துணையை நாடி வந்தவன் தான் இராமன். எனவே வானர சைனியத்தின் உதவியோடு வந்த காரியத்தை முதலில் முடித்துக் கொண்டு, பின்னர் சுக்ரீவனின் குறையைத் தீர்க்கலாம் என்று எண்ணி இருந்தால் கூடத் தவறில்லை. ஆனால் இராமபிரானோ, தன் தேவையையும் சுயநலத்தையும் தள்ளி வைத்து விட்டு, வந்த இடத்தில் சுக்ரீவன் துன்பத்தை முதலில் தீர்க்க வேண்டும் என்று எண்ணங்கொண்டான். 'தலைமையோடு தாரமும் இன்றே தருவேன்' என சுக்ரீவனிடம் சொன்ன சொல்லை இராமபிரான் வாலியை வீழ்த்தி நிறைவேற்றிக் காட்டினார். பின்னர் சுக்ரீவனுக்கு இழந்த அரசைக் கொடுத்து, தகுந்த அறிவுரையும் வழங்கிக் 'கார்காலம் வரும்போது வானர சேனையுடன் வருக' எனச் சொல்லி விடைகொடுத்து அனுப்பினான்.

காலங்கள் மாறிச் சுழன்று கார் காலமும் வந்தது. ஆனால் சுக்ரீவன் வந்து சேரவில்லை. புதிதாய்க் கிடைத்த அரசபோகத்திலும், மதுமயக்கத்திலும், மாதர் மயக்கத்திலும் மூழ்கிக் கிடந்தான். செய்ந்நன்றி மறந்தான். 'சொன்னபடி சுக்ரீவன் வந்து சேரவில்லை நன்றி மறந்தனன்' எனச்சொல்லி இராமபிரான் தன் சினத்தை வெளிப்படுத்தினார். 'வந்து சேர வேண்டிய கார்காலம் வந்தும் சுக்ரீவன் வரவில்லை. அவன் பெறுவதற்கு உரிய அரச செல்வத்தை, இராமனால் தான் பெற்றோம் என்று எண்ணிப் பார்க்கவில்லை. எனவே ஒழுக்கத்திலிருந்து தவறி விட்டான். தனக்கு உதவி செய்தவர்களுக்குத், தான் உதவி செய்ய வேண்டும் என்ற அடிப்படை அறத்தையும் மறந்து, தன் அரச வாழ்வில் மயங்கிக் கிடக்கிறான். இவ்வாறு நன்றி கொன்ற செயலால் நட்பினை நார் அறுத்தான். மெய்ம்மையைச் சிதைத்தான். கொடுத்த வாக்கையும் மீறி விட்டான். இத்தகைய நன்றி கொன்றவனைக் கொல்லுதல் கூட குற்றத்தில் சேராது' என்கிறான் இராமன்.

செம்மாந்த குணமுடைய இராமபிரானுக்குச் செய்ய வேண்டிய கடமை மறந்து நன்றியை மறப்பான் சுக்ரீவன், என்பதனை எண்ணிக் கூடப் பார்க்க இயலவில்லை. எனவே தான் இராமன் சினங்கொள்கிறான்.

***'நன்றி கொன்று, அரு நட்பினை நார் அறுத்து
ஒன்றும் மெய்ம்மை சிதைத்து உரை பொய்த்துளார்க்
கொன்று நீக்குதல் குற்றத்தில் தங்குமோ?
சென்று, மற்று அவன் சிந்தையைத் தேர்குவாய்'***

(கிட்கிந்தைப் படலம், கிட்கிந்தா காண்டம்)

எனவே செய்ந்நன்றி கொன்றவன், நட்பினை வேரறுத்தவனாகவும், ஒழுக்கத்தைச் சிதைத்தவனாகவும், வாக்குத் தவறியவனாகவும், அறநெறி பிறழ்ந்தவனாகவும் ஆகிறான் என்ற நெறியை இராமபிரான் எடுத்துரைக்கிறார்.

மறக்கலும் ஆமோ :

இலக்குவன் சினத்துடன் கிட்கிந்தைக்குப் புறப்பட்டான். இலக்குவனின் சீற்றத்தைக் கண்ட அங்கதன் தன் சிறிய தந்தையான சுக்ரீவனைத் தேடி ஓடினான். மதங்கொண்ட ஆண் யானையைப் போல் படுக்கையில் வீழ்ந்து கிடந்த சுக்ரீவனைக் கண்ட அங்கதன், அனுமனை அழைத்துக் கொண்டு தாரையிடம் சென்று இனி என்ன செய்வது என்று கேட்டபோது, தாரையும் செய்ந்நன்றி பாராட்ட வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தாள். செய்யத்தகாதனவற்றைத் துணிந்து செய்துவிட்டு, பின் அதனால் உண்டாகும் பின் விளைவுகளான, தீமையினை எளிதில் எப்படி விலக்கிக் கொள்ளலாம் என்று எண்ணமிட்டுக் கொண்டுள்ளீர்களே! செய்ந்நன்றி மறந்தவர்கள் உய்ந்ததாக உலகில் வரலாறு உண்டா? பேருதவி புரிந்தவர்களை அலட்சியப்படுத்துவது தகுதி உடையதாகுமா? ‘உய்திர் போலும் உதவி கொன்றீர்’ என்றாள். மெய்ம்மையிலிருந்து தவறி, செய்த நன்றியை மறந்தீர்கள்.

‘திறம்பினீர் மெய்; சிதைத்தீர் உதவியை;
நிறம் பொலீர்; உங்கள் தீவினை நேர்ந்ததால்,
மறம் செய்வான் உறின் மாளுதிர் மற்றினிப்
புறஞ்செய்து ஆவது என்? என்கின்ற போதின் வாய்

(கிட்கிந்தைப் படலம், கிட்கிந்தா காண்டம்)

அனுமனிடமும் அங்கதனிடமும் செய்ந்நன்றி குறித்துப் பேசுவதோடு நில்லாமல், இலக்குவனிடமும் பேசுகிறாள் தாரை. சினத்துடன் வந்த இலக்குவனிடத்தில் பிழை பொறுக்க வேண்டி, சுக்ரீவனின் நன்றி மறந்த செயல் வருத்தத்திற்குரியது எனச் சொல்லி, நன்றி மறந்தவன் இப்பிறவியில் வறுமையாளனாக மாறித் துன்புற்று, பின்னர் மறுமையிலும் அனைத்தையும் இழந்து நிற்பான் என்று அறம் உரைத்து இலக்குவனை சமாதானப்படுத்துகிறாள்.

'செம்மை சேர் உள்ளத்தீர்கள் செய்த பேருதவி தீரா;
வெம்மை சேர் பகையும் மாற்றி, அரசு வீற்றிருக்க விட்டீர்;
உம்மையே இகழ்வர் என்னின் எளிமையாய் ஒழிவதொன்றோ?
இம்மையே வறுமை எய்தி, இருமையும் இழப்பர் அன்றே'?

(கிட்கிந்தைப் படலம், கிட்கிந்தா காண்டம்)

நீயுமா மறந்தாய் !

இலக்குவன் அனுமனைப் பார்த்து 'நீயும் முன் நடந்தனவற்றை யெல்லாம் மறந்து விட்டாய் போலும்' என்று சொல்ல, அனுமனும் இலக்குவனின் சினத்தைத் தணிக்கும் பாவனையில் 'பிறர் செய்த நன்றியை மறந்தவருக்கு, அதனால் உண்டாகும் பாவத்தை ஒழிக்க வழியே கிடையாது என்றும் தாயையும், தந்தையையும், குருவையும், தெய்வத்தன்மை கொண்ட அந்தணர்களையும், பசுக்களையும், குழந்தைகளையும் கொலைபுரிவது மாபெரும் பாதகச் செயல். ஆயினும் அத்தகைய பாதகச் செயலைச் செய்பவர்களுக்குக் கூட விமோசனம் உண்டு. அந்தப் பாவத்தைத் தீர்த்துக் கழுவாய் தேடிக் கொள்ள வழியுண்டு. ஆனால் ஒருவர் செய்த உதவியை மறந்தவருக்கு ஒருநாளும் உய்வில்லை' என்றும் உரைக்கிறான்.

'சிதைவகல் காதல் தாயை, தந்தையைக், குருவைத், தெய்வப்
பதவி அந்தணரை, ஆவைப், பாலரை, பாவைமாரை,
வதை புரிகுநர்க்கும் உண்டாம் மாற்றலாம் ஆற்றல்; மாயா
உதவி கொன்றார்க் கொன்றானும் ஒழிக்கலாம் உபாயம் உண்டோ'?

(கிட்கிந்தைப் படலம், கிட்கிந்தா காண்டம்)

இக் கருத்தினைத் திருக்குறள் தெரிவிக்கும் போது செய்ந்நன்றி கொன்ற மகற்கு உய்வே இல்லை எனத் தெரிவிக்கிறது.

'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு'

கும்பனின் செய்ந்நன்றி :

செய்ந்நன்றி என்னும் பண்பிற்கு உறைவிடமாய் விளங்கியவன் கும்பகர்ணன். மலை போல் உயர்ந்த தோள்களை உடைய அரக்க வடிவத்திற்குள்ளும், எத்தனை மென்மையான நன்றி பாசம் ஆகிய உணர்வுகள். தனக்கு உதவி செய்தாருக்கு வேளைவரும் பொழுது பதில் உதவி செய்து, நன்றியைத் தெரிவிப்பது என்பது ஒருவகை. தன்னை உயர்த்தியவர்கள், தாழ்ந்த நிலைக்குத் தள்ளப்படும் போது, உடனிருந்து உயிர்த்தியாகம் செய்து நன்றியை நிலைநாட்டிக் கொள்வது மற்றொரு வகை. கும்பகர்ணன் இரண்டாவது வகையைச் சேர்ந்தவன். தன்னை வளர்த்து ஆளாக்கிய இராவணன் மேல், அவன் கொண்டிருந்த பாசம் அளவிடற்கரியது. இராவணன் தவறுதான் செய்கிறான் என்று தெரிந்தும், அவன் சீதையை விட்டு விட மாட்டானா என்று ஏங்கத்தான் முடிந்ததே தவிர, தவறு செய்த இராவணனைக் கும்பனால் வெறுக்க முடியவில்லை. முதல் நாள் யுத்தத்தில் தோற்றுப்போய் திரும்பிய இராவணன் கும்பகர்ணனை எழுப்பிக் கொண்டு வரும்படி ஆணை பிறப்பித்த போது, எழுந்த கும்பன் வந்து இராவணனை வணங்கினான். அவனுக்கு இராவணன் கவசத்தை அணிவித்துக் ‘குரங்குப் படையினை உடைய மானுடர் நகர்ப்புறத்தைச் சூழ்ந்து கொண்டு வெற்றியும் பெற்றனர் எனவே அவர்களோடு போரிட்டு அவர் தம் உயிரை உண்ண வேண்டிய வேலையைக் கும்பகர்ணன் ஆற்ற வேண்டும்’ என்று கூறினான். அதனைக் கேட்ட கும்பகர்ணன் ‘போர் தொடங்கி விட்டதா? சீதையின் துயர் இன்னும் தீரவில்லையா? வானம் வரை உயர்ந்தோங்கி நின்ற இராவணன் புகழ் தேய்ந்து விட்டதா? அரக்கர்களுக்கு அழிவு காலம் நெருங்கி விட்டதா!’ என்றெல்லாம் கேட்டு அங்கலாய்த்தான்.

‘ஆனதோ வெஞ்சமம்? அலகில் கற்புடைச்
சானகி துயர் இனம் தவிர்ந்தது இல்லையோ?
வானமும் வையமும் வளர்ந்த வான்புகழ்
போனதோ? புகுந்ததோ, பொன்றும் காலமே’?

(கும்ப கர்ணன் வதைப் படலம், யுத்த காண்டம்)

சீதையைச் சிறையினின்றும் விட்டு விட்டு, இராமனுடைய திருவடிகளிலே விழுந்து வணங்கி, ஐயத்திற்கு அப்பாற்பட்ட வீடணனோடு நட்புக் கொண்டு பழகுதலே, இனி நாம் செய்யத் தகுந்தது என்றான்.

'தையலை விட்டு அவன் சரணம் தாழ்ந்து, நின்
ஐஅறு தம்பியோடு அளவளாவுதல்
உய்திறம் அன்று எனின் உளது வேறும் ஓர்
செய்திறம் அன்னது தெரியக் கேட்டியால்'

(கும்பகர்ணன் வதைப் படலம், யுத்த காண்டம்)

அதனைக் கேட்டு இராவணன் சினத்தைக் காட்டி கும்பனிடம் சீறினான். கும்பனோ இராவணனின் அடிவணங்கி என் சொற்களைப் பொறுத்துக் கொள் என்று சொல்லிவிட்டு, 'போரிலே வெற்றி பெற்றுத் திரும்பி வருவேன் என்று என்னால் சொல்ல இயலாது. விதி என் பிடறியைப் பிடித்துத் தள்ளிக் கொண்டுள்ளது. போரில் நான் இறந்து போக நேரிடலாம். அங்ஙனம் நடந்தால் அதன் பிறகாவது சீதையை விட்டுவிடு. ஏனென்றால் என்னை அந்த வீரர்கள் வென்று விடுவார்களானால் உன்னையும் நிச்சயம் வென்று விடுவார்கள். எனவே என் உயிர் பறிக்கப்பட்டாலும் பரவாயில்லை. உன் உயிர் அவர்களால் பறிக்கப்படுதல் கூடாது. ஆகவே நான் மாண்ட பிறகாவது, சீதையை விடுதலை செய்து விடு' என்றான். தான் மாண்டு போனாலும் கவலையில்லை அண்ணன் வாழ வேண்டும் என்று எண்ணிய கும்பனின் எண்ணம் திண்ணமானது.

'வென்று இவண் வருவென் என்று உரைக்கிலேன்; விதி
நின்றது; பிடர் பிடித்து உந்த நின்றது;
பொன்று வென்; பொன்றினால், பொலன் கொள் தோளியை,
''நன்று'' என, நாயக விடுதி; நன்று அரோ'

(கும்பகர்ணன் வதைப்படலம், யுத்த காண்டம்)

எந்த ஒரு செயலையும் எண்ணிப்பார்க்காமல் செய்து விட்டு, அதன் விளைவுகளை அனுபவிக்கும் போது மட்டும் வருந்துவது பிழை என்பதனை 'பின்னை நின்று எண்ணுதல் பிழை' என்கிறான் கும்பகர்ணன். ஆறு நூறு சகடத்து அடிசிலையும், நூறு நூறு குடம் கள்ளையும் உணவாகக் கொள்பவன்; ஆறுமாதம் தூங்கிக் கிடப்பவன்; என்றெல்லாம் சொல்லப்படுகின்ற கும்பகர்ணன் 'நாளை நடக்கப் போவது என்ன' என்பதனைத் துல்லியமாய்க் கணிக்கும் ஞானம் பெற்றிருந்தான். அரக்கர் படை இராமனால் அழியும் எனச் சொன்னவன், துல்லியமாக இந்திரனை வென்ற மேகநாதன் இலக்குவன் கை அம்பினால் மரணம் அடைவான் என்று கணித்தான்.

'இந்திரன் பகைஞனும், இராமன் தம்பி கை
மந்திர அம்பினால் மடிதல் வாய்மையால்;
தந்திரம் காற்றுறு சாம்பல் பின்னரும்
அந்தரம் உணர்ந்து, உனக்கு உறுவது ஆற்றுவாய்'

(கும்பகர்ணன் வதைப் படலம், யுத்த காண்டம்)

கும்பனின் விழிகள் குருதிக் குளமாயின. இனி என் அண்ணனைக் காணப் பெறுவது நிகழுமோ என்றெண்ணி 'இற்றை நாள் வரை முதல் யான் முன் செய்தன குற்றமும் உள எனின் பொறுத்தி' என்றான். களத்தில் கும்பனைக் கண்ட இராமன் 'இவன்யார்?' என வீடணனிடம் வினவ, வீடணன் கும்பனைப் பற்றிய விவரங்களையெல்லாம் இராமனுக்கு எடுத்துரைக்கிறான். இராவணனின் செயல் தவறானது என்று எடுத்துச் சொல்லி, இராவணன் அதனை ஏற்றுக் கொள்ள மறுத்ததால், அவனுக்காக போரிட்டு உயிரை விட்டு விட முடிவு செய்துள்ள இராவணனின் 'தாழ்வு இலாத் தம்பி' என்றான். கும்பனைத் தங்களுடன் இணைத்துக் கொள்வதே சிறப்பு என்று எண்ணி இராமனது ஆலோசனைப்படி கும்பனை அழைத்துவரச் சென்றான் வீடணன். அவனைப் பார்த்து இராமனது திருவடியைச் சேர்ந்து, பெறுதற்கரிய பேற்றினைப் பெற்றாய் என நான் மகிழ்ந்திருக்கும் போது,

சிந்தையில் தெளிவில்லாதவனைப் போல் ஏன் மீளவும் திரும்பி வந்தாய். 'அமுது உண்பாய் நஞ்சு உண்பாயோ' என்றான் கும்பன். அதனைக் கேட்ட வீடணன் 'எனக்கருள் புரிந்த இராமன் உனக்கும் அருள் புரிவான்' அவன் பிறவிப் பிணிக்கு மருந்தாவான். அவன் மண்ணுலக வாழ்விற்கும் மேம்பட்ட மோட்ச வாழ்வினைத் தரவல்லவன். தீய செயலைச் செய்பவர்கள் யாராய் இருந்தால் தான் என்ன, உறவினர், உடன்பிறந்த சகோதரன் யாராக இருப்பினும், தீமை புரிபவர்களின் உறவை முறித்துக் கொள்வது தான் அறம். ஒருவன் அறத்தை நிலை நாட்ட பந்த பாசத்தைத் துறக்கலாம் . ஆனால் பந்த பாசத்தை முன்னிறுத்தி அறத்தைத் துறந்து விடுதல் கூடாது. பாவத்தைச் செய்பவன் பாசமிகு அண்ணன், எனவே அவனோடு நான் அழிந்து தான் போவேன் என்று சொன்னால் உலகம் அதனை ஏற்குமா? உடலில் ஒரு கட்டி தோன்றுமானால், அதன் நச்சானது உடலைப் பாதித்து விடக்கூடாது என்ற எண்ணத்தில், அக்கட்டியை அறுத்து நீக்கி, அவ்விடத்தை மருந்து கொண்டு ஆற்றுவது உலக வழக்கு. எனவே தீயவனான இராவணனை விட்டு விலகி, இராமபிரானைச் சேர்வாயாக. அந்த இராமன் அருள் செய்தால், நீ அழிவில்லாத ஆயுளைப் பெறுவாய். உன் சாபமும் நீங்கும். நீ இலங்கைச் செல்வத்தைப் பெற்றவனாவாய். அப்பொழுது முனிவரெல்லாம் உன்னிடம் கருணை காட்டுவார்கள். உனக்குப் பகைவர்களே இருக்க மாட்டார்கள். எனவே இராமனைச் சேர்தலே உனக்கு நலம் பயக்கும் என்று சொல்லி, பழங்களை அனுபவிக்க வேண்டிய காலத்தில் எவனாகிலும் ஒருவன் வெறும் பூக்களைக் கொய்து கொண்டு இருப்பானா' கனிவரும் காலத்து ஐய பூக்கொய்யக் கருதலாமோ?' என்றான்.

அறமா? அன்பா? :

பொறுமையாக வீடணன் உரைத்த அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்தான் கும்பகர்ணன். ஆறுமாத காலம் உறங்கிக் கொண்டிருக்கும் அவன் சாபம் இராமபிரானால் விமோசனமாகும், என்ற வீடணனின் வார்த்தைகள் அவனை வசியப்படுத்த இயலவில்லை. 'இன்று நீ பகைவர்கள் என்று எண்ணிக்

கொண்டிருக்கும் தேவர்கள், நீ, இராமனைச் சரண் புகுந்தால் நாளை உனக்கு நண்பர்கள் ஆவர் என்ற வாசகமும் கும்பனிடத்தில் எடுபடவில்லை. இலங்கைச் செல்வம் உன்னதாகும்' என்று சொன்ன வார்த்தைகளுக்கு கும்பன் அசைந்து கொடுக்கவே இல்லை. 'அழிவில்லாத ஆயுளைப் பெறுவாய்' என்று சொல்லப்பட்ட செய்தியும் அவனைப் பாதிக்கவில்லை. 'அறத்திற்காக பாசத்தைத் துறந்து விடு, இராமனுக்காக, இராவணனை விட்டு விடு' என்று சொன்ன வாசகங்கள் தான் பாசத்தின் பிழம்பாக இருந்த கும்பகர்ணனை வெகுவாகப் பாதித்தது. அறத்தின் பக்கம் சென்று சேர்வதா! இல்லை, தீயவனாகவே இருந்தாலும் அண்ணனுக்கே பாசத்தினால் அரணாக இருப்பதா? என்ற மனப்போராட்டம் கும்பனிடம் கொஞ்சமும் இல்லை. ஏன் எனில், அவன் இராவணனுக்காக எதையும் துறக்கச் சித்தமாயிருந்தான். பாசப்பிணைப்பினை அறுத்தெறிவது என்பதனை அவனால் கற்பனை கூடச் செய்து பார்கக முடியவில்லை. அவனைப் பொறுத்த வரையில் 'அறம்' என்ற சொல்லின் பொருளை விட 'அன்பு' என்ற சொல்லின் பொருளைத் தான் அதிகம் அறிந்து வைத்திருந்தான்.

அறம் உணர்ந்த வீடணனின் பேச்சில் ஒரு திட்டவட்டமான தெளிந்த சிந்தனை வெளிப்படுவதைப் போல, கும்பகர்ணனின் சொல்லிலும் முடிவிலும் தெளிவும், நியாயமும் வெளிப்படுகிறது. உண்பதையும் உறங்குவதையுமே தொழிலாகக் கொண்டவன் எவ்வளவு தெளிவாகப் பேசுகிறான் என்று நம்மை வியக்க வைக்கிறான். எண்ணிய எண்ணம் திண்ணமாக இருக்கும் போதுதான், பேசும் பேச்சில் தெளிவு பிறக்கும். கும்பனின் தீர்மானமான முடிவை, அவன் தெளிந்த பேச்சு எடுத்துக்காட்டுகிறது.

தோன்றி மறையும் வாழ்வு :

'இந்த உலக வாழ்வு நீர்மேல் எழுதிய கோலம் போன்றது. மிகக் குறுகிய காலத்தில் அழிந்து வீழப்போகும் உடலையும், உயிரையும் கருதி அண்ணனைக் கைவிடுவதா! அருமை பெருமையாய் வளர்த்து ஆளாக்கி போர்க்கோலம் பூண வைத்தவனல்லவா' என்று எண்ணி தன் முடிவை அச்சமின்றி எடுத்துரைத்தான்.

'நீர்க்கோல வாழ்வை நச்சி நெடிது நாள் வளர்த்துப் பின்னை
போர்க் கோலம் செய்து விட்டாற்கு உயிர் கொடாது அங்குப் போகேன்'

(கும்பகர்ணன் வதைப்படலம், யுத்த காண்டம்)

இராமனைச் சென்று சேர்வது, அழிவில்லாத தருமத்தை மேற்கொண்ட வீடணனுக்கு ஏற்றதாக இருக்கலாம். ஆனால் இழிவான மரணத்தைத் தழுவிக் கொள்வதும், அண்ணனுக்கென்று ஆகும் போது, தனக்குப் புகழுடையதே ஆகும் என்கிறான் கும்பன். இராவணன் தனக்காற்றிய உதவிகளையும், அவன் இழைத்துக் கொண்டிருக்கும் தவறுகளையும், அதனை மாற்ற இயலாத தன் இயலாமையையும், இராவணன் விரைவில் அழிந்து படப்போகின்றான் என்ற அபாயத்தையும் சீர்தூக்கிப் பார்த்து கும்பன் உரைத்த அறம் ஒருவகையில் அனைவராலும் ஏற்றுக் கொள்ளத் தகுந்ததே. பின் விளைவுகளைப் பற்றிய எண்ணமில்லாமல் தலைவன் தவறினைப் புரிகின்றான். அத்தகைய தவறினை ஆற்ற விடாமல் தடுத்து, அவனைத் திருத்த முடியுமானால் திருத்துவது நல்லது. அது இயலாததாயின், அவனைக் கை நெகிழ்ந்து விட்டு, அவனுடைய நேரடிப் பகைவர்களிடம் போய் உறவு வைத்துக் கொள்வது முறையானதாகாது. அவன் திருந்துதற்கு வழி ஏற்படவில்லை எனில், 'அவன் அளித்த உணவை உண்டிருக்கிறோமே' என்பதனை மனதிற் கொண்டு அவனுக்காகக் களத்தில் இறங்கி, அவனது மாற்றாருடன் போரிட்டு அன்னமிட்டவர்களுக்காக உயிர்த்தியாகம் செய்வதே செஞ்சோற்றுக் கடன் தீர்க்க வேண்டியவன் செய்ய வேண்டியது ஆகும்' என்கிறான்.

'கருத்து இலா இறைவன் தீமை கருதினால், அதனைக் காத்துத்
திருத்தலாம் ஆகின் அன்றோ திருத்தலாம்? தீராது ஆயின்,
பொருத்து உறு பொருள் உண்டாமோ? பொரு
தொழிற்கு உரியர் ஆகி,
ஒருத்தரின் முன்னம் சாதல், உண்டவர்க்கு உரியது அம்மா'

(கும்பகர்ணன் வதைப்படலம், யுத்த காண்டம்)

உருக்கும் உணர்வு :

'மூவுலகங்களையும் ஒரு சேர ஆட்சி செய்தவன், கயிலை மலையைப் பெயர்த்தெடுத்த தோள்களை உடையவன், தேவாதி தேவர்களும் மற்றவர்களும் காணும்படியாக, மண்மேல் ஒரு தம்பி கூட உடனில்லாமல், ஒரு அனாதையைப் போல மாண்டு கிடப்பானோ? எமபாசம் அவனைப் பிணிக்கும் போது, இதற்கு முன் அவன் வீரத்திற்கு அஞ்சி ஒளிந்த பகைவர்கள் எல்லாம் நகைக்க மாட்டார்களோ? எமனது வலிமையையும் அடக்கி ஆளும் ஆற்றல் உடைய நான், செம்பினால் உருவான மதிலை உடைய இலங்கையின் செல்வத்தை நிலையானது என்று எண்ணிக் கொண்டு, அதனை அடைவதற்காக, என் தமையனின் உயிரைப் போக்கும் பகைவனை கை கூப்பி வாழ்வேன் என்றா கருதினாய்!'

'செம்பு இட்டுச் செய்த இஞ்சித் திருநகர்ச் செல்வம் தேறி
வம்பு இட்ட தெரியல் எம்முன் உயிர் கொண்ட பகையை வாழ்த்தி
அம்பு இட்டுத் துன்னம் கொண்ட புண்ணுடை நெஞ்சோடு ஐய!
கும்பிட்டு வாழ்கிலேன் யான், கூற்றையும் ஆடல் கொண்டேன்'

(கும்பகர்ணன் வதைப்படலம், யுத்த காண்டம்)

'பாற்கடலில் தோன்றிய ஆலகால விடத்தைக் கண்டு அஞ்சி ஓடிய தேவர்களைப் போல், குரங்குப் படைகள் நிலை கெட்டு ஓடச் செய்வேன்' என்று சொன்னான் கும்பகர்ணன். பின் அவன் வீடணனைப் பார்த்து, 'நான் சொல்ல வேண்டியனவற்றை எல்லாம் சொல்லி முடித்து விட்டேன். நீயோ இன்னும் என்னவெல்லாம் சொல்லலாம் என எண்ணிக் கொண்டிருப்பனைப் போல் நின்று கொண்டிருக்கிறாய். இன்னும் எத்தனைச் சொற்களைச் சொன்னாலும் என் கருத்திலும் முடிவிலும் எந்த மாற்றமும் ஏற்படாது என்பதனை மட்டும் தெளிவாகத் தெரிந்து கொள்' என்றான். 'இனி ஓர் மாற்றம் விளம்பினால், விளைவு உண்டு என்று சூழ்க்கிற்பாய் அல்லை' என்கிறான்.

தான் உணர்ந்ததையும், தனக்குச் சரியெனப் பட்டதையும் துணிவாக எடுத்துச் சொன்ன கும்பகர்ணன், வீடணனுக்கு விடை கொடுத்தனுப்பும் போது ஒரு தத்துவ ஞானியாகவே காட்சியளிக்கிறான். 'உரிய காலத்தில் ஆக வேண்டியது ஆகியே தீரும்; அழிய வேண்டியது அதற்குரிய காலத்தில் அழிந்து சிதறிப்போகும். அழியப் போகின்ற ஒன்றை அருகிருந்து பாதுகாத்தாலும் அது அழிந்து போவது உறுதி. எனவே அழிந்துபடப் போகும் எங்களைப் பற்றி கவலைப்படாமல், இராமபிரானைச் சென்று சேர்ந்து, உய்யும் வழியைப் பார்' என்றான் கும்பகர்ணன்.

'ஆகுவது ஆகும், காலத்து; அழிவதும், அழிந்து சிந்திப்
போகுவது; அயலே நின்று போற்றினும், போதல் திண்ணம்;
சேகு அறத் தெளிந்தோர் நின்னின் யார் உளர்? வருத்தம் செய்யாது,
ஏகுதி; எம்மை நோக்கி இரங்கலை; என்றும் உள்ளாய்!'

(கும்பகர்ணன் வதைப்படலம், யுத்த காண்டம்)

எனவே இர்ர்ம்பிரானிடம் வந்து சேர்ந்தால், வளமான நன்மைகள் தானாக வந்து சேரும், என வீடணன் எடுத்துச் சொல்லியும், சிறிதும் மாற்றமில்லாத சித்தத்தை உடையவனாக இருந்த கும்பகர்ணன் தான், 'நன்றி' என்ற சொல்லை உச்சரித்த மாத்திரத்தில், மலை போன்ற தோள்களோடும், பாசப் பெருக்கில் குளமான கண்களோடும், நம் மனத்திரையில் பளிச்சிடுகிறான். உயிர்த்தியாகம் செய்து, தன் நன்றியை நிலைப்படுத்திக் கொண்ட உன்னதமான கதாபாத்திரம் கும்பகர்ணன்.

அனுமன் ஆற்றிய உதவி

தகுதியாலும், பண்பாலும் உயர்ந்த பிராட்டியே, நன்றி பாராட்டுவதின் சிறப்பைத் தன் சொல்லாலும் செயலாலும் நமக்கு எடுத்துரைக்கிறாள். பெரியோர்கள் தங்கள் சொல்லாலும் செயலாலும் நமக்குத் தரும் பாடங்கள், நம் வாழ்வு நலத்திற்குச் சிறந்த வழிகளாக நின்று நமக்கு உதவுகின்றன. இராம இராவண

யுத்தத்தில் இராவணன் மடிந்த பின்னர், இலக்குவன் வீடணனுக்கு முடிசூட்டுகிறான். அனுமனோ இராமனது வெற்றிச் செய்தியினைத் தெரிவிப்பதற்காக, சீதா தேவியார் சிறை வைக்கப்பட்டிருந்த அசோக வனத்தைச் சென்றடைந்தான். தீய செயல்களை கட்டவிழ்த்து விட்டுக் கொண்டிருந்த இராவணனின் தீமைக்கு ஒரு முடிவு வந்து விட்டது என்றான். மகிழ்ச்சிப் பெருக்கில் மங்கலம் பாடினான்.

'ஏழை, சோபனம்! ஏந்திழை, சோபனம்!
வாழி, சோபனம்! மங்கல சோபனம்!
ஆழி ஆன அரக்கனை ஆரியச்
சூழியானை துகைத்தது சோபனம்!'

(மீட்சிப்படலம், யுத்த காண்டம்)

என்று ஆனந்தத் தாண்டவமாடினான். சீதா தேவியோ பேச்சற்றவளாய் அமைதி காத்தாள். அதனைக் கண்ட அனுமன் மறுமொழி சொல்லாமல் சீதை மௌனமாயிருப்பது, பரிபூரணமான ஆனந்தத்தினால் உண்டாகும் பேச்சற்ற நிலையா? இல்லை அனுமன் சொன்ன செய்தியைக் கேட்டு இப்படியும் நிகழ வாய்ப்புண்டா என்று எண்ணிப் பார்க்கும் வியப்பா? என எண்ணமிட்டான். தேவியோ மகிழ்ச்சி மிகுதியினால் உண்டான திகைப்பிற்குத் தான் ஆளானதால், அமைதி காக்க நேர்ந்தது என்று சொல்லி அனுமன் தனக்குச் செய்த உதவிகளையெல்லாம் எண்ணிப் பார்த்தாள்.

பிராட்டி சொன்ன நன்றி :

முதன்முதலாக அசோக வனச் சிறையில் வந்து சீதா தேவியைச் சந்தித்து, அவளை மீட்க இராமபிரான் வந்தே தீர்வார் என்ற நல்ல சேதியினைச் சொல்லி நம்பிக்கை வளர்த்தவன் அனுமன். பின் சொன்ன சொல்லைத் தவறாது காத்து இராவணனைத் தொலைக்க அத்தனை உதவிகளையும் புரிந்தவன் அனுமன். பின்னர் இராம இராவண யுத்தத்தில், 'இராமர் வென்று கொடி நாட்டினார். தீமை அழிந்தது' என்ற நல்ல செய்தியைச் சீதைக்குச் சொல்லி,

மகிழ்வு சேர்த்தவனும் அனுமன். இத்தகைய பேருதவியைச் செய்த அனுமனுக்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்' என்று பிராட்டி தவிக்கிறாள். எப்படியும் அனுமனுக்கு நன்றி பாராட்ட வேண்டும் என்ற எண்ணம் பிராட்டிக்கு ஏற்படுகிறது. ஆபத்துக் காலத்தில் பேருதவி புரிந்த அனுமனுக்கு எதைப் பரிசாகத் தந்து நன்றியைத் தெரிவித்துக் கொள்வது? என்று எண்ணிப் பார்க்கிறாள். அனுமன் ஆற்றிய உதவிக்கு மூன்று உலகங்களையும் கூடப் பரிசாகத் தரலாம் மூவுலகங்களும் பரிசாக தரப்பட்டாலும் அது அனுமன் ஆற்றிய உதவிக்கு ஈடாகுமா? உலகங்கள் இன்று இருக்கும்; நாளை அழியும். அழியத் தகுந்த உலகங்களையா அனுமனுக்குப் பரிசாகத் தருவது! அனுமனுக்கு வேறு என்னதான் பரிசு தருவது என்றெல்லாம் எண்ணமிட்டாள் பிராட்டி. 'அனுமனது ஆற்றலையும், தொண்டினையும் ஈடுகட்டுகின்ற எந்த ஒரு பரிசுப்பொருளும் உலகில் இல்லை. எனவே நன்றி பாராட்டு முகத்தான் என் தலையினைத் தாழ்த்தி அனுமனை நான் தொழுகின்றேன். அதுவே நான் பாராட்டும் நன்றியாக அமையட்டும்' என்கிறாள் பிராட்டி. திருமாலின் மார்பில் நீங்காத திருவாக இடம் பெற்றிருக்கும் திருமகளின் வடிவான பிராட்டியே ஒரு தொண்டனுக்கு நன்றி பாராட்டும் முகத்தான் அவனைத் தொழவும் தயாரானாள் என்றால், நன்றி உணர்வின் மகத்துவம் தான் எத்தகையது. பிராட்டியும் தொழ விரும்பும் தூய தொண்டன் அனுமனின் மகிமை தான் எவ்வளவு!

'உலகம் மூன்றும் உதவற்கொரு தனி
விலை இலாமையும் உன்னினென்; மேல் அவை
நிலை இலாமை நினைந்தனென்; நின்னை என்
தலையினால் தொழ உம் தகும் தன்மையோய்!'

(மீட்சிப் படலம், யுத்தகாண்டம்)

என்ற கவிச்சக்கரவர்த்தியின் பாடல் அழியாத அமரத்துவம் பெற்ற பாடல்.

14. மன்னிப்பு என்னும் இறைப் பண்பு

இராமனும் சுக்ரீவனும் :

சீதையைப் பிரிந்து இருந்த இராமனின் சோகம் முழுவதையும் அறிந்தவன் சுக்ரீவன். சீதை எங்கிருக்கிறாள் என்பதனைக் கண்டறிய வானர சைனியங்களின் துணை வேண்டும் எனக்கருதித்தான் சுக்ரீவனைத் தேடி இராமபிரான் வந்தார். வந்த இடத்தில் சுக்ரீவனின் சோகத்தை அனுமன் வாயிலாக அறிந்து கொண்டார். மாற்றானிடத்தில் தன் மனைவியைப் பறி கொடுத்து விட்ட மகத்தான துன்பத்தையும், மயில் போன்ற சீதை எப்படியெல்லாம் மருகி நிற்பாள் என்ற துயரத்தையும் தற்காலிகமாக தனக்குள் தாங்கிக் கொண்டு சுக்ரீவனின் சோகத்தைத் துடைக்க விழைந்தான் இராமன். தங்கள் துயரைப் பெரிது என எண்ணாமல், தம்மைச் சார்ந்தவரின் துயரைப் பெரிதெனக் கருதி அதனை நீக்க விழைவுகொள்ளும் சான்றாண்மை இராமனின் குலச் சொத்து. எனவே சுக்ரீவனுக்கு முதலில் உதவிக் கரம் நீட்டினான். வாலியை வதம் செய்யத் துணைபுரிந்தான். பின்னர் 'கார்காலம் படைகொண்டு வா' எனச் சொல்லி விட்டு பொறுமையுடன் காத்திருந்தான்.

கார்காலமும் வந்தது. கதிரவன் மகன் வரவில்லை. செய்ந்நன்றி மறந்தவன் என்று இராமன் கொதித்தான். வாழ்வில் மயங்கினான் என்றான். சொன்ன சொல்லை நிறைவேற்றாவிடில் சுக்ரீவனுக்குத் தன் அம்பால் பதில் சொல்வேன் என்றான் இராமன். இலக்குவன் சீற்றங்கொண்டு புறப்பட்டான். நன்றி மறந்தவர் வாழ்ந்த துண்டோ எனச் சொல்லி சுக்ரீவனுக்குக் கடமையை உணர்த்தி, அவனை இராமபிரானிடம் அழைத்துக் கொண்டு வந்தான். சுக்ரீவனின் நன்றி கெட்ட தனத்தை எண்ணி சீற்றம் கொண்டிருந்த இராமபிரானின் சினம் சுக்ரீவனைப் பார்த்த மாத்திரத்தில் மாறிப் போயிற்று. காலம் தாழ்த்திய சுக்ரீவனுக்கும், இராமபிரான் கருணை முகம் காட்டினார். சான்றோரின் சினம் எப்படிப்பட்ட தன்மை உடையது என்று சொல்ல வரும் போது நீர் கிழிய எய்த வடுப்போல்' என்றனர். சுக்ரீவனைப் பார்க்கும் வரையில் இராமனுக்கு சுக்ரீவன்

நன்றி மறந்து விட்டான் என்ற சினம் இருந்தது. பார்த்தவுடன் மறைந்து விட்டது. தண்ணீரில் கிழித்த கோடு எப்படி உடனே மறைந்து ஒன்றாகுமோ அதுபோல் சான்றோரின் சினம் தோன்றிய வேகத்திலேயே மறைந்து விடும்.

அனுமனை, படைகளை அழைத்து வருமாறு சொல்லி விட்டு இலக்குவனுடன் இராமனைக் காண சுக்ரீவன் புறப்பட்டான். திருமாலான இராமனைக் கண்ட மாத்திரத்தில் தன் மார்பில் அணிந்த மணி மாலைகளும், முத்து மாலைகளும் தரையில் படும் படி செந்தாமரை அனைய இராமனின் தாள் மலர்களைத் தன் தலையால் வணங்கினான்சுக்ரீவன். இராமன் சுக்ரீவனைத் தழுவிக் கொண்டான். சுக்ரீவன் மேல் உள்ள சினம் முழுதும் தணிந்தது. முன்பு போலவே அன்பு பாராட்டிச் சுக்ரீவனைத் தன் அருகில் அமர்த்திக் கொண்டான் இராமன்.

'தீண்டலும், மார்பிடைத் திருவும் நோவுற,
நீண்ட பொன் தடக் கையால் நெடிது புல்லினான்;
மூண்டெழு வெகுளி போய் ஒளிப்ப, முன்புபோல்
ஈண்டிய கருணை தந்து. இருக்கை யேவியே'

(கிட்கிந்தை படலம், கிட்கிந்தா காண்டம்)

சுக்ரீவனது ஆணைச் சக்கரத்தையும், அரசாட்சியையும் பற்றி அவனிடம் விசாரிக்க, சுக்ரீவனோ இராமபிரானின் அருளைப் பெற்ற தனக்கு எந்தக் குறையுமில்லை எனச் சொன்னான். இராமபிரானின் அருளால் பெற்ற அரச செல்வத்தில் திளைத்துவிட்டு, இராமபிரானின் ஆணையை மீறியமைக்காக சுக்ரீவன் வருந்தினான். சுக்ரீவன் செய்த காலதாமதத்தினால் உண்டான வருத்தம் முழுவதையும் மறந்தவனாக இராமபிரான், 'நீ என்னிடம் உரிமையுடன் நடந்து கொண்டாய். நீ எனக்குப் பரதனைப் போலவே ஒரு இளைய தம்பி, அங்ஙனமிருக்க நீ வருத்த முற்றுப் பேசவும் வேண்டுமோ? சீதையை மீட்கும் பணியை எப்படியாகிலும் நீ செய்து முடிப்பாய் என்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கிறது' என்று அன்புடன் மொழிந்தான்.

'திருவுறை மார்பனும், தீர்ந்ததேயும் வந்து
ஒருவ அருங் காலம் உன்னுரிமையோ ருரை—
தருவினைத் தாகையின் தாழ்விற்று ஆகுமோ?
பரதன் நீ இனையன, பகரற் பாலையோ'

(கிட்கிந்தைப் படலம், கிட்கிந்தா காண்டம்)

பொதுவாக மனிதர்கள் தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதில் காட்டும் அவசரத்தை, மற்றவர்கள் தேவைகளை நிறைவேற்றுவதில் காட்டுவதில்லை. இராமபிரான் தன் தேவைக்கு இரண்டாமிடமும், சுக்ரீவன் தேவைக்கு முதல் இடமும் அளித்து நிற்கிறார்.

பொங்கி வந்த சினத்தை மாற்றிக் கொண்டு உடனடியாக தவறு செய்தவனிடத்தில் பரிவு கூர்வது தெய்வீகப் பண்பாகும். எனவே தான் தவறு செய்வது மனித குணம் மன்னிப்பது தெய்வ குணம் என்றனர். நாம் அன்பு செலுத்தும் வரை மன்னித்துக் கொண்டே இருப்போம்; அன்பு வற்றிப் போகும் போது மனிதன் மன்னிக்கும் பண்பை இழந்து விடுகிறான். ஒருவரையும் மன்னித்து பழக்கப்படாதவன் வாழ்வில் ஒரு சுவையான அனுபவத்தை இழந்தவனாக ஆகிறான் என்கிறார் லவேடர்" He who has not forgiven an enemy has never yet tasted one of the most sublime enjoyments of life' அன்பற்றவர்களும் தவறு செய்பவர்களும் தான் மற்றவர்களை மன்னிக்கத் தயங்குவார்கள்.

எனவே இராமபிரான் சுக்ரீவனை நேரில் பார்த்தவுடன் 'என் துன்பத்தைக் கூட பெரிதெனக் கருதாமல் உனக்கு உதவினேனே! நீயோ வாழ்வு வந்த காரணத்தால் கடமையை மறந்தாய்; நட்பைச் சிதைத்தாய்; நன்றி கொன்றாய்' என்று கொதித்து எழாமல், அவனைத் தழுவிக் கொண்டார் என்றால் இராமபிரானின் 'மன்னிக்கும் மனோபாவம்' என்ற தெய்வீகப் பண்பின் பின்னணியாக ஆழமான அன்பு இருந்தது. சுக்ரீவனை 'நீ எனக்குப் பரதன் போலல்லவா' என்று சொன்ன இராமபிரானின் வாசகத்தில் தான் எத்தனை பொருள். சுக்ரீவனை இதைவிடப் பெருமையாக யாரும் சொல்லி விட முடியாது.

சீதையும் அரக்கியரும் :

அசோக வனத்தில் சீதையைச் சந்தித்து, இராவணன் அழிந்து இராமன் வெற்றி பெற்ற செய்தியினை அனுமன் தெரிவிக்கிறான். மகிழ்ச்சிப் பெருக்கில் சீதா தேவியார் அனுமனைப் பார்த்து 'வேண்டும் வரம் கேள்' எனச் சொல்ல அனுமனும், திரிசடையைத் தவிர ஏனைய அரக்கப் பெண்டிரை எல்லாம் எரித்து அழிக்க விரும்புவதாகத் தெரிவித்தான்.

'எனவுரைத்து திரிசடையாள் எம்மோய்!
மனவினில் சுடர் மா முக மாட்சியாள்-
தனை ஒழித்து, இவ்வரக்கியர் தங்களை
வினையினில் சுட வேண்டுவென் யான் என்றாள்'

(மீட்சிப் படலம், யுத்த காண்டம்)

சீதையைத் தகாத சொற்களால் வசைமாறிப் பொழிந்து, 'சீதையை விழுங்கி விடுவோம்' என்று அச்சமூட்டிய அரக்கிகளைக் கூரிய நகங்களால் பிளந்து, கூற்றுவனுக்கு இரையாக்குவேன் என்று அனுமன் கூறினான். அரக்கியரின் குடலைப் பறித்து, உடலைச் சின்னா பின்னம் செய்வேன் என்று அனுமன் கூற, அதுகேட்ட அரக்கியர் தாயே உன் திருவடிகளே எங்களுக்கு அடைக்கலம் எனச் சீதையிடம் அடைக்கலம் அளிக்க வேண்டினர். அதனைப் பார்த்த சீதாதேவி அவர்களை 'அஞ்சேல் அஞ்சேல்' எனச் சொல்லி அபயம் அளித்தாள். பின்னர் அனுமனைப் பார்த்து, அனுமனே! இந்த அரக்க மாதர், தங்கள் தலைவனான இராவணனின் கட்டளைப்படி, கடுஞ்சொற்களை உதிர்த்தனர். அவர்களாக எனக்குத் துன்பம் தரவில்லை. அத்தகைய கடுஞ்சொற்களை உதிர்த்தனரே அல்லாமல், வேறு தீமைகள் எதையும் செய்யவில்லை. 'எய்தவனிருக்க அம்பை நொந்து பயன் என்ன?' என்பதைப்போல் தங்கள் அரசனின் கட்டளையின் படியே அவர்கள் நடந்தனர் என்றாள். தன்னைத் துன்புறுத்தியவர்களையும் மன்னிக்கும் மனோபாவம் பிராட்டியிடம் நிரம்ப இருந்தது. அசோக வனத்தில் அரக்கியர் சூழ சீதாதேவி இருந்த கோலத்தையும், அரக்கியர் சீதையை அதட்டியும் மிரட்டியும்

இராவணனுக்கு அடிபணியுமாறு அச்சுறுத்திய நிலையினையும் தன் கண்களால் நேருக்கு நேர் கண்டவன் அனுமன். எனவே தான் 'சீதைக்குக் காவலாக அருகிருந்து சீதைக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டிருக்கும் திரிசடையைத் தவிர, அனைத்து அரக்கிகளையும் அழித்து ஒழிப்பேன்' எனக் கோபாவேசம் கொண்டான். ஆனால் சீதையோ அந்த அரக்கியருக்கும் இரக்கம் காட்டத் தயாரானாள்.

சீதை கேட்ட வரம் :

நல்லவர்களுக்குத் துன்பம் நேருகின்ற பொழுது, அத்துன்பத்திற்கு வேறுயாரும் காரணமல்ல நம் ஊழ்வினை தான் காரணம் என்று எண்ணி துன்பத்தின் பொறுமையாகச் சகித்துக் கொள்வர். சீதாதேவியும் தன் துன்பங்களுக்கெல்லாம் ஊழ்வினை தான் காரணம் என்றும் தான் அனுபவிக்கும் துக்கம் தீவினைப் பயனால் உண்டானது என்றும் திட்டவட்டமாகக் கூறி அனுமனது மனத்தை மாற்றினாள். அடுக்கடுக்காகக் கானகத்திலும், இலங்கையின் அசோக வனத்திலுமாக அனுபவித்துக் கொண்டிருக்கும் அத்தனை துயரங்களுக்கும் மூலகாரணமான கூனியை விடவா இந்த அரக்கியர் கொடுமையானவர் என்ற ஒரு கேள்வியையும் பிராட்டி எழுப்புகிறாள். எப்பொழுதுமே நிகழ்ந்து முடிந்தனவற்றையே எண்ணிக் கொண்டிருத்தல் கூடாது என்ற உண்மையினையும் எடுத்துரைக்கிறாள்.

'யான் இழைத்த வினையினின் இவ்விடர்–
தான் அடுத்தது, தாயினும் அன்பினோய்!
கூனியின் கொடியார் அலரே, இவர்!
போன அப்பொருள் போற்றலை. புந்தியோய்!'

(மீட்சிப் படலம், யுத்த காண்டம்)

அனுமனை நோக்கி அரக்கியரைத் துன்புறுத்த வேண்டாம் என வேண்டிக் கொண்ட சீதை, 'அவர்களுக்கு மனத் துன்பத்தை உண்டாக்காதே! அனுமனே இதனை நான் உன்னிடத்தில் ஒருவரமாகக் கேட்கிறேன்' என்றாள்.

'எனக்கு நீ அருள்; இவ்வரம்; தீவினை
தனக்கு வாழ்விடம் ஆய சழக்கியர்
மனக்கு நோய் செயல்! என்றனள் மா மதி
தனக்கு மாமறுத் தந்த முகத்தினாள்'

(மீட்சிப் படலம், யுத்த காண்டம்)

அனுமனும் சீதையின் திருவுளத்திற்கு இசைந்து 'எம்பிரான் தன் துணைப் பெருந்தேவி தயா' என்று ஏற்று அங்ஙனமே பணிந்து நின்றான். நமக்குப் பிறர் இழைத்த தீமைகளை மறக்க முயலவேண்டும். அவ்வாறு மறந்து மன்னித்தல் வேண்டும். நடந்தனவற்றையும் நமக்கு பிறர் இழைத்த துன்பத்தையும் நிகழ்ந்து முடிந்தவை என்று மறந்தால்தான், பிராட்டியைப் போல எளிதாகப் பிறர் குற்றத்தைப் பொறுத்துக் கொள்ளும் மனவிசாலத்தைப் பெற முடியும்.

இராமன் கேட்ட வரம் :

தீயவர்களை மன்னிக்கும் மாண்பினில் இராமனும் சீதையும் ஒருவரோடொருவர் போட்டி போட்டுக் கொண்டு முந்தி நிற்கின்றனர். தனக்குத் துன்பம் இழைத்தவர்களையும், தம் தூய அன்பினால் அரவணைத்தனர். பதினான்கு ஆண்டு கால காடுறை வாழ்க்கையை நிறைவேற்றிக் கொண்டு, இலங்கையில் நடந்த அக்னிச் சோதனைக்குப் பின், சீதையையும் இலக்குவனையும் அயோத்திக்கு அழைத்து வரத் தயாரானான் இராமன். சிவபெருமானும் நான்முகனும் அக்னிபகவானும் சீதையின் களங்கமற்ற கற்பிற்குச் சான்று பகர்ந்து, சீதையின் மேல் தவறான எண்ணமும் அவமதிப்பும் உண்டாகுமானால், உலகத்து உயிர்கள் எல்லாம் அழியும் என்றுரைத்தனர்.

சிவபெருமான் அருளிய ஆணையைப் பெற்று, விண்ணுலகில் வாழ்ந்து கொண்டிருந்த தசரதன், இராமனைக் காண்பதற்காக மண்ணுலகம் வந்தான். தந்தையைக் கண்ட இராமன்

தசரதனின் இணையடி மலரில் வீழ்ந்து வணங்கினான். இராமனைத் தன் மார்புறத் தழுவிய தசரதன் பேசலுற்றான். அன்று கேகேயன் மகள் என்னிடத்தில் பெற்ற வரம் என்றும் அயில்வேல் என் உயிரை வாங்கிய பின்னரும், என் நெஞ்சத்தில் நின்று கொண்டு தான் இருக்கிறது. என்னைக் கொன்றும் நீங்காத அந்தக் கொடியவேல் உன் மார்பை நான் இன்று இறுகத் தழுவிக் கொண்டதால் விலகிப் போயிற்று. உன்னைப் புதல்வனாய்ப் பெற்றதால், தேவர்களும் முனிவர்களும் என்னை வணங்கும் பெருஞ்சிறப்பைப் பெற்றேன். திருமாலின் உந்தியங் கமலத்தில் உதித்த நான்முகனோடு சமானமாய் அண்டமூலத்தில் ஓர் ஆசனத்தில் அமரும், பெரும் பேற்றைப் பெற்றேன். இத்தகைய சிறப்புக்களை எல்லாம் நான் பெற்றது உன்னைப் புத்திரனாய் அடைந்ததால் அல்லவா' என்று பெருமிதம் பொங்கப் பேசினான் தசரதன்'

'பண்டு நான் தொழும் தேவரும் முனிவரும் பாராய்;
கண்டு கண்டெனைக் கைத்தலம் குவிக்கின்ற காட்சி;
புண்டரீகத்துப் புராதனன் தன்னொடும் பொருந்தி
அண்ட மூலத்து ஓர் ஆசனத்து இருத்தினை! அழக !'

(மீட்சிப் படலம், யுத்த காண்டம்)

பின்னர் தசரதன் அக்னிக்குள் இறங்கி யாதொரு துன்பமும் இன்றி வெளிப்பட்டு நின்ற சீதையை நோக்கி, உன்னை நெருப்பில் இறங்கச் செய்தது உன்மேல் உள்ள ஐயப்பாட்டினால் அல்ல; பொன்னைத் தீயில் இட்டு உருக்குதல் அதன் களங்கமற்ற தன்மையைப் பிறருக்குக் காட்டுவதற்குத் தான். உன் கற்பின் திறத்தை உலகறியச் செய்வதற்கு இராமன் கையாண்ட இந்த உபாயத்தால், உலகோருக்கு கற்புடைத் தெய்வம் என்பதனை உணர்த்தினான். நீ பரமபதத்தினின்றும் திருமால் இராமனாக பூமியில் வந்து அவதரித்த போது திருமகளான நீ சீதையாக வந்தாய். உன்னுடைய இணையற்ற நற்பண்புகளை யாராலும் களங்கப்படுத்தி விட இயலாது' என்று சொல்லி, பின் அருகில் நின்று கொண்டிருந்த இளைய மகனாகிய இலக்குவனைத் தழுவிக் கொண்டான். 'தமையனுக்கு நீ ஆற்றிய

கடமைகளின் மூலம் எண்ணில்லாத என் பிறவிகளையும் போக்கி, என் மனத்தின் துன்பத்தையும் போக்கி விட்டாய்' என்று இலக்குவனிடம் உரைத்தான்.

பின்னர் இராமபிரானை நோக்கி மகனே உனக்கு நான் வழங்கத் தக்க வரத்தைக் கேட்பாயாக' என்று சொல்ல, இராமபிரான் 'தந்தையே தங்களை வானுலகில் சந்தித்துத் தான் துன்பம் நீங்கப் பெறுவேன் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். அவ்வாறின்றி, நீங்கள் இங்கு எழுந்தருளியதால் இங்கேயே காணும் பெரும் பேறு பெற்றேன். எனக்கு வேறு என்ன வரம் வேண்டும்' என்று சொல்ல, தசரதனோ 'உனக்குத் தகுந்த வரத்தைக் கேட்பாயாக' என மீண்டும் சொல்ல இராமபிரான் 'தந்தையே கொடியவள் எனக் கருதித் தாங்கள் துறந்த கைகேயித் தாய், தெய்வம் போன்றவள். சினத்தை மாற்றிக் கொண்டு, மீண்டும் அவளை எனக்குத் தாயாகத் தருதல் வேண்டும். எந்தப் பழியும் அறியாத பரதனை அனைவர் முன்னிலையிலும் 'என் மகன் அல்லன் பரதன்' என்று பிரகடனப் படுத்தி விட்டீர்கள். அவனைத் தங்கள் மகனாக ஏற்றுக்கொண்டு என் தம்பியாக அவன் என்றும் இருக்கும்படியான வரத்தை அருளுங்கள்' என்றான். இராமபிரான் இவ்வாறு வரங்கேட்க உலகத்து உயிர்கள் எல்லாம் வாய்திறந்து மகிழ்ச்சி ஆரவாரம் செய்தன.

'ஆயினும், உனக்கு அமைந்தது ஒன்று உரை என அழகன்
தீயள் என்று நீ துறந்த என் தெய்வமும் மகனும்
தாயும் தம்பியும் ஆம் வரம் தருக ! எனத் தாழ்ந்தான்!
வாய் திறந்தெழுந்து ஆர்த்தன, உயிர் எலாம் வழுத்தி'

(மீட்சிப்படலம், யுத்த காண்டம்)

இராமன் கூறியனவற்றைக் கேட்ட பின்னரும் தசரதன் கைகேயின்பால் கோபம் தணியாதவனாகவே இருந்தான். குற்றமில்லாத குணமுடைய பரதனை, மீண்டும் என் மகன் என ஏற்றுக் கொண்டு உனக்குத் தம்பியாகத் தருவேன். ஆனால் நீ சூடிக் கொள்ள வேண்டிய மணிமகுடத்தைத் தட்டிப் பறித்து, உனக்கு

இத்தகைய தவ வேடத்தைக் கொடுத்த, பாவியான கைகேயியின் மேல் நான் கொண்ட சினமானது ஒரு நாளும் நீங்காது' என்றான் தசரதன். அதனையும் பொறுமையாகச் செவிமடுத்த இராமன், உயிர்களை எல்லாம் கட்டிக் காப்பாற்ற வேண்டிய பெரும் பொறுப்பை உள்ளடக்கிய அரசுரிமையை ஏற்றுக்கொண்டால் அது பல குற்றங்களுக்கு இடமாகும் என்று எண்ணிப் பார்க்காமல் ஏற்றுக்கொண்டது என் தவறே அல்லாமல், தாயார் கைகேயியின் தவறல்ல என்றான்.

'ஊன் பிழைக்கிலா உயிர்நெடிது அளிக்கும் நீள் அரசை
வான் பிழைக்கு இது முதல் எனாது ஆள்வுற மதித்து
யான் பிழைத்தது அல்லால் என்னை ஈன்ற எம்பிராட்டி
தான் பிழைத்தது உண்டோ ? என்றான், அவன் சலம் தவிர்ந்தான்'

(மீட்சிப் படலம், யுத்த காண்டம்)

கானகத்தில் இராமபிரான் அடுக்கடுக்காய் எத்தனையோ இடர்ப்பாடுகளைச் சந்தித்த போதும், தனக்குத் துன்பம் தந்தவர்களைக் கொஞ்சமும் குறைபட்டுக் கொள்ளாமல் அவர்கள் துன்புறுதல் கூடாது என்று எண்ணிப் பார்க்கின்ற கருணை உள்ளம் கொண்டு இலங்குவதை எண்ணிப்பார்த்து, நம்மால் வியப்பு எய்தாமல் இருக்க இயலவில்லை. தவறு செய்தவர்களை மன்னிக்கும் மனோபாவத்தை மட்டுமல்லாமல், அவர்கள் செய்த தவறுக்குப் பெருந்தன்மையுடன் தார்மீகமாகப் பொறுப்பேற்றுக் கொள்கின்ற தெய்வீகப் பண்பினையும் இராமனிடம் கண்டு மகிழ்கிறோம். தங்களுக்கு எதிராகக் குற்றம் புரிந்தவர்களைத் தண்டிப்பதிலும் அவர்களிடம் பகை பாராட்டுவதிலும், வஞ்சம் வைத்துப் பழி தீர்த்துக் கொள்வதிலும் குறியாக இருக்கும் சாமான்ய மக்களுக்கு மத்தியில் குற்றம் புரிந்தவர்களுக்காகப் பரிந்து பேசி, அவர்கள் குற்றங்களையும் மன்னித்து, மற்றவர்களும் அவர்களைப் பழி தூற்றாமல் பார்த்துக் கொள்கிற பொறுப்பினைச் செயல்படுத்திக் காட்டிய இராமபிரானின் பெருந்தகைமை நமக்கெல்லாம் ஒரு சிறந்த எடுத்துக் காட்டு. தன்னைச் சிலுவையில் அறைந்து தண்டிப்பதற்குக்

காரணமாயிருந்த கொடுமதியாளர்களைக் கூட குற்றம் சொல்லாமல் 'இறைவா இவர்கள் அறியாமல் செய்கிறார்கள் இவர்களை மன்னியும்' என்று சொன்ன இயேசுபெருமானின் வாசகம் இங்கு நினைவு கூரத் தகுந்தது.

15. பூரண சகோதரத்துவம்

அன்பின் உறைவிடமான இராமன், தன் சகோதரர்களான பரதன், இலக்குவன், சத்ருக்கனன் ஆகிய மூவர் மேலும் எல்லையில்லாத பரிவும், அன்பும் கொண்டிருந்தான். இலக்குவன் இராமனைப் பிரியாதவனாக வாழும் வாய்ப்பைப் பெற்றதனால், மற்றவர்களைக் காட்டிலும் இராமனது அன்பை சற்று அதிகமாய் அனுபவிக்கும் பேற்றினைப் பெற்றான். உடன் பிறந்தவர்கள் என்ற பாசப்பிணைப்பில் வேரூன்றி, இராமனது அன்பானது, குகன் சுக்ரீவன், வீடணன், என்று கிளை பரப்பிய சகோதரத்துவ குளிர் தருவானது. வாழுமிடத்தாலும், பிறந்த இனத்தாலும், வேறுபட்டவர்களைத் தன்னவர்களாகச் சேர்த்துக் கொண்டு, இராமபிரான் அன்பு மழை பொழிந்த கதை, வேற்றுமைகள் நிறைந்த, பாகுபாடுகளும் பேதங்களும் மிகுந்த சமுதாயத்தில் வாழ்ந்து கொண்டு, உண்மை அன்பின் அர்த்தம் கூடத் தெரியாமல் வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டு. இந்த 'உலகு தழுவிய சகோதரத்துவம்' தான், வாழும் மனிதருக்கு இராமகாதை எடுத்துச் சொல்லும் தலையாய செய்தி. குகனொடும் ஐவராகி, குன்று சூழ்வான் மகனொடும் அறுவராகி, அன்பின் வந்த வீடணனுடன் எழுவரான இராமபிரான், நால்வராயிருந்த தாங்கள் எழுவராயினர் என்பதோடு நிறுத்திக் கொள்ளாமல் நான்கு புதல்வர்களை உடைய தசரதன், ஏழு புத்திரர்களின் தகப்பன் ஆனான் என உவகை மீதூறக் குறிப்பிடுகிறான்.

'குகனொடும் ஐவர் ஆனோம் முன்பு; பின் குன்று சூழ்வான்
மகனொடும், அறுவரானோம்; எம்முழை அன்பின் வந்த
அகன் அமர் காதல் ஐய! நின்னொடும் எழுவர் ஆனேம்;
புகல் அருங்கானம் தந்து, புதல்வரால் பொலிந்தான் நுந்தை'

(வீடணன் அடைக்கலப் படலம், யுத்த காண்டம்)

இலக்குவனும் இராமனும் :

இராமனைப் போலவே, இலக்குவனும் குகன், சுக்ரீவன், வீடணன் ஆகியோரிடம் அன்பைப் பொழிந்தான். இராமபிரானிடத்தில் இலக்குவன் கொண்டிருந்த அன்பு விலைமதிப்பற்றது. நாடாள வேண்டிய இராமபிரான், கானேக வேண்டும் என்று கேட்ட மாத்திரத்தில், கனலாய்க் கொதித்தெழுந்தான். அவன் கோபம் கூனியை எல்லாம் தாண்டி, கைகேயி, தசரதன் என்று பரந்து விரிந்து கொண்டே சென்றது. எப்படியாகிலும், இராமனைக் காடேக விடாமற் செய்ய வழி கிடைக்குமா, என்றெல்லாம் எண்ணமிட்டு, முயற்சியும் சினமும் தோல்வியில் முடிந்த பிறகு, தானும் இராமனுடன் கானகம் சென்று, இராமனுக்குத் தொண்டு செய்வதில் காலத்தைச் செலவிட வேண்டியது தான் சிறந்தது என்று முடிவு செய்தான். குகனது துணையினால் கங்கையைக் கடந்து, சித்திர கூடத்தை நோக்கி, இராமன், இலக்குவன், சீதை ஆகிய மூவரும் நடை போட்டனர். 'அந்திப் பொழுது வந்த போது, இராமனும் சீதையும் தங்கி இருப்பதற்கு இலக்குவன் ஒரு' 'தழைக் குடில்' அமைத்தான். மூங்கில்களை வெட்டி அடுக்கி, பசுமையான தேக்குமர இலைகளைக் கூரை போல் பரப்பி, அதற்கு மேல் நாணல் புல்லைப் பரப்பி, மூங்கில் கழிகளால் சுவர் அமைத்து, அச்சுவர்களுக்கு இடையில் மண்ணைப் பிசைந்து அப்பி, அம்மண்ணைச் சமன் செய்து பர்ணசாலையை உருவாக்கினான். மயில் தோகைகளைக் கொண்டு விதானம் அமைத்து, குடிலை இலக்குவன் அழகுபடுத்தினான். அந்த அழகிய குடிலில் இராமபிரான் சீதையுடன் குடிபுகுந்தான். மலரினும் மெல்லிய சீதையின் பாதங்கள், கானகத்தின் பரற்கற்களில் பதிந்ததையும், இலக்குவனின் சிவந்த கரங்கள் மண்ணைப் பிசைந்து நின்றதனையும் கண்ட இராமபிரானின் கண்கள் பனித்தன. இலக்குவன் காட்டில் கிடைத்த பொருட்களை வைத்துக் கொண்டு குடிசை அமைக்கும் வேலையை எப்படிச் செயல்படுத்தினான்? இதை எங்கு கற்றான்? எப்பொழுது கற்றான்? என்றெல்லாம் இராமபிரான் எண்ணமிடுகிறான்.

'என்று சிந்தித்து இளையவற் பார்த்து, இரு
குன்று போலக் குவவிய தோளினாய் !
என்று கற்றனை நீ இதுபோல்?' என்றான் –
துன்று தாமரைக் கண் பனி சோர்கின்றான்

(சித்திர கூடப் படலம்; அயோத்யா காண்டம்)

அன்புடையாருக்கு உதவ வேண்டும் என்ற ஆர்வம் உந்தித் தள்ளும்பொழுது, சிரமமான செயல்களைக் கூட, முன்னர் பயிற்சியில்லாத, முற்றிலும் புதிதான ஒரு முயற்சியைக் கூட, செவ்வனே செயல்படுத்திவிடுகிற ஆற்றலை மனிதர்கள் பெற்று விடுகிறார்கள். அதுதான் அன்பின் திறம் "Necessity is the mother of invention' என்று ஆங்கிலத்தில் ஒரு வாசகம் உண்டு. அவசியம் என்ற ஒரு நிலை உருவாகும் போது, யார் துணையுமின்றி ஒரு புதிய செயலில் இறங்கிச் செயல்படுகின்ற நிலை உருவாகிறது. இலக்குவனைப் பொறுத்த மட்டில் பர்ணசாலையை அமைத்து விட்டதற்காக, ஒரு சிறு மகிழ்வும் நிறைவும் அவன் எய்தியிருக்கலாம். ஆனால் யாருக்காக பர்ணசாலை உருவாக்கப்பட்டதோ, அந்த இராமபிரான், இலக்குவனுக்கு 'இதுபோல் துன்பம் அளித்து விட்டேனே' என்று வருந்தினான். 'தகப்பனார் கட்டளையை மதித்துப் போற்றி இராமன் காடேகினான். அரசாட்சி உரிமையைப் பரதனுக்கு வழங்கி சிறந்த அறத்தைப் பேணினான் என்று ஊரார் புகழ்வதில் எந்தப் பயனும் இல்லை' எனச் சொன்ன இராமன் இலக்குவனுக்குத் தொல்லை தர நேர்ந்ததைக் குறித்து விசனமடைந்தான்.

'அடரும் செல்வம் அளித்தவன் ஆணையால்,
படரும் நல் அறம் பாலித்து, இரவியின்
சுடரும் மெய்ப் புகழ் சூடினென் என்பது என்?
இடர் உனக்கு இழைத்தேன் நெடுநாள்' என்றான்

(சித்திர கூடப் படலம், அயோத்யா காண்டம்)

அதனை அறிந்த இலக்குவனோ, இராமன் வருந்துகிறானே என எண்ணி வருந்தி, தன் துன்பமானது இராமனுக்கு அரசு இல்லை என அறிவிக்கப்பட்டபோதே தொடங்கிவிட்டது என்று குறிப்பிட்டான். பதினான்கு ஆண்டுகாலம் வனத்திலிருந்து அறங்காத்தால் மட்டுமே, தந்தை தசரதன், கொடுத்த வாக்கைக் காப்பாற்றிய வாய்மையாளராகத் திகழ முடியும் என்ற உண்மையை இராமபிரான் இலக்குவனிடம் தெரிவிக்கிறார். இலக்குவனுக்கு அந்த வாசகத்தில் கொஞ்சமும் ஈடுபாடு இல்லை. ஆனால் கானக வாழ்வின் ஒவ்வொரு கணமும் இராமபிரான் முடி சூடிக் கொள்ள இயலாமற் போயிற்றே என்ற வருத்தம் அவன் மனதை அழுத்திக் கொண்டே தான் இருந்தது. இராமபிரானுக்காக எத்தனை துயரங்களை வேண்டுமானாலும் சுமக்கத் தயாராக இருந்தவன் இலக்குவன்.

உயிர் போன்ற இளையான் :

இலக்குவன் கானக வாழ்வில் விழிமூடாமல் இராமபிரானையும், பிராட்டியையும் காவல் செய்து நின்றவன். இராமபிரான் உண்ட மிச்சிலைத் தவிர வேறெதனையும் உண்ணக்கூடாது என்ற விரதத்தில் நின்றவன். இலக்குவனிடத்தில் இராமபிரான் கொண்டிருந்த ஆழமான அன்பினை, சில காலகட்டங்களில் உணர்ச்சி வசப்பட்டு இராமபிரானே எடுத்துச் சொல்ல நேர்ந்தது. அத்தகைய சூழ்நிலைகளில் கொஞ்சமும் மிகையின்றி, யதார்த்தத்தை உள்ளவாறு இராமபிரான் பேச, அவர்தம் பேச்சு இலக்குவனுக்கும் இராமபிரானுக்கும் இடையில் பின்னிப் பிணைந்து நின்ற சகோதரத்துவ நேயத்தை நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறது.

கானகத்தில் நீர் கொண்டு வரச் சென்ற இலக்குவனைப் பார்த்து, அயோமுகி என்னும் அரக்கி தன் காமத்தை வெளிப்படுத்த, அதைக் கேட்டுச் சினமுற்ற இலக்குவன், தகுதியில்லாத சொற்களை அவள் பேசினால், தன் அம்பு அவள் உடலைத் துண்டாக்கும் என்று அச்சுறுத்தினான். அதனைக் கேட்ட அயோமுகி, மயக்கம் தரும் ஒரு

மாயச் செயலைப் புரிந்து, பெரிய மலைபோன்ற இலக்குவனை மயக்கச் செய்து, அவனைத் தூக்கிக் கொண்டு ஆகாயத்தில் வேகமாகப் போனாள்.

தண்ணீர் கொண்டுவரச் சென்ற இலக்குவன் வராதது கண்டு, இதுவும் இராவணனின் வஞ்சனையாக இருக்குமோ! என இராமன் மருகினான். இலக்குவன் தனக்குக் கண்போன்றவன் என்றும், தன் உயிர் போன்றவன் என்றும் குறிப்பிடுகிறான். வயதால் சிறியவனாகிலும், அறிவால் இலக்குவன் பெரியவன் என்கிறான். தனக்கு ஏற்பட்ட துன்பங்கள் எல்லாவற்றையும் தீர்க்க வல்லவனாக இருந்த இலக்குவனே, தனது பிரிவினால் நீங்காத துயரத்தைக் கொடுத்து விட்டானே என்று அழுது புலம்பினான் இராமபிரான்.

பேணி வளர்த்த தந்தையையும், தன் தாய்மாரையும், இலக்குமி போன்ற தன் மனைவியான சீதாப்பிராட்டியையும் பிரிந்த பின்னரும் தான் உயிரைச் சுமந்து கொண்டிருப்பதே, இலக்குவன் உடன் இருக்கிறான் என்பதால் தான் என்கிறான் இராமன்.

***'என்னைத் தரும் எந்தையை, என்னையரை,
பொன்னைப் பொருகின்ற பொலங் குழையாள்
தன்னை, பிரிவேன்; உளென் ஆவதுதான்;
உன்னைப் பிரியாத உயிர்ப்பு அலவோ?'***

(அயோமுகிப் படலம், ஆரண்ய காண்டம்)

இனி, இலக்குவனைக் காணாமையினால் தன் இன்னுயிர் நீங்கும் என்றான் இராமன். அரச கட்டளையை நிறைவேற்றும் பொருட்டுத் தான் கானகம் ஏகும்போது சுற்றத்தார் யாரும் உடன் வரவில்லை. இலக்குவன் மட்டுமே தன் சுகத்தை எல்லாம் துறந்து காட்டிற்கு வந்தான் என்பதனை எண்ணிப் பார்க்கிறான். துன்பத்தில் துவளும் போது துணை நிற்பவன் தான் உண்மையான சகோதரன் என்பதனை நிலைப்படுத்திக் காட்டியவன் இலக்குவன்.

'மாந்தா முதல் மன்னவர்தம் வழியில்,
வேந்து ஆகை துறந்தபின் மெய் உறவோர்
தாம் தாம் ஒழிய, தமியேனுடனே
போந்தாய் எனை விட்டனை போயினையோ!'

(அயோமுகிப்படலம், ஆரணய காண்டம்)

இலக்குவன் தனக்கு ஆற்றிய கடமைகளையெல்லாம் எண்ணிப்பார்த்து, இனி ஒரு பிறவி உண்டென்று இருந்தால், அப்பிறவியில் இலக்குவன் தனக்கு மூத்த தமையனாகப் பிறக்கவும், தான் அவனுக்கு இளையவனாகப் பிறந்து தொண்டு செய்யவும் வேண்டும் என்று இராமன் எண்ணுகிற அளவுக்கு, இலக்குவன் இராமன் மனதில் இடம் பிடித்திருந்தான்.

அறப்பால் உளதேல், அவன் முன்னவன் ஆய்ப்
பிறப்பான் உறில், வந்து பிறக்க எனா
மறப்பால் வடி வாள் கொடு, மன் உயிரைத்
துறப்பான் உறுகின்ற தொடர்ச்சியின் வாய்,

(அயோமுகிப் படலம், ஆரண்ய காண்டம்)

அயோமுகியின் கைகளில் இருந்து விடுபட்ட இலக்குவன், இராமனைப் பார்த்தஉடன், 'வள்ளலே வருந்தாதே வருந்தாதே' என்கிறான். அளவற்ற அன்புடைய இராமனின் உள்ளம் வருந்துவதை, இலக்குவனால் தாங்கிக் கொள்ள இயலவில்லை. இலக்குவனைத் தழுவிக் கொண்டு தன் பாசம் முழுமைக்கும், இராமன் தன் கண்ணீரால் வடிகால் தேடிக் கொண்டான். இராமனின் அப்போதைய மனநிலையைக் கம்பன் எடுத்துரைக்கும் அழகு அலாதியானது. தான் ஈன்றெடுத்த இளங்கன்று பிரிந்து போக நேருமானால், தாய்ப்பசுவானது பிரிவைத் தாங்காமல், கண்ணீர் ஆறாய்ப்பெருகி நிற்க, ஏக்கம் மேலிடக் கதறும். பின்னர் அந்த இளங்கன்றானது, தாய்ப்பசுவைத் தேடி மீண்டும் வந்து சேரும் போது, தன் சோகத்தை மாற்றிக் கொண்டு, அருகில் வந்த கன்றைக்

கண்ட உடன் மடியில் பால் சுரக்கும். ஏக்கம் ஒரு புறமும், மகிழ்வு ஒருபுறமுமாக உணர்ச்சி வசப்பட்டு நிற்கும் பசுவின் மடியோ பால் நிரம்பத் ததும்பி நடுக்கம் உறும். இராமபிரான் பிரிந்த இலக்குவனைக் கண்டதும், கன்றினைப் பிரிந்து மீண்டும் கூடிய பசுவின் நிலையில் தான் இருந்தான் என்கிறான் கம்பன்.

'ஊற்று உறு கண்ணின் நீர் ஒழுக நின்றவன்,
ஈற்று இளங் கன்றினைப் பிரிவுற்று, ஏங்கி நின்று,
ஆற்றலாது அரற்றுவது, அரிதின் எய்திட,
பால் துறும் பனிமுலை ஆவின் பான்மையான்'

(அயோமுகிப்படலம், ஆரண்யகாண்டம்)

துயரிலும் துணிவு :

இராமபிரான் வருந்தி நின்ற நிலையினைக் கண்ட இலக்குவன் 'பிறப்பு என்னும் சிறையில் அடைபட்டாருக்கு துன்பம் இயற்கை தானே. துன்பம் வருகிறதே என்றெண்ணி வாழ்நாள் முழுவதும் அச்சப்பட்டுக் கொண்டே இருக்க முடியுமா? கடலுக்குள் ஒருவன் அகப்பட்டுக் கொண்டால், கடலில் அலை எழும்போதெல்லாம் வருந்திக்கொண்டு இருப்பது அழகாகுமா? கடல் என்ற நிலை வரும்போது அலை வீசத்தான் செய்யும். அதுபோல் பிறவி என்றிருந்தால், துன்பம் வந்துதானே தீரும்' என்று தத்துவம் சொல்லி இராமனைத் தேற்ற முயன்றான்.

ஆய்வுறு பெருங்கடல் அகத்துள் ஏயவன்
பாய்திரை வருதொறும் பரிதற் பாலனோ?
தீவினைப் பிறவி வெஞ் சிறையில் பட்டயாம்,
நோய், உறுதுயர் என நுடங்கல் நோன்மையோ?

(அயோமுகிப்படலம், ஆரண்ய காண்டம்)

அதனைக்கேட்ட இராமன், இலக்குவனைப் பார்த்து 'என்ன துன்பம் வந்தாலும் வரட்டும், வல்லமை மிகுந்த உன்னால் என்

துன்பங்கள் எல்லாம் தூசாகும்' என்று சொல்லி, எத்தகைய பகைவர்கள் ஆயினும் அவர்கள் என்னை வெல்ல இயலாது. ஏன் எனில்; நீ என்னுடனேயே இருக்கிறாய்' என்றான். இலக்குவன் தன் உடனிருப்பதே தனக்குப் பலம் என்றும், அவனைவிட வேறு ஒரு பாதுகாப்பும் வேண்டுமோ? என்றும் இராமன் எண்ணும் எண்ணங்கள் இலக்குவன் மேல் இராமன் கொண்டிருந்த அழுத்தமான நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றன.

கவந்தன் கையில் அகப்பட்டுக் கொண்ட போதும், துக்க மிகுதியால் இராமன் அரற்றும்போது, 'இராமன் சீதையைக் காக்கும் திறனற்றவன் என்று மற்றவர் தூற்றுவதற்கு முன்பாக, என் உயிரைத் துறப்பதுதான் நல்லது என்கிறான். அதைக்கேட்ட இலக்குவன் 'கொஞ்சமும் மாறாமல் என்றும் உனக்குப் பணி செய்வதையே என் கடமையாகக் கருதுகிறேன் கானகம் ஏகும்போது என் தாயான சுமத்திரை என்னை நோக்கி, 'உன் தமையன் இடுகின்ற கட்டளைகள் அனைத்தையும் ஏற்று நட. அவ்வாறு நடப்பதால், எத்தனை துன்பங்கள் எதிர்ப்பட்டாலும் அவற்றினைப் பின் வாங்காமல் ஏற்றுக்கொள்! இராமனுக்கு அழிவு ஏற்படும் என்று அறிந்தால், இராமனுக்கு முன்னே நீ உன் உயிரைத் துறந்துவிடு' என்றாள். என் அன்னையின் சொற்படி நடப்பதே எனக்கு சத்திய நெறியாகும்' என்றான்.

'என்தாய், 'உன்முன் ஏவிய யாவும் இசை; இன்னல்
பின்றாது எய்தி, பேர் இசையாளற்கு அழிவு உண்டேல்,
பொன்றா முன்னம் பொன்றுதி' என்றாள்; உரை பொய்யா
நின்றால் அன்றோ நிற்பது வாய்மை நிலை அம்மா'?

(கவந்தன் படலம், ஆரண்ய காண்டம்)

தனக்கு அனைத்தும் இளையவனே :

இந்திரஜித்தன் ஏவிய பிரம்மாஸ்திரத்தினால் வீழ்ந்து கிடந்த இலக்குவனைக் கண்ட இராமன் அழுதுபுலம்பிய போது, விண்ணில்

உள்ள தேவாதி தேவர்களும் அழுது சோர்ந்தனர். தேவமகளிர் வயிற்றில் அடித்துக் கொண்டு அழுத கண்ணீர், மழைபோலப் பொழிந்தது. அன்புமிகுந்த தன் தந்தை மாண்டு போன பிறகும், தான் வாழ்ந்திருக்கக் காரணம் இலக்குவன் தான். இலக்குவன் உயிரோடு இருக்கிறான் என்பதனால் தான், தானும் உயிர் கொண்டு உலவுவதாக இராமன் குறிப்பிடுகிறான்.

தனக்கு அனைத்தும் இலக்குவனே எனச் சொல்லி உருகுகிறான் இராமன். 'எனக்குத் தாயும் நீ தான், தந்தையும் நீதான். தவமும் தம்பியும் நீதான், புகழைப் பொருட்படுத்தாமல் நீ என்னை விட்டுப் போனாய்; ஆனால் கல்நெஞ்சனான நானோ இன்னும் உயிருடன் இருக்கிறேன். உன் உடம்பில் உயிரைப் பார்க்கவில்லை. அப்படியிருந்தும் என் உடம்பில் உயிரைச் சுமந்து கொண்டுள்ளேனே. இந்த நிலையில் உன்னைக் கண்ட பின்னரும் என் நெஞ்சம் பிளக்காமல் இருக்கிறதே' என்றழுதான். கானகத்தில் வாழ்ந்த ஒவ்வொரு நாளும் பொழுதும் தனக்கு இலக்குவன் செய்த கடமைகளை எல்லாம் எண்ணி எண்ணிப் பார்த்தான். கானகத்தில் தான் உண்பதற்குரிய காய் கனிகளை எல்லாம் கொண்டு தந்து விட்டு, உண்ணாதிருந்தவன், இலக்குவன் என்பதனை நினைத்து உருகினான்.

'தாயோ நீயே; தந்தையும் நீயே; தவம் நீயே;
சேயோ நீயே; தம்பியும் நீயே; திரு நீயே;
போயோ நின்றாய்; என்னை இகந்தாய்; புகழ்பாராய்,
நீயோ; யானோ, நின்னினும் நெஞ்சம் வலியேனோ'?

(பிரம்மாஸ்திரப் படலம், யுத்த காண்டம்)

எப்படியெல்லாமோ தனக்குத் தொண்டாற்றிய இலக்குவனை, நாகபாசம் வளைத்துக் கொண்ட போதும், அழிவு நேர்ந்த போதும், அருகில் இருந்து உதவ முடியாத நிலைக்கு ஆளானேனே! அன்பற்றவர்கள் தான் ஆபத்து வரும் நேரத்தில் விலகி இருப்பார்கள். அன்பற்றவனைப் போல நானும் விலகி இருக்க நேர்ந்ததே'! என்றெல்லாம் இராமபிரான் வருந்தி நிற்கிறார்.

'பாசமும் முற்றச் சுற்றியபோதும், பகையாலே
நாசமும் உறற்ற இப்போதும், நடந்தேன், உடன் அல்லேன்;
நேசமும் அற்றோர் செய்வன செய்தேன்; நிலை நின்றேன்;
தேசமும் மற்று, என் கொற்ற நலத்தைத் தெரியாதோ?'

(பிரம்மாஸ்திரப் படலம், யுத்த காண்டம்)

'அன்புடையவர்கள், தம்மைச் சார்ந்திருப்பாருக்கு ஆபத்து ஏற்படும் காலத்தில் விலகி இருக்க மாட்டார்கள்' என்ற நெறியினை இராமபிரான் எடுத்துரைக்கிறான்.

அன்பின் ஆழம் :

இலக்குவன் தன்மேல் கொண்டுள்ள அன்பின் ஆழத்தைப், பல்வேறு கோணங்களில் எடுத்தியம்பியும், இராமபிரானுக்கு மனநிறைவு ஏற்படவில்லை. சொல்லிச் சொல்லிப் பார்த்தாலும் இலக்குவனின் அன்பின் ஆழத்தை வார்த்தைகளில் வடிக்க முடியாத நிலை இராமனுக்கு ஏற்பட்டது. எனவேதான், மீண்டும் மீண்டும் இலக்குவனிடம் தான் அனுபவித்த அன்பை, எண்ணி எண்ணிப் பார்க்கிறான். தாய் தந்தையை விட, தன்னிடம் தான் இலக்குவன் அதிக அன்பு கொண்டிருந்தான் என்பதனையும், தன்னைத் தவிர வேறு ஓர் உறவு இல்லை என்று எண்ணி வாழ்ந்தவன் என்றும், தன்னை ஒரு போதும் பிரியாதவன் என்றும், தனக்காக யாரையும், எதையும் துறக்கத் தயாராக இருந்தவன் என்றும் நினைத்துப் பார்க்கிறான் இராமன். 'இராமனில்லாமல் தான் இல்லை' என்று எண்ணி வாழ்ந்ததனால் தான், இராமனுடன் கானகம் செல்வது ஒரு கடினமான செயலாக இலக்குவனுக்குத் தெரியவில்லை. மாறாக ' கானகம் வர வேண்டாம் தாயர் தந்தையுடன் அயோத்தியில் இரு' என்று இராமன் சொன்ன சொல்லைக் கேட்டுத் துடித்தான். நீரில்லாமல் மீன் உயிர் வாழ்வது எவ்வாறு? என்ற கேள்வியை எழுப்பினான். இராமனை ஒரு வினாடி நேரம் கூட மறவாதவன். இத்தகைய பேரன்பை இராமன் மேல் இலக்குவன் பொழிய, அந்த இலக்குவன் பிரம்மாஸ்திரத்தால் வீழ்ந்த போது, தான் வீழாமல்

இருப்பது நியாயமாகுமா? என்று புலம்பி அழுகிறான் இராமபிரான். அந்த அழுகையில், இராமபிரானின் அன்பு பெருகி வழிகின்ற நிலையினை நாமும் அனுபவிக்கிறோம்.

'அறம், தாய், தந்தை, சுற்றமும், மற்றும், எனை அல்லால்,
துறந்தாய்! என்றும் என்னை மறாதாய்! துணை வந்து
பிறந்தாய்! என்னைப் பின்பு தொடர்ந்தாய்! பிரிவு அற்றாய்!
இறந்தாய்; உன்னைக் கண்டும் இருந்தேன், எளியேனோ?'

(பிரம்மாஸ்திரப் படலம், யுத்த காண்டம்)

இலக்குவனின் சீற்றம் :

தன் அன்பு முழுவதையும் இலக்குவன் மேல் இராமன் பொழிந்த போதிலும், சில சந்தர்ப்பங்களில் உண்மை அன்புக்கு உதாரணமாக, இராமன் பரதனைச் சுட்டிக்காட்டும் நிலை ஏற்படுகிறது. இராமன் பரதனிடத்திலும் எல்லையில்லா அன்பு பூண்டவன் தான். பரதனின் நேர்மைத்திறமும், அப்பழுக்கற்ற அன்பும் இராமனின் நெஞ்சத்தை நிறைத்து நின்றது உண்மை தான். இராமனது அபிமானத்திற்கும் அன்புக்கும் பாத்திரமாகிற அனைத்துத் தகுதியும் பரதனுக்கு உண்டு. இருந்தாலும், அன்புத் தம்பி இலக்குவன் அருகிலேயே இருக்கும் போது, நந்தியம் பதியில் இருக்கும் பரதனை சகோதர அன்புக்கு இலக்கணமாய் மீண்டும் மீண்டும் இராமன் சொல்லி மகிழ்கிறான் என்றால், அதிலும் ஒரு காரணம் இருக்கத்தான் செய்யும். பரதன் இராமனுடைய மனதில், ஓர் உன்னதமான இடத்தைப் பிடித்திருந்தான். கைகேயியின் சூழ்ச்சியால், மற்றவர்கள் தன்னைத் தவறாகப் புரிந்து கொண்டு பழிக்க நேரிடுமே எனப் பரதன் பலமுறை வருந்தி நின்றான். பரதனின் தாய், கைகேயியே பரதனைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. ஆனால் இராமபிரான் பரதனைச் சரியாகப் புரிந்து கொண்டிருந்தார். சாம்ராஜ்யத்தை ஆள வேண்டிய இராமன் காடேக வேண்டிய நிலை வந்ததே, இராமன் ஆள வேண்டிய அரசினைப், பரதன் ஆள்வதா என்ற கோபத்தில் இலக்குவன், சிங்கத்திற்கு இடும் உணவை நாய்க்குட்டிக்கு வழங்குவதா என்று கொதிக்கிறான்.

'சிங்கக் குருளைக்கு இடு தீம் சுவை ஊனை, நாயின்
வெங்கண் சிறு குட்டனை ஊட்ட விரும்பினாளே!
நங்கைக்கு அறிவின் திறம்! நன்று, இது! நன்று, இது! என்னா!
கங்கைக்கு இறைவன் கடகக் கை புடைத்து நக்கான்'

(நகர் நீங்கு படலம், அயோத்யா காண்டம்)

இலக்குவனின் இந்த சீற்றத்தைக் கண்ட இராமன், அச்சீற்றத்தைத் தணிவிக்கும் பொருட்டு 'இலக்குவா எப்பொழுது உன் கோபம் மாறும்? நம் தந்தையையும் தாயையும் வெற்றி கொண்ட பிறகு மாறுமா? இல்லை பரதனுடன் போர் செய்து அவனைப் போரில் வென்ற பிறகு மாறுமா? சொல்' என்கிறான். இலக்குவனின் சீற்றத்திற்கு எந்த விதத்திலும் பரதன் காரணமானவன் அல்லன் என்பதனை இராமபிரான் தெளிவுபடுத்துகிறான்.

'ஆன்றான் பகர்வான் பினும்; ஐய! இவ்வைய மையல்
தோன்றா நெறி வாழ் துணைத் தம்முனைப் போர் தொலைத்தோ
சான்றோர் புகழும் தனித் தாதையை வாகை கொண்டோ?
ஈன்றாளை வென்றோ, இனி, இக்கதம் தீர்வது? என்றான்'

(நகர் நீங்கு படலம், அயோத்யா காண்டம்)

அதனைச் செவி மடுத்த பின்னரே இலக்குவன் சீற்றம் தணிந்தது.

வனத்திற்கு வந்த இராமனை, எப்படியாகிலும் சமாதானப்படுத்தி, நாட்டிற்கு அழைத்துச் சென்று, முடிசூடி ஆளச் செய்யலாம் என்ற எண்ணத்தில் பரதன் படையுடன் வந்தான். பரதனின் படைகள் கங்கையைக் கடந்து, சித்திர கூடத்தை அடைந்ததைக் கண்டு, இலக்குவன் சீற்றமடைந்தான். இலக்குவன் கோபத்தில் மேலும் கீழுமாகக் குதித்தான். விரைந்தோடிச் சென்று இராமபிரானைக் கண்டு 'பரதன் உன்னை மதிக்காமல், படையெடுத்து வந்துள்ளான். அவன் திரட்டி வந்திருக்கும்

படைகளைச் சிதறடித்து ஓடச் செய்வேன்' என்கிறான். அதைவிடவும் ஒரு படி மேலே சென்று சினம் முற்றிய நிலையை அடைந்த இலக்குவன், 'காட்டில் இராமன் பதினான்கு ஆண்டு காலம் உறைய நேர்ந்ததே என்று பெருந்துன்பத்தினால், கோசலா தேவியார் அரற்றும் போது, அதனைப் பார்த்து கொஞ்சமும் வருந்தாமல் கைகேயி மகிழ்ச்சி கொண்டாள். அதே கைகையி இனி பரதனை என்னால் இழந்து அரற்றி அழப்போகிறாள்' என்றான்.

'வையகம் துறந்து வந்து அடவி வைகுதல்
எய்தியது உனக்கு' என, நின்னை ஈன்றவள்
நைதல் கண்டு உவந்தவள், நவையின் ஓங்கிய
கைகயன் மகள், விழுந்து அரற்றக் காண்டியால்

(திருவடி சூட்டு படலம், அயோத்தியா காண்டம்)

பரதன் என்னும் பண்பாளன் :

இவ்வாறு இலக்குவன் பேசி முடித்த பின், இராமன் இலக்குவனைப் பார்த்து 'இலக்குவா நீ பதினான்கு உலகங்களையும் கலக்குவதாக இருந்தாலும், உன் ஆற்றலை யாராலும் தடுத்து நிறுத்த இயலாது. என்றாலும், நான் உன் அறிவுக்குப் பொருத்தமான செய்தியினைக் கூறுகிறேன் கேள் எனச் சொல்லி, குற்றமில்லாத சூரிய குலத்தில் வந்த நம் முன்னவர்களான அரசர்களின் தொகையை எண்ணிப் பார்க்க இயலுமா? அத்தகைய மன்னர்களில், ஒருவர் கூட தருமம் தவறி நடந்ததாக வரலாறு இல்லை' பரதனும் அப்படிப்பட்ட மன்னர்கள் வழிவந்தவன் தான். வேதங்களில் கூறப்பட்டுள்ள அறங்களுக்கு மாறாக அவன் ஒருநாளும் நடக்க மாட்டான். பரதன் என் மீது கொண்டுள்ள மாறாத அன்பின் காரணத்தினால், வனத்தில் உறையும் என்னைக் காண வருகிறான். நாட்டையே என்னிடத்தில் ஒப்படைத்து, என்னை அயோத்தியை ஆட்சி செய்யுமாறு அழைக்க வந்துள்ளானே அல்லாமல், பெரும்படையுடன் போர் செய்ய வந்துள்ளான் என நீ எண்ணுவது முற்றிலும் தவறானது. பரதன் என் அன்பைப் பெரிதாக மதிப்பவனே அல்லாமல், நால்வகைப்

படைகளையும், அரசாட்சியையும் விரும்பி ஆசை கொள்பவன் அல்லன். தருமத்தின் நிலையமாகவும், நற்பண்புகளின் கொள்கலமாகவும் விளங்கும் பரதனைப் போய் தவறாகக் கருதிவிட்டாயே. பரதனைப் பற்றித் தவறாக எண்ணுவது உன் தகுதிக்குப் பொருத்தமாகுமா? பரதனை நீ என்ன அறியாதவனா? இருந்தாலும் பரதனைப் பற்றிய உண்மை நிலையைத் தேர்ந்து தெளியாமல் நீ சினமடைந்து, சொல்லிலும் கடுமையை வெளிப்படுத்தினாயே அதன் காரணம் என்னவென்றால் 'நீ என்மீது கொண்டுள்ள பெரும்பற்று. அதனால் தான் உணர்ச்சி வசப்பட்டு உண்மையைப் புரிந்து கொள்ளத் தவறிவிட்டாய்' என்று கூறினான்.

'சேண் உயர் தருமத்தின் தேவை, செம்மையின்
ஆணியை, அன்னது நினைக்கல் ஆகுமோ?
பூண் இயல் மொய்ம்பினாய்! போந்தது ஈண்டு, எனைக்
காணிய; நீ இது பின்னும் காண்டியால்'

(திருவடி சூட்டு படலம், அயோத்யா காண்டம்)

சுக்ரீவனுடைய துணையினால், வானரப்படையினை உதவிக் கழைத்துக் கொண்டால், சீதை இருக்கும் இடத்தைக் கண்டறிந்து, பின்னர் அவளை மீட்கும் முயற்சியில் ஈடுபடலாம் என இராமபிரான் எண்ணினான். இலக்குவனோடு சுக்ரீவனைச் சந்திக்க வந்தான். அனுமன், சுக்ரீவனுடைய நிலைமையினை இராமனுக்கு எடுத்துரைத்தான். சுக்ரீவனும் இராமனும் நட்பு செய்து கொண்டனர். சுக்ரீவனை வாலி கொன்று குவிக்க எண்ணமிட்டதையும், சுக்ரீவனின் மனைவியை வாலி கவர்ந்து கொண்டதையும், வாலியின் வலிமையையும் அனுமன் இராமனுக்கு எடுத்துரைத்தான். சுக்ரீவனைப் பார்த்து இராமன், 'தலைமையோடு தாரமும் இன்றே தருவேன்' எனச் சொல்லி, வாலியைப் போருக்கு அழைக்குமாறு ஏவினான். வாலி சுக்ரீவனோடு போர் செய்யக் குன்றின் பக்கமாக வருகை தந்தான். சுக்ரீவன் வாலியைக் கொல்ல இராமனின் உதவியைக் கோரியது, இலக்குவனுக்கு நெருடலாக இருந்தது. 'பகைவனைப் போலத் தன் தமையனைக் கொல்ல வந்து நின்ற

சுக்ரீவனை நம்பலாகுமோ? தன் தமையனிடம் இவ்வாறு நடந்து கொள்பவன், மற்றவர்களிடம் எப்படி நடந்து கொள்வானோ? என்றெல்லாம் இலக்குவன் இராமனிடம் கூறினான். அதுகேட்ட இராமன், விலங்குகளின் ஒழுக்கத்தைப் பற்றி அதிகம் பேச முடியாது' என்று சொல்லி அண்ணனைப் பகைத்துக் கொண்ட சுக்ரீவனைப் பற்றிய ஆற்றாமையை வெளிப்படுத்துகிறாயே, எல்லாத் தாய்மார்களின் வயிற்றில் பிறந்த புத்திரர்களிலும், பரதனைப் போல் சகோதரனுடன் ஒத்து நடக்கும் ஒருவனைக் காணமுடியுமா? உலகில் எல்லாத் தம்பியரும் தங்கள் தங்கள் தமையனின் சொல்வழி அடங்கி ஒழுகும் இயல்பில் சிறிதும் வழுவாதவராயின், அவ்வியல்புடைமை பற்றிப் பரதனே யாவரினும் மேம்பட்டவன் என்று உலகத்தார் மிகவும் உயர்வாக புகழப்பெறும் சிறப்பினை அடைந்திருத்தல் இயலாது. எனவே தமையனுக்குப் பணிந்து உத்தமராய் ஒழுகும் பரதனைப் போன்ற தம்பியர் மிகவும் அரியராதலினால், சுக்ரீவனிடம் அந்த நேயத்தை எதிர்பார்க்க இயலாது என்று இராமன் தெரிவித்தான்.

'அத்தா! இதுகேள்' என, ஆரியன் கூறுவான், 'இப்
பித்தாய விலங்கின் ஒழுக்கினைப் பேசல் ஆமோ!
எத்தாயர் வயிற்றினும் பின் பிறந்தார்கள் எல்லாம்
ஒத்தால், பரதன் பெரிது உத்தமன் ஆதல் உண்டோ?'

(வாலி வதைப் படலம், கிட்கிந்தா காண்டம்)

வாலி வதம் நிகழ்ந்து முடிந்த பின், கார்காலம் படை நடத்திக் கொண்டு வருவேன் எனச் சொன்ன சுக்ரீவன், நன்றி மறந்து காலந் தாழ்த்திய போது, இராமன் சினமுற்று, இலக்குவனை உண்மை நிலையைக் கண்டு வரும்படி அனுப்பினான். 'நன்றி கொன்றவனை அழித்தொழிப்பதும் தவறில்லை' எனச் சொல்லக் கூடிய விதத்தில் இராமன் வெகுண்டான். இலக்குவன் சுக்ரீவனிடம் அனைத்தையும் எடுத்துரைத்து அவனை அழைத்துக் கொண்டு வர, வந்த சுக்ரீவன் இராமனது திருவடியில் விழுந்து, தன் பொறுப்பற்ற தன்மைக்கும், காலத் தாழ்விற்கும் மன்னிப்பு வேண்டி நின்றான். அந்த நேரத்தில்

இராமன் குற்றம் மறந்து சுக்ரீவனை மீண்டும் தன் அன்புக்குரியவனாகச் சேர்த்துக் கொண்டான். சுக்ரீவனைப் பார்த்து 'நீ என்னிடம் பரதனைப் போன்ற அன்புடையவன்' என்கிறான். 'பரதன் நீ இனையன பகரற் பாலையோ' என்ற கம்பனின் வாசகம் இங்கு எண்ணிப் பார்க்கத் தகுந்தது. அருகில் இலக்குவனை வைத்துக் கொண்டு, அன்புடைய தம்பி பரதனை ஒப்புமை காட்டுகிறான் இராமன் என்று எண்ணும் பொழுது, இலக்குவன் முன்னிலையில் பரதனது பெயரையும் பண்பையும் மீண்டும் மீண்டும் இராமபிரான் சொல்லிக் காட்டுவதில், ஒரு உட்பொருள் இருக்கத்தான் வேண்டும், எனச் சிந்திக்கத் தோன்றுகிறது.

இலக்குவனை மாற்றும் திறம் :

இலக்குவன் கைகேயியின் மேல் கொண்டுள்ள சினத்தினால் பரதனையும் தவறாகக் கணித்திருந்தான். இராமனுக்குக் கொடுமை இழைத்த, கைகேயியின் மகனாகத் தான் பரதனை இலக்குவன் பார்த்தானே அன்றி, இராமனின் தம்பியாகவும், தன் அண்ணனாகவும் எண்ணிப் பார்க்கத் தவறி விட்டான். இராமன் மேல் கொண்ட அன்பு இலக்குவனை உணர்ச்சி வசப்பட வைத்தது. உணர்ச்சிப் பெருக்கில் நிற்கும் இலக்குவன் உண்மையை உணராமல் போய்விடக் கூடாது; அதனால் பரதனை பிழைபட எண்ணிவிடுதலும் கூடாது என்ற எண்ணம் இராமனுக்கு இருந்து கொண்டே இருந்தது. ஒவ்வொரு நிலையிலும் சீற்றங்கொண்ட இலக்குவன், பரதனைக் குறை கூறும் போதெல்லாம், உடனடியாக, அவன் கருத்தைத் திருத்தும் பொறுப்பை இராமன் செயல்படுத்திக் கொண்டே இருந்தான். தன்மீது எல்லையில்லாத அன்பு பாராட்டும் இலக்குவன், பரதனிடம் வெறுப்பைக் காட்டினால், சகோதரத்துவம் என்ற மாண்புமிகு தத்துவம் பரிபூரணநிலையை, அடைவதற்குப் பதிலாகச் சற்று குறைவுபட்டுப் போகும் என்ற எண்ணம் இராமனுக்கு இருந்தது. சகோதரர்கள் கூட குழுக்களாகப் பிரிந்து கொண்டு, ஒருவர் வாழ மற்றொருவர் அதனை ஏற்றுக் கொள்ள இயலாத, செயற்கைத் தனமான தன் முனைப்புடன் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த உலகில், இராம சகோதரர்கள் கட்டிக் காத்த சகோதரத்துவம்

மேல்வரிச் சட்டமாக இருக்கிறது என்றால், அதற்குக் காரணம் நால்வரும், ஒருவர் மேல் ஒருவர் அன்பைப் பொழிந்து, நேயத்தை நிலை நிறுத்திக் கொண்டது தான். சகோதரத்துவத்தின் தன்மை, அதன் முழுப் பரிமாணத்தோடு இராமகாதையில் மிளிர்கிறது என்றால், அதற்கு இராமனின் பங்களிப்பு முழுமையானதாக அமைந்துள்ளது. எனவே பரதனைப் பலமுறை இலக்குவன் முன்னிலையில் இராமபிரான் உயர்த்திப் பேசியது, எந்த நிலையிலும் இலக்குவனைக் குறைத்துப் பேசியதாகாது.

தனக்கு எல்லாமே இராமன் தான்; இராமன் தான் தன் உலகம்; தாய் தந்தை சுற்றம்; என வாழ்ந்தவன் இலக்குவன். இராமனுக்கு எது விருப்பமோ அதுவே தனக்கு விருப்பமென வாழ்ந்தவன். தனக்கென விருப்பு வெறுப்பென்றில்லாமல் இராமனோடு இரண்டறக் கலந்தவன். இராமபிரானின் செம்மாந்த இயல்புகளையும், மனப்பண்பினையும் நல்ல வண்ணம் புரிந்து கொண்டவன். எனவே இராமனது எண்ணத்திற்கு மாறாக இலக்குவன் எதையும் சிந்திக்க மாட்டான். இராமபிரானின் மனதில் யார் யார் உயர்ந்த இடத்தில் உள்ளனரோ, அவர்கள் இலக்குவனின் அன்பிற்கும் மரியாதைக்கும் உரியவர்களாகத் தான் இருக்க முடியும். என்பதனைப் புரிந்து கொண்ட இராமன், தன் மனதில் பரதன் பிடித்திருந்த இடத்தை இலக்குவன் புரிந்து கொள்ள வேண்டும் எனக்கருதி, பரதனின் உயர்வை, சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் எடுத்துரைக்கிறான். பரதன் மேல் இலக்குவன் கொண்ட சினம் கொஞ்சம் கொஞ்சமாக மாறி, பரதனிடம் இலக்குவன் பூரண அன்பைச் செலுத்த இராமனின் நடவடிக்கை தான் காரணமாக அமைந்தது.

பிரிந்தவர் கூடினார் :

வனவாழ்வு முடிந்து திரும்பி வந்த இராமன் அன்னையரை வணங்க, பரதன் இராமனடி வீழ்ந்தான். இலக்குவனும் பரதனது அடிமலர்களில் விழுந்து வணங்கினான். நால்வகைப் படைகளையும், அரசையும், அதன் அங்கங்களையும் இராமனது

பாதுகைக்கே அர்ப்பணித்து வாழ்ந்த பரதனின் செந்தாமரைத் திருவடிகளில், தன் தலை தோயுமாறு இலக்குவன் வீழ்ந்து வணங்கினான்.

'அனையதோர் காலத்து, அம்பொன் சடைமுடி அடியது ஆக
கனைகழல் அமரர் கோமாற் கட்டவன் படுத்த காளை,
துனை பரி, கரி, தேர் ஊர்தி என்று இவை பிறவும், தோலின்
வினை உறு செருப்புக்கு ஈந்தான் விரைமலர்த் தாளின் வீழ்ந்தான்'

(திருமுடி சூட்டு படலம், யுத்த காண்டம்)

சத்துருக்கன் தலைமீது கூப்பிய கையுடன், இராமனது திருவடியிலும், இலக்குவனின் திருவடியிலும் வீழ்ந்து வணங்கினான். நான்கு சகோதரர்களும் இவ்வாறு ஒன்றுபட்டு அன்பில் திளைத்து நிற்கும் காட்சி ஆனந்தக் கண்ணீரை வரவழைக்கும் அரிய காட்சியாகும்.

வாலியின் சகோதர பாசம் :

வாலியைக் கொல்வதற்கான அனைத்துச் செயல்களையும் திட்டமிட்டுச் செய்து, நேருக்கு நேர் வாலியோடு போர் செய்து, வாலியின் ஆற்றலுக்கு ஈடுகொடுக்க முடியாத நிலையில்சுக்ரீவன் நின்றபோது, 'சுக்ரீவனுக்கு உதவுவேன்' என மராமரத்திற்குப் பின்னால் ஒளிந்து நின்ற இராமன், வாலியின் மேல் பாணத்தைச் செலுத்தினான். யாரும் வெல்வதற்கரியவனான வாலி, மண்ணில் சாய்ந்தான். சிங்கம் போன்ற வாலி, தன் ஆற்றலால், மார்பில் பதிந்திருந்த அம்பைப் பறித் தெடுத்தான். வாலியின் மார்பிலிருந்து இரத்தம் வெள்ளமாய்ப் பெருகிற்று. அந்த வாலியின் மார்பிலிருந்து புறப்பட்ட இரத்த ஆற்றைக் கண்டு, உடன்பிறப்பு என்ற பாசத்தால் பிணிக்கப்பட்ட சுக்ரீவன், கண்கள் நீர்சொரிய தரையில் வீழ்ந்தான். 'தான் ஆடாவிட்டாலும் தன் தசையாடும்' என்ற முதுமொழிக் கிணங்க சுக்ரீவன் துடித்தான்.

வாசத் தாரவன் மார்பு எனும் மலை வழங்கு அருவி
ஓசைச் சோரியை நோக்கினன்; உடன் பிறப்பு என்னும்
பாசத்தால் பிணிப்புண்ட அத் தம்பியும், பசுங்கண்
நேசத் தாரைகள் சொரி தர, நெடுநிலம் சேர்ந்தான்.

(வாலி வதைப்படலம், கிட்கிந்தாகாண்டம்)

தன்னைக் கொல்வதற்கான வழிவகைகளை, நாடிச் செயல்படுத்தியவன் சுக்ரீவன் என்பதனைத் தெரிந்து கொண்ட பிறகும், மரணத்தின் வாயிலில் நின்ற வாலி, சுக்ரீவனின் நல்வாழ்வை, அவன் மேல் கொண்ட பாசத்தினால் இராமனிடம் வரமாக வேண்டி நின்றான். மது அருந்தும் பழக்கம் உடைய சுக்ரீவன் மதிமயங்கித் தீமை செய்கிற நிலைக்கு வந்தாலும், தன் மேல் செலுத்திய அம்பினை சுக்ரீவன் மேல் இராமன் செலுத்தாதிருக்க வேண்டும் என்று வாலி வரங்கேட்கிறான் என்றால், தான் மாண்டு போன பிறகும், தன் சகோதரன் வாழ்ந்திருக்க வேண்டும் என்ற பாசமும், நல்லெண்ணமும் உடையவனாக அவன் இருந்தான் என்பது தெளிவாகிறது. பாசப்பிணைப்பினால், ஒருவருக்கொருவர் மனமுவந்து தியாகம் செய்யத் தயாராக இருக்கும் இராம சகோதரர்களுக்கு, சுக்ரீவனின் செயல், விபரீதமாக கூடத் தோன்றலாம். ' மூத்த சோதரனின் உயிரைப் பறிக்க, ஒரு இளைய சகோதரன் காரணமாகலாமா? என்ற எண்ணத்தை மனதில் கொண்டு இராமனின் தம்பிமார்கள், சுக்ரீவனைத் 'தன் அண்ணனைக் கொன்றவன்' என்று இகழும் நிலை ஏற்படுமோ என்று வாலி எண்ணிப் பார்க்கிறான். அந்த நிலை சுக்ரீவனுக்கு ஏற்பட்டு விடக்கூடாது எனக் கருதி இராமனைப் பார்த்து 'இராமபிரானே! என் தம்பியை உன் தம்பிமார்கள், தன் மூத்த சகோதரனைக் கொன்றவன் என்று சொல்ல நேர்ந்தால், அந்தப் பழிச்சொல் வராமல் தடுத்து நிறுத்த வேண்டியது உனது கடமையாகும்' என்றான்.

'இன்னம் ஒன்று இரப்பது உண்டால்; எம்பியை, உம்பிமார்கள்
'தன் முனைக் கொல்வித்தான்,' என்று இகழ்வரேல், தடுத்தி, தக்கோய் !

(வாலி வதைப்படலம், கிட்கிந்தா காண்டம்)

வாலி பின்னர் தன் தம்பியான சுக்ரீவனைத் தன் இரண்டு கைகளாலும் அணைத்துக் கொண்டு 'என் இறப்புக்காக நீ வருந்த வேண்டாம்' என்றான். பின் சுக்ரீவனுக்குத் தான் சொல்ல வேண்டியனவற்றை அறிவுரையாய் எடுத்துரைத்தான் .

வாலியின் அறிவுரை :

'உயிர்கள் யாவும் இராமனின் திருநாமத்தையே உச்சரிக்கின்றன. வஞ்சகத்தையே வாழ்நாள் முழுதும் செய்பவனாக இருந்தாலும், இராமனது திருவடியைச் சேர்ந்த மாத்திரத்தில் அவனும் தூயவனாகி பரமபதம் சென்றடையும் தன்மையினைப் பெறுகிறான். திருமகளுடன் வாசம் செய்யும் திருமாலான, இராமபிரானின் கட்டளையை சிரமேற்கொண்டு, இராமபிரானுக்கு குற்றேவல் புரிவதே இனிச் செய்ய வேண்டியதாகும். அறியாமை மிக்க குரங்கின் தன்மையினையும், மயக்கத்தையும் விட்டொழித்துவிட்டு, இராமபிரான் செய்த உதவியை மறக்காமல் மனதில் இருத்திக் கொண்டு, இராமனுக்காகத் தக்க சமயத்தில் உயிரையும் கொடுக்க முன்வர வேண்டும். அதுவே பிறவிக் கடலைக் கடப்பதற்குரிய வழியாகும். அரசாட்சியைப் பெற்று விட்ட மகிழ்ச்சி மீதூற, அறிவு மயங்கி, இராமனை இகழாமல் அவன் திருவடிகளே தஞ்சம் என்று வாழ்தல் வேண்டும். மன்னர்கள் நெருப்பைப் போன்றவர்கள். அவர்களின் சீற்றம் எதிர்பாராத நேரத்தில் சுட்டெரித்து விடும் என்பதனைக் கருத்தில் கொள்ள வேண்டும். எனவே நாம் செய்யும் குற்றங்கள் எப்பொழுதும் மன்னிக்கப்படும் எனக் கருதி தவறினைத் தொடர்ந்து செய்தல் கூடாது.' இவ்வாறெல்லாம் சுக்ரீவனுக்கு அறிவுரை சொல்லி அவனை இராமனிடத்தில் வாலி அடைக்கலப்படுத்துகிறான் என்பதனை எண்ணிப்பார்க்கும் போது, சுக்ரீவனுக்கும் வாலிக்கும் இடையில் இருந்த வேறுபாட்டையும், பகையையும் விஞ்சிய சகோதரப் பாசம் நம்மை வியப்பெய்தச் செய்கிறது. தன்னைக் கொல்வித்தவன், வாழ்ந்தால் என்ன? மாண்டால் என்ன? என்று எண்ணுகிற சாமான்ய மனோநிலையைத் தாண்டி, பலபடி உயர்ந்து நிற்கிறது சிறியன சிந்தியாதானின் சகோதரப் பாசம்.

கும்பகர்ணன், வீடணனிடமும் இராவணனிடமும் கொண்டிருந்த சகோதர பாசம் எல்லையில்லாதது. இவ்வாறு அயோத்தி, ஆரண்யம், கிட்கிந்தை, இலங்கை எனப் பல பகுதிகளிலும் பரவி நின்ற சகோதரத்துவம் என்ற இனிய பண்பைக் கம்பன் உன்னத நெறியாகத் தருகிறான். உடன் பிறந்தார் என்ற எல்லைக் கோட்டுக்குள் வலம் வந்து கொண்டிருந்த சகோதரத்துவத்தை 'உடன் பிறந்தால் மட்டும் தான் சகோதரன்' என்ற நிலையை மாற்றி, உணர்வுகள் ஒன்றுபடும் பொழுது சாதி, இன, மொழி, நிற எல்லைகளை எல்லாம் தாண்டி, சகோதரத்துவம் வளர முடியும் என்கிற நிலையை நோக்கி, நம்மை அழைத்துச் செல்பவன் இராமன். தான் சென்ற இடமெல்லாம், கால்கள் நடந்த பாதையெல்லாம், சகோதரத்துவத்திற்கு வித்திட்டவன். காட்டில் கங்கைக் கரையில் ஒரு தம்பியும், எழிலார் கிட்கிந்தை மலையில் ஒரு தம்பியும், இலங்கை நாட்டில் ஒரு தம்பியும் எனக் குகனையும், சுக்ரீவனையும், வீடணனையும் தன் தம்பியராய்க் கொண்டு, தன் தந்தை தசரதனுக்கும் அவர்களைப் புதல்வர்களாக்கிப் பார்த்து மகிழ்ந்து, உலகு தழுவிய சகோதரத்துவத்தின் கொடியை உயர்த்திப் பிடித்தவன் இராமன். சண்டையும் சச்சரவுகளும் நம்மை விட்டு விலக, பிரிவினைகளும் பேதங்களும் மாய்ந்து போக, நம் இதயங்களுக்கிடையே உள்ள இடைவெளிகள் இல்லாமல் போக சகோதரத்துவம் பேணுவோம் எனக் கம்பன் நமக்கு இராமன் மூலம் அழைப்பு விடுக்கிறான்.

16. உயிர் பறிக்கும் காமம்

'காமத்தால் இறந்தாரைக் கணக்கிட்டுச் சொல்ல முடியாது' என்பது அனுமனின் கூற்று. 'காமியத் தழுந்தி உழலாதே; காமன் கைப்பட்டு மடியாதே' என்று அருணகிரிநாதர் பாடினார். வரன் முறைக்கு உட்படாத காமம், ஒரு மனிதனை அழிவுப் பாதையில் தான் அழைத்துச் செல்லும். ஒருவன் எத்தனைச் சிறப்புக்களைப் பெற்றவனாக இருந்தாலும், முறையற்ற காமம் என்ற குற்றத்தின் பிடியில் அவன் சிக்கிக் கொண்டால், அனைத்து நல்ல

குணங்களையும் ஒவ்வொன்றாக இழந்து பின்னர் அழிந்து பட்டுப் போவான். இராமகாதையின் எதிர்க்கதைத் தலைவனான இராவணன் காமத்தினால் வீழ்ந்தான். ஒருவனது கல்விச் சிறப்பையும், ஆற்றலையும், குடிப்பெருமையையும் ஒரு சேர அழிக்க வல்லது முறைகேடான காமம்.

வேதம் அறிந்தவன் :

இராவணன், சதுர்வேதத்தை அறிந்து வைத்திருந்தவன்; தன் இசை மழையால் இறைவனையே ஈர்க்கும் ஆற்றல் கொண்டவன்; தோல்வியினைக் கண்டு துவளாத நெஞ்சுரமும், உண்மை வீரமும் ஆளுமைத் திறமும் கொண்டவன். அறிவுடன் கலை ஞானமும், இறைஞானமும் இணையப்பெற்ற, ஈடு இணையற்ற வீரனாக விளங்கியவன் . இத்தனையும் இருந்தும், பாற்குடத்தில் விழுந்த நஞ்சு போல முறைகேடான காமம் என்னும் தீய குணத்தால் வீழ்ந்து போனான். விருப்பமில்லாத பெண்ணைத் தொட்டால், பத்துத் தலைகளில் ஒன்று வெடித்துச் சிதறும் என்ற சாபமிருந்தும், தன் காமத்தைக் கட்டுக்குள் வைக்கத் தெரியாதவன். இவனால் முன்பொருநாள் எரியில் விழுந்து உயிரை மாய்த்துக் கொண்ட வேதவதி என்னும் பெண் 'மீண்டும் உலகில் உதித்து தன்னைப் பழி தீர்த்துக் கொள்வாள் என்று தெரிந்தும் பயமின்றி இருந்தவன். இத்தனை காமவசப்பட்டவனாக இராவணன் இருந்ததால் தான், எளிதாக அவனை வீழ்த்தும் உபாயத்தை சூர்ப்பநகையால் கையாள முடிந்தது. அந்த உபாயத்தைக் கையாண்ட சூர்ப்பநகையும் முறையற்ற காமத்திற்கு ஆட்பட்டவள். எனவே' பாம்பின் கால் பாம்பறியும்' என்பது போல இராவணனை, அவன் பலவீனத்திற்குத் தீனிபோட்டு வீழ்த்தலாம் என்று தெரிந்து வைத்திருந்தாள்.

பஞ்சவடியில் இராமனை சூர்ப்பநகை பார்த்தாள். இராமனது அழகில் மயங்கினாள். உத்தம இலக்கணங்களோடு நான்முகனால் படைக்கப்பட்ட ஆண்களில், இவனைப் போல் அழகன் இல்லை. என்று சொல்லி முறையற்ற காமத்தின் வசமானாள். அவளது மனத்திலே தோன்றிய காமமானது, ஆகாயமும் கடல் நீரும் அளவில்

குறைந்தவை என்று சொல்லுமாறு பெருகிற்று. இரப்போர் எவ்வளவு தான் கெஞ்சிக் கேட்டாலும் அவர்கட்கு ஒரு சிறு பொருளும் வழங்காத இரக்கமற்ற கருமியின் புகழ் நாளுக்கு நாள் குறைந்து பின்னர் அழியும். தன் பொருளை மட்டும் காத்துக் கொண்டால் போதும், மற்றவர்களுக்கு உதவி புரிய மாட்டேன் என்றிருக்கக், கருமி எங்ஙனம் புகழ்பெற இயலும். கருமியின் புகழ் தேய்வதைப் போல, சூர்ப்பநகையின் கற்பும் தேய்ந்தது என்கிறான் கம்பன்.

'நீத்தமும் வானமும் குறுக, நெஞ்சிடைக்
கோத்த அன்பு உணர்விடைக் குளிப்ப மீக்கொள,
ஏத்தவும் பரிவின் ஒன்று ஈகலான், பொருள்
காத்தவன், புகழ் எனத் தேயும் கற்பினாள்'

(சூர்ப்ப நகைப் படலம், ஆரண்ய காண்டம்)

கண்ணை மறைத்த காமம் :

இராமன் மேல் கொண்ட காமத்தினால், வெதும்புகின்ற மனமுடையவளானாள் சூர்ப்பநகை. இராமனின் தோள் மேல் பதித்த தன் கண்களை மீட்கும் ஆற்றல் அற்றவளானாள். இராமனது ஆகத்தைக் தழுவவில்லை என்றால், சாவாமையைத் தரும் அமுதத்தை உண்ண நேர்ந்தாலும் இறந்து படுவேன் என்கிறாள் சூர்ப்பநகை. நஞ்சு தலைக்கேறுவது போல், சூர்ப்பநகையிடம் காமம் மூண்டெழுந்தது. மலையில் இருந்து புறப்பட்டு வரும் தென்றல் காற்று என்னும், எமனது வேலானது அவள் நெஞ்சத்தைத் துளைத்தது. அவளது நிலையை வர்ணிக்க வந்த கம்பன் நிலவை கறியாகக் கொண்டு, வில்லைக் கையில் ஏந்திய மன்மதனை உணவாக மென்று தின்று விட வேண்டும் என்ற எண்ணமுடையவள் சூர்ப்பநகை என்கிறான்.

'கலை உவா மதியே கறி ஆக, வன்
சிலையின் மாரனைத் தின்னும் நினைப் பினாள்,
மலைய மாருத மா நெடுங் கால வேல்
உலைய மார்பிடை ஊன்றிட, ஓயுமால்'

(சூர்ப்பநகைப் படலம், ஆரண்ய காண்டம்)

இத்தகைய முறையற்ற காமம் தான், சூர்ப்பநகையை அடுத்த தவற்றினைச் செய்யத் தூண்டியது. தனக்குப் போட்டியாக இருக்கும் பெண்ணைத் தூக்கிச் சென்று விட்டால், இராமனது அன்பைத் தன்னால் பெற்று விட முடியும் என்ற தவறான எண்ணத்தில் சீதையைக் கவர்ந்து கொண்டு வான் வழி ஏக முற்பட்டு, இலக்குவனது சீற்றத்திற்கு ஆளானாள். மூக்கறுபட்ட பின்னரும் சூர்ப்பநகையின் எண்ணம் மாறவில்லை. 'எனது மூக்கை அறுத்து விட்டீர்கள். அதனால் என்ன, என்னை நீங்கள் ஏற்றுக் கொள்வதாக இருந்தால் ஒரு நொடிப் பொழுதில் இழந்த மூக்கை மீண்டும் உண்டாக்கிக் கொள்வேன். முழு அழகையும் பெறுவேன். உங்கள் அருளைப் பெறுகிற பாக்கியம் எனக்குக் கிடைக்குமானால், அதன்பிறகு மூக்கு இல்லாமையால் பெண்மைக்கு ஒரு குறை உண்டாகுமோ? அதிகமாக நீண்டு வளர்ந்துள்ள மூக்கும் பெண்களுக்குத் தேவையற்றது அல்லவா?' என்றாள்.

'போக்கினீர் என் நாசி; போய்த்து என்? நீர் பொறுக்கு விரேல்
ஆக்குவென் ஓர் நொடி வரையில்; அழகு அமைவென்; அருள் கூரும்
பாக்கியம் உண்டு எனின், அதனால் பெண்மைக்கு ஓர் பழுது உண்டோ?
மேக்கு உயரும் நெடுமூக்கும் மடந்தையர்க்கு மிகை அன்றோ'?

(சூர்ப்பநகைப் படலம், ஆரண்ய காண்டம்)

காமம், சூர்ப்பநகையின் கண்ணை மறைத்ததனால், தன் அங்கங்களைப் பங்கப்படுத்தியவர்கள் என்பதனைக் கூட மறந்து, எப்படியாகிலும் தன்னை அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்

என்பதிலேயே சூர்ப்பநகை பிடிவாதம் காட்டினாள். 'ஒரு வேளை இவள் அங்கங்கள் சிதைக்கப்பட்டால், இவளை யாரும் விருப்பத்துடன் பார்க்க மாட்டார்கள். இவள் நம்பக்கத்திலேயே இருந்து விடுவாள் என்றெண்ணிக் கூட மூக்கை அறுத்திருக்கலாம்' என்று சொல்லி இராமனைப் பார்த்து, ' உன் உள்ளம் கவர்ந்த ஒருத்தி உனக்கு இருக்கிறாள் என நீ எண்ணினால், உன் தம்பியோடு அவன் மனைவியாக என்னை இருக்கச் செய்' என்றாள். 'உன் தம்பி ' மூக்கு முழுவதும் இல்லாத இவளுடன் நான் வாழ்வதா' எனக் கூறுவானாகில் ' நீ இடை இல்லாதவளோடல்லவா நீண்ட காலம் வாழ்ந்து கொண்டிருக்கிறாய்' அதை எடுத்துச் சொல்லி அமைதி அடையச் செய்வாயாக' என்றாள்.

'பெருங்குலா உறு நகர்க்கே ஏகும் நாள்
வேண்டும் உருப் பிடிப்பேன்; அன்றேல்
அருங்கலாம் உற்று இருந்தான் என்னினும்
ஆம் இளையவன் தான் அரிந்த நாசி
ஒருங்கு இலா இவளோடும் உறைவெனோ?
என்பானேல் இறைவ! ஒன்றும்
மருங்கு இலாதவளோடும் அன்றோ 'நீ
நெடுங்காலம் வாழ்ந்தது' என்பாய்

(சூர்ப்பநகைப்படலம், ஆரண்ய காண்டம்)

காமத்தை வெல்லும் ஞானம் :

அறுபட்ட மூக்குடன் இலங்கைக்கு ஓடிச் சென்ற சூர்ப்பநகை மானுடர் தன் மூக்கைத் தடிந்த கதையைச் சொல்ல, அது கேட்ட இராவணன் நீ இடை இழைத்த குற்றம் என்னை கொல்' என வினவ, 'யாவர்க்கும் எழுத ஒண்ணா தன்மையைப் பெற்ற, மின்னலிடமிருந்து இடையையும், மூங்கிலிடமிருந்து தோளையும், பொன்னிடமிருந்து தன் மேனியையும் பெற்ற ஒருத்தி காரணமாக ஏற்பட்டது அவளை உன்னிடம் கொண்டு வந்து சேர்ப்பதற்காகத் தூக்கி வர முற்பட்ட போது தான் இந்த அவமானம் ஏற்பட்டது' என்று சூர்ப்பநகை சொல்ல, அந்தக் கணமே, இராவணன் மனதை விட்டு மானம், வீரம் முதலான பண்புகள் விடைபெற்றுச் செல்ல, காமம்

அவன் மனதில் நிலையான இடத்தைப் பிடித்துக் கொண்டது. அவனது மனதில் எழுந்த காமமும், உடலில் அதனால் தோன்றிய வெம்மையும், அவன் உயிரோடு ஒன்று கலந்து விட்டன.

'தங்கை மூக்கினைத் தடிந்தானே' என்று உண்டான சினத்தைக் கூட, அவன் மனதை நிறைத்த காமம் அழித்து விட்டது. ஒரு மன்னனுடன் எப்பொழுதும் நிலை பெற வேண்டிய மானம், வீரம் ஆகிய பண்புகளைக் கூட காமம் விழுங்கி விட்டது.

***'கோபமும், மறனும், மானக் கொதிப்பும், என்று இனைய எல்லாம்,
பாபம் நின்ற இடத்து நில்லாப் பெற்றி போல், பற்று விட்ட;
தீபம் ஒன்று ஒன்றை உற்றால் என்னல் ஆம் செயலின், புக்க
தாபமும் காமநோயும் ஆர் உயிர் கலந்த அன்றே'***

(சூர்ப்பநகை சூழ்ச்சிப்படலம், ஆரண்ய காண்டம்)

காமத்தின் தீய விளைவுகளை நன்கறிந்தவன் தான் இராவணன். அறிந்தே பிழை செய்யும் அவனை வைத்தே காமத்தின் தன்மையைக் கம்பன் பேசுகிறான். சீதையைப் பற்றிய கற்பனையில் இராவணன் சஞ்சாரம் செய்வதற்கு, சூர்ப்பநகை வர்ணித்த வர்ணனை ஒரு காரணமாக அமைந்திருந்தது. வேறொரு பொருளை எண்ணுவதற்கு மனமின்றி, அவன் மனம் முழுவதும் சீதையையே எண்ணிக் கொண்டிருந்தது. சீதையை மறப்பதற்கு அவனுக்கு வழி ஒன்றும் தெரியவில்லை. அந்த மனம் மயங்கிய நிலையில், அந்த இராவணனே எண்ணிப் பார்த்தான். காமத்தை வெல்வது சாத்தியமாகுமா? ஞானம் இருந்தால் மட்டும் தான் காமத்தை வெல்ல முடியும் என்கிறான்.

***'சிற்றிடைச் சீதை என்னும் நாமமும் சிந்தை தானும்
உற்று, இரண்டு ஒன்று ஆய் நின்றால், ஒன்று ஒழித்து ஒன்றை உன்ன
மற்றொரு மனமும் உண்டோ! மறக்கல் ஆம் வழி மற்றுயாதோ!
கற்றவர் ஞானம் இன்றேல், காமத்தைக் கடத்தல் ஆமோ?'***

(சூர்ப்பநகை சூழ்ச்சிப் படலம், ஆரண்ய காண்டம்)

வெயிலில் வைக்கப்பட்ட வெண்ணெய் போல், சீதையின் நினைவால் வெதும்பிற்று இராவணன் மனம். கல்வி அறிவில்லாத மூடன் மற்றவர்கள் கண்களுக்கு மறைத்துச் செய்யும் தீமையைப் போல, இராவணனுடைய கொடிய காம நோய் வளர்ந்து கொண்டே போனது.

'விதியது வலியினாலும், மேல் உள விளைவினாலும்,
பதிஉறு கேடு வந்து குறுகிய பயத்தினாலும்,
கதிஉறு பொறியின் வெய்ய காமநோய், கல்வி நோக்கா
மதியிலி மறையச் செய்த தீமைபோல், வளர்ந்தது அன்றே'

(சூர்ப்பநகை சூழ்ச்சிப் படலம், ஆரண்ய காண்டம்)

இத்தகைய கீழான காம உணர்வு தான் ஒரு மன்னாதி மன்னன், தன் எண்ணத்தை நிறைவேற்றும் நோக்கத்தோடு, தன் சுயவடிவத்தை மறைத்துக் கொண்டு, மாறுவேடம் பூணும் நிலைக்கு அவனைக் கீழ்மைப்படுத்தியது. உண்பதனை முற்றிலும் துறந்துவிட்ட முனிவனைப் போல, வற்றிய உடம்புடன் முத்தண்டத்தை ஏந்திய கோலம் பூண்டான் இராவணன். அக்கோலத்தைக் கண்ட சீதை உண்மை என நம்பினாள். 'இராவணன் ஆட்சி செய்யும் இலங்கையிலிருந்து வந்தேன்' என மாறுவேடத்தில் இருந்த இராவணன் சொல்ல, அது கேட்ட சீதை 'இந்த உடம்பும் கூட மிகை என்று எண்ணும் அளவுக்கு காட்சி தரும் தவமேனியரே, தாங்கள் வேதங்களை ஓதும் அந்தணர்களின் அருளை விரும்பாமல், அரக்கர்கள் வைகும் நகரத்தில் தங்கியதென்ன' என்றாள்.

காமத்தால் வரும் அழிவு :

சீதையை பர்ணசாலையுடன் அகழ்ந்து கொண்டு, வான் வழியாகச் சென்ற இராவணனைத், தடுத்து நிறுத்த சடாயு முற்பட்ட போது, இராவணனுக்கு முதலில் அறிவுரை சொல்லிப் பார்த்தான். மாதா அனையாளை யாதாக நினைத்தாய் என்றான்? இராவணன் தன் இழிசெயலால் தன் சுற்றத்தாரின் வாழ்க்கையோடு, சொந்த வாழ்க்கை முழுவதையும் எரித்து அழித்து விட்டான் என்கிறான் சடாயு.

'கெட்டாய் கிளையோடும்; நின் வாழ்வை எலாம்
சுட்டாய்; இது என்னை தொடங்கினை? நீ
பட்டாய் எனவே கொடு பத்தினியை
விட்டு ஏகுதியால் விளிகின்றிலையால்'

(சடாயு உயிர் நீத்த படலம், ஆரண்ய காண்டம்)

முறைகேடான காமத்தைக் கட்டவிழ்த்து விடுபவனது சுற்றமும் அழியும் என்பதனை சடாயு எடுத்துரைக்கிறான்.

அனுமன் உணர்த்திய அறம் :

இராவணனை அவனது அரண்மனையில் சந்திக்கின்ற வாய்ப்பைப் பெற்றபோது, தான் இராமதூதன் என்பதனை இராவணனுக்குத் தெரிவித்த அனுமன் 'உலகுக்குப் பொதுவான நீதியை இராவணனுக்கு உணர்த்தினால் அது நலம் சேர்க்கும் எனக்கருதி, நீதியை எடுத்துரைத்தான். ' அரச நீதியைப் பற்றிக் கொஞ்சமும் எண்ணிப் பார்க்காமல், தீய செயல்களைப் புரிந்து, உன் வாழ்வை நீயே கெடுத்துக் கொண்டாய். ஆகவே உனக்கு அழிவுக் காலம் தொடங்கி விட்டது. நீ உன் ஐம்புலன்களை அடக்கி வென்று அரிய தவம் செய்து பெறலரும் பேற்றினைப் பெற்றாய். அத்தகைய சிறப்பு, தீயைக் காட்டிலும் தூய்மையானவளான சீதையைத் துயர் செய்யத் தொடங்கும் போதே உன்னை விட்டு விலகி விட்டது. முறை தவறி, பிறன்மனையின் மேல் ஆசை கொண்டு, அறத்தை மறந்து அறிவில் மயக்கம் கொண்டவர்கள் மேலும், மேலும் கீழ்நிலைக்குத் தாழ்ந்துபோய், பின்னர் அழிந்து போவார்கள். அறத்திற்கு மாறாக நடப்பவர்களில் அழியாமல் வாழ்பவர்கள், யாரும் இல்லை என்று மனதில் இராவணனுக்குத் தைக்கும் படி உரைத்தான்.

'திறம் திறம்பிய காமச் செருக்கினால்
மறந்து, தம் தம் மதியின் மயங்கினார்
இறந்து இறந்து, இழிந்து ஏறுவதே அலால்
அறம் திறம்பினர் ஆர்உளர் ஆயினார்'?

(பிணி வீட்டு படலம், சுந்தர காண்டம்)

காமத்தால் அழிந்தவர் கணக்கற்றார்

முறையற்ற காமத்தினால், பிறர் மனைவியை விரும்பிய எத்தனையோ ஆடவர்கள் தங்களது நேர்மையற்ற செயலால் மறைந்து அழிந்தார்கள். அவர் தம் தொகையினைக் கணக்கிடவும் இயலாது.

'காமத்தால் இறந்தார் களி, வண்டு உறை
தாமத் தாரினர், எண்ணினும் சால்வரோ'?

(பிணி வீட்டு படலம், சுந்தர காண்டம்)

'பிறர் எள்ளி நகைக்கும் செயலைத் துணிந்து செய்து கொண்டு, 'இழி நிலையை எட்டுகிறோம்' எனத் தெரிந்தும் வெட்கம் இல்லாதவனாய், உலகு பழிக்க வாழ்ந்து கொண்டிருப்பவன் ஆண்மகனே அல்லன்' என்றான் அனுமன். தன்னை விரும்பாத ஒரு பெண்ணை, தன்னை அடியோடு வெறுக்கும் பெண்ணைத், தேடிச் சென்று, அவள் பலமுறை மறுத்துக் கூறிய பின்னும், கெஞ்சியும் கூத்தாடியும் அவள் இசைவைப் பெற்று விடலாம் என்று உயிர்வாழ்கின்ற வாழ்க்கை ஒரு வாழ்க்கையா? அத்தகைய மானமற்ற வாழ்வு வாழ்வதைக் காட்டிலும், முகத்தின் நடுவே காணப்படும் மூக்கை அறுத்துக் கொண்டு வாழ்வது கூட அழகாகத் தான் இருக்கும்,' என ஆத்திரத்துடன் அனுமன் பேசினான். மானமற்று வாழ்பவனுக்கு முகத்தில் மூக்கு இருக்க வேண்டிய அவசியமே இல்லை எனக் கடுமை தோன்றக் கூறினான் அனுமன்.

'வெறுப்பு உண்டாய ஒருத்தியை வேண்டினால்,
மறுப்பு உண்டாய பின் வாழ்கின்ற வாழ்வினின்,
உறுப்பு உண்டாய் நடு ஓங்கிய நாசியை
அறுப்புண்டால், அது அழகு எனல் ஆகுமே'

(பிணி வீட்டு படலம், சுந்தர காண்டம்)

'நாம் தசமுகத்தைப் பெற்றுள்ளோம் நம்மையாரும் வெல்ல இயலாது என்று இராவணன் இறுமாப்பில் மிதந்து கொண்டு யாரும் தனக்கு நிகரில்லை என ஆணவங்கொண்டுள்ளான்' என்பதனைப் புரிந்து கொண்ட அனுமன், 'பத்து தலை என்ன? ஆயிரம் தலைகள் இருந்தாலும், எத்தனை கைகள் இருந்தாலும், அறம் தவறும் போது அந்தத் தலைகளாலும் கரங்களாலும் ஒன்றும் செய்ய இயலாது' என்கிறான். தங்கள் பலத்தையும், செல்வத்தையும் அரணாக எண்ணிக் கொண்டு எந்தத் தீமையையும் செய்யத் துணியும் மானுடப்பதர்களுக்கும் சேர்த்துத் தான் அனுமன் அறிவு கொளுத்துகிறான். செல்வாக்கையும் பணபலத்தையும் மட்டும் வளர்த்துக் கொண்டால், சமூகத்தில் எந்தத் தீமையை வேண்டுமானாலும் கட்டவிழ்த்து விடலாம்; தட்டிக் கேட்பதற்கு யாருக்கும் துணிச்சல் வராது என்று எண்ணிக் கொண்டிருப்போருக்கும் அனுமன் அறம் உரைக்கிறான். அறம் தன் ஆற்றலைக் காட்டும் நேரம் வரும்போது அந்த அறமானது தீயவனின் ஆள், பண, படைபலம் அனைத்தையும் நெருப்பு சுட்டெரிப்பது போல சுட்டுப் பொசுக்கி நீறாக்கும் என்பதனை மறந்து விடக் கூடாது என்கிறான்.

'பாரை ஓறுவ பற் பல பொற் புயம்,
ஈர் ஐஞ்ஞூறு தலை உள; என்னினும்,
ஊரை ஒறும் கடுங் கனல் உட்பொதி
சீரை ஓறு, அவை சேமம் செலுத்துமோ'?

(பிணி வீட்டு படலம், சுந்தர காண்டம்)

இராவணனது செவிகளில் விழுந்த தன் சொற்களில், ஒன்றிரண்டையாவது இராவணன் எடுத்துக் கொள்ளமாட்டானா? என எண்ணமிடுகிறான் அனுமன்.

வேதங்கள் எடுத்துச் சொல்லும் அறநெறியெல்லாம் உணர்ந்தவன் இராவணன், என்பதனைத் தெரிந்து கொண்டதால், அனுமன் இர்ர்வுணனைப் பார்த்து 'அறத்தின் எல்லையை நீ

தாண்டலாமா?' எனக் கேட்டான். பொருளின் மேல் உள்ள தீராத ஆசையினால், பாவங்களைச் செய்வதும், பிறன் மனைவியின் மேல், கொண்ட ஆசையினால் அறம் பிறழ வாழ்வதுமே 'இருள்' என்றும் 'பாவம்' என்றும் ஆன்றோர்களால் சொல்லப்பட்டுள்ளது. வறியாருக்கு ஒன்று ஈதல், எவரிடத்திலும் அருளுடன் நடத்தல் முறையற்ற பொருளாசை, பெண்ணாசையைத் துறத்தல் இவைகளே ஆன்றோர்களால் 'ஞானம்' என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது' எனச்சொல்லி, பாவத்தை விட்டு விட்டு மீண்டும் இராவணன் அறவழியை நாடுதல் வேண்டும் என அனுமன் உரைக்கிறான்.

ஒரு மனிதனின் அறிவுக் கண்ணைக் குருடாக்கி, அவன் மதியை மயங்கச் செய்து, அவன் அதுவரை ஆற்றிய அறத்தை எல்லாம் கொன்று, அவனது கல்வியறிவையும் தின்று, அவனைப் பிறர் எள்ளி நகையாடுமாறு செய்து, மானத்தையும் வீரத்தையும் அவனை விட்டு நீக்கி, அவன் செல்வத்தை எல்லாம் அழித்து, அவனது புகழைத் தேய்த்து அவன் அழகையும் சிதைத்து, அவனது சமூக அந்தஸ்தையும் பாழாக்கி, அவனை இறுதியாக அழித்து ஒழிக்கும் முறைகேடான காமம் முற்றிலும் நீக்கப்பட வேண்டிய ஒன்று என்பதனைக் கம்பன் திறம்பட எடுத்துரைக்கிறான். பிராட்டி அனுபவித்த துயருக்கெல்லாம், இராவணனின் முறைகேடான காமமே காரணம் என்பதனால், கம்பன் காமத்தைச் சாடும் போது சற்று வேகமாகவே சொற்களைப் பிரயோகிக்கிறான். இன்றைக்கும் சிதைக்கப்பட்ட சிறகுகளோடு, கயவர்களின் கைச்சிறைகளில் அடைக்கப்பட்டுக் கிடக்கும், விடுதலையில்லாத வண்ணத்துப் பூச்சிகளாக எத்தனை பெண்கள். காமம் கருத்தழிக்கும் என்பதனைக் கனவில் கூட எண்ணிப் பார்க்க விரும்பாத, அறிவுக் குருடர்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் மண்ணில், கம்பனின் மணியான வாசகங்கள் தீமையைத் திருத்தும் பணியைத் தொடர்ந்து கொண்டு தான் இருக்கும்.

17. விதியின் பிழை

மனித வாழ்வில் ஒவ்வொரு நிகழ்வும், நாம் நினைப்பது போல் நடப்பதில்லை. விழைவு கொள்வதற்கு நமக்கு விருப்பம் இருந்தாலும், தீர்மானம் செய்கின்ற உரிமை முழுமையாக நம் வசம் இருக்கிறதா? என்று எண்ணிப் பார்த்தால் அது கேள்விக் குறி. வாழ்க்கையில் இன்ப துன்பங்கள் மாறி மாறி வரும்போது, அதனை ஏற்றுக் கொள்ளுகின்ற பக்குவமான மனோநிலை நமக்கு அமையாத தன் காரணமே, நாம், 'அனைத்துச் செயல்களும் நம் வசம் உள்ளன' என எண்ணுகின்ற எண்ணம் தான். அதே சமயத்தில் 'எதுவும் நம் வசம் இல்லை எனவே நாம் சோம்பித்திரியலாம். நடப்பது நடக்கும்' என்றிருக்கும் முயற்சியற்ற வாழ்வும் பயனற்றதாகப் போகும். நமக்கென்று விதிக்கப்பட்டுள்ள கடமைகளைச் செய்து கொண்டு, இன்ப துன்பங்களின் பிடிக்குள் மாறி மாறிச் சிக்கிக் கொண்டு, மனமழிந்து போகாமல், வாழ்க்கையின் தன்மையினையும், தரத்தினையும் சரியாகப் புரிந்து கொண்டு வாழ்தல் வேண்டும். 'there is a divinity that shapes our ends' நம் இலக்குகளை இறைவன் தீர்மானிக்கிறான் என்கிறார் ஷேக்ஸ்பியர்.

விதியின் தன்மை

வாழ்வில் இன்பங்கள் எதிர்ப்படும் பொழுது, இறைவனையோ, விதியையோ எண்ணிப் பார்ப்பவர் மிகவும் குறைவு. துன்பம் ஏற்படும் போது, அதனால் துவண்டு போகும் நிலைவரும் போது, விதியை மனிதர்கள் எண்ணிப் பார்க்கின்றனர். கைகேயி கேட்ட வரத்தினால் இராமன் காடேக வேண்டிய நிலை வந்ததும் கோசலை, ' தசரதமன்னனைப் பார்த்து இராமன் காடேக விடாமற் செய்வேன்' என மன்னனைத் தேடி வந்தாள். கைகேயியின் மாளிகையில் தசரதன் தரையில் விழுந்து கிடப்பதைப் பார்த்து மயங்கிச் சாய்ந்தாள். 'தசரதனின் இந்த முடிவு அறிவுடையாகுமா? இல்லை விதியின் விளையாட்டா' என்று புலம்பினாள். இராமன் காடேக வேண்டும் என்ற செய்தி கேட்டு இலக்குவன் கொல்லன் உலைக்களத்தில் துருத்தியில் இருந்து வரும் காற்றினால், மிகுதியாக

வளரும் நெருப்பைப்போல் கொதித்தான். அதனைக் கண்ட இராமன் விதி செய்த தவறுக்காக, இலக்குவன் மற்றவர்கள் மேல் சீற்றம் கொள்ளலாகாது என்றுரைக்கிறான். தான் கானகம் செல்ல வேண்டும் என்பது விதியின் திட்டமே அல்லாமல், தாயாரின் தவறோ, தந்தையின் தவறோ, பரதன் தவறோ அல்ல என்று மிக நிதானமாக எடுத்துரைக்கிறான். எந்த ஒரு விரும்பத்தகாத செயல் நடைபெறும் போதும், இதனைச் செய்தவர் யார் என்பதில் தான் அக்கறை கொள்கிறோமே தவிர, அச்செயல் எதனால் நடைபெற்றது என்பதனைப் பெரும்பாலும் நிதானமாகச் சிந்தித்துப் பார்ப்பதில்லை. அவதார நாயகனான இராமபிரான், காடேக வேண்டும் என்ற கட்டளைக்குப் பின்னால் 'விதியின் திட்டம் ஒன்று உண்டு' என்பதனை உணர்ந்திருந்தான். அயோத்தி மாநகரை விட்டு, இராமன் புறப்படத் தயாரானான். இலக்குவனும் பின் தொடரச் சித்தமானான். இராமனும் இலக்குவனும் வசிட்ட முனிவனை வணங்கினார்கள். வசிட்ட முனிவன் இருவரின் முகத்தையும் மனத்தையும் பார்த்தான். மரவுரி திகழும் அவர்கள் மேனியையும் பார்த்தான். துன்பம் மேலிட்டது. பட்டஞ்சூடி அரசாள வேண்டிய நாளில், காடேக வேண்டிய தாழ்ச்சி, தீவினை என்னும் விதியினால் அல்லவா உண்டானது. உலகில் உயிர்களைப் படைக்கும் பிரம்மாவே எவ்வளவு ஆராய்ந்து செயல்பட்டாலும், பற்ற வேண்டிய நேரத்தில் ஊழ்வினை பற்றிக் கொள்ளத் தான் செய்யும். எத்தன்மை உடையவராக இருந்தாலும் விதியின் செயற்பாடுகளை நீக்கி விட முடியாது என்று வசிட்டன் எண்ணமிட்டான்.

'வாழ்வினை நுதலிய மங்கலத்து நாள்,
தாழ்வினை அதுவர , சீரை சாத்தினான்;
சூழ்வினை நான்முகத்து ஒருவன் சூழினும்,
ஊழ்வினை ஒருவரால் ஒழிக்கற் பாலதோ'!

(நகர் நீங்கு படலம், அயோத்யா காண்டம்)

கிரேக்க நாட்டுத் தத்துவ ஞானியும், காவிய கர்த்தாவுமான ஹோமரின் வாசகம் இங்கு ஒப்பு நோக்கத் தகுந்தது. " No man or woman born coward or brave can shun his destiny' பெண் வயிற்றில் பிறந்த எந்த ஒரு ஆணோ, பெண்ணோ, வலியனோ, எளியனோ, விதியை மட்டும் யாராலும் புறந்தள்ள முடியாது' என்கிறார்.

காட்டிற்கு வந்த இராமனை, பரத்துவாச முனிவன் எதிர் கொண்டு அழைக்கிறான். அந்த பரத்துவாஜ முனிவனை இராமன் மலர்களைத் தூவி அர்ச்சித்து, மூன்று முறை வணங்கினான். 'இத்தவ வேடத்திலா உன்னைக் காண்பது' எனப் பரத்துவாசன் வருந்த, இராமபிரான், காட்டிற்குத் தான் வந்த காரணத்தை, முனிவனுக்கு எடுத்துரைக்கிறான். அது கேட்ட பரத்துவாச முனிவன் 'இது விதியினால் விளைந்த தீமை' என்று சொல்லி, 'இத்தகைய தீமை விதியினால் ஏற்பட்ட பின், அதனை மாற்றுவது அவ்வளவு எளிதானதல்ல; பெருமைமிக்க நிலமகள் உன்னை அரசனாக அடைவதற்குத் தவம் இயற்றவில்லை' என்றான்.

'உற்று உளபொருள் எல்லாம் உணர்வுற உரை செய்தான்;
நல் தவமுனி. 'அந்தோ! விதி தரு நவை' என்பான்,
'இற்றது செயல் உண்டோ இனி?' என இடர், கொண்டான் ,
'பெற்றிலள் தவம், அந்தோ! பெரு நிலமகள்' என்றான்'

(வனம் புகு படலம், அயோத்யா காண்டம்)

இராமனைப் போன்ற அவதார நாயகர்களும், வசிட்டன் பரத்துவாசன் போன்ற முனிவர்களும், விதியின் விளையாடலை யாராலும் மாற்ற இயலாது எனத் தேர்ந்து, தெளிந்த ஞான முடையவராயிருந்தனர். வயதிலும், அனுபவத்திலும் இம் முனிவர்களை எல்லாம் விட, குறைந்தவனான இலக்குவன் உணர்ச்சி வசப்பட்ட நிலையிலும், இளமைத் துடிப்பிலும் 'விதியென்ன விதி. விதியின் விளையாட்டை வில்லால் மாற்றிக் காட்டுவேன்' என்று சூளுரைத்தான். பின்னால் ஆரண்யத்தில் வாழும் போது வெஞ்சின விதியை யாராலும் வெல்ல முடியாது என்று தெரிந்து கொண்டான்.

விதியை வெல்வதா?

சீதாப்பிராட்டியை வான் வழியாகத் தூக்கிச் சென்ற இராவணனுடன் போராடி, இராவணனது வாளால், சிறகு ஒடிந்த சடாயு வீழ்ந்து கிடந்த இடத்தை நோக்கி, இராமபிரானும், இலக்குவனும் வந்தனர். 'கானகத்தில் சீதையைத் தனிமைப்படுத்தி விட்டு இருவரும் எங்ஙனம் பிரிந்து செல்லலாம்?' என சடாயு வினவ, இலக்குவன் நடந்து முடிந்த அனைத்தையும் சடாயுவிற்கு எடுத்துரைத்தான். அதனைக் கேட்ட சடாயு இராமனையும் இலக்குவனையும் தேற்றும் முகத்தான், விதியின் தன்மையினை இருவருக்கும் எடுத்துரைத்தான். 'இந்த உலகில் நடைபெறும் ஒவ்வொரு செயலும் ஏற்கனவே விதியினால் தீர்மானிக்கப்பட்டது தான். அதை மீறி வேறொரு புதிய செயலை யாரும் செய்து விட முடியாது. இந்தப் பிறவியில் ஒரு மனிதன் அனுபவிக்கும் துன்பங்கள், அவனது முற் பிறப்பின் நல்வினை தீவினைகளுக்கு ஏற்றபடி அமையும். அறிவின் ஆற்றலால், விதியின் வலிமையை யாரும் வெற்றி கொள்ள இயலாது. இந்த உண்மையினை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். அனைத்தும் ஊழ்வினையின் படியே நடக்கும் என்பதனை நாம் உணர்ந்து வைத்திருந்தால், மனத்தை வருத்திக் கொண்டு, அலைபாயும் நிலையை அடைய மாட்டோம். படைப்புக் கடவுளான பிரம்மாவின் ஒரு சிரத்தை அறுத்து முடித்த ஊழ்வினைக்கு, செய்ய இயலாத செயல் என்று ஒன்று இல்லை.' என்கிறான் சடாயு.

'அதிசயம் ஒருவரால் அமைக்கல் ஆகுமோ?
துதி அறு பிறவியின் இன்ப துன்பம் தான்
விதி வயம் என்பதை மேற்கொளாவிடின்
மதி வலியால் விதி வெல்ல வல்லமோ'?

(சடாயு உயிர் நீத்த படலம், ஆரண்ய காண்டம்)

தேவாதி தேவர்களே, ஊழ்வினையின் கையிலகப்பட்டு எத்தகைய துன்பத்தை அனுபவித்தனர் என்று சடாயு சொல்லி, இராம

இலக்குவரைத் தேற்ற முயன்றான். 'திரிபுரத்தையே எரித்து அழித்த ஆற்றல் உடையவர் தான் சிவபெருமான். ஆனால் விதியின் வலிமையினால் அந்த சிவனும், பிரம்ம கபாலத்தைக் கையில் ஏந்தி பிச்சை ஏற்க வேண்டிய நிலை தான் வந்தது. வெங்கதிர்ச் செல்வனான ஆதவனை, வானில் இராகு கேது என்னும் பாம்புக் கிரகங்கள் ஒளி மங்கச் செய்கின்றன. அமுத தாரையினைப் பொழியும் நிலவும், மாதத்துக்கு ஒரு முறை வளர்வதும் தேய்வதுமாக உள்ளதே. இவை எல்லாம் விதியின் விளையாடல்கள் தான்.

ஊழ்வினையால் ஒருவனுக்குத் துன்பம் உண்டாவதும், பின் அந்தத் துன்பம் தீர்ந்து போவதும் தொன்று தொட்டு நடைபெற்று வரும் செயல்களாகும். தேவகுருவான பிரகஸ்பதியின் வாயினின்றும் உதித்த சாபச் சொற்களால், தேவேந்திரன் அனுபவித்த துன்பங்களைச் சொல்ல இயலுமா? சம்பராசுரன் என்ற அசுரனால், இந்திரன் அடைந்த பழிதான் கொஞ்சமா? எனவே விதி என்பதும், அதனால் உண்டாகும் விளைவுகளும் அனைவருக்கும் பொதுவானது' என்று விதியின் நிலையைத் தெளிவாக எடுத்துரைத்தான் சடாயு.

சடாயுவின் மறைவிற்குப் பின்னர் இராமன் மிகுந்த துயருற்று, என் தந்தையை இழந்தேன். உரிமையோடு என்னை மகனாக அடைந்த தந்தையான சடாயுவையும் இழந்தேன். அன்பான மனைவியையும் இழந்தேன். ஆயினும் இன்னும் உயிருடன் இருக்கின்றேன். இன்னும் இழக்க வேண்டியனவற்றை எல்லாம் இழந்து, நான் தவம் மேற்கொள்வதா இல்லை உயிரைப் போக்கிக் கொள்வதா?' என இலக்குவனிடம் இராமன் புலம்பும் போது, அதனைக் கேட்ட இலக்குவன் 'ஊழ்வினையின் செயல் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே இருக்கிறது என்பதனை நாம் பார்த்துக் கொண்டு தானிருக்கிறோம்' என்கிறான். 'விதியையும் மாற்றுவேன்' எனக் கூறிய இலக்குவன் 'யார் கவலைப்பட்டாலும், படாவிட்டாலும் விதி தன் வேலையைச் செய்து கொண்டே தான் இருக்கும்' என்று பேசுகிறான் என்றால் அவனும் மீள முடியாத துன்பத்தின் வாய்ப்பட்டு நின்றபோது, விதியின் தன்மையைப் புரிந்து கொண்டான் என்பது தெரிகிறது.

பிராட்டியை வருத்திய விதி:

அசோக வனச் சிறையில் இருந்த சீதையை அனுமன் சென்று கண்டு, தான் இராமதூதன் என்பதனை நிரூபித்த பின், தன் மனத்துயரை எல்லாம் பிராட்டி அனுமனிடம் கொட்டினாள். எப்படியெல்லாம் அவள் அசோக வனச் சிறையில் துன்புற நேர்ந்தது எனக்கேட்டு அனுமன் உள்ளம் உருகினான். விரைவில் 'இராவணன் அழிந்து படப் போகிறான்' என்ற நல்ல செய்தியை அனுமன் பிராட்டிக்குச் சொன்னான். சீதையோ, தன் துன்பங்களை அனுமனிடம் பங்கு வைத்தாள். இராமன் கானகத்தில் இருக்கத், தான் அசோக வனச் சிறையில், துன்பத்தில் துவள வேண்டிய நிலை வந்ததே, என உள்ளம் உருகினாள். பத்துமாதமாகச் சிறைக் கிடந்தும் தன்னை மீட்க இராமபிரான் வரவில்லையே. ஒருவேளை தான் அவருக்கு ஏற்ற பத்தினியல்ல என்று இராமபிரான் முடிவு செய்து விட்டானோ? 'ஆரம் தாழ்திரு மார்பற்கு அமைந்ததோர் தாரம் தானலன்' என்று இராமன் எண்ணமிட்டு விட்டானோ? இவ்வாறு அசோகவனச் சிறையில் அழுதழுது காலத்தைப் போக்குவதற்குக் காரணமாய் இருந்தவர் யார்? கொடுமனக் கூனியா? கொடுமையைச் செயல்படுத்திக் காட்டிய கைகேயியா! காட்டிலிருந்து தன்னைத் தூக்கிக் கொண்டு வந்த இராவணனா? அந்த இராவணனைத் தூண்டிய சூர்ப்பநகையா! என்றெல்லாம் அசோக வனத் தனிமையில் பலமுறை சீதாப்பிராட்டி எண்ணிப் பார்க்காமலா இருந்திருப்பாள். எண்ணி, எண்ணிப் பார்த்து ஒரு தெளிவான முடிவிற்கு வந்தாள் சீதை. இராமபிரான் அரசு கட்டிலில் இருந்து ஆட்சி செய்வதைக் கண்டு களிக்கவும், பட்டத்து யானையின் மத்தகத்தில் அமர்ந்து, வீதி உலா வருங்காட்சியைப் பார்க்கின்ற வாய்ப்பும், தனக்குக் கிடைக்கவில்லை. இதனை எண்ணி யாரைக் குறை சொல்வது. நாட்டினை ஆள வேண்டியவன், கானில் உறைகிறான். அரண்மனையில் வாழ வேண்டியவள், அசோக வனச் சிறையில் வாடுகிறாள். இதற்கெல்லாம் காரணம் விதியேயன்றி வேறு யார்? என்கிறாள் சீதை.

'அரசு வீற்றிருந்து ஆளவும், ஆய்மணிப்
புரசை யானையின் வீதியில் போதவும்
விரசு கோலங்கள் காண விதி இலேன்;
உரை செய்து என்னை? என் ஊழ்வினை உன்னுவேன்'

(சூளாமணிப் படலம், சுந்தரகாண்டம்)

பிராட்டியும் தன் துன்பத்திற்கெல்லாம், விதியே காரணம் என்று சொல்வதைக் கேட்கும் போது, நம் சிந்தனைகளுக்கும் செயற்பாடுகளுக்கும், அப்பாற்பட்ட ஒரு சக்தி இந்த பிரபஞ்சத்தில் காணப்படும், உயிரற்ற உயிருள்ள அனைத்துப் பொருட்களையும், உயிர்களையும் இயக்கிக் கொண்டிருக்கிறது என்ற எண்ணம் நமக்குள் எழுகிறது. மறை பொருளாக நின்று விதி தொழிற்பட்டுக் கொண்டே தானிருக்கும். Heaven from all creatures hides the book of fate' 'இறைவன் எல்லா உயிர்களிடத்தில் இருந்தும் விதி என்ற புத்தகத்தை மறைத்து வைத்துள்ளான்' என்கிறார் ஆங்கில நாடக ஆசிரியர் ஷேக்ஸ்பியர். கெதே என்னும் அறிஞன் குறிப்பிடும் போது இவ்வுலகில் படைக்கப்பட்ட பொருட்கள் அனைத்தும், ஒரு ஒழுங்குக்கு கட்டுப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன. எனினும் நம் வாழ்வில் நம்மை விதியே ஆட்சி செய்கிறது என்கிறான். "All is created and goes according to order, yet over our life time rules an uncertain fate' விதி என்பது வலிமையானது தான். அந்த விதி நம்மை வீழ்த்துவதற்காக மட்டுமே செயல்படும் தத்துவமல்ல. விதி வழி நாம் அனுபவிக்கின்ற துன்பங்கள் பல வேளைகளில் நம் அறிவுக் கண்களைத் திறக்கின்றன. அனுபவத்தைப் புகட்டுகின்றன. W.R. ஆல்ஜெர் என்ற அறிஞன் குறிப்பிடும்போது விதி என்பது நல்லவர்களுக்கு நண்பன்; ஞானிகளுக்கு வழிகாட்டி, முட்டாள்களுக்குக் கொடுங்கோலன், கெட்டவனுக்குப் பகைவன் என்கிறார். 'Fate is the friend of the good, the guide of the wise, the tyrant of the foolish, the enemy of the bad'.

எனவே இரவு, பகல் என்றில்லாது, விதி நம் வாழ்வில் இடைவிடாமல் தொழிற்பட்டுக் கொண்டே இருக்கிறது என்ற உண்மையைத் தெரிந்து கொண்டோமானால், வாழ்க்கையை அதன் சுக துக்கங்களோடு, அப்படியே அங்கீகரித்துக் கொள்கிற மனப்பக்குவத்தை நம்மால் பெற முடியும் எனக் கம்பன் சொல்லாமல் சொல்கிறான்.

18. நஞ்சு உண்பார் கள் உண்பவர்

மதியை மயக்கும் மதுவை அருந்துதல் கூடாது. மது அருந்துகிறவன் தன் உடலையும், உயிரையும் நட்டத்திற்குள்ளாக்கிக் கொண்டு, சமூக அறத்திற்கும் ஊறு விளைவிக்கிறான். நம் பாரத தேசம் சுதந்திரம் பெறுவதற்கு முன்பும், பின்பும் பாரத தேசத்தின் பவித்திரமான பண்புகள் காப்பாற்றப்பட வேண்டும் என்ற நல்லெண்ணங் கொண்ட சான்றோர் மது அருந்துவதையும், விற்பதையும் கடுமையாக ஆட்சேபித்தனர். இன்று நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் முரண்பாடுகள் நிறைந்த சமுதாயத்தில் 'மது அருந்துவது உடல் நலத்திற்குத் தீங்கானது' என்ற ஒரு வாசகத்தை மட்டும் மது விற்பனையில் சேர்த்துக் கொண்டால், மது விற்பனையும் தவறானதல்ல, என்று எண்ணிப் பார்க்கின்ற நிலை நிலவி வருகிறது. அறம் மறம் என்றும், நன்மை தீமை என்றும் இரண்டு பெரிய அம்சங்களை உள்ளடக்கியது வாழ்க்கை. 'தீயவை தீயினும் அஞ்சப்படும்' என்றார் திருவள்ளுவர். தீமை சட்டப் பூர்வமானதாக அறிவிக்கப்பட்டால், தீமை கூட சமூக அங்கீகாரத்தைப் பெற்று, நன்மை போல் நடிக்கலாம் என்ற மலினமான சூழ்நிலை நம்மத்தியில் நிலவி வருகிறது. சட்டங்கள் சந்தர்ப்பங்களுக்கு ஏற்றபடி திருத்தம், மறு திருத்தம் பெறுகின்ற நிலை வந்தாலும், தர்மங்கள் எனப்படும் அறங்கள் ஒருநாளும் மாறாது.

சமுதாயத் தீமை :

இந்த வகையில் எண்ணிப் பார்க்கும் போது மது அருந்துவது என்பது தனிமனித ஒழுக்கக் கேடு; சமுதாயத் தீமை. இதனைத் திருவள்ளுவரும் கள்ளுண்ணாமை என்ற அதிகாரத்தில் தெளிவுபடுத்துகிறார். மது உண்பதால் முதலில் உடம்பானது ஒரு விபரீத நிலையை மேற்கொள்கிறது. பின்னர் உண்டவனின் அறிவு மயங்குகிறது. நஞ்சும் கள்ளும் வேறு வேறல்ல என்கிறார் திருவள்ளுவர். நஞ்சானது உண்டவனது உயிரைத் தான் கொல்லும். ஆனால் மதுவோ உயிரினும் மேலான ஒழுக்கத்திற்கே உலை வைக்கும்.

'துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்'

என்கிறார் திருவள்ளுவர். கள்ளை உண்பவன் சமூகத்தில் தன்னுடைய மதிப்பை இழந்து விடுகிறான். மது உண்டு, அறிவு சோர்ந்து நிற்பவன், பிறரால் எள்ளி நகையாடப் படும் நிலைக்குத் தள்ளப்படுகிறான். எவ்வளவு தான் பாதிப்பைச் சந்தித்தாலும், கள்ளை உண்ணும் பழக்கம் உடையவன், 'அதனை விட்டு நீங்குதல் வேண்டும்' என்ற திட சிந்தனையை வளர்த்துக் கொள்வதில்லை. கள்ளை உண்ணும் பழக்கம் உடையவன், தான் அதனை உண்ணாத போது, மற்றொரு கட்குடியன், கள்ளை உண்டு அறிவிழந்து தளர்தலைக் காண்கிறான். அத்தகைய காட்சியைக் கண்ணால் கண்டும், தானும் இந்த நிலைக்குத் தான் பல வேளைகளில் ஆளாக நேரிடுகிறது என்பதனையும் மறந்து விடுகின்றான். எத்தனை அறிவுரைகளைச் சொன்னாலும், அது மதுப்பழக்கம் உடையவனிடத்தில் எடுபடாது. திருவள்ளுவர் இதனை விளக்குதற்கு ஓர் அருமையான உவமையைக் கையாளுகிறார். தண்ணீருக்குள் விழுந்து விட்ட ஒருவனை நெருப்பு விளக்கைக் கொண்டு தேட முடியுமா? விளக்கைக் கொண்டு தண்ணீரில் இறங்கினால், விளக்கொளியைத் தண்ணீர் அவித்து விடும். அதுபோல கள்குடித்து மதி மயங்கியவனிடம், எவ்வளவு

நல்லறிவைப் புகட்டினாலும் அது பயன்தராது.

'களித்தானைக் காரணங் காட்டுதல் கீழ் நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று'

என்பது வள்ளுவர் வாக்கு. ஒருவன் செய்கின்ற தவறுகளை மற்றவர்கள் எளிதாக மறந்து விடுவதற்கும், மன்னிப்பதற்கும் தயக்கம் காட்டினால் கூடத், தாயானவள் தன் மகன் எத்தனை தவறுகளைச் செய்தாலும், உடனே மறந்து மன்னிக்கும் இளகிய மனமுடையவளாக எப்போதும் இருப்பாள். ஆனால் கள்ளை உண்டு அறிவு மயங்கும் மகனைக் காணும் போது, தாயும் முகம் சுளிப்பாள். எனவே தான் எல்லாவிதமான உன்னதப் பண்புகளையும் ஒட்டு மொத்தமாக அழிக்கும் தன்மை உடைய கள்ளை அருந்துதல் தீது என்றனர். சான்றோரால் தவறு என்று தீர்மானிக்கப்பட்ட இப்பழக்கம் கைவிடப்பட வேண்டிய ஒன்று என்பதனை

'உண்ணற்க கள்ளை உணில் உண்க சான்றோரால்
எண்ணப் பட வேண்டா தார்'

என்று வள்ளுவம் எடுத்துரைக்கிறது. வள்ளுவப் பெருந்தகையின் சிந்தனைகளையும் அறிவுரைகளையும் அடியொற்றிய செய்திகளைக் கம்பன் உயர்நெறியாக நமக்குத் தருகின்றான்.

இராமாயணத்தின் கிட்கிந்தா காண்டத்தில் மதுப் பழக்கம் உடைய சுக்ரீவனின் வாயிலாகவே, மதுவின் தீமையை எடுத்துரைக்கிறான் கம்பன். கார் காலம் வந்தும், படைகொண்டுவராத சுக்ரீவனைச் சந்திப்பதற்காக சீற்றத்துடன் வந்த இலக்குவனைக் கண்டு, வானரப் படைகள் நாலாபக்கமும் சிதறி ஓடின. அனுமன் இலக்குவனைச் சுக்ரீவனிடம் அழைத்தான். வாலியின் மகனான அங்கதனும், அறிவிற் சிறந்த அமைச்சர்களுடன் வந்து, இலக்குவனின் செந்தாமரைத் திருவடிகளை வணங்க, இலக்குவனோ அங்கதனைப் பார்த்துத் தன் வருகையைச்

சுக்ரீவனிடம் தெரிவிக்குமாறு வேண்டினான். அங்கதன் சுக்ரீவனைச் சென்று கண்டு, இலக்குவனின் சீற்றத்தை எடுத்துச் சொல்ல சுக்ரீவனோ தான் ஏதும் குற்றம் செய்யவில்லை என்றும், இலக்குவனின் சீற்றத்திற்குக் காரணம் என்ன என்றும் வினவினான். அதனைக் கேட்ட அங்கதன், சுக்ரீவனை நோக்கி, 'படையுடன் வருவதாகச் சொன்ன சொல்லை மறந்து, நன்றியையும் மறந்து, கிடைத்த பெருஞ் செல்வத்தால் செருக்கடைந்துள்ளாய். காலத்தில் கடமையைச் செய்ய மறந்த உன் மேல், இலக்குவன் சீற்றம் கொண்டுள்ளான்' என்று சொல்ல சுக்ரீவன் தன் இழிநிலை குறித்து வருந்தினான். 'இலக்குவனின் வருகையைத் தனக்கு ஏன் முன்னரே தெரிவிக்கவில்லை' என அங்கதனைக் கேட்க, அங்கதனோ தான் தெரிவித்ததாகவும், அதனை உணர்ந்து கொள்ளாத நிலையில், சுக்ரீவன் மது மயக்கத்தில் இருந்ததாகவும் தெரிவித்தான்.

நெருப்பை அணைக்க நெய்யா?

அங்கதன் சொன்ன பதிலைக் கேட்டு, வருந்திய சுக்ரீவன், தான் கள் உண்டு கலங்கியதற்காக இரங்கினான். இராமனால் அழிவற்ற செல்வத்தைப் பெற்ற பிறகும், தான் இராமனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை மறந்து நின்றதற்குக் கள்ளுண்ட மயக்கம் தான் காரணம் என்கிறான் சுக்ரீவன்.

கொலை புரிதல், களவு செய்தல், கள்ளுண்டு மயங்குதல், பொய் உரைத்தல், குரு நிந்தனை செய்தல் ஆகிய ஐந்தும் பஞ்சமா பாதகங்கள் எனப்படுகிறது. ஐம் பெருந்தீமைகளுள் ஒன்று கள் அருந்துவது என்று தெரிந்தும், அந்தத் தவற்றினைத் தான் செய்ததாகக் குறிப்பிடுகிறான் சுக்ரீவன். கள் உண்பவன், மது மயக்கத்தில் தாய் இவள், மனைவி இவள் என்று வேறுபடுத்திப் பார்க்கும், தெளிவினை இழந்து விடுவதால், எத்தனை அறங்களை ஒருவன் புரிவதாக இருந்தாலும், கள் உண்பவன் தீமையைப் புரிபவன் ஆகின்றான். 'கள் உண்பது தவறு' என்று சுட்டிக் காட்டும் போது கள்ளை உண்ணும் பழக்கம் உடையவன், தனக்கு நல்லறிவு சொல்பவரைப் பார்த்து 'என்னிடம் இந்தக் குடிப் பழக்கம் தானே

உள்ளது. நான் வேறெந்தத் தவற்றையும் செய்யவில்லையே' என்று தான் குறிப்பிடுவான். இந்த மனோநிலை சுக்ரீவனிடமும் காணப்படுகிறது. தான் செய்கிற பிற நல்ல செயல்களைக் காரணம் காட்டி, மது அருந்துகிற ஒரு தவறு மட்டுமே தான் புரிந்து வருவதாக சமாதானம் தேட முற்படுகிறான்.

'ஏயின இது அலால் மற்று ஏழைமைப் பால தென்னோ?
தாய் இவள், மனைவி' என்னும் தெளிவு இன்றேல் தருமம் என் ஆம்?
தீவினை ஐந்தின் ஒன்றாம்; அன்றியும் திருக்கு நீங்கா
மாயையின் மயங்குகின்றாம்; மயக்கின் மேல் மயக்கும் வைத்தாம்!

(கிட்கிந்தைப் படலம், கிட்கிந்தா காண்டம்)

'எத்தனையோ ஞானியர் இவ்வறங்களைப் பூமியில் வாழும் மாந்தர்களின் நன்மைக்காக எடுத்தியம்பியுள்ளனர். வேதங்களும் பல்வகை அறங்களை மனிதர்களுக்குத் தெளிவாக உணர்த்திக் கொண்டுள்ளது. 'தீமைகளை அறவே அகற்றி, மனத் தெளிவுடன் வாழ்பவரே பிறவி நோயை ஒழித்தவராவர் என்றெல்லாம்' நல்லோர் வழிகாட்டிய பின்பும், நெளியும் புழுக்களை எடுத்தெறிந்து விட்டு கள்ளைப் பருகும் இழி நிலையை அடைந்தேனே. எரிகின்ற நெருப்பை அணைப்பதற்கு யாராவது நெய்யை வார்ப்பார்களா?' என்றெல்லாம் தன் நிலை குறித்துப் பேசுகிறான் சுக்ரீவன்.

'தன்னைத் தான் உணரத் தீரும் தகையறு பிறவி' என்பது சாத்திரங்கள் சொல்லும் உண்மை. ஒருவன் தன்னை உணர, உணர அவன் பிறவியாகிய துயர்க்கடலினின்று விடுபடுவான். மெய்யறிவு பெற்று, உண்மைப் பொருளான இறைவனை உணரும் போதுதான் மனிதன் முழுமை பெறுகிறான். அத்தகைய உண்மைத் தன்மையை உணராமல், பிணி சூழ்ந்த உடலைப் பெற்றிருப்பது போதாதென்று அதற்கு மேலும் கள்ளை உண்டு மயக்கம் அடைதல் தகுதியாகுமோ என்கிறான்.

அறிவை மயக்கும் மது :

மது அருந்துபவன், மற்றவர் அறிதல் கூடாது என்று மறைத்து அருந்துவதே, அப்பழக்கம் தவறானது என்பதனை அவன் உள்மனம் ஏற்றுக் கொண்டுள்ளது, என்பதனைக் காட்டுகிறது. மறைத்து மதுவை அருந்திவிட்டு, பின் மற்றவரெல்லாம் அறியவருகின்ற, நகைப்பிற்கிடமான செயலைப் புரிபவன், நற்கதி அடைவதில்லை. அடைக்கலம் என்று வந்து அடைந்தவரைப் பாதுகாப்பவரும், ஐம்பொறிகளையும் அடக்கி ஆள்பவரும், தத்துவ ஞானத்தில் ஆழ்ந்திருப்போரும், இன்ப துன்பங்களில் விருப்பு வெறுப்பு என்றில்லாமல் சமநிலையுடன் வாழ்பவரும் ஆகிய உத்தமர்கள் அடையும் நற்கதியினை, மது அருந்துபவன் அடைவது சாத்தியமாகாது.

'அளித்தவர், அஞ்சும் நெஞ்சின் அடைத்தவ ரறிவில் மூழ்கிக்
குளித்தவர், இன்ப துன்பம் குறைத்தவர், அன்றி, வேரி
ஒளித்தவர் உண்டு, மீண்டு, இவ்வுலகு எலாம் உணர ஓடிக்
களித்தவர் எய்தி நின்ற கதி ஒன்று கண்ட துண்டோ?'

(கிட்கிந்தைப் படலம், கிட்கிந்தா காண்டம்)

நற்கதி அடைதற்கு ஒருவன் என்னென்ன அறங்களைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதனை, சுக்ரீவன் நல்ல வண்ணம் தெரிந்து வைத்திருந்தான். அதனைப் போலவே ஒரு மனிதன் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டியவை, எவை எவை என்று சுக்ரீவன் வரிசைப்படுத்துகிறான். பகைவர் தமக்குத் செய்த தீமை, நண்பர்கள் செய்த பேருதவி, தான் கற்ற கல்வி, தன் கண் கூடாகக் கண்ட நிகழ்வுகள், சாத்திரங்களைக் கற்ற பெரியோர்களின் கூற்று, தமக்குப் பெருமை வந்து சேர்ந்த வழி, துன்பம் வந்ததற்கான காரணம் ஆகியனவற்றை ஒருவன் தெரிந்து வைத்திருப்பது அவனுக்கு நன்மை பயக்கும் என்று தெளிவாக எடுத்துரைக்கிறான்.

'செற்றதும் பகைஞர், நட்டார் செய்த பேருதவி தானும்,
கற்றதும், கண் கூடாகக் கண்டதும், கலைவலாளர்
சொற்றதும், மானம் வந்து தொடர்ந்ததும், படர்ந்த துன்பம்
உற்றதும், உணராராயின், இறுதி வேறு இதனின் உண்டோ'?

(கிட்கிந்தைப் படலம், கிட்கிந்தா காண்டம்)

ஒருவன் பகைவன் தனக்குச் செய்த தீமையையும், நண்பர்கள் செய்த உதவியையும் தெரிந்து வைத்திருத்தல் வேண்டும் என்று குறிப்பிடுகின்ற சுக்ரீவன், இந்த இரண்டையும், தான், மது மயக்கத்தினால் மறந்து விட்டதாகக் குறிப்பிடுகிறான். தான் தனது கண்ணால் பார்த்த சம்பவங்களையும், தனக்குத் துன்பம் உண்டான வழியையும் தெரிந்தும் அறிந்தும் இருந்தும், தனது கடமைகளை மறந்து நின்றமை, தன் அறிவு மயக்கத்தில் உண்டானது என்றும் ஒப்புதல் வாக்கு மூலம் கொடுக்கிறான்.

'மது அருந்துபவனை விட்டுத் திருமகளும் விலகிச் செல்வாள். வஞ்சமும் களவும் பொய்யும் அறியாமையும் மது அருந்துகிறவனிடம் தானே வந்து பொருந்தும். நஞ்சை விடக் கொடியதான கள், உண்பவனை நரகத்தில் கொண்டு போய்ச் சேர்க்கும்' என்றெல்லாம் சொல்லி, 'இத்தகையத் தீமைகளை மது அருந்துவதால் ஒருவன் புரிய நேரிடும் என்று தெரிந்தும் தவற்றினைச் செய்தேனே.! இனி அந்த மதுவைக் கைகளால் தீண்டுவதும் தவறு என்பதனை உணர்ந்து கொண்டேன்' என்கிறான் சுக்ரீவன். 'இனி அத்தகைய மதுவை நான் உண்பதாக இருந்தால், அறத்தின் அண்ணலான இராமபிரானின் செந்தாமரைத் திருவடிகள் என்னை அழிக்கட்டும்' என்கிறான் சுக்ரீவன்.

'கேட்டனென், நறவால் கேடு வரும்' என கிடைத்த அச்சொல்;
காட்டியது அனுமன் நீதிக் கல்வியால் கடந்த தல்லால்
மீட்டினி உரைப்பது என்னே? விரைவின், வந்து அடைந்த வீரன்
மூட்டிய வெகுளியால் யாம் முடிவதற் கையம் உண்டோ.?

ஐய! நான் அஞ்சினேன், இந் நறவினின் அரியகேடு;
கையினால் அன்றியேயும் கருதுதல் கரும மன்றால்;
வெய்ய தாம் மதுவை இன்னம் விரும்பினேன் என்னின், வீரன்
செய்ய தாமரைகள் அன்ன சேவடி சிதைக்க என்றான்

(கிட்கிந்தைப் படலம், கிட்கிந்தா காண்டம்)

மது அருந்தாத ஒருவன், மதுவினால் விளையும் தீமைகளைக் கண்டும், கேட்டும், கற்றும் எடுத்துரைப்பான். சுக்ரீவனோ தான் மது உண்ணும் பழக்கத்திற்கு அடிமையாகிப் போனவன் என்பதால், அத்தீய பழக்கம், எத்தகைய இழிநிலைக்கு மனிதர்களைக் கொண்டு செல்லும் என்பதனை, அனுபவரீதியாக உணர்ந்து எடுத்துரைத்தான்.

இப்பழக்கத்திற்கு சுக்ரீவன் அடிமையாகிப் போனவன் என்பதனால் தான், இராமபாணத்தினால் வீழ்ந்துபட்ட வாலி இராமனிடம் தன் ஆவி பிரிவதற்கு முன்னால் வரம் கேட்கும் போது, சுக்ரீவன் மது அருந்தும் பழக்கம் உடையவன். எனவே மதுவை அருந்தி விட்டுப் புத்தி வேறுபட்டுத் தீவினையைச் செய்ய நேர்ந்தாலும் நேரலாம். அத்தகைய நிலை வருமானால் சீற்றங்கொண்டு, தன்மேல் ஏவிய பகழியை, சுக்ரீவன் மேல் ஏவி அவனைக் கொன்று விடக்கூடாது என்றும், சுக்ரீவன் தவறு இழைப்பதாக இருந்தால் கூட அவனை மன்னித்து அருளி, இராமன் பாதங்களில் அவனை அடைக்கலப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் வேண்டிக் கொண்டான்.

'ஓவிய உருவ! நாயேன் உளது ஒன்று பெறுவது உன்பால்;
பூ இயல் நறவம் மாந்தி, புந்தி வேறு உற்ற போழ்தில்
தீவினை இயற்றுமேனும், எம்பிமேல் சீறி, என்மேல்
ஏவிய பகழி என்னும் கூற்றினை ஏவல் என்றான்'

(வாலி வதைப்படலம், கிட்கிந்தா காண்டம்)

சமூகத் தீமை எனக் காலங் காலமாகச் சான்றோர்கள் வெறுத்தொதுக்கும் இம்மது உண்ணும் பழக்கத்தையும், அதன் தீமையையும், சுக்ரீவன் வாயிலாகக் கம்பன் மிகவும் துல்லியமாகவும், விளக்கமாகவும் எடுத்துரைக்கிறான். 'தீவினை ஐந்தின் ஒன்றாம்' என்றும் 'கஞ்ச மெல்லணங்கும் தீரும் கள்ளினால்' என்றும் 'நறவினின் அரிய கேடு கையினால் அன்றியேயும் கருதுதல் கருமம்' என்றும் கம்பன் உரைக்கும் வாசகங்கள் மது அருந்துவோர் மனதிற் கொள்ள வேண்டிய வாசகங்களாகும். உலகிற்குத் தன் இராமகாதையின் மூலமாகப், பல் துறை அறங்களையும் நன்னெறிகளையும் எடுத்துரைக்கும் கவிச்சக்கரவர்த்தி, நஞ்சினும் கேடான கள்ளினைப் பருகி நாளும், நாளும் திரு இழந்து நிற்போருக்கும், அந்நிலையின் அபாயத்தை உணர்த்தி, அவர்களும் நெறிசார்ந்த வாழ்வு வாழத் தன் கருத்துக்களால் துணை புரிந்து நிற்கிறான்.

19.கம்பன் உரைக்கும் பல்வகை அறங்கள்

கவிதைத் தேரில் ஏறி, கம்பன் கதை நடத்திக் கொண்டு வரும் போதே, நம் வாழ்வை நெறிப் படுத்தும் வாழ்வியல் அறங்களை நேர் பட எடுத்துச் சொல்லி நம் அறிவைத் திருத்துகிறான். கம்பனின் கவிச் சாற்றைப் பருகி நாம் களித்திருக்கும் போதே, தான் சொல்ல வந்த நெறியை நம் இதயங்களில் எழுதிவிட்டுப் போய்விடுகிறான் கம்பன். இத்தகைய பல்துறை அறங்கள் கம்பனில் பேசப்படுகின்ற இடங்கள் ஏராளம். நேர்முகமாகவும், மறை முகமாகவும் கம்பன் உரைக்கும் அறங்கள் நம் நல்வாழ்விற்கான பாடங்கள்.

எளிவந்த தன்மை என்பது ஒரு மிகச்சிறந்த குண வியல்பு. இறைவனை நாம் எளிவந்த பிரான் என்கிறோம். தான் இருக்கும் நிலை எவ்வளவு உன்னதமானதாக இருப்பினும், தகுதிப் பாட்டில் தன்னை விடத்தாழ்ந்தவர்களையும் மதித்து அன்புடனும் இன்முகத் துடனும் அளவளாவும் பண்பு வாய்க்கப் பெற்ற உயர்ந்த மனிதர்கள், மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்து விடுகின்றனர். அவதார

நாயகனான இராமபிரானிடத்தில் சௌசீல்யம், சௌலப்யம் என்ற இந்தக் குணங்கள் நிரம்பி விளங்கின. கிருஷ்ணாவதாரத்தில், ஒப்பற்ற குண சௌந்தர்யமும், ரூபலாவண்யமும் உடைய பகவான், தன் தன்னிகரற்ற தன்மையைப் பற்றிக் கொஞ்சமும் கருத்தில் கொள் ளாமல், தன் இளமைக்கால குருகுலத் தோழன் சுதாமாவை அகமும் முகமும் மலர வரவேற்று இன்னுரை கூறி மகிழ்வித்துப், பரிசளித்துப் பாராட்டி, நெகிழ்ந்து போன வரலாற்றை இன்றுவரை உலகம் பேசிக் கொண்டுள்ளது. ராஜாதிராஜனாய் இருந்த பகவான் ஸ்ரீ கிருஷ்ணன், சுதாமாவின் கந்தல் ஆடைக்குள்ளும், குழிவிழுந்த கன்னத்திற்குள் ளும், ஒட்டிய வயிற்றுக்குள்ளும் இருந்த கனிவு ததும்பிய அன்பு மனதை அடையாளம் கண்டு கொண்டான். 'அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்?' எனத் தன் அன்பின் பெருக்கினால் சுதாமாவை நீராட்டினான். எண்ணுந் தோறும் நம் இதயங்களை நெகிழ வைக்கும் சம்பவம் இது.

இராமாவதாரத்திலும் ஸ்ரீ இராமபிரானின் எளிவந்த தன்மையை அனுபவதித்து ஆனந்தப் பட்டவர்கள் பலர். இலக்குவன் இராமபிரானைப் பிரியாமல் வாழ்ந்தததைப் போல சத்ருக்கனன் பரதனைப் பிரியாமல் வாழ்ந்தான். இராம பிரானும், தம்பியருமாக நால்வரும் காலைப் பொழுதில் ஊருக்கு வெளியே சோலைகளில் தங்கித் தவம் புரியும் முனிவர்களிடம் சென்று அவர்களுடன் இருந்து அந்திசாயும் பொழுதினில் அயோத்தி நகருக்குத் திரும்புவார்கள். ஒவ்வொரு முறையும் இராமபிரானையும் இராம சகோதரர்களையும் காணும் போது மக்கள், மழையின் வருகையால் மகிழ்ந்து தழைக்கும் பயிர்களைப் போலத் திகழ்வார்கள். இக்குழந்தைகள் நீடுவாழ்க! என்று மக்கள் வாழ்த்தி மகிழ்வார்கள். இராமனும் இலக்குவனும் அருகருகே நடந்து வரும் எழிலான காட்சி கடலின் நீரை உண்ட கரு மேகமானது அழகிய செந்தாமரைப் பூக்களைச் சூடிக் கொண்டு, பொன்னிறமான மேருமலையுடன் சேர்ந்து நடந்து வருவது போலி ருக்கும். அதனைக் கண்டு மக்கள் மனமெல்லாம் ஆனந்த வெள்ளத் தில் மிதக்கும். இராமபிரான் தான் நடந்து வரும் வழியில் மக்களைக் காணும் பொழுதெல்லாம் தன் தாமரைத் திருமுகம் மலர்வார். எதிர்ப் படும் மக்களை இராமபிரான் நலம் விசாரிக்கும் அழகே அலாதி

யானது. 'உங்களுக்கு என்னால் ஆகக் கூடியது எதுவும் உளதா? துன்பம் இல்லாமல் சுகமாக வாழ்கின்றீர்களா? நீங்களும் உங்கள் புதல்வர்களும், சுற்றமும் சுகமாக உள்ளனரா?' என்றெல்லாம் இராமபிரான் நலம் உசாவும் அழகைக் கம்பன் எடுத்துரைக்கிறான்.

எதிர்வரும் அவர்களை எமையுடை இறைவன்,
முதிர்தரு கருணையின் முகமலர் ஒளிரா,
'எதுவினை? இடர் இலை? இனிது நும் மனையும்?
மதிதரு குமரரும் வலியிர் கொல்?' எனவே,

(திரு அவராதல் படலம்; பாலகாண்டம்)

இராமனின் அன்பான விசாரிப்பில் அகம் குளிர்ந்து போன மக்கள் 'ஐயனே! நாங்கள் உன் கருணையினால் நன்றாகவே இருக்கிறோம். உங்களை எங்கள் அரசனாய்ப் பெற்றது நாங்கள் செய்த பெரும் பேறு. எங்கள் உயிரையும், ஏழு உலகங்களையும் எல்லையற்ற காலம் நீ அரசாட்சி செய்து வர வேண்டும்' என்றனர். சிறிதும் தற்பெருமை கொள்ளாமல், எளிமையாக மக்களுடன் கலந்து பழகும் இராமபிரானின் அன்புள்ளம், மக்களை வெகுவாய்க் கவர்ந்திருந்த நிலையினைக் கம்பன் எடுத்துரைக்கிறான்.

''அஃது ஐய நினை எமது அரசு என உடையேம்
இஃதுரு ஒரு பொருள் அல எமது உயிருடன் ஏழ்
மகிதலம் முழுதையும் உறுகுவை மலரோன்
உகுபகல் அளவு என உரை தனி புகல்வார்'

(திரு அவதாரப் படலம்; பாலகாண்டம்)

இனிய சொற்களைப் பரிமாறிக் கொள்ளும் போதும், எளியவர் தாழ்ந்தவர் என்ற பேதமின்றி நலம் விசாரித்து மகிழும் போதும் ஏற்படுகின்ற அனுபவத்தை இராமபிரான் நமக்கு எடுத்துக் காட்டுகிறார்.

வாய்மை என்னும் தூய்மை :

இராமனைக் கானகத்தில் சந்தித்து நாடாள வரவேண்டும் என்று அழைத்தான் பரதன். இவ்வுலகமே இராபிரான் காடேகி விட்டான் என்று வருந்தி கையற்று நிற்கும்போது, அதைப்பற்றிக் கொஞ்சமும் கவலைப் படாமல் 'நான் பதினான்கு ஆண்டுகள் வனத்தில் வாழ்வது என்ற என் முடிவில் எந்த ஒரு மாற்றமும் இல்லை' என்று இராமன் நீ கூறுவது முறையாகுமா? என்று பரதன் கேட்கிறான். அதனைச் செவிமடுத்த இராமபிரான் தாய் கைகேயி, தந்தை தசரதனிடம் பெற்றுக் கொண்ட வரத்தின் படி பதினான்கு ஆண்டுகள் வனவாசம் மேற்கொள்வதுதான் முறை என்று எடுத்துரைத்தான்; எனவே பரதனே நாடாள வேண்டும் என இராமபிரான் குறிப்பிட்டான். அவ்வமயம் கொடுத்த வாக்கினையும், வாய்மையினையும் காப்பாற்ற வேண்டியதன் அவசியத்தை இராமபிரான் பரதனுக்குச் சொல்லும் போது வாய்மை என்ற சிறந்த பண்பிற்கு இணையான வேறோர் சிறப்பான பண்பைச் சுட்டிச் சொல்லுதல் கடினம். வாய்மையிலிருந்து தவறுவதனால் தீமை தான் உண்டாகும். எனவே எந்தச் சூழ்நிலையிலும் வாய்மை தவறுதல் கூடாது என்கிறான்.

'வாய்மை என்னும் ஈது அன்றி வையகம்,
தூய்மை என்றும் ஒன்று உண்மை சொல்லுமோ?
தீமைதான், அதின் தீர்தல் அன்றியே,
ஆய் மெய்யாக; வேறு அறையல் ஆவதே?

(திருவடி சூட்டுப்படலம் - அயோத்தியா காண்டம்)

தசரதன் வாய்மையிற் சிறந்தவன் என்பதனை உலகறியும். எனவேதான் வாலி இராமனை விளிக்கும் போது 'வாய்மையும் மரபும் காத்து மன்னுயிர் துறந்த வள்ளல் தூயவன் மைந்தன்' என்கிறான். கானிலிருந்த இராமன், பரதன் மூலமாகத் தன் தந்தை மாண்டுபோன செய்தியைக் கேட்டஉடன் உள்ளங் கலங்கி அழுது சோர்ந்தான். அணையாத விளக்கனைய தன் தந்தை; அறத்திற்கும் அருளுக்கும் உறைவிடமானவன்; எந்தப் பகையினையும் வெற்றி கொள்ளும் ஆற்றலில் சிறந்தவன். வாய்மைக் கென்றே வாழ்ந்த தசதர மன்னன்

மாண்டு போன பின்னால், வாய்மையைக் கடைப்பிடித்து வாழ்தலே அறம் என எந்த மன்னன் இனிவருங் காலங்களில் வாழ்ந்து காட்டப் போகிறான். தசரதனின் உயிர்மட்டுமா உலகைவிட்டு நீங்கியது. வாழுங் காலத்தில் பிறர் தேவையை உணர்ந்து வழங்கும் ஈகைப் பண்பும், உயர்ந்த மானமும், யாரும் வெல்வதற்கரிதான வீரமும், அறம் திறம்பா ஆட்சி முறையும், சொன்ன சொல் தவறாத வாய்மையும் அல்லவா இவ்வுலகை விட்டு தசரதன் உயிர் நீங்கும் போது உடன் சென்றன என்றழுதான் இராமன்.

'நந்தா விளக்கு அனைய நாயகனே நானிலத்தோர்
தந்தாய்! தனி அறத்தின் தாயே! தயாநிலையே!
எந்தாய்! இகல் வேந்தர் ஏறே! இறந்தனையே!
அந்தோ! இனி, வாய்மைக்கு ஆர் உளரே மற்று?' என்றான்.

(திருவடி சூட்டு படலம் - அயோத்தியா காண்டம்)

எனவே தான் வாழுங் காலத்தில் வாய்மையைக் கடைப் பிடித்து வாழ்ந்த மன்னன், அவன் காலத்திற்குப் பிறகும் வாய்மை தவறாதவன் என்று போற்றப் படுகின்ற சிறப்பினைப் பெறுதல் வேண்டும். அந்த பெருமைக்கும் பெயருக்கும் எந்த பங்கமும் விளைந்து விடக் கூடாது என்பதனால், தந்தை கொடுத்த வரத்தினால் தாயார் தனக்கிட்ட கட்டளையை நிறை வேற்றுவதே தன் தலையாய கடமை என்பதனை எடுத்துரைக்கிறான். எனவே வாய்மையைக் காட்டிலும் சிறந்த அறம் ஒன்றில்லை. எப்பொழுதும் வாய்மையைக் கடைப்பிடிக்கும் மனிதன். தானமும் தவமும் செய்வாரைக் காட்டிலும் சிறப்புடையவன் என்கிறார் திருவள்ளுவர்.

''மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானஞ் செய்வாரின் தலை!

கம்பனும் வாய்மை என்னும் அறத்தைவிடத், தூய்மையான அறம் வேறில்லை என்கிறான்.

மூத்தோர் சொல்:

பரதன் எவ்வளவு எடுத்துச் சொல்லியும் கானில் வாழ வேண்டும் என்ற தன் கருத்தைக் கைவிடாத இராமனைப் பார்த்து வசிட்டன் நான் உனக்குக் கல்வி கற்பித்த ஆசிரியன் என்ற முறையில் கூறுகிறேன், 'நீ அயோத்திக்குச் சென்று உன் நாட்டை அரசு புரிவாயாக' என்றான். அதனைக் கேட்ட இராமன் ஒருவர் சொன்னபடி செய்வதாக ஏற்றுக் கொண்ட பின்னால், அச்சொல்லை மறுத்தல் எவ்விதத்திலும் தகுதியான தாகாது. தாய் கட்டளை இட்டதனையும், தந்தை இதனைச் செய் என்று ஏவிய செயலையும், தலைவணங்கி ஏற்றுக் கொண்டு ஒரு புதல்வன் செயல் முடித்தல் வேண்டும். அங்ஙனமின்றி தாய் தந்தை சொல்லை மதித்து நடக்காதவனாக ஒருவன் வாழ்வதை விட அவன் ஓர் நாயெனத் திரிதல் நலம் என்கிறான் இராமன்.

''தாய் பணித்து உவந்தன, தந்தை, 'செய்க' என
ஏய எப் பொருள்களும் இறைஞ்சி மேற்கொளாத்
தீய அப் புலையனின், செய்கை தேர்கிலா
நாய் எனத் திரிவது நல்லது அல்லதோ''

(திருவடி சூட்டு படலம் - அயோத்தியா காண்டம்)

எனவே பெற்றோர் சொல்லை மதித்து நடக்கும் கடமை ஒவ்வொரு புத்திரனுக்கும் உண்டு என்று அழுத்தமாக இராமன் எடுத்துரைக்கிறான்.

காலமறிதல்:

ஞாலமே வேண்டுமெனினும் பெறலாகும் காலம் அறிந்து இடத்தால் செய்வதானால் என்று திருக்குறளில் படிக்கின்றோம். வாலிவதம் நிகழ்ந்த பின்னால் கார்காலம் வந்தும் படைநடத்திக் கொண்டு சுக்ரீவன் வர வில்லையே என்ற கவலையுடன் காத்திருந்தான் இராமன். சீதையின் நினைவு இராமபிரானை ஒருபுறம் வருத்த, மற்றொரு புறம் அரக்கரை அழித்து நாம் வெற்றி காணப் போகிறோம் என்று இராமபிரான் ஏங்கி நிற்கிறார். இராமபிரானின் தளர்ச்சியை

உணர்ந்து கொண்ட இலக்குவன், இராமனைத் தேற்றுகிறான். சீதையைத் தேடிக் கண்டுகொள்ள வேண்டிய காலம் நெருங்கி விட்டது என்று சொல்லி இராமனைத் தெளிவிக்கிறான். அலைகள் வீசிய பாற் கடலைக் கடைந்து தான் அமுதத்தைப் பெற வேண்டும் என்ற அவசியம் திருமாலுக்கு இல்லை. அமுதத்தைக் கொண்டு தருக என்று அலைகடலுக்கு ஆணை இட்டால், கடல் திருமாலுக்கு அமுதத்தை நிச்சயமாகக் கொண்டு கொடுத்திருக்கும். அவ்வாறு ஆணையிடாமல் திருமாலோ, மந்திரமலை முதலிய கருவிகளைக் கொண்டு சேர்த்து, கடைந்தே அமிழ்தம் பெறுவது என்று முடிவு செய்தார். உலகம் யாவற்றையும் படைத்து, தன் மனதில் எண்ணமிட்ட மாத்திரத்தில் வாயில் இட்டு விழுங்கும் சக்தி படைத்த திருமால், ஒரு நொடிப் பொழுதில் அரக்கர்களை அழித்து நீறாக்கி இருக்கலாம். அவ்வாறின்றி, சக்கரப் படையுடன், பிற போர்க்கருவிகளையும் பயன் படுத்தி, தந்திரங்களைக் கையாண்டு, போர்க்களத்தில் இறங்கி அழிக்க முடிவு செய்து அவ்வாறே செயல்பட்டார். முப்புரத்தை எரித்த சிவபெருமானும், நினைத்தால் எந்த முயற்சியும் இன்றி ஒரு நொடியில் முப்புரத்தை எரித்திருக்கலாம். அவ்வாறின்றி தேர், வில் அம்பு முதலான கருவிகளைத் தயாரித்துக் கொண்டு முப்புரம் எரி செய்யப் புறப்பட்டார் சிவபெருமான். எனவே இந்த உதாரணங்களை யெல்லாம் மனதில் எண்ணிப் பார்த்து செயல்பட வேண்டும்.

ஒரு செயலைச் செய்யத் தொடங்கும் போது நமக்குத் துணை யாக வரக்கூடியவர் யார் என்பதனைச் சிந்தித்து, அவர்களை உடன் இணைத்துக் கொள்ளுதல் வேண்டும். பின்னர் நாம் செய்ய வேண்டிய செயலைப் பலமுறை ஆலோசித்துத் தெளிவு பெறுதல் வேண்டும். பின்னர் அச்செயலைச் செய்வதற்கு உரிய காலத்தை, நாளையும் தேர்ந்தெடுக்க வேண்டும். செய்ய வேண்டிய காலத்தை எண்ணிக் கணக்கிட்டு ஒரு செயலைச் செய்தால், அச்செயலில் வெற்றி என்பது கிட்டியே தீரும் என்று இலக்குவன் காலமறிந்து ஒரு செயலைச் செய்ய வேண்டியதன் அவசியத்தை அழகுபட எடுத்துரைக்கிறான்.

'ஆகுநர் யாரையும் துணைவர் ஆக்கி, பின்
ஏகுறு நாளிடை எய்தி எண்ணுவ
சேகு உறப் பல்முறை தெருட்டி, செய்தபின்,
வாகை என்று ஒரு பொருள் வழுவற்பாலதோ?

(கார்காலப் படலம் - கிட்கிந்தா காண்டம்)

சீதையைத் தேடிச் சென்ற அனுமன் இலங்கையில், இராவணனின் மாளிகைக்குள் நுழைந்து தூங்கிக் கொண்டிருந்த இராவணனைக் கண்டான். இராவணன் 'இவன்தான்' என்று தெரிந்த பின்னரும் அவனது மணிமுடிகளைக் காலால் உதைத்துத்தள்ளி அவன் பத்துத் தலைகளையும் சிதறச் செய்யாத என் தோள்கள் எதற்கு என்று இரு கைகளையும் பிசைந்து கொண்டு எழுந்தான். பின்னர் அனுமன் சிந்திக்கலானான். இராமன் தனக்கிட்ட கட்டளையை எண்ணிப் பார்த்தான். இராவணனைக் கொன்று திரும்ப வேண்டும் என்பது இராமனின் கட்டளையல்ல. ஒரு செயலைப் புரிவதற்காக வந்து, வேறொரு செயலைச் செய்தல் அறிவுடையாருக்கு உரிய பண்பன்று. பிறகு எண்ணிப் பார்த்தால் ஆலோசிக்காமல் செய்த அச்செயல் பெரும் பிழையாகும், என்று நினைத்து இராவணனைக் கொல்லாமல் விடுத்தான். எவ்வளவு தலைசிறந்தவர்களாக இருந்தாலும், சிவபெருமானைப் போல வல்லமை பெற்றவர்களானாலும் தமக்குரிய சீலத்தையும் ஒழுக்கத்தையும் பேண வேண்டிய பெரியோர்கள் ஆழ்ந்து சிந்திக்காமல் ஒரு செயலில் ஈடுபட மாட்டார்கள். எனவே அனுமன் அடங்கிப் போனதில் பொருள் உண்டு. ஆற்றல் மிகுந்த கடல்கூட கரையைக் கடக்காமல் அடங்கித்தான் நிற்கிறது. எனவே உலகம் முழுவதையும் அழிக்கும் ஆற்றல் ஒரு சேர அமைந்திருந்தாலும் தக்க காலத்தை எதிர் பார்த்துக் காத்திருப்பது தான் சிறப்பு. காலத்தைக் கருத்தில் கொள்ளாமல் செய்யும் எந்த ஒரு செயலும் பயனுடையது ஆகாது.

'ஆலம்பார்த்து உண்டவன்போல் ஆற்றல் அமைந்துளர் எனினும்
சீலம்பார்க்க உரியோர்கள் எண்ணாது செய்பவோ?
மூலம் பார்க்குறின் உலகை முற்றுவிக்கும் முறை தெரினும்
காலம் பார்த்து, இறைவேலை கடவாத கடல் ஒத்தான்'

(ஊர் தேடு படலம் - சுந்தரகாண்டம்)

அறிவும் அறியாமையும்:

அறிவினைப் போல் பயன் தரத்தக்கது எதுவுமில்லை எனவும் அறிவில்லாதவன் தனக்கு ஒரு தீமை வருகிற போது கூட அதனை உணரும் ஆற்றல் அற்றவனாக இருப்பான் என்றும் கம்பன் பேசுகின்றான். அசோக வனத்தை அனுமன் அழித்த செய்தியைச் சோலை காப்போர் இராவணனுக்குத் தெரிவித்தனர். அனுமனைப் பிடித்து வர ஆற்றல் மிக்க அரக்க வீரரை இராவணன் ஏவினான். அரக்கர்கள் அசோக வனத்தைச் சுற்றி வளைத்தனர். வான வெளியிடை விண்ணைத் தொடும் கயிலைமலைபோல் அனுமன் நின்று கொண்டிருந்தான். அசோக வனத்தை அழித்த தன் செயல் சரியானது தான் என்று அனுமன் எண்ணமிட்டுக் கொண்டிருந்தான். ஏனென்றால்அசோக வனத்தை அழித்த செயல்தான், இராம இராவணப் போரைத் தொடங்குவதற்கு அடித்தளமாய் அமையும் என்று அனுமன் எண்ணினான். அரக்கர்கள் எல்லாம் தோற்றோடப்போகும் நாளை எண்ணி மகிழ்ந்தான். பின்னால் நடைபெறப் போவது இன்னது தான் என்று எண்ணிச் செயல்படும் பக்குவமான அறிவு ஒருவனுக்கு மிகவும் தேவை. அத்தகைய அறிவு ஒருவனுக்கு உண்டானால் அதைக் காட்டிலும் பயன் தரக் கூடியது வேறெதுவும் இல்லை.

''பத இயல் அறிவு பயந்தால் அதின் நல பயன்
உளது உண்டோ'

என்பது கம்பனின் வாசகம்.

அறிவற்றவன் தனக்கு ஆபத்து வருவதைக் கூட அறியாதவனாக இருப்பது பரிதாபத்திற்குரியது. மலைகளைப் பறித்தெடுத்து வானரங்கள் பாலம் அமைப்பதற்காகக் கடலில் வீசி எறிந்தன. காற்றாடியைப் போல வேகமாகச் சுற்றித்திரியும் வானரக் கூட்டம் மலைகளைப் பெயர்த்து எறிந்தபோது, அம்மலைகளில் வாழ்ந்த பெரிய மலைப் பாம்புகள், யானைகள் விழுங்கி வயிற்றில் வைத்துக் கொண்டு வாய்திறந்தபடி உறங்கிக் கொண்டிருந்தன. வானரங்கள் மலைகளைத் தூக்கிக் கடலில் வீசும்போது, அந்த மலைப் பாம்புகளும் கடலில் வீழ்ந்தன. தனக்கு வரும் கேட்டினைப் பற்றிக் கூட

அறிந்து கொள்ளாமல், கடலில் விழுந்த மலைப் பாம்புகளைப் போலத்தான் அறிவற்றவர்கள் தங்களுக்குக் கேடு நேர்ந்தாலும் அதனை உணரும் சக்தியற்றவர்களாய் உள்ளனர் என்கிறான் கம்பன்.

'கறங்கு எனத்திரியும் வேகக் கவிக்குலம் கலுவ வாங்கி,
பிறங்கு இருங் கடலில் பெய்த போழ்த்தலும், பெரிய பாந்தள்,
மறம் கிளர் மாணயானை வயிற்றின ஆக, வாய் சோர்ந்து,
உறங்கின - கேடு உற்றாலும், உணர்வரோ உணர்வு இலாதார்?

(சேதுபந்தனப் படலம் - யுத்த காண்டம்)

கீழோர் சொற் கேளேல்:

இராவணனைப் பிரிந்து, இராமனிடம் வந்து சேர்வதற்கு முன்னால், தன்னால் இயன்றவரை, வீடணன் இராவணனுக்கு அறிவுரை சொல்லிப் பார்த்தான். இராவணன் தன் சினம் முழுவதையும் வீடணனிடம் காட்டி, 'என் எதிரில் நிற்பதாக இருந்தால் உன்னைக் கொன்று குவிப்பேன்' என்று வீடணனிடம் கூறினான். இத்தனைக்குப் பிறகும், தன் துணைவர்களுடன் வானில் எழுந்து நின்று இராவணனுக்கு நீதி உரைக்கலானான். அங்ஙனம் நீதி உரைக்கும் போது, கீழ்மைக் குணமுடையோரின் சொல்லைக் கேட்டு நடப்பதைப் போலக் கீழானது எதுவுமில்லை எனத் தெரிவிக்கிறான். அறநெறியில் இருந்து வழுவியவர்களுக்கு வாழ்வு ஏது? ஒருவன் அறநெறியில் ஒழுகி, மேம்பாடு அடைய வேண்டுமெனில் மேலானவர்களின் சொற்களைக் கேட்டு நடக்க வேண்டும். நமக்கு நல்வழி காட்டுகின்ற பெரியோர்களின் சொற்கேட்டு நடப்பதுதான் சிறந்த நெறி முறையாகும். மாறாகத் தன்னை வீழ்ச்சிக்கு இட்டுச் செல்லும் தவறான ஆலோசனைகளைத் தரும் கீழ்மக்களின் சொற்களை ஒருநாளும் கேட்டு நடத்தல் கூடாது. கீழ்மையோர் சொல் நம்மைக் கெடுக்குமே அல்லாது தன்மையை ஒருநாளும் பயக்காது. ''கீழ்மையோர் சொற்கொடு கெடுதல் நேர்தியோ?'' என்பது கம்பனின் வாசகம்.

சிறியர் என இகழேல்:

முடிசூடிக்கொண்ட சுக்ரீவனுக்கு ஒரு அரசு எவ்வாறு அமைதல் வேண்டும், ஒரு அரசன் கைக்கொள்ள வேண்டிய அறங்கள் என்னென்ன என்று இராம பிரான் எடுத்துரைக்கும் போது, தன் அனுபவத்தில் இருந்து பல அரிய உண்மைகளை எடுத்துரைத்தான். ஒரு மன்னன் அரசுபுரியும் நாட்டில் வாழும் குடிமக்கள் மூவகைப் பட்டவர்களாக இருப்பர். பகைவர், நடுநிலையாளர், நண்பர் என்ற அந்த மூவகையினரிடத்தும் தீமையானவற்றை எண்ணாமல், அவர்களுக்கு செய்ய வேண்டியனவற்றைச் செய்தல் வேண்டும். மற்றவர்கள் பேசும் வசைச் சொற்கள் நம் காதில் விழுந்தாலும், ஒரு மன்னன் அதைப் பற்றிக் கவலைப் படாமல் எப்பொழுதும் இனிய சொற்களையே பேசுதல் வேண்டும், என்றெல்லாம் சொல்லிக் கொண்டு வரும்போது, நாம் வலிமை உடையவர்கள் என்பதற்காக, எந்தக் காரணம் கொண்டும் சிறியவர், எளியவர் என்று எண்ணி யாருக்கும் வருத்தம் தரத்தக்க செயல்களைச் செய்து விடக் கூடாது என்கிறார். இராமபிரான் தன் வாழ்க்கை அனுபவத்தையே சுக்ரீவனுக்குப் பாடமாய்ப் புகட்டிய இடம் இந்த இடம். சிறியவர்களை இகழ்தல் கூடாது என்ற நெறிமுறையினை மறந்து தான் கூனியிடம் நடந்து கொண்ட முறை பல்வேறு துன்பங்களுக்குக் காரணமானது என்கிறார் இராமபிரான். முன்பொரு காலத்தில் சிறு குழந்தைப் பருவத்தில் விளையாட்டாகக் கூனியின் முதுகு நோக்கி அடித்த சிறிய மண் உருண்டை தான், இராமபிரானிடம் கூனிக்கு அளவற்ற வெறுப்பை உண்டாக்கி விட்டது. தன் கூன் முதுகை இராமபிரான் கேலி செய்வதாக அச்செயலை கூனி எடுத்துக் கொண்டதால், சினங்கொண்டவளானாள். மண் உருண்டையால் தன்னை அடித்தவனுக்கு, இந்த மண் சொந்தமாகும் நாள் வரும்போது நடைமுறையினையே மாற்றிப் போடுவேன் என்று திட்டம் போட்டாள். வஞ்சனையாகத் தீட்டிய திட்டத்தில் வெற்றியும் கண்டாள். எனவே எளியவர்கள் தானே, நம்மிலும் சிறியவர்கள் தானே என்று எண்ணிக் கொண்டு யாரையும் இகழ்தல் கூடாது. அங்ஙனம் இகழ்வதாக இருந்தால் அதனால் விளையும் துன்பங்களை நாம் தான் அனுபவிக்க நேரிடும் என்று அறம் உரைக்கிறான் இராமன்.

சிறியர் என்றிகழ்ந்து நோவு செய்வன செய்யல்; மற்று, இந்
நெறி இகழ்ந்து யான் ஓர் தீமை இழைத்தலால், உணர்ச்சி நீண்டு
குறியதாம் மேனி ஆய கூனியால் குலவுத் தோளாய்!
வெறியன எய்தி, நொய்தின் வெந்துயர்க் கடலின் வீழ்ந்தேன்

(அரசியில் படலம் - கிட்கிந்தா காண்டம்)

உருவு கண்டு எள்ளாமை:

கடலைக் கடந்து செல்ல வீடணன் உரைத்த வழியைக் கேட்டு, இராமபிரான் வர்ண மந்திரத்தைச் செபித்தான். வருண மந்திரத்தைச் செபித்த பின்னரும் வர்ணன் வராதது கண்டு வருந்தினான். ஒருவனிடம் ஒரு பொருளை விரும்பினால், அவரைப்பாதுகாத்துப் பின் அவரிடமிருந்து வேண்டியனவற்றைப் பெற்றுக் கொள்வது ஒரு முறை. போர் செய்து அழித்துப் பொருளைக் கைப்பற்றுவது மற்றொரு முறை. வலிமையினால் பொருள் உடையானைத் துரத்தி விட்டு பொருளைக் கவர்தல் மற்றொரு முறை. தொன்று தொட்டு நிகழ்ந்து வரும் இம் முறைகளை எல்லாம் கைவிட்டு விட்டு, வருணபகவானிடம் இரந்து வேண்டி வழியைப் பெற நினைத்தேன். ஆனால் வர்ணனோ வழிவிடவில்லை என்று வருந்திக் கூறிய இராமன், ஞானிகளைக் கூட உலகம் உருவத்தை வைத்துத் தான் எடை போடுகிறது என்பதனை எடுத்துரைக்கிறான். முக்தி இன்பத்தை அனுபவித்த உண்மையான ஞானிகள் இந்த உலகிற்கு வந்தால் கூட, அவர்களை யார் என்று இனங் கண்டு கொண்டு எவரும் போற்ற விரும்ப மாட்டார்கள். தாம் விரும்பும் சிறப்பியல்புகளை அந்த ஞானியரிடத்தில். கண்டால் மட்டுமே உலகம் அவர்களைப் போற்றும். உருவத்தை வைத்தே உலகம் எப்பொழுதும் மக்களை எடை போடுகிறது. உருவம் சிறியதாக இருக்கும் ஞானிகள்,செழுமையான நெருப்பை ஒத்த திறம் உடையவர்களாக இருப்பினும், அவர்களை இனங் கண்டு கொண்டு யாரும் போற்றுவதில்லை. உருவத்தையும் வெளித்தோற்றத்தையும் வைத்தே மனிதர்களை எடை போடும் உலகத்தாரைப் போலவே வருணனும் தன்னைச் சரியாக உணர்ந்து கொள்ளாததனால் மதித்து

வந்து சேரவில்லை என்கிறான் இராமன். உருவத்தை வைத்தும் தோற்றத்தை வைத்தும் மதிப்பீடு செய்யும் உலகோரின் நடைமுறை முற்றிலும் சரியானது அல்ல என்பதனை இராமன் சுட்டிக் காட்டுகிறான்.

''மறுமை கண்ட மெய்ஞ் ஞானியர் ஞாலத்து வரினும்,
வெறுமை கண்ட பின், யாவரும் யார் என விரும்பார்;
குறுமை கண்டவர் கொழுங்கனல் என்னினும் கூசார்:
சிறுமை கண்டவர் பெருமை கண்டு அல்லது தேறார்''

(வருணனை வழி வேண்டு படலம் - யுத்த காண்டம்)

இன்னா செய்தாருக்கும் இனியன :

வீடணனுக்கு இராமன் அடைக்கலம் அருளியதைச் சுக்ரீவன் வீடணனுக்குத் தெரிவித்தான். மென்மையான திருவடிகளை உடைய சீதாதேவியைக் கவர்ந்து இராமனை விட்டுப் பிரியச் செய்த இராவணின் தம்பி என்பதனையும் பொருட் படுத்தாமல், இராமபிரான் தனக்கு அபயம் வழங்கினானே என்று நெகிழ்ந்து நின்ற வீடணன் தமக்கு இன்னல் விளைவிப்பாருக்கும் நன்மை செய்வது அருளாளர்களின் இயல்பு என எண்ணிப் பார்க்கின்றான். பாற்கடலைக் கடைந்து அமுதம் பெறும் முயற்சியில் தேவாதி தேவர்கள் இறங்கிய போது, மந்திர மலையை மத்தாகவும், வாசுகி என்கிற நாகத்தைக் கயிறாகவும் கொண்டு பாற்கடலைக் கலக்கிறார்கள். அவர்களது தொடர்ந்த முயற்சியால் கடல் கனலை உமிழ்ந்தது. இருப்பினும் பாற்கடல் சினமடையாமல், தன்னைக் கலக்கிய தேவர்களுக்குத் துன்பம் தர வேண்டும் என்று எண்ணாமல் அவர்கள் உய்யுமாறு அமுதத்தை வழங்கியது. தன்னைக் கடைந்து கலக்கிய தேவர்களுக்கும், அமுதத்தை வழங்கிய பாற்கடலைப் போல, தங்களுக்கு இன்னல் செய்வாருக்கும் அருளாளர்கள் நன்மையே புரிவர். ஏனெனில் அனைவருக்கும் நன்மையே நினைத்தல் நல்லனவே செய்தல் அருளாளர்களின் இயல்பு. அந்த இனிய இயல்பினை விட்ட அவர்கள் ஒருநாளும் விலகார். எனவே

இன்னா செய்தாருக்கும் இனியனவே செய்யும் அருளாளர்களின் இயல்பை, இராமனது அருளை வீடணன் போற்றி மகிழ்வது போல உலகம் போற்றி மகிழும் என்கிறான் கம்பன்.

தீர்வு அரும் இன்னல் தம்மைச் செய்யினும், செய்ய சிந்தைப்
பேர் அருளாளர் தம்தம் செய்கையின் பிழைப்பது உண்டோ?
கார் வரை நிறுவி, தன்னைக் கனல் எழக் கலக்கக் கண்டும்
ஆர்கலி, அமரர் உய்ய, அமுது பண்டு அளித்ததன்றே?

(வீடணன் அடைக்கலப் படலம் - யுத்த காண்டம்)

நடுவு நிலை இல்லாவீரம்:

இராமனது திருமணத்திற்குப் பின், தசரதன் தன் அரச குடும்பத்தாரோடும், ஏனையோரோடும் அயோத்தி நோக்கிப் புறப்பட்டான். அயோத்திக்கு வரும் வழியில் மழுவாயுதம் ஏந்திய பரசுராமன் எதிர்ப்பட்டான். தசரதன் பரசுராமனை வணங்கியும், பரசுராமனின் கோபக்கனல் தணியவில்லை. இராமனின் தோள் ஆற்றலைத் தான் சோதிக்க வந்ததாக பரசுராமன் கூறினான். அதனைக் கேட்ட தசரதன், நீ உனக்குச் சமமாகப்போரிட வல்லவர்களோடு போரிடாமல் இராமனது தோளாற்றலைச் சோதிக்க வந்ததென்ன என்றான். உடன் இருப்பவர்கள் இகழுமாறு, நடுவு நிலைமையோடு பொருந்தாத நெறியில் நின்று கொண்டு, தன் வலிமையை நிரூபித்துக் காட்டிக் கொள்வதில் யாதொரு பயனும் இல்லை. நிலைபெற்ற அறத்தின் வழிநின்று, ஆற்றலைக் காட்டி, உயர்ந்த புகழைப் பெறுவதுவே உண்மையான வலிமையாகும். எனவே நடுவு நிலையோடு பொருந்தாத வீரம் வீரமல்ல என்கிறான் தசரதச் சக்கரவர்த்தி.

'புறன் நின்றவர் இகழும்படி, நடுவின் தலை புணராத்
திறன் நின்று உயர்வலி என்? அது ஓர் அறிவின் தகு செயலோ?
அறன் நின்றதன் நிலை நின்று உயர்புகழ் ஒன்றுவது அன்றோ,
மதன் என்பது? மறவோய்! இது பழி என்பது மதியாய்!

(பரசுராமப் படலம் - பால காண்டம்)

நிலையை விட்டு நீங்காமை:

இலங்கைக்குப் பாலம் அமைத்தற் பொருட்டு பெரிய மலைகளை எல்லாம் பெயர்த்தெடுத்து கடலில் வீழ்த்தும்போது, மலைகளில் உள்ள மரங்கள் அங்கு வாழ்ந்த பிராணிகள், பட்சிகள் அனைத்தும் கடல் நீரில் விழுந்தன. கடலில் கூட்டங் கூட்டமாக வாழும் கூரிய பற்களைக் கொண்ட சுறாமீன்கள், தண்ணீரில் விழுந்த புலிகளையும் சிங்கங்களையும் யாளிகளையும் எறிந்து கொன்றதால், காட்டு விலங்குகள் கூட சுறாமீன்களிடம் தோற்றுப் போகும் நிலை உருவானது. இந்த நிலையினை எடுத்துச் சொல்லிக் கொண்டு வரும் பொழுதே உலகநடையினைக் கம்பன் பேசுகின்றான். தம் நிலையை விட்டு ஒருவன் நீங்குவதான சூழ்நிலை உருவாகுமானால், அவர் எத்தகைய வலிமை உடையவராக இருப்பினும், தம்மைக் காட்டிலும் வலிமை குன்றியவர்களிடத்தில் தோற்றுப் போக வேண்டிய நிலை உருவாகும். எனவே தன்னிலை தாழாமல் இருக்க வேண்டிய இடத்தில் இருத்தல் வேண்டும் என்ற அறம் உணர்த்தப் படுகிறது.

கூருடை எயிற்றுக் கோள் மாச் சுறவினம் எறிந்து கொல்ல
போருடை அரியும், வெய்ய புலிகளும், யாளிப் போத்தும்
நீரிடைத் தோற்ற அன்றே? தம்நிலை நீங்கிச் சென்றால்,
ஆரிடைத் தோலார் மேலோர், அறிவிடை நோக்கின் அம்மா'?

(சேதுபந்தனப் படலம் - யுத்த காண்டம்)

மங்கைபொருட்டால் மரணம் :

இராவணன் மந்திராலோசனை சபையைக் கூட்டி, ஒரு குரங்கு இலங்கைக்கு எரியூட்டிச் சென்றுவிட்டதே என்று சினந்து உரைக்கும் போது, இராவணனின் இழி செயலைத் துணிச்சலாக எடுத்துக் காட்டி, குலத்திற்கு சிறுமை தேடித் தரும் செயலை விட்டொழித்து விடும் படியாக கும்பகர்ணன் எடுத்துரைத்தான். அதைத் தொடர்ந்து அறமுணர்ந்த வீடணன், சானகியின் கற்புத் தழலால் இலங்கை வெந்தொழிந்ததே அல்லாமல், ஒரு குரங்கினால் அல்ல என்று எடுத்துக் காட்டினான். அவ்வமயம் வீடணன் தெள்ளத்

தெளிவாக ஒரு நீதியை எடுத்துரைத்தான். நன்றாக சிந்தித்துப் பார்ப்போமேயானால், சிறந்த தலைமையும், உயர்வும் ஒருவனை விட்டு நீங்குவதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. பெரும்பாலும் பெண் காரணமாக ஒருவன் தன் தகுதிப் பாட்டையும், தலைமையையும் இழந்து சிறுமை அடைகிறான். மற்றொரு காரணம் தேவைக்கதிகமான மண்ணாசை என்கிறான் வீடணன். தவம் செய்து பெற்ற அனைத்துச் சிறப்புக்களையும் ஒரு மானுடப் பெண்ணின் காரணமாக இராவணன் இழக்க நேரிடும் என்ற சாப மொழியையும் சிந்தித்துப் பார்க்க வழியில்லாமல், பெண்ணாசை இராவணன் கண்ணை மறைத்தது. முறையற்ற பெண்ணாசை என்னும் தீமை எவ்வளவு உயர்ந்த நிலையில் இருப்பவனையும், நிலை தாழச் செய்யும் என்பதனை வீடணன் எடுத்துரைக்கிறான்.

'எண் பொருட்டு ஒன்றி நின்று, எவரும் எண்ணினால்,
விண் பொருட்டு ஒன்றிய உயர்வு மீட்சியும்
பெண் பொருட்டு அன்றியும், பிறிது உண்டாம் எனின்,
மண்பொருட்டு அன்றியும், வரவும் வல்லவோ?'

(இராவணன் மந்திரப் படலம் - யுத்த காண்டம்)

இராவணனுக்கு இந்த உண்மையை, வீடணன் எடுத்துரைத்ததைப் போல், வாலிவதம் நிகழ்ந்த பின்னால் சுக்ரீவனுக்கு அறிவுரை சொன்ன இராமபிரான் சுக்ரீவனுக்குச் சுட்டிக் காட்டுகிறார். பெண்டிரின் காரணமாக ஆடவர்க்கு இறப்பு உண்டாகும் என்ற பொருளை ஐயம் இல்லாமல் உணர்ந்து கொள்வாயாக! மேலும் பெண்டிரின் காரணமாகவே துன்பமும் பழிப்பும் உண்டாவதை எங்களிடம் பார்த்தாய் அல்லவா இதை விடவும் வேறு ஒரு சான்று தேவையா என இராமன் பேசுகிறான்.

'மங்கை பொருட்டால் எய்தும் மாந்தர்க்கு மரணம்' என்றல்
சங்கை இன்றுணர்தி; வாலி செய்கையால் சாலும்; இன்னும்,
அங்கு அவர் திறத்தினானே, அல்லலும் பழியும் ஆதல்
எங்களின் காண்டி அன்றே; இதற்கு வேறு உவமை உண்டோ?

(அரசியற்படலம் - கிட்கிந்தா காண்டம்)

குடும்பம் தாங்கும் குடிப் பிறந்தோர் :

மலைகளைப் பெயர்த்துப் பெயர்த்து கடலில் வானரங்கள் வீசின. சுமந்து கொண்டு வந்த மலைகளைக் கடலில் வீசிவிட்டு, வேறு மலைகளைப் பெயர்த்தெடுக்கச் சென்ற வானரக் கூட்டங்கள் கணக்கில் அடங்காது. 'அணை எவ்வளவு தொலைவிற்குக் கட்டப் பட்டுள்ளது' என்றும், 'இன்னும் எவ்வளவு தொலைவு கட்ட வேண்டும்' என்றும் மாறி மாறி வானரங்கள் கேட்டுக் கொண்டன. பெரிய மலைகள் தன்னில் விழுந்து தூர்த்து நெருக்கவும், பேரொலி எழுப்பும் கடல், கலக்கம் கொள்ளவே இல்லை. இந்தக் காட்சியை நம் மனக்கண் முன் நிறுத்தும் கம்பன், நாம் கடலைப்போல கலங்காத சித்தம் உடையவர்களாக இருத்தல் வேண்டும் என்று குறிப்பாக உணர்த்துகிறான். துன்பங்கள் எத்தனைதான் மாறி மாறி வந்து தொல்லை தந்தாலும், மனத் தளர்ச்சி இல்லாமல், துன்பத்தைக் கண்டு துவண்டு போகாமல் தங்கள் குடும்பத்தைக் காக்கும் குடிப் பிறப்பாளர்களை எண்ணிப் பார்க்கிறான் கம்பன். துன்பங்களையும், சோகங்களையும் காரணம் காட்டிக் கொண்டு, கடமைசெய்யாமல் சோம்பி இருத்தல் கூடாது என்பதனையும், குடும்பம் காத்தல் குடிப்பிறந்தார் இயல்பு எனவும் கம்பன் சுட்டிக் காட்டுகிறான்.

'நெடும் பல் மால் வரை தூர்த்து நெருக்கவும்,
துடும்பல் வேலை துளங்கிய தில்லையால்
இடும்பை எத்தனையும் படுத்து எய்தினும்
குடும்பம் தாங்கும் குடிப் பிறந்தாரினே'

(சேதுபந்தனப் படலம் - யுத்த காண்டம்)

நாம் பிழை செய்யலாமோ :

தவறான, பிழையான செயல்களை எப்பொழுதும் தவிர்த்து விட வேண்டும். தான் தவறு செய்யும்போது நான் மட்டுமா இந்த சிறிய தவறினைச் செய்துள்ளேன். எல்லோரும் இந்தத் தவறினைப் புரியத் தானே செய்கின்றனர் என்று பலர் சமாதானம் தேட முயல்வதுண்டு. பல பேர் தவறு செய்வதால் தவறு நியாயமாகி விட

முடியாது. மற்றொருவர் தவறு செய்கிறார் என்பதனால் நாமும் தவறு செய்யலாம் என்பதும் தவறு. எப்பொழுதும் தீமையற்ற நல்ல செயல்களை மட்டுமே முன் உதாரணமாக எடுத்துக் கொள்ள வேண்டும். நமக்கு எதிராக ஒருவர் தவறான செயலைச் செய்யும் போது, அவர்களுக்கு எதிராகவும் நாம் தவறினைத் திருப்பிச் செய்தல் கூடாது. இராவணன் ஏவிய ஒற்றர்கள் இராம பிரானின் படைகளின் அளவினைப் பார்த்த வண்ணமாக குரங்குகள் போல் தோற்றங் கொண்டு பாசறையில் திரிவாராயினர். ஒற்றரை வீடணன் இன்னார் என்று அடையாளங் கண்டு கொண்டான். ஒற்றர்கள் தங்கள் தீமையைக் கட்டவிழ்த்து விடாதபடி, அவர்களைக் கட்டிக் கொண்டு இராமபிரான் முன்னிலையில் கொண்டு போய் நிறுத்த, இராமபிரான அந்த ஒற்றர்களைக் கண்ட மாத்திரத்தில் பகைவர் எனக் கருதாமல், அவர்களை விட்டு விடுமாறு கூறிய தோடல்லாமல், நம்மை அடைக்கலம் என்று வந்து அடைந்தோர் தவறு செய்தாலும், நாம் தவறு செய்தல் கூடாது என்று உணர்த்தினான்.

'தாம்பிழை செய்தாரேனும் தஞ்சம் என்று அடைந்தோர் தம்மை
நாம் பிழை செய்யலாமோ நலியலீர் விடுதிர் என்றான்'

(ஒற்றுக் கேள்விப் படலம் - யுத்த காண்டம்)

பொறுமையொடு பொருந்தி வாழ் :

இராம இராவண யுத்தத்திற்கான படைகள் எல்லாம் அணிவகுத்த பின்னர், இராவணனிடம் தான் தூது அனுப்ப விரும்புவதாகத் தெரிவித்தான் இராமன். இராவணன் சீதையை சிறையினின்றும் விட மறுத்தானாகில் அவனுடன் போர் செய்யலாம். இறுதியான எண்ணம், இராவணனைப் பொறுத்த மட்டில் என்னவாயிருக்கும் என்பதனை ஒரு தூதுவனை அனுப்பித் தெரிந்து கொள்வதே அறமும் நீதியும் ஆகும் என்றான் இராமன்.

அதனைக் கேட்ட இலக்குவன் இராமனைப் பார்த்து 'நீ யாருக்குத் தூது அனுப்ப வேண்டும் என்று எண்ணுகிறாயோ, அவன்

சீதையை சிறைவைத்த பாவி; தேவாதி தேவர்களுக்கும் அந்தணர்க்கும் தீமை செய்தவன். இந்திரனது செல்வத்தைக் கவர்ந்து கொண்டவன். சடாயுவின், இன்னுயிரைப் பறித்தவன். அத்தகைய இராவணனுக்கு தூதும் அனுப்ப வேண்டுமோ? இராவணனது உயிரைப் பறிக்காவிட்டால், 'ஊழிக்காலம் வரை இலங்கை அரசை விடணன் அரசு புரிவான்' என நீ சொன்ன சொல் என்ன ஆகும்? தண்டகாரண்யத்தில் வாழும் முனிவர்களுக்கு, 'அரக்கர்களை அழித்து அபயம் நல்குவேன்' என நீ சொன்ன சொல் என்னவாகும் என்று தன் கருத்தை வெளியிட்டான்.

அதனைச் செவிமடுத்த இராமபிரான் 'அரக்கன் செய்த தீமையையோ, முனிவர்களுக்குத் தான் அளித்த வாக்குறுதியையோ மறக்கவில்லை என்றும், அறிஞர்கள் இது நாள் வரை எடுத்துரைத்துள்ள அரச நீதியின் படி நடத்தல் தனக்குக் கடமை என்றும் எடுத்துச் சொன்னான். எவ்வளவு தான் நெஞ்சுரமும், உடல் வலிமையும், தோளாற்றலும் வாய்க்கப் பெற்றவர்களாக இருந்தாலும், பொறுமையுடன் மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகளை, மேற்கொண்டு தான் ஆக வேண்டும். அதுவே வெற்றிக்கு வழியாகும். பொறுமையை மேற்கொள்வது தான் சிறந்த அறம் என அரச நீதி எடுத்துரைக்கிறது. எனவே எவ்வளவு தான் உடனடியாகச் செயல் முடிக்கின்ற திறம் வாய்க்கப் பெற்றிருந்தாலும், எந்த ஒரு செயலையும் பொறுமையுடன் எண்ணிப் பார்த்துச் செயல்படுத்துவதே சிறந்தது என இலக்குவனுக்கு இராமபிரான் எடுத்துரைக்கிறார்.

அயர்த்திலென்; முடிவும் அ∴தே; ஆயினும், அறிஞர் ஆய்ந்த
நயத்துறை நூலின் நீதிநாம் துறந்தமைதல் நன்றோ?
புயத்துறை வலியரேனும், பொறையொடும் பொருந்தி வாழ்தல்
மயத்துறை; அறனும் அ∴தே என்று இவை சமையச் சொன்னான்.

(அங்கதன் தூதுப் படலம் - யுத்த காண்டம்)

புண்ணியம் பொருந்தா முயற்சி :

எவ்வளவு தான் ஒருவன் முயற்சி செய்தாலும் அந்த முயற்சியில் வெற்றி அடைவதற்குப் புண்ணியம் துணை நிற்க வேண்டும் என்கிறான் கம்பன். சேதுபந்தனப் படலத்தில் மலைகளைத் தூக்கி வானரங்கள் கடலில் எறிந்தது போலவே கரடிகளும் எறிந்தன. கரடிகள் எறிந்த மலைகள், ஒன்றின் மேல் ஒன்று பட்டுத் தெரித்து பொடியாயின என்ற செய்தியைச் சொல்ல வருகின்ற கவிச்சக்கரவர்த்தி ஒரு அழகிய உவமையைக் கையாளுகிறார். எவ்வளவு தான், தன் அறிவாற்றலாலும், செயல் திறத்தாலும் மனிதன் முயற்சி செய்தாலும், அந்த முயற்சி வெல்வதற்கு புண்ணியம் தேவை. அந்தப் புண்ணியப் பயன் பொருந்தாத முயற்சி பயனில்லாது போகும். அது போலக் கடலில் இட்ட மலைகள் ஒன்றோடு ஒன்று நெருங்கித் தூளாகி அழிந்தன என்கிறான் கம்பன்

'எண் இல் எண்கு இனம் இட்ட கிரிக்குலம்
உண்ண உண்ணச் சென்று, ஒன்றினொடு ஒன்று உற,
சுண்ண நுண்பொடி ஆகித் தொலைந்தன,
புண்ணியம் பொருந்தாத முயற்சி போல்'

(சேதுபந்தனப் படலம் - யுத்த காண்டம்)

அமுதம் நஞ்சாகும் :

உணவு உண்பதில் விருப்பமுடையவனுக்குக் கூடத், துன்பம் நெஞ்சை நிறைத்து நிற்கும் போது அமுதமான உணவும், நஞ்செனக் கசக்கும். நாம் உண்ணும் உணவின் சுவையைக் கூட நம் மனோநிலை மகிழ்வானதாக இருந்தால் தான் அனுபவிக்க இயலும். எவ்வளவு தான் பசித்திருந்தாலும் மனதை வாட்டும் துன்பத்தில் இருக்கும் போது, உணவு உண்ண வேண்டும் என்ற எண்ணமே உண்டாவதில்லை. ஒரே உணவு தான், அதனை மனம் மகிழ்ந்திருக்கும் போது உண்டால் அமுதம், துக்கித்திருக்கும் போது பார்த்தால் நஞ்சு. கார்காலம் வந்த பிறகும், வந்து சேராத சுக்ரீவனுக்கு அவன் கடைமையை உணர்த்தி அழைத்துச் செல்வதற்காக வந்தான்

கிட்கிந்தைக்கு இலக்குவன். அவன் சினங்கண்டு வானரங்கள் எல்லாம் நாலா பக்கமும் சிதறி ஓடின. பின் சுக்ரீவன் செய்தி தெரிந்து, இலக்குவன் வந்து, கண்டு, தன் செயலுக்கு வருத்தம் தெரிவித்தான். வந்தவனை வரவேற்று உபசரித்தல் வேண்டும் என்ற அறத்தின் அடிப்படையில் சுக்ரீவன் இலக்குவனைப் பார்த்து 'நீ நீராடி குறைவில்லாத இனிய உணவை உண்டால் நாங்கள் நல் வாழ்வைப் பெற்றவர்களாக ஆவோம்' என்றான். அதுகேட்ட இலக்குவன், சுக்ரீவனைப் பார்த்து துன்பமும் பழியுமே எங்களது வயிற்றை நிரப்பிக் கொண்டுள்ளது. நாங்களும் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எங்களுக்கு இனிமை தரக் கூடியது எதுவும் இல்லை எனச் சொல்லி, துன்பத்தினால் உள்ளம் துடிக்கும் போது அமுதும் நஞ்சாகாதோ? என்றான்.

'வருத்தமும் பழியுமே வயிறு மீக்கொள
இருத்தும் என்றால், எமக் கினியது யாவதோ?
அருத்தி யுண்டு ஆயினும், அவலம் தான் தழீஇ
கருத்து வேறு உற்றபின், அமிர்தும் கைக்குமால்'.

(கிட்கிந்தைப் படலம் - கிட்காந்தா காண்டம்)

கொடியவனின் பாவம் இருள் போன்றது :

கடல் தாண்டி வந்த அனுமன் இலங்கை நகருக்குள் புகுந்து, அந்நகரின் எழிலையும் அங்கு வாழும் மக்களின் நிலையினையும் கண்டறிகிறான். இலங்கை வாழ் அரக்கர்கள் தன்னைக் கண்டு விடக் கூடும் எனக் கருதி, தன் பெரிய உடலைச் சிறியதாக்கிக் கொண்டு, அழகிய சாரலை உடைய பவள மலையில் தங்கி இருந்தான். அப்பொழுது கதிரவன் மேற்குத் திசையில் மறைந்தான். ஆதவன் மறைவதற்கும், நிலவு எழுவதற்கும் இடைப்பட்ட நேரத்தில், இருள் எங்கும் பரவிக் கொண்டிருந்த காட்சியை அனுமன் பார்த்தான் எனச் சொல்ல வந்த கவிச்சக்கரவர்த்தி கொடியவனின் பாவம் போல் இருள் பரவிற்று எனச் சொல்கிறான். பொதுவாக ஒளியினைத் தூய்மைக்கும், இருளை பாவத்திற்கும் ஒப்பிட்டுச் சொல்லும் ஒரு

பொது மரபாக 'பாவத்தைப் போல் இருள் பரவிற்று' எனக் குறிப்பிட்டாலும் கம்பன் அதனைச் சொல்லும் பாங்கில் ஒரு உன்னத நெறியினை உலகுக்கு எடுத்துரைக்கிறான். ஏதோ முற்பிறவிகளில் செய்த நல்வினைகளின் பயனாக ஒருவன் செல்வத்தை அடைந்து விட்டான். எல்லையில்லாத செல்வம் வந்துற்ற போது, வேறெதனையும் சீர்தூக்கிப் பாராமல், நன்மை எது? தீமை எது? எனப் பகுத்துணர்ந்து நன்மை வழி தன்னை நிலை நிறுத்திக் கொள்ளும், பான்மையைக் கைவிட்டு விட்டு, தனக்கு நல்லன சொல்லும் அறிஞர்களின் சொல்லையும் ஏற்றுக் கொள்ளாமல் உதாசீனப் படுத்திவிட்டு, 'இத்தகைய நடைமுறையால் தனக்குப் பின்னால் கேடுவருமே' என்பதனைப் பற்றியும் கவலைப் படாமல், சத்தியத்திலும் நாட்டமில்லாதவனாக இருக்கும் ஒரு கொடியவனின் பாவம் இருள் போன்றது. அத்தகைய பாவத்தைப் போல இருள் பரவிற்று. தான் பெற்ற செல்வத்தை மட்டும் பெரிதெனக் கருதிக் கொண்டு, தீய செயல்களைத் துணிந்து அஞ்சாமல் புரியும் கொடியவன் நிலவு எழ, தோற்றோடும் இருளைப் போல விரைவில் அழிந்தொழிவான் என மறைமுகமாக எடுத்துரைக்கிறான்.

'ஏய்வினை இறுதியில் செல்வம் எய்தினான்;
ஆய்வினை மனத்து இலான், அறிஞர் சொல் கொளான்;
வீவினை நினைக்கிலான்; ஒருவன் மெய் இலான்
தீவினை என இருள் செறிந்தது எங்குமே'

(ஊர் தேடுபடலம்; - சுந்தரகாண்டம்)

நல்வினைப் பயன் :

ஒருவன் ஒரு பிறவியில் செய்த நல்வினைப் பயனானது, மறு பிறவியில் அவனைத் தேடி வந்து அடையும். எனவே மனிதன் எப்பொழுதும் நல்வினை புரிவதில் நாட்டமுடையவனாக இருத்தல் அவசியம் என்று கம்பன் உணர்த்துகிறான். தாடகையை இராமன் வதம் புரிந்த போது தேவர்கள் பூமாரி பொழிந்தார்கள். சிறந்த தெய்வத்தன்மை மிக்க ஆயுதங்களை இராமனுக்கு வழங்குமாறு

விசுவாமித்திரரிடம் கூறினார்கள். உரிய மந்திரங்களைக் கூறி, தெய்வப் படைக்கலங்களை விசுவாமித்திரன் இராமனுக்கு அளிக்க, அப்படைக்கலங்கள் மகிழ்வுடன் இராமபிரானை வந்தடைந்தன. அந்தக் காட்சியை எடுத்துரைக்கும் போது, கம்பன் ஒரு உன்னதமான உவமையைக் கையாளுகின்றான். ஞானம் கைவரப் பெற்ற ஒருவன் செய்த நல்வினைகளின் பயன்கள், மறுபிறப்பில், அவனைத் தேடிச் சென்று அவனுடன் பொருந்தி நன்மை பயக்கும். அதுபோல விசுவாமித்திரன் வழங்கிய படைக் கலங்கள் இராமபிரானை வந்து பொருந்தி நின்றன என்கிறான்.

'ஆறிய அறிவன் கூறி அளித்தலும், அண்ணல் தன்பால்
ஊறிய உவகையோடும், உம்பர் தம் படைகள் எல்லாம்,
தேறிய மனத்தான் செய்த நல்வினைப் பயன்கள் எல்லாம்,
மாறிய பிறப்பில், தேடி வருவபோல் வந்த அன்றே'

(வேள்விப்படலம் - பாலகாண்டம்)

உடுப்பதும் உண்பதும் இன்றிக் கெடும்:

பிறருக்கு ஒரு பொருளை வழங்கும் போது பொறாமையின் காரணமாக அதனைத் தடுப்பவனின் குடும்பம் உண்ண உணவும், உடுக்க உடையும் இல்லாது வருந்தி ஒழியும் என்கிறார் திருவள்ளுவர்

''கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும்''

தாடகை வதம் நிகழ்ந்த பின்னர், இராமபிரானுக்குப் படைக்கலங்களை வழங்கி, அழைத்துக் கொண்டு சென்ற விசுவாமித்திர முனிவனிடம், எதிர்ப்பட்ட சோலையைப் பற்றி இராபிரான் வினவுகிறான். பதிலிறுத்த விசுவாமித்திரன், பன்னெடுங்காலமாக அந்த இடத்தில் மகாவிஷ்ணு தங்கியிருந்து தவம் இயற்றியதாகக் குறிப்பிட்டு, அந்தத் தருணத்தில்தான், மகாபலி விண்ணுலகத்தையும் மண்ணுலகத்தையும் தன் வசப்படுத்திக் கொண்டான் என்றான். மாவலி தேவர்களைத் துன்புறுத்தி, தன்

ஆளுமையை நிலை நாட்டிக் கொண்டிருக்குங்கால் அவனது கொடுமைக்கு ஆற்றாத தேவர்கள் மகா விஷ்ணுவிடம் முறையிட, அவரோ வாமனாக அவதாரம் செய்து, வேள்வி செய்து கொண்டிருந்த மாவலியிடம் மூன்றடி மண் யாசித்து, அவன் செருக்கினை அடக்கத் திட்டமிட்டார் என்று வாமன அவதாரக் கதையை இராமனுக்கு விசுவாமித்திரன் எடுத்துரைக்கிறான்.

அந்தக் கதையினைச் சொல்லும் போதே, பல நெறிகளைப் பேசுகிறான் கம்பன். மூன்றடி மண் கேட்டுவந்ததாக வாமனர் சொல்ல, அதனைத் தர மாவலி இசைந்த போது, தானம் கேட்டு வந்த குறளன் வேறுயாருமல்லன்; ஓங்கி உலகளந்து நிற்கும் உத்தம வடிவத்தினன் திருமாலே' என்று சொல்லி சுக்கிராச்சாரியார், மாவலியை 'தானம் கொடுக்க வேண்டாம்' என்று தடுத்தார். அதனைக் கேட்ட மாவலி ஒரு உன்னத நெறியினைப் பேசுவான். யாசித்து வந்தவருக்கு ஒரு பொருளை எடுத்து வழங்கு முன்னரே. அதனைக் கொடுக்க விடாமல் அருகில் இருந்து கெடுப்பதை விடத் தீமை வேறொன்றும் இல்லை. எவனொருவன் மனமுவந்து ஒருவன் தானம் கொடுக்கும் போது, அருகில் இருந்து கெடுக்கிறானோ, அவனுக்கும், அவன் சுற்றத்தாருக்கும், உண்ண உணவும் கிடைக்காது. உடுத்துவதற்கும் உடையும் கிடைக்காது. எனவே கேட்டவர்களுக்குத் தகுதியறிந்து வழங்குகிற அறத்தைப் பேணவில்லையென்றாலும், கொடுப்பாரைக் கெடுக்காமலாவது இருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. கொடுப்பதைக் கெடுப்பவன் தன்னைத்தானே கெடுத்துக் கொள்கிறான். கொடுப்பதைத் தடுப்பதைப் போல் வேறு தீங்கு இல்லை.

''அடுப்ப வரும் பழி செய்ஞ்ஞரும் அல்லர்,
கொடுப்பவர் முன்பு கொடேல் என நின்று
தடுப்பவரே, பகை, தம்மையும் அன்னார்
கெடுப்பவர், இன்னது ஓர் கேடு இலை என்றான்.'

''எடுத்து ஒருவருக்கு ஈவதனின் முன்னம்,
தடுப்பது நினக்கு அழகிதோ, தகவுஇல் வெள்ளி
கொடுப்பது விலக்கு, கொடியோய் உனது சுற்றம்
உடுப்பதும் உண்பதும் இன்றி விடுகின்றாய்''

(வேள்விப் படலம் - பாலகாண்டம்)

உயர்ந்தவருக்கு உதவிய உதவி :

நாம் மற்றவர்களுக்கு நம்மாலான உதவியை எப்பொழுதும் செய்து கொண்டு தான் இருக்க வேண்டும். உதவியை நாம் யாருக்குச் செய்கிறோமோ, அதற்கேற்றார் போல், அந்த உதவியின் பயன் அமைகிறது. நன்மையும் உதவியும் செய்யும் போது கூட, உதவி பெறுபவர்களின் பண்பினை எண்ணிப் பார்த்துச் செய்தல் நலம் என்பதனை ஒரு குறளில் தெளிவாக உணர்த்துகிறார் திருவள்ளுவர்.

''நன்றாற்ற லுள்ளும் தவறுண்டு அவரவர்
பண்பறிந்து ஆற்றாக் கடை''

தானம் கேட்ட வாமனனிடம் நீ கேட்ட மூன்றடி மண்ணை 'நீ உன் கால்களால் அளந்து எடுத்துக் கொள்' என்று மாவலி சொல்ல, அந்த வாமனனின் கரங்களில் மாவலி தண்ணீரை தாரை வார்த்தான். மாவலி வார்த்த தண்ணீர், தன் கைகளில் பட்ட மாத்திரத்தில் வாமனனாக இருந்த பகவான், பேருருக் கொண்டான். கண்டவர் எல்லாம் வியப்பெய்தினர். குறளனாக வந்து, உலகளந்த உத்தமனாக வளர்ந்த, பரம் பொருளின் வடிவத்தைச் சொல்ல வந்த கம்பன், வானளாவ ஓங்கி எழுந்து நின்ற பிரமாண்டமான வடிவம் சான்றோருக்குச் செய்யப்பட்ட உதவியின் பயனைப் போல வளர்ந்தது என்கிறான். எனவே உதவி புரிவதிலும், சான்றோருக்குச் செய்யும் உதவியின் பயனை அளவிட்டுச் சொல்ல இயலாது. உயர்ந்தவருக்குச் செய்த உதவி மிகவும் உன்னதமானது.

'கயம் தரு நறும் புனல் கையில் தீண்டலும்,
பயந்தவர்களும் இகழ் குறளன் பார்த்து, எதிர்
வியந்தவர் வெருக்கொள, விசும்பின் ஓங்கினான்,
உயர்ந்தவர்க்கு உதவிய உதவி ஒப்பவே.

(வேள்விப் படலம் - பாலகாண்டம்)

பாவத்தை விட்டு விலகும் புண்ணியம் :

சீதையின் அழகை எல்லாம் ஒன்று விடாமல் இராவணனிடம் சொல்லி, அத்தகைய சிறப்பு மிகுந்த சீதையை இராவணனிடம் கொண்டு வந்து சேர்ப்பதற்காக, தான் அவளைத் தூக்க முயன்றபோது தனக்கு அவமானம் ஏற்பட்டது என்றும் சூர்ப்பனகை தெரிவித்தாள். சீதையைப் பற்றி வருணித்த சூர்ப்பநகையின் வார்த்தைகளைக் கேட்ட இராவணன் மனதில் காமம் கொழுந்து விட்டு எரியத் தொடங்கியது. ஒரு தீபத்தோடு, மற்றொரு தீபம் வந்து சேர்ந்ததைப் போல, அவனிடம் சேர்ந்த காம நோயும், அதனால் நேர்ந்த வெம்மையும் அவன் உயிரோடு கலந்து ஒன்றி விட்டன. அதுமட்டுமல்லாமல் காமம் புகுவதற்கு முன்னால் இராவணனின் மனம், மானம், வீரம் முதலான நல்ல பண்புகளால் நிரம்பி இருந்தது. காமம் புகுந்த பின்னால் அனைத்து நல்ல பண்புகளும் இராவணனிடம் இருந்து விடை பெற்றுக் கொண்டன. பாவம் நிறைந்த இடத்தில் புண்ணியம் நில்லாதது போல், காமம் நிறைந்த மனதில் மானமும் வீரமும் நில்லாமல் விலகின என்கிறான் கம்பன். 'கோபமும், மறனும், மானக் கொதிப்பும் என்று இனைய எல்லாம் பாவம் நின்ற இடத்து நில்லா''...

பொய்ச்சாட்சி சொல்பவன் குலமே அழியும் :

அசோக வனத்தை அனுமன் அழித்ததனால் அனுமனைப் பற்றிக் கொண்டு வர, பல அரக்க வீரர்கள் இராவணனால் அனுப்பப் பட்டனர். அவர்களால் அனுமனது வீரத்திற்கு ஈடு கொடுக்க இயலாமல், பலர் மாண்டு போயினர். நந்த வனத்தின் காவலர்கள், நடுங்கிய தேகத்துடன், இராவணன் இருக்கும் இடம் தேடி வர,

அதனைக் கண்ட இராவணன் தான் அனுப்பிய கிங்கரர்களின் நிலை என்ன என்பதனை வினவினான். கிங்கரர்கள் அனைவரும் ஒரு சேர அழிந்து பட்டனர் என நந்தவனக் காவலர்கள் இராவணனிடம் தெரிவித்தனர். இந்த செய்தியைச் சொல்லும் போது, பொய்ச் சாட்சி கூறும் இழி குணம் கொண்டவர்களின் குலம் எவ்வாறு அழிந்து ஒழியுமோ, அதுபோல கிங்கரர்கள் ஒட்டு மொத்தமாக அழிந்து பட்டார்கள் என்கிறான் கம்பன். ''பொய்க்கரி புகலும் புன்கணார் குலங்களின் அவிந்தனர்'' என்பது கம்பன் வாக்கு.

சான்றோர் கவி :

சடாயு வழிகாட்ட இராமன் பஞ்சவடி நோக்கி நடைபோடுகிறான். எதிர்ப்பட்ட கோதாவரியினை, இராமனும் இலக்குவனும் கண்டார்கள் எனச் சொல்லவரும் கம்பன், சான்றோர் கவியெனக் கிடந்த கோதாவரி என்கிறான். ஒரு சிறந்த கவிதை எப்படியிருத்தல் வேண்டும் என்பதனைக் கம்பன் சொல்லி வைக்கும் அழகே அழகு. இயற்கை எழில் நலத்தை அனுபவிக்கும் எல்லோருக்கும், தாம் அனுபவித்த அழகை எடுத்துரைக்கும் திறம் இருக்காது. இயற்கையை அதன் முழுமை அழகோடு அள்ளிப் பருகி ஆனந்தித்துப் பின் தன் ஆனந்தத்திற்குக் கவிதை வடிவில் வார்த்தை வடிகால் தேடும் கவிஞர்களால் மட்டுமே, தான் ஆராதித்த அழகை மற்றவர்களுடன் பரிமாற இயலும். இயற்கைக் கவிஞன் வேட்ஸ்வொர்த் இந்தக் கலையில் கைதேர்ந்தவன். தான் அள்ளி அள்ளிப் பருகிய இயற்கை இன்பம், தன் நெஞ்சமேடெல்லாம் பரவி, இரத்த நாளத்திற்குள் புகுந்து, தன் மனமெல்லாம் கலந்து மகிழ்வூட்டிய அபூர்வமான அனுபவத்தை டின்டர்ன் ஆபி *(Tintern Abbey)* என்கிற தன் கவிதையில் வடிக்கிறான். நேரில் அனுபவித்த இயற்கை இன்பத்தை, ஜன சஞ்சாரமும் சப்த மிகுதியும் இருக்கும் நெரிசலான பட்டணத்தில் அறைக்குள், அடங்கிக் கிடக்கும் போதும் கூட, மனத்தில் நிறுத்தியும் எண்ணியும் பார்த்துக் கொஞ்சமும் குறையாத மகிழ்வை அனுபவித்ததாக இயற்கைக் கவிஞன் வேட்ஸ்வொர்த் குறிப்பிடுகிறான்.

"But oft, in lonely rooms, and mid the din
of towns and cities, I have owed to them
In hours of weariness, sensation sweet
Felt in the blood, and felt along the heart;
And passing even into my purer mind.
With tranquil restoration``

(Lines Composed a few miles above Tintern Abbey
- William wordsworth)

தான் அனுபவித்த இயற்கை இன்பத்தை, அப்படியே தன் கவிதைவரிகளில் நிறைத்து வைத்த திறம் அந்தக் கவிஞனுக்கு இருந்ததால் தான், இயற்கை அன்னையே, வேட்ஸ்வொர்த்திடம் இருந்து எழுதுகோலை வாங்கி அவளே கவிதை புனைந்தாள் என்று திறனாய்வாளர்கள் வர்ணித்தனர்.

"Nature hereself seems, I say, to take the pen
Out of his hand, and to write for him with her
Own bare, sheer, penetrating power``.
(Essays in criticism - Matthew Arnold)

இயற்கையை இரசிப்பவனின் இதயம் எப்பொழுதும் இலகுவானதாக இருக்கும். அகலக் கண்களை விரித்து இயற்கை அழகை அள்ளிப் பருகுவதில் கிடைக்கும் ஆனந்தத்திற்கு அளவுகோல் ஏது? கம்பன் மலையழகையும் மண்ணழகையும், மதியழகையும், மலர் அழகையும் வர்ணித்த கவிதைகள் எல்லாம் அழியாவரம் பெற்ற கவிதைகள். கம்பனின் கவிதையுள்ளம் ஆற்றின் அழகை வர்ணித்த இடம் தான் கோதாவரியின் சிறப்புப் பேசப்பட்ட இடம். ஆற்றொழுக்காய்ச் செல்லும் நீரின் போக்கைப் பார்த்த கவிஞனுக்குக் கவிதை நினைவுக்கு வருகிறது. அணியுடைமையும், பொருள் தருதலும், புலத்தது ஆதலும், அகத்துறைகள் தாங்குதலும், ஐந்திணை நெறியளாவுதலும், தெளிவுடைமையும், குளிர்ச்சி

உடையதாய் ஒழுக்கம் தழுவுதலும் ஆகிய ஏழு வகையாலும் ஆற்றுக்கும் கவிதைக்கும் ஒப்புமை உண்டு.

ஆறானது பூமிக்கு அணிகலன் போல், பூமித்தாயின் மார்பில் சூட்டப் பெற்ற மணிமுத்தாரம் போல் அமைந்து அழகூட்டுகிறது. சிறந்த பொருள்களைத் தருகிறது. வயல்களுக்கு நல்ல நீரைத் தந்து பயன் விளையுமாறு செய்கிறது. தன்னுள் பலவிதமான நீர்த்துறைகளைக் கொண்டுள்ளது. குறிஞ்சி, முல்லை பாலை, மருதம, நெய்தல் என ஐந்து நிலப்பகுதிகளின் வழியாகப் பரவிச் செல்கிறது. செம்மையாய் தெளிந்து, குளிர்ச்சியான நீரோட்டம் உடையதாகி, கல்வியில் சிறந்த ஆன்றோர்கள் யாத்த கவிதைபோல் விளங்கிற்று கோதாவரி என்கிறான் கம்பன். ஆற்றின் பல்வேறு சிறப்பம்சங்களைச் சொன்னது போலவே, சான்றோர் கவிதையின் சிறப்பியல்புகளையும் கம்பன் எடுத்துரைக்கிறான்.

ஒரு சிறந்த கவிதையானது உலகுக்கு அணியாய் அமைதல் வேண்டும். சிறந்த பொருளை உணர்த்தக் கூடியதாய் கவிதை இருத்தல் வேண்டும். அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு உறுதிப் பொருட்களையும் உணர்த்தக் கூடியதாய் அமைதல் வேண்டும். அறிவில் புகுந்து தங்கி, செவ்விதாய் அமைந்த அகப் பொருள் துறைகளை ஏற்று, குறிஞ்சி, முல்லை மருதம் நெய்தல் பாலை என ஐந்து அக ஒழுக்கங்கள் விரவப் பெற்று, தெளிவாகப் பொருளைப் புலப்படுத்தி, நல்லொழுக்கத்தையும் உணர்த்தி அமையும் கவிதைதான் சான்றோர் கவி எனப்படும் என்கிறான் கம்பன். இத்தகைய ஏழு சிறப்பியல்புகளில், ஏதாவது ஒன்று குறைவு பட்டாலும் அது சான்றோர் கவியாகாது. எனவே கட்டுக் கோப்பற்ற தன்மையில், நல்லொழுக்க உணர்வுகளையும் மனித மனத்தின் மாண்பையும் சிதைக்கும் சொல்லலங்காரங்கள் கவிதையாகி விட முடியாது. வார்த்தைகளின் அணிவகுப்புகளை கவிதை என்று மக்கள் கருதிக் கொண்டிருக்கும் இக்காலத்தில் கவிதை புனைபவர்களுக்கு இருக்கும் கடப்பாட்டையும், சமூகப் பொறுப்பினையும், குறிப்பாக உணர்த்தும் இப்பாடல் மீண்டும், மீண்டும் கற்று நாம் இன்புற வேண்டிய பாடல்.

***"புவியினுக்கு அணி ஆய், ஆன்ற பொருள் தந்து, புலத்திற்று ஆகி
அவி அகத் துறைகள் தாங்கி, ஐந்திணை நெறி அளாவி,
சவி உறத் தெளிந்து தண்ணென் ஒழுக்கமும் தழுவி சான்றோர்
கவி எனக் கிடந்த கோதாவரியினை வீரர் கண்டார்.***

(சூர்ப்பநகைப்படலம் - ஆரண்ய காண்டம்)

புதுமை பார்ப்பார் :

தசரதன், இராமன் வில்லை வளைத்து சீதையை மணக்க இருக்கும் சேதி கேட்டு மகிழ்ந்து மிதிலைக்குப் புறப்பட்டான். தன் சேனைகளுடன் சந்திர சயிலம் விட்டு சோணை ஆற்றை அடைந்தான். உச்சி வேளையில் தடாகங்களும், மடுக்களும் சூழ்ந்துள்ள குளிர்ச்சி பொருந்திய நறுமணச் சோலையை அடைந்தான். அந்தச் சோலைக்குள் புகுந்த மாதரைக்கண்ட மயிலும், குயிலும், கிளியும் அவர் தம் நடையையும், கண்ணையும், பேச்சினையும் கேட்டு இவர்களோடு போட்டிபோட இயலாது என்று அப்பால் சென்றன. மாதர் பூங்கொம்பைத் தீண்ட, அக்கொம்பானது அவர்களது அடியில் தாழ்ந்தது. சந்திரன் போன்ற முக மண்டலத்தை உடைய மகளிர் என்னும் பூங்கொடிகளில், ஆறுகளிலும் குளங்களிலும் பூக்காத தாமரையாகிய முகமும், குவளையாகிய கண்களும் மலர்ந்திருந்தன. மாதர்களின் முகத்தை மலர்கள் என்றெண்ணி வண்டுகள் அதிசயமுற்று, அவர்கள் முகத்தைச் சுற்றிச் சுற்றி மொய்த்தன. அப்பெண்கள் அவற்றை விரட்டினாலும் அவை விலகவில்லை. புதுமையை நாடுபவர்கள் புதிய பொருட்களை நேரில் கண்டபோது அவற்றை அடையாமல் விட்டு விடுவார்களா? ஒரு நாளும் விட மாட்டார்கள் எனக் கம்பன் சொல்லும் அழகு நம் சிந்தையை நிறைக்கிறது. உலக மகா காவிய கர்த்தாவான ஹோமர் கிரேக்க மொழியில் எழுதிய 'இலியட்' 'ஒடிஸி' *('Illiad' 'Odessey')* என்ற காவியங்களைக் கிரேக்க மொழியிலேயே படித்துப் புரிந்து கொள்ளக் கூடிய வாய்ப்பு, கிரேக்க மொழி தெரியாததனால் தனக்கு கிட்டவில்லையே எனப் பலகாலம் கீட்ஸ் என்ற ஆங்கிலப் புலவன் வருந்திக் கொண்டிருந்தானாம். பின்னால் சேப்மேன் என்ற

அறிஞனின் மொழிபெயர்ப்பைக் கற்ற போது, புதிய புதிய செய்திகளை எல்லாம் தெரிந்து கொண்டோமே என்று மன மகிழ்ந்தானாம். அரிய பொக்கிஷமாயிருந்தும் கிரேக்க மொழியினை அறியாததனால் 'இலியட்' 'ஒடிஸி' என்ற காவியங்கள், பரிமாறும் பல்சுவை விருந்தை சுவைக்க இயலவில்லையே என்ற கீட்ஸின் வருத்தத்தை நீக்கியது சேப்மென் என்ற அறிஞனின் மொழியாக்க நூல். அந்த மகிழ்வை ஒப்பிட்டுச் சொல்லும் போது, ஒரு வான ஆராய்ச்சியாளன் தன் கவனத்தையும், கண்களையும் வானிலேயே தவழ விட்டுக் கொண்டு, தன் கண்டுபிடிப்புக் கனவில் இருக்கும் போது, எதிர்பாராத விதமான ஒரு புதிய நட்சத்திரத்தைப் பார்க்க நேர்ந்தால், எவ்வாறு மட்டில்லா மகிழ்ச்சி அடைவானோ அதுபோலத் தான் மகிழ்ந்ததாகக் குறிப்பிடுகிறான்.

"Yet did I never breathe its pure serene
Till I heard chapman speak out loud and bold
Then felt I like some watcher of the skies
When a new planet swims into his ken;``

(On first looking into chapman's Homer' - keats)

கம்பன் பூக்கொய் படலத்தில் பெண்களின் முகமலர்களை புதுமலர்கள் என எண்ணி மொய்த்த வண்டுகளைப் 'புதுமைபார்ப்பார்' என புதிய புதிய பொருட்களை ஆராயும் மனோபாவம்படைத்த அறிஞர்களோடும் கலைஞர்களோடும் ஒப்பிடும் அழகு, புதியனவற்றைத் தேடிப்பிடித்து கண்டு அறிந்து ஆய்ந்து மகிழும் ஆராய்ச்சிக் கண்ணோட்டத்தின் சிறப்பை நமக்கு எடுத்துச் சொல்கிறது.

''நதியினும் குளத்தினும் பூவா நளினங்கள் குவளையோடு
மதிநுதல் வல்லிபூப்ப நோக்கிய மழலைத் தும்பி
அதிசயம் எய்தி, புக்கு வீழ்ந்தன; அலைக்கப் போகா-
புதியன கண்ட போழ்து விடுவரோ புதுமை பார்ப்பார்?

(பூக்கொய் படலம் - பால காண்டம்)

வெற்றி வேண்டுமா :

ஒரு மனிதன் உண்மையான வெற்றியை வாழ்வில் அடைவதற்குக் காரணமாயிருப்பது இரண்டு முக்கியமான அம்சங்கள். கற்ற கல்வி, சேர்த்து வைத்த பணம், படை பலம், செயற்றிறம் இவை அனைத்தையும் விட, முன்னேற்றப் பாதையில் செல்பவரை வழி நடத்திச் செல்லும் இரண்டு அம்சங்கள் தான் இறையருளும், நல்லோரின் ஆசியும். இந்த இரண்டு இணையற்ற அம்சங்களை உள்ளடக்கிய வாழ்வு தான் சிறக்கும். இக்கருத்தைக் கம்பன் நம் நெஞ்சில் பதிய வைக்கிறான். கடல் தாண்டி இலங்கைக்குச் சென்று, சீதை இருக்கும் இடத்தை யார் கண்டு வருவது என்ற ஆலோசனை நடைபெற்றது. அவ்வமயம் 'அனுமனே கடல் தாண்டிச் செல்லும் தகுதி உடையவன்' என்று சாம்பவான் உரைத்தான். ''எடுத்த செயலைச் சோர்வில்லாமல் முடிப்பதில் அனுமனுக்கு நிகரானவர்கள் இல்லை. கடைமையைச் செவ்வனே செய்வதிலும், மாருதிக்கு நிகரானவர் இல்லை; அனுமனின் தோளாண்மைக்கு யாரும் ஈடாகார்; எல்லாக் கலைகளையும் நுட்பமாக ஆய்ந்து தெளிந்தவன் அனுமன்; நீண்ட ஆயுளை உடையவன்; எந்த ஒரு செய்தியையும் எடுத்துரைப்பதில் தன்னிகரற்ற சொல்லாற்றல் உடையவன்; பின்வாங்காது போர் செய்யும் ஆற்றலில் சமர்த்தன்; மேரு மலைக்கும் மேலாக ஓங்கி நிற்கும் பெரிய உடம்பை உடையவன்; பூமியையும் பெயர்த்தெடுக்கும் வல்லமை உடையவன்; நீதி நெறியிலும், வாய்மையிலும் சிறந்தவன். அத்தகைய அனுமனே கடலைத் தாண்டிச் சென்று, செயல் முடித்து மீண்டு வர வல்லவன்'' என்று சாம்பவான் சொன்னான். அதனைக் கேட்ட அனுமன் செவ்வாம்பல் விரிந்தது போலச் சிரித்தான். பின் பேசலுற்றான். கருடனானது தன் இரண்டு சிறகுகளையும் விரித்துக் கொண்டு வானில் உயர உயரப் பறந்து செல்கின்ற காட்சியை, நாம் பல முறை பார்த்திருக்கிறோம். மற்றப் பறவைகளைப் போல், அடிக்கடி சிறகை அசைத்து அசைத்துப் பறக்காமல், வானில் சற்று உயரச் சென்றபின், இரு சிறகுகளையும் விரித்த பாவனையில், காற்றில் கனவுலகில் அசைவின்றி மிதப்பது போல் மிதந்து செல்வதுதான் கருடனின் இயல்பு. அத்தகைய கருடனைப்போல்,

தான் கடல் தாண்டிச் செல்ல இருப்பதாகச் சொன்ன அனுமன், கருடனின் இரு சிறகுகளைப் போலத் தனக்கு இராமபிரானின் கட்டளையும், ஏனைய நல்லோரின் ஆசியும் இரு சிறகுகளாக அமைய, எண்ணியது முடிக்க, தான் கடல் தாண்டிச் செல்வது உறுதி என்றான். கடலே பொங்கி வந்தாலும், அண்ட கோளமே உடைந்து வானிற்குச் சென்றாலும் இந்த அரிய முயற்சி தடைப்படாது. யார் எதிர்த்தாலும் எண்ணியாங்கு எண்ணியதை முற்றுவிக்கும் ஆற்றல் தனக்கு உண்டு என்றும், அதனை நிறைவேற்ற இராமபிரானின் அன்பும் ஆணையும், நல்லோரின் ஆசியும் துணை நிற்கும் என்றும், அனுமன் சொல்லும் செய்தி நமக்கெல்லாம் அறிவு கொளுத்தும் பாடமல்லவா? இறை அன்பும், உயர்ந்தவர்களின் நல்லெண்ணத்திற்குப் பாத்திரமாகும் வாய்ப்பும் நமக்கு அமைந்தால் நாம் செய்யும் செயல் வெற்றிகரமானதாக அமையும் என்பது உண்மை.

''முற்றும் நீர் உலகம் முற்றும் விழுங்குவான், முழங்கி முந்நீர்,
உற்றதே எனினும் அண்டம் உடைந்து போய் உயர்ந்ததேனும்,
இற்றை நும் அருளும், எம்கோன் ஏவலும் இரண்டு பாலும்
கற்றை வார் சிறைகள் ஆக, கலுழனின் கடப்பல் காண்பீர்!

(மயேந்திரப் படலம் - கிட்கிந்தா காண்டம்)

எத்தனை பாடங்கள், எத்தனை அறிவுரைகள், எத்தனை நீதிகள், எத்தனை எடுத்துக் காட்டுகள். கம்பனின் திருவடியில் அமர்ந்து பாடம் கேட்கப் பழகிக் கொண்டோமானால், அவன் கவிதா ரசத்தைப் பருகிக் கொண்டே அவன் கருத்துக் கருவூலத்தைச் சொந்தங் கொண்டாடலாம்.



பேராசிரியை இளம்பிறை மணிமாறன்

பேராசிரியை அவர்கள், பாரதிகண்ட புதுமைப் பெண்ணாய்த் திகழ்பவர். தேனினும் இனிய தீந்தமிழில், தமது சொல்வன்மையை இலக்கிய - ஆன்மீகக் கருத்துரைகளின் மூலம் வெளிப்படுத்தி, தமிழ் நாட்டு மக்களின் உள்ளங்களில், தமக்கெனத் தனி இடம் பெற்றவர். முத்தமிழ் முழங்கும் இவரது ஒவ்வொரு நிகழ்ச்சியும், கேட்போரை நெகிழ்ச்சியுறச் செய்வன. சொன்னதையே சொல்லாமல், நவில்தொறும் நூல்நயம்போல, புத்தம் புதுக் கருத்துக்களைச் சொல்லி சொற்பொழிவில் புதுமை படைப்பவர் இவர். இவ்வாறு துறைதோறும் தமிழ்த்தொண்டு செய்துவரும் பேராசிரியை இளம்பிறை மணிமாறன் அவர்கள், தூத்துக்குடி ஏ.பி.சி. மகாலட்சுமி கல்லூரியின் முதல்வராகவும், ஆங்கிலத் துறைத் தலைவராகவும் திறம்படச் செயல்பட்டு வருபவர்.

தாய்மொழியாம் தமிழில் தலைசிறந்த இலக்கியவாதியாகவும், பேராசிரியையாகவும் திகழும் திருமதி. இளம்பிறை மணிமாறன் அவர்கள், ஆங்கிலம், தமிழ், வடமொழி, மலையாளம் முதலிய மொழிகளில் ஆழ்ந்த புலமையுடையவர். இதிகாச, புராண நூல்களில் 'நுண்மாண் நுழைபுலம்' மிக்கவர். மாமன்றங்களைத் தனது மந்திரச்சொற்களால் கட்டுண்டு கிடக்கச் செய்யும் மாண்புடையார். தமிழகத்தில், பேராசிரியை அவர்களை அழைத்துச் சென்று, பெருமையும், பெருமிதமும் கொண்ட மேடைகள் ஏராளம்! ஏராளம்!! தமது திறமான புலமையால், தித்திக்கும் தமிழால் இங்கிலாந்து, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் போன்ற வெளிநாடுவாழ் தமிழ் உள்ளங்களையும் வென்று வந்துள்ளார் இவர்.

உரையாலும் எழுத்தாலும் உலகை நல்வழிப்படுத்துவது ஒன்றையே தம் வாழ்வுக் குறிக்கோளாகக் கொண்டுள்ள பேராசிரியை அவர்களுக்கு, நாவுக்கரசி, செஞ்சொல் வாரிதி, சிலம்புச் செல்வி, கம்பன் கவித்திலகம் போன்ற பட்டங்களை, மக்கள் மன்றங்கள் மனமுவந்து அளித்து மகிழ்ச்சி கொண்டுள்ளன.

கம்பனும் கீதையும், சவுந்தரியலகரி, அம்பிகை அழகு தரிசனம், திருக்குறட்பாவை போன்ற பைந்தமிழ் நூல்களைப் படைத்துத் தம்புகழ் நிறுவியுள்ள பேராசிரியை அவர்கள், இப்போது 'கம்பனில் வாழ்வியல் நெறிகள்' எனும் இந்நூலைப் படைத்திருக்கிறார்கள்.

அடுத்து, தஞ்சை சரபோஜி மன்னர் நூலகத்தில் இடம்பெற்றுள்ள வரலாற்றுச் சான்றுகள் மற்றும் பழம்பெரும் ஓலைச்சுவடிகளை ஆய்வு செய்து அதன் அடிப்படையில் தமிழுக்கு ஒரு 'புத்திலக்கியத்தை' தர விரும்புகிறார் என்ற புதுச் செய்தியை தெரிவித்துக் கொள்வதோடு கூட, எல்லாம் வல்ல கம்பராமன், நமது பேராசிரியை அவர்களுக்கு, எல்லா நலனும் வளனும் அளித்தருள வேண்டி, வாழ்த்துகிறோம்.

இராஜபாளையம் கம்பன் கழகத்தார்